திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம்

(அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் (PH.D) பட்டத்திற்காகப் பகுதி நிறைவாக அளிக்கப் பெறும் ஆய்வேடு)

ஆய்வாளர்

சி. உஷா

பதிவு எண்: 0858 (13-14)

நெறியாளர்

முனைவர் மு.பழனியப்பன்

மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை

அழகப்பா பல்கலைக்கழகம்

தேசிய தரநிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத்தரமதிப்பீட்டில்**A+(CGPA3.64)** தகுதிபெற்றது.

காரைக்குடி

ஜனவரி 2018

முனைவர் மு.பழனியப்பன்
இணைப் பேராசிரியர், மற்றும் துறைத்தலைவர்,

<u>நெறியாளர் சான்றிதழ்</u>

"திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம்" என்னும் தலைப்பில் திருமிகு சி. உஷா அவர்கள் செய்துள்ள இவ்வாய்வு சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியில் அவர் முனைவர் பட்ட பகுதிநேர ஆய்வாளராகத் திகழ்ந்தபோது அவரால் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும், இவ்வாய்வேடு இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்காகவும் அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கப் பெறுகிறது.

இடம் :

நாள்: மேற்பார்வையாளர் ஒப்பம்

துறைத்தலைவர் ஒப்பம்

சி. உஷா,
முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்)
தமிழ்த்துறை,
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை

ஆய்வாளர் உறுதிமொழி

“திறானாய்வு நோக்கில் சேயத் தொண்டர் புராணம்” என்னும் தலைப்பில் முனைவர் பட்டப் பேற்றிற்காகச் செய்துள்ள இவ்வாய்வு என் சொந்த முயற்சியால் உருவானது என்றும், இதற்கு முன் வேறு எந்த பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்:

மேற்பார்வையாளர்

நன்றியுரை

சிறு கிராமத்தில் பிறந்து தமிழ்க்கல்வி கற்று, இன்று ஆய்வுப் படிப்பான முனைவர் பட்டப் பேற்றினை அடைவதற்கான வாய்ப்பினை நல்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுவது என் கடமையாகும். நான் முனைவர் பட்டப் படிப்பினைச் செய்ய உதவிய காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பதிவாளர் உள்ளிட்ட அனைவருக்கும் என் முதற்கண் நன்றிகள்.

என் முனைவர் பட்ட ஆய்வினைச் செய்ய வாய்ப்பளித்த சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் மா. ராஜேந்திரன் அவர்களுக்கும், தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் வி.கிளாட்சன் அவர்களுக்கும், என் நெறியாளர் முனைவர் மு.பழனியப்பன் அவர்களுக்கும். தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்கள் அனைவருக்கும், கல்லூரியின் நூலகத்திற்கும் என் மகிழ்வான நன்றிகள்.

என்னைப் பெற்றெடுத்த தந்தை தெய்வத்திரு மா.சிவலிங்கம் அவர்களுக்கும், தாயார் திருமிகு அழகம்மாள் அவர்களுக்கும் என் நன்றிகள். என் படிப்பிற்குத் துணைநிற்கும் என் கணவர் திரு. து.க முருகன் அவர்களுக்கும் என் மகன்கள் மு. கார்த்திகேயன், மு. அபினேந்தா ஆகியோர்க்கும் என் நன்றிகள்.

என் முனைவர் பட்டப் படிப்பிற்கு வழி தந்த, நான் பணியாற்றும் மதுரை கிரசன்ட் பள்ளியின் தாளாளர் திருமிகு ஜனாபா, ஹாஜியானி ஷெரிபா. அ. அஜீஸ் அவர்களுக்கும், செயலர் திருமிகு ஜனாப். ஹாஜி. முகமது ஹஸன் அவர்களுக்கும் என் பணிவார்ந்த நன்றிகள். இப்பள்ளியின் தலைமை ஆசிரியை திருமிகு, ஜனாபா. ஷா. ஹமீதா பேகம் அவர்களுக்கும் என் நன்றிகள்.

நான் தமிழ் பயிலும் காலத்து என்னை ஊக்கப்படுத்தி நின்ற மேலைச்சிவபுரி, கணேசர் செந்தமிழ்க்கல்லூரியின் முதல்வர் பெருந்தகை முனைவர் பழ.முத்தப்பன் அவர்களுக்கும் அவரின் துணைவியார் திருமதி அழகம்மை முத்தப்பன் அவர்களுக்கும் நன்றிகள். என் செயல்கள் அனைத்திற்கும் துணை நிற்கும் இறை உள்ளத்திற்கும் என் நன்றிகள்.

நன்றிகளுடன்

சி.உஷா

<u>பொருளடக்கம்</u>

	பக்கம்
முன்னுரை	1-5
இயல். 1. முருக வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்	6-34
இயல்.2. சேய்த்தொண்டர் புராணத்தின் அமைப்பும், பகுப்புகளும்	35-72
இயல்.3. சேய்த்தொண்டர்கள் வாழ்வும் பணியும் மதிப்பீடு	73-152
இயல்.4. சேய்த்தொண்டர் புராணத்தின் இலக்கியத்திறன்	153-241
முடிவுகள்	242-246
துணைநூற்பட்டியல்	247-250

முன்னுரை

முன்னுரை

தமிழ் மொழியானது பக்தியின் மொழி என்ற சிறப்பினைப் பெற்றதாகும். பல்வேறு சமயங்களும் தமிழ் மண்ணில் தோன்றி வளர்ந்துள்ளன. பிற நிலங்களில் இருந்துப் பல்வேறு சமயங்களும் தமிழகம் வந்துச் சிறந்துள்ள. இதன் காரணமாக பல்வேறு சமயங்கள்சார் இலக்கியங்கள் தமிழில் படைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு படைக்கப்பெற்ற பக்தி இலக்கியங்கள், மக்களிடத்தில் சமயப்பொதுமையையும், நல்லிணக்கத்தையும், தன்னலமற்ற தொண்டு உள்ளத்தையும் உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன. இவ்வாறு எழுந்த பக்தி இலக்கிய காலத்தில் பக்தி இயக்கமாகவே உருப்பெற்றது. அவ்வாறு உருப்பெற்ற பக்தி இயக்க நிலை நலிவுபடாமல் பக்தியாளர்களால் தொடர்ந்து வளர்த்து எடுக்கப் பெற்றுவருகின்றன.

அறுபத்து மூன்று நாயன்மார்களைத் தொடர்ந்து, அறுபத்துநான்கு திருவிளையாடல் சார்ந்த அடியவர்கள், தாயுமானவர், குமரகுருபரர், அருணகிரி, வள்ளலார் அவர்தம் தொண்டர்கள் என்று தொடர்ந்து பக்தி இயக்கம் மலர்ச்சி பெற்றுவருகின்றது. பக்தி இலக்கியமும் பக்தி இயக்கம் வெற்றிபெற துணைசெய்து வருகின்றது. தொடர்ந்த இந்தப் பங்களிப்புகள் பக்திஇயக்கத்தைப் பேணிவளர்த்துவரும் காரணத்தால் மக்களிடத்தில் பக்தி உணர்வு ஆழமாக வேரூன்றி வருகின்றது. இவ்வுணர்வின் ஆழத்தை அறிந்து கொள்ள, தொடர்ந்து வளர்த்தெடுக்க பக்தி இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் அவசியமாகின்றன. இந்நிலையில் சேய்த்தொண்டர் புராணம் என்ற இவ்விலக்கியத்தை ஆராயும் ஆய்வாக இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வுத் தலைப்பு அறிமுகம்

இவ்வாய்வின் தலைப்பு “திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம் ”

என்பதாகும். சிவனும் முருகனும் தந்தை மகன் என்ற உறவுநிலை பெற்றவர்களாகப் பக்திஇலக்கியங்கள் கொள்ளுகின்றன. சிவபெருமானின் மீதான

பக்திப்பாடல்கள் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பெற்று பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்றன. இவற்றில் பன்னிரண்டாம் திருமுறை என்பது சேக்கிழார் படைத்த திருத்தொண்டர் புராணம் ஆகும்.

தந்தையாகிய சிவபெருமானுக்கு நிகழ்ந்த இந்த திருமுறை நெறியைப் பின்பற்றிச் சேயான முருகப்பெருமானுக்கும் முருகனடியார்களால் பன்னிரு திருமுறைகள் வகுக்கப் பெற்றன. இப்பன்னிரு திருமுறைகள் ‘‘முருகவேள் பன்னிரு திருமுறை ” ˙ என அழைக்கப்பெறுகின்றன. அருணகிரிநாதர் பாடிய ஆறுபடைவீடுகள் சார்ந்த பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்று, ஒரு படைவீட்டிற்கு ஒரு திருமுறை என்ற நிலையில் ஆறுதிருமுறைகளாக அவை பகுத்துக் கொள்ளப்பெற்றன. மற்ற திருப்பதிகள் சார்ந்த பாடல்கள் தொகுக்கப்பெற்று ஏழாம் திருமுறை உருவாக்கப்பெற்றது. கந்தரந்தாதி முதலியன எட்டாம் திருமுறையாகக் கொள்ளப்பெற்றன. திருவகுப்பு ஒன்பதாம் திருமுறையாகும். பத்தாம் திருமுறை கந்தரனுபூதி ஆகும். பல அடியார்கள் பாடியவை பதினோராம் திருமுறை எனத் தொகுக்கப் பெற்றது. இவற்றையெல்லாம் தொகுத்தும் வகுத்தும் வரையறை செய்தவர் தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை ஆவார். இவர் ‘‘திருத்தொண்டர் புராணமாம் பெரியபுராணத்திற்கு ஒப்ப முருகவேள் தொண்டர்களின் புராணம் சேய்த்தொண்டர் புராணம் என்னும் அருமைப் பெயருடன் ஒன்று வெளிவர வேண்டும் என்று விருமபினார்.. இவ்விருப்பத்தினை நிறைவேற்றும் நிலையில் பல புலவர்களை அணுகியபோது, தேனூர் வரகவி வே.செ. சொக்கலிங்கம்பிள்ளை என்பவர் சேய்த்தொண்டர் புராணம் என்பதைப் படைக்க முன்வந்தார். இவர் சேக்கிழார் படைத்த திருத்தொண்டர் புராணம் என்ற பெரியபுராணத்தை தன் முன்னூலாகக் கொண்டுச் சேய்த்தொண்டர் புராணத்தைப் படைத்தார். இப்படைப்பினைத் திறனாய்வதாக இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்விற்குத் ‘‘திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம் ” என்ற தலைப்பு இடப்பெற்றுள்ளது. திறனாய்வு நோக்கு என்பது பெரும்பான்மை தமிழ்

மரபு சார் திறனாய்வு என்பதாக இங்குக் கொள்ளப்பெற்று அதன்வழி திறனாயப் பெற்றுள்ளது.

ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வின் நோக்கங்கள் பின்வருமாறு.

1. திருத்தொண்டர் புராணத்திற்கும் சேய்த்தொண்டர் புராணத்திற்கும் உள்ள படைப்பு ஒற்றுமைகளை ஆராய்தல்
2. சேய்த் தொண்டர் புராணத்தில் இடம் பெற்றுள்ள முருகனடியார்களை அவர்களின் செயல்களை, அவர்களின் பங்களிப்பினை மதிப்பிடுதல்.
3. சேய்த்தொண்டர் புராணத்தின் வடிவச் சிறப்பு, இலக்கியத்திறன் ஆகியவற்றை உணர்தல்

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு திறனாய்வு சார்ந்து அமைவதாகும். கட்டமைப்பியல், ஒப்பாவ்யவியல், அழகியல், இலக்கியத்திறன் சார்ந்த திறனாய்வு அணுகுமுறைகள் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் வகைதொகை ஆய்வாகவும் இவ்வாய்வு செய்யப்படுகின்றது.

ஆய்வெல்லை

இவ்வாய்வின் எல்லையாக அமைவது சேய்த்தொண்டர் புராணம் என்ற நூல் ஆகும். இந்நூலில் உள்ள அறுபத்தாறு தனியடியார்கள், பன்னிரு தொகையடியார்கள் ஆகியோரின் வாழ்வும் அவர்களின் படைப்புகளும், படைப்பு சார்ந்த திறனாய்வுகளும் இவ்வாய்வின் எல்லையாக அமைகின்றன.

ஆய்வுப் பகுப்புகள்

இவ்வாய்வு முன்னுரை, முடிவுகள் நீங்கலாகப் பின்வரும் இயல்களைக் கொண்டுவிளங்குகின்றது.

1. முருக வழிபாடு - தோற்றமும் வளர்ச்சியும்
2. சேய்த்தொண்டர் புராணத்தின் அமைப்பும், பகுப்புகளும்
3. சேய்த்தொண்டர்கள் வாழ்வும் பணியும் மதிப்பீடு
4. சேய்த்தொண்டர் புராணத்தின் இலக்கியத்திறன்

இவ்வுட்தலைப்புகள் வழியாக ஆய்வின் செல்நிலை அமைந்து முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வியல்கள் பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

இயல்.1. முருகவழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்

இவ்வியலில் தொல்காப்பியம் தொடங்கி சேய்த்தொண்டர் புராண காலம் வரையான முருக வழிபாட்டு நிலைகள், மரபுகள், வளர்ச்சிகள் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

இயல்.2. சேய்த்தொண்டர் புராணத்தின் அமைப்பும் பகுப்புகளும்.

முருகன் பன்னிரு திருமுறைத் திரட்டினை முழுமைப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டது சேய்த்தொண்டர் புராணம் ஆகும். முருகனடியாரகளுக்கு உரிய தகுதிப்பாடுகளை வைத்துக்கொண்டு அத்தகுதிப்பாடுகளின் அடிப்படையில் முருக பக்தர்களை அவர்களின் வாழ்வினை பணிகளைச் சொல்லும் இந்நூலின் அமைப்புமுறை பற்றி இவ்வியல் விளக்கி நிற்கிறது. மேலும் சேக்கிழார் படைத்த திருத்தொண்டர் புராணத்திற்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் இவ்வியல் எடுத்துரைக்கின்றது.

இயல். 3. சேய்த்தொண்டர்களின் வாழ்வும் பணிகளும் மதிப்பீடு

சேய்த்தொண்டர்கள் அறுபத்தாறு பேர் என்றும், தொகைஅடியார்கள் பன்னிரண்டு தொகுதியினர் என்றும் இந்நூல் வகைமை செய்து கொண்டுள்ளது. இவர்கள் அனைவரின் வாழ்க்கையும் திறந்த புத்தகமாக இப்புராணத்தில் தரப்பெற்றுள்ளது. இதனைக்கொண்டு இவ்வடியார்களின் வாழ்க்கைத்

திறத்தையும், பணிகளையும், தொண்டுகளையும், பக்தியையும், பணிகளின் மதிப்பினையும் இவ்வியல் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

இயல். 4 சேய்த் தொண்டர் புராணத்தின் இலக்கியத்திறன்

இவ்வியல் சேய்த்தொண்டர் புராணத்தை இலக்கியத்திறன் அடிப்படையில் நோக்குவதாக அமைகின்றது. சேய்த்தொண்டர் புராணத்தில்அமைந்துள்ள, சொல்அழகு, பொருள்அழகு, வருணனை, அணிநலம், ,உத்தி, வண்ண ஒழுங்கு ஆகியன குறித்து இவ்வியலில் ஆராயப் பெறுகிறது.

நிறைவில் இவ்வாய்வின் வழியாகக் கண்டறியப்பெற்ற முடிவுகள் தொகுத்தளிக்கப்பெற்றுள்ளன. மேலும் ஆய்வுக்குத் துணைபுரிந்த நூல்களின் பட்டியல் துணைநூற்பட்டியலாக அளிக்கப்பெற்றுள்ளது.

இயல். 1.

முருக வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்

இயல்.1.

முருக வழிபாடு தோற்றமும், வளர்ச்சியும்

தொல்காப்பியம் குறிஞ்சி நிலக் கடவுளாக முருகனைக் குறிக்கிறது. குறிஞ்சி நிலத்தின் அடையாளமாக, கருப்பொருளாக, தெய்வமாக முருகன் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், பின்னர் வந்த அக இலக்கிய இலக்கணங்களிலும் முன்னிறுத்தப்பெறுகிறான். பத்துப்பாட்டின் இறைவாழ்த்துப் பகுதியாக திருமுருகாற்றுப்படை அமைந்து சிறக்கிறது. தொடர்ந்து சிலப்பதிகாரத்திலும் முருக வழிபாடு குறிக்கப்பெறுகிறது. அதனைத் தொடர்ந்து திருமுறைகளில் முருகப்பெருமானைப் போற்றும் பல பாடல்கள் அமைந்துள்ளன. தொடர்ந்து கந்தபுராணம் என்ற புராண இலக்கியம் முருக வழிபாட்டின் உயர்நிலைப்பட்டதாக அமைகிறது. சிற்றிலக்கிய காலத்திலும் முருகப் பெருமான் மீது பல பனுவல்கள் பாடப்பெற்றுள்ளன. தனிப்புலவர் வரிசையில் சிவப்பிரகாசர், குமரகுருபரர், அருணகிரிநாதர், வண்ணச்சரபம் தண்டாபணி சுவாமிகள், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் போன்ற பல அருளாளர்கள் முருகளை வழிபட்டு அழியாப் புகழ் பெற்றுள்ளனர். இவ்வரிசையில் சேய்த்தொண்டர் புராணம் முருக அடியார்களைப் பற்றிப் பாடி முருகன் புகழைப் பரப்புகின்றது. முருகத் தொண்டர் அணிவகுப்பினை சீராக்கித் தருகிறது. இவ்வகையில் முருக வழிபாடு என்பது தொன்று தொட்டு தமிழகத்தின் பண்பாட்டு அடையாளமாக விளங்கிவருகின்றது என்றால் அது மிகையாகாது.

முருகனைச் சங்ககால மக்கள் வெறியாடல் என்ற நிலையில் வழிபட்டுள்ளனர். திருமுருகாற்றுப்படை என்ற நூல், முருகன் உறையும் இடங்களுக்கு மக்கள் சென்று வழிபடும் முறையைக் காட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் குமரனைக் குன்றக் குறவை ஆடி வழிபட்டுள்ளனர். திருமுறைகளில் பூவும் நீரும் அளித்து முருகனைப் போற்றியுள்ளனர். கச்சியப்பர் முருகனை வேதநெறிப்படி வழிபட்டுள்ளார். இசைவடிவில் அருணகிரிநாதர் வழிபட்டுள்ளார். கண்ணாடி பிம்பத்தில் வள்ளலார் முருகனைக் கண்ணாரக்

கண்டு வழிபாட்டார். சிவப்பிரகாசர் குருவின் வழி முருகனைக் வழிபட்டார். பாம்பன் சுவாமிகள் பாடல்கள்பாடி மந்திர நிலையில் முருகனை வழிபட்டார்.

தற்காலத்தில் மக்கள் காவடி செலுத்துதல், அலகு அணிதல், முடியிறக்குதல், விரதமிருத்தல், நடையாத்திரை மேற்கொள்ளல் போன்றவற்றால் முருக வழிபாட்டை நடத்திக் கொள்கின்றனர்.

கலையும், பண்பாடும், பக்தியும் கலந்த வழிபாடாக முருகவழிபாடு விளங்குகிறது. இதன் வளர்ச்சிப் போக்கினை ஆராய்கிறபோது இதன் வளர்ச்சி நிலை தெரியவருகிறது.

முருகன்

தமிழ் நிலக் கடவுள் முருகன் ஆவான். தமிழ் மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்த கடவுளும் முருகன் ஆவான். ‘முருகு அல்லது முருகன் என்னும் சொல் மிக மிகத் தொன்மையானது. ‘மு’- என்னும் எழுத்து திருமாலையும், ‘முரு’ என்னும் எழுத்துச்சேர்க்கை ருத்திரன் என்கிற சிவபெருமானையும் ‘க’ என்னும் எழுத்து பிரம்மனையும் குறிக்கும்” [1] என்று முருக என்பதற்கான பொருள்விளக்கம் தரப்பெறுகிறது.

“தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு- முருகனின் முகங்கள் ஆறு. ஆறுமுகத்திலும் உள்ள கண்கள் மூன்று. முக்கண்கள் ஆறோடு சேர பதினெட்டு கண்கள். அவை மெய்யெழுத்துக்கள். தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. அவை முருகனின் கரங்கள். தனிநிலை எனப்படும் ஆய்த எழுத்தே முருகனின் கைவேலாக ஒப்புயர்வற்றுத் திகழும் வேலாயுதமாகும். முருகன் தமிழ்த் தெய்வமாக தமிழ் வடிவமாக விளங்குகிறான்” [2] என்ற தமிழ் மொழியின் கடவுளாக முருகனைக் காண்கிறது தமிழ் உலகம்.

‘தமிழ்நாடு என்றும் முருகனை வழிபடும் தகைமை சான்றது. கோலமாமயில் மீது குலவும் குழகன் என்றும் வேற்படையுடைய விமலன் என்றும், அகந்தை

கெடுத்து வரந்தரும் இறைவன் என்றும் அப்பெருமானைப் போற்றுவார் தமிழ்மக்கள். ‘என்றுமுள தென்தமிழின்’ தலைமைப் புலவனாகத் திகழ்கிறான். முத்தமிழால் வைதாரையும் வாழ்விக்கும் வித்தகனாய் விளங்குகிறான். திருமுருகாற்றுப்படை என்னும் சங்கத் தமிழ் மாலையும் பெற்று மிளிர்கிறான். கந்தபுராணம் என்னும் காவியம் முருகன் திறத்தினை அழகுற எடுத்துரைக்கின்றது ”[3] என்று தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்பினை ரா.பி. சேதுப்பிள்ளை உரைக்கிறார்.

கடவுள்தன்மை என்றாலே அதன் மொத்த வடிவம் முருகன் என்று கருதுகிறார் திரு.வி.கலியாண சுந்தரனார். “இயற்கை மணமும், மாறா இளமையும், கடவுட்டன்மையும், அழியா அழகும் அறிவிற் சிறந்த எச்சமயத்தவருங் கொள்ளும் ஆண்டவனுக்குரிய இயல்புகளாம். இவ்வியல்புகள் அமைந்த ஒன்றைத் தமிழ்மக்கள் முருகன் என்று வழுத்துகிறார்கள். ஏனைய மொழியினரும் அவ்வியல்புகளின் பொருள் நல்க வல்ல தமது மொழியால் தாம் வழிபடும் இறைவனுக்குப் பல பெயரிட்டழைக்கலாம். அப்பெயர்ப் பொருளை ஆராய்ந்து, தமிழில் பெயர்த்தெழுதினால், அது முருகாக விளங்குதல் வேண்டும். தமிழ்ப் பெயராகிய முருகெனுஞ் சொல் தனக்குரிய பொருண்மை அழியப்பெறாது எம்மொழியில் வழங்கப்பட்டாலென்ன? கடவுளை மணமுடையதாகவும், இளமையுடையதாகவும், இறைமையுடையதாகவும், அழகுடையதாகவும் எவர் எம் மொழிப் பெயரால் தொழினும், ஆண்டு எம்பெருமான் முருகன் எழுந்தருள்வானென்க.”[4] என்ற நிலையில் முருகப்பெருமானை மணம், இளமை, இறைமை, அழகு உடைய கடவுளாகக் காண்கிறார் திரு.வி.கலியாணசுந்தரனார்.

முருவழிபாடு முக்தி தரும் வழிபாடு என்கிறார் மற்றொரு ஆய்வாளர். “தேவர்கள் ஆன்மாக்களின் உருவகம். சூரனும், சிங்கமுகாசுரனும், தாரகனும் முறையே மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றின் உருவங்கள். உலகிலுள்ள இன்ப துன்பங்கள் மாயையின் வடிவமே என்பதை

உணர்ந்து அவற்றிலிருந்து ஆன்ம விடுதலை பெறுதலே கிரௌஞ்ச மலை நீக்கமும் தாரக வதமும். முன்வினைப் பயனைத் துய்த்து இப்பிறிவியலும் நல்வினைகளைச் செய்து பினை நீக்கம் செய்தலைக் கன்மத்தின் வடிவமான சிங்கமுகாசுரனின் வதம் குறிக்கிறது. எஞ்சியிருக்கும் ஆணவத்தின் வடிவம்தான் சூரன். ஆணவத்தின் நீக்கலைச் சித்தரிப்பதுதான் சூரசம்ஹாரம் ” [5] என்று முருகவழிபாட்டைச் சைவசித்தாந்த நோக்கில் காண்கிறார் இராமநாதன் பழனியப்பன்.

இவ்வகையில் முருகக் கடவுள் தமிழரின் மொழி, வாழ்க்கை, முக்தி என எல்லா நிலைகளிலும் தொடர்ந்து கலந்து வருகின்ற தன்மையைப் பெற்ற பெருங்கடவுள் என்பதைக் காணமுடிகின்றது.

வழிபாடு

மக்கள் நம்பிக்கையுடன் கடவுளை வழிபடும் முறையே வழிபாடு ஆகின்றது. “வழிபடு" என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல் ஆகும். வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் பூசனை முறைகளுமே வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன”[6] இக் கருத்துகளின் வழி „ உயர் நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்கவும் உணர முற்படவும் மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு என்று முடியலாம்.

முருக வழிபாடு என்பது தொன்மை அடையாளங்கள் நிரம்பியது. வேல் வழிபாடு, சேவல் வழிபாடு, வெறியாட்டு வழிபாடு போன்ற தொன்மைக் கூறுகள்

இன்னமும் முருக வழிபாட்டில் காணப்படுகின்றன. இவ்வகையில் முருக வழிபாடு என்பது தொன்மைக் காலத்தின் வழிபாடு என்று உணரமுடிகின்றது.

கடவுளை அவனின் நாமம் சொல்லி வாழ்த்துதலும் வழிபாட்டில் ஒருவகையாகும். "ஆன்மாவிற்குப் பல அச்சங்கள் உள்ளன. ஆன்மா ஈடேறுமா? பிறந்திறந்தே உழலுமா? வினைவயத்தால் பல பிறப்பெடுத்துத் துன்புறுமா? ஈடேற்றத்துக்கான வழி யாது? என்றெல்லாம் அடுக்கடுக்கான பல அச்சங்களால் ஆன்மா அலைமோதும். இயல்பினால் அவ் அச்சங்களைப் போக்கி, அஞ்சேல் என் காட்டவல்ல சிறப்பை ஆன்மா மேற்கொள்ளும் வழிபாட்டால் ஆண்டவன் அருள்வான் என்பதால் ஆண்டவனை நாமாவளியால் வழிபடவேண்டும் என்பது நியதியாகும். எனவே ஆன்மாவுக்குப் பாதுகாப்பானது என்பதால் பெயரினும் நாமம் உயர்ந்ததாம். அந்த நாமம் அ∴றிணைக்கு ஆகாது. உயர்திணைக்கே உய்தியடைய உதவுவதென்பதால் நாம மகிமை நாளும் சிறந்ததாகும்"[7] என்ற கருத்தின்படி நாமவழிபாடு சிறப்பிற்குரியது என்பது தெரியவருகிறது. முருக வழிபாடு முருக என்னும் நாமத்தாலும் சரவணபவ என்ற மந்திரத்தாலும் கட்டமைக்கப்பெற்றுள்ளது.

இம்முருக வழிபாடு தொடர்ந்து தமிழ் மண்ணில் நடைபெற்றதைப் பல இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவை தரும் சான்றுகள் வழியாக முருக வழிபாட்டின் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

<u>தொல்காப்பிய காலத்தில் முருக வழிபாடு</u>

முந்தை இலக்கண நூலான தொல்காப்பியத்தில் முருக வழிபாடு பற்றிய செய்திகள் உள்ளன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்[8] தோன்றிய தொல்காப்பியத்தில் முருக வழிபாடு பற்றி செய்திகள் இருப்பதால் முருகவழிபாடு கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே திகழ்ந்துள்ளது என்பதை உணரமுடிகின்றது.

“ சேயோன் மேய மைவரை உலகம் ”[9] என்று குறிஞ்சி நிலத்தின் கடவுளாக சேயோன் என்று முருகனை அமைத்துள்ளார் தொல்காப்பியர். “ வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த காந்தளும்” [10] என்று வேலன் வெறியாடி முருகனை வழிபட்ட நிலையைத் தொல்காப்பியத்தில் காணமுடிகின்றது.

இவ்வாறு தொல்காப்பிய காலந்தொட்டே முருக வழிபாடு பழமையும் சிறப்பும் பெற்று விளங்கி வந்துள்ளது.

<u>சங்க காலத்தில் முருக வழிபாடு</u>

சங்க இலக்கியங்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியன சங்க கால முருகவழிபாட்டினை அறிந்து கொள்ள உதவும் பெருஞ்சான்றுகள் ஆகும். முருகன் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் பத்து இடங்களில் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

முருகனின் தெய்வத்தன்மையைச் சங்க இலக்கியங்களில் பின்வரும் நிலையில் கண்டுள்ளன. “மாஅல் முருகன் மாட மருங்கு”[11], “முருகன் ஆர் அணங்கு என்றலின் அது செத்து”[12] , “சூர் நவை முருகன் சுற்றத்து அன்ன நின்” [13] என்பன அதற்கான சான்றுகள் ஆகும். புறநானூற்றில் முருகன் கோட்டம்

என்ற கோயில் இருந்தக் குறிப்பு உள்ளது.

“பருத்தி வேலிச் சீறூர் மன்னன் உழுத்தத
ருண்ட வோய்நடைப் புரவி கடன்மண்டு
தோணியிற் படைமுகம் போழ நெய்ம்மிதி
யருந்திய கொய்சுவ லெருந்தின் தண்ணடை
மன்னர் தாருடைப் புரவி அணங்குடை
முருகன் கோட்டத்துக்

கலந்தொடாமகளிரி னிகழ்ந்துநின் றவ்வே” [14]

என்ற பாடலில் முருகன் கோட்டம் இருந்தமைக்கான சான்று உள்ளது. குதிரையின் வீரம் பற்றிக் குறிக்க வந்த இப்பாடல், குறிப்பிட்ட நாள்களில் தெய்வக் கலங்களைத் தொடா நிலை பெற்ற பெண்கள் முருக வழிபாட்டில் கலக்காமல் இருந்த வழிபாட்டுமுறையைப் பற்றி அறிந்து கொள்ள வழி செய்கின்றது. இவ்வகையில் முருகனுக்கு உரிய விரத வழிபாட்டுமுறை சங்ககாலத்தில் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது.

பரிபாடலில் திருப்பரங்குன்ற முருகன் பற்றிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. " கேட்டுதும் பாணி எழுதும் கிணை முருகன்தாள் தொழு தண் பரங்குன்று " [15] என்பது இதனை உணர்த்தும். முருகன் கோபப்படும் தெய்வம் என்பதான குறிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. "முருகன் சீற்றத்து

உரு கெழு குரிசில் " [16],"சினம் மிகு முருகன் தண் பரங்குன்றத்து " [17],"முருகன்

அன்ன சீற்றத்து கடும் திறல்" [18], "முருகன் சீற்றத்து உரு கெழு குருசில" . [19] என்ற குறிப்புகள் இதனை உணர்த்தும். மேலும் "முருகன் நல் போர் நெடுவேள் ஆவி" [20] என்ற குறிப்பு முருகன் ஆவி என்ற அரசனுடன் ஒப்பு

நோக்கும் நிலையில் அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு முருகன் என்ற சொல்லே சங்க இலக்கிய காலத்தில் பயின்றுவந்துள்ளது.

சங்க இலக்கியங்களில் முருகன் பற்றிய பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளதை பாட்டும் தொகையும் என்ற நூல் குறிக்கிறது[21]. சங்ககாலத்தில் வெறியாடல் என்ற நிகழ்வு முருகவழிபாடாக நிகழ்த்தப்பெற்றது. அகநானூற்றில் வேலன் வெறியாடிய முறை சொல்லப்பட்டுள்ளது.

" களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி,

வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,

உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,

முருகு ஆற்றுப்படுத்த” [22]

என்ற குறிப்பு வெறியாடல் தன்மையை உரைப்பதாக உள்ளது. வெறியாடுவதற்கான களத்தை நன்கு தூய்மை செய்து. மாலைகள் சூட்டி, எதிரொலிக்கும்படியாக முருகனுக்கு உரிய பாடல்களைப்பாடி, பலி கொடுத்து, அழகிய செந்தினைத் தானியததை குருதியோடு சிதறி வேலன் முருகு ஆற்றுப்படுத்திய செய்தி அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தலைவி முருகாற்றுப் படுத்தப்பட்டபின் தலைவன் அன்றைக்கு இரவுக்குறி நேர்கிறான். இதன் காரணமாக தலைவி மகிழ்கிறாள். தலைவியின் குடும்பத்தார் அனைவரும் வெறியாடியதால் விளைந்த வெற்றி என்று மகிழ்கின்றனர். இதன் காரணமாக முருகனை வணங்கியோர்க்கு ஏதாவது ஒரு வகையில் நன்மை வந்து சேர்கிறது என்பதை இப்பாடல் உரைக்கிறது.

கிடைக்கப் பெற்ற பரிபாடல் பாடல்களில் எட்டுப்பாடல்கள் செவ்வேள் பற்றியனவாகும். முருகப் பெருமானின் முழுச் சிறப்பையும் பரிபாடல் எடுத்துரைக்கிறது. இந்நூலில் முருகனின் பிறப்பு, உருவத் தோற்றம், வீரம், முருகன் வள்ளி, தெய்வானையை மணந்த முறைமை, முருகனை வழிபடும் முறை போன்றன காட்டப்பெறுகின்றன.

“போர் மலிந்து,

சூர் மருங்கு அறுத்த சுடர் படையோயே!

கறை இல் கார் மழை பொங்கி அன்ன

நறையின் நறும் புகை நனி அமர்ந்தோயே!

அறு முகத்து ஆறு இரு தோளால் வென்றி

நறு மலர் வள்ளிப் பூ நயந்தோயே!

கெழீஇக் கேளிர் சுற்ற, நின்னை

எழீஇப் பாடும் பாட்டு அமர்ந்தோயே!

பிறந்த ஞான்றே, நின்னை உட்கிச்

சிறந்தோர் அஞ்சிய சீர் உடையோயே!

இரு பிறப்பு, இரு பெயர், ஈர நெஞ்சத்து,

ஒரு பெயர், அந்தணர் அறன் அமர்ந்தோயே!" [23]

என்ற இப்பாடலில் முருகனின் உருவம் சிறப்பிக்கப்படுகிறது. ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் உடைய முருகனின் தோற்றமும், வள்ளியை மணந்த செய்தியும், அந்தணர் வணங்கும் செய்தியும் மேற்பாடலில் காட்டப்பெற்றுள்ளன.

பரிபாடலின் ஐந்தாம் பாடலில் வெறியாடி முருகனை வழிபட்ட குறிப்பு காணப்படுகிறது. மேலும் முருகனை வணங்குவோர் பற்றியும் வணங்கார் பற்றியும் சில செய்திகளைப் பரிபாடல் குறிக்கிறது. இது வழிபாட்டால் ஏற்படும் நன்மையைச் சுட்டும் பகுதியாகும்.

„ நின் குணம் எதிர்கொண்டோர் அறம் கொண்டோர் அல்லதை,

மன் குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை

செறு தீ நெஞ்சத்துச் சினம் நீடினோரும்,

சேரா அறத்துச் சீர் இலோரும்,

அழி தவப் படிவத்து அயரியோரும்,

மறு பிறப்பு இல் எனும் மடவோரும், சேரார்

நின் நிழல்" [24]

என்ற குறிப்பின்படி முருக அடியார்கள் பற்றிய செய்தி பெறப்படுகிறது.

மதுரைக்காஞ்சியிலும் பட்டினப்பாலையிலும் முருகவழிபாடு பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

முருகப்பெருமானின் அருட்குணத்தை விரும்பி ஏற்று உலகப் பற்றினை விடுத்து உன்மீதான பற்றினை மிகுதிப் படுத்துவோரும், முருகப்பெருமானை நோக்கிப் பெருந்தவம் செய்தோரும், பிறரால் வணங்கிப் போற்றத்தக்க அருளாளர்களும் முருகப்பெருமானின் திருவடியை அடைய இயலும். இதுவே பக்தியாளர் பெறும் பயன் ஆகும். கடுஞ்சினம் உடையவரும், மறுபிறப்பு பொய் என்போரும், போலி தவவிரதத்தை உடையவரும் முருகப்பெருமான் நிழலை அடைய இயலாது. இக்குறிப்புகளின்படி முருகனடியார் ஆகாதார் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

பத்துப்பாட்டில் அமைந்துள்ள நக்கீரர் எழுதிய திருமுருகாற்றுப்படை முழுக்க முழுக்க முருகப்பெருமானின் சிறப்பையும், முருக அடியார் சிறப்பையும் முருகவழிபாட்டையும் எடுத்துரைக்கும் நூலாக விளங்குகிறது. இந்நூல் வெறியாடல் சடங்கு பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.

“மாண் தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரை த்து,
குடந்தம்பட்டு, கொழு மலர் சிதறி,
முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ,
செந் நூல் யாத்து, வெண் பொரி சிதறி,
மத வலி நிலைஇய மாத் தாள் கொழு விடைக்
குருதியொடு விரைஇய தூ வெள் அரிசி
சில் பலிச் செய்து, பல் பிரப்பு இரீஇ,
சிறு பசுமஞ்சளொடு நறு விரை தெளித்து,
துணை அற அறுத்துத் தூங்க நாற்றி,

நளி மலைச் சிலம்பில் நல் நகர் வாழ்த்தி,

நறும் புகை எடுத்து, குறிஞ்சி பாடி,

இமிழ் இசை அருவியொடு இன் இயம் கறங்க,

உருவப் பல் பூத் தூஉய், வெருவரக்

குருதிச் செந் தினை பரப்பி, குறமகள்

முருகு இயம் நிறுத்து, முரணினர் உட்க,

முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியல் நகர்

ஆடு களம் சிலம்பப் பாடி, பலவுடன்

கோடு வாய்வைத்து, கொடு மணி இயக்கி,

ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட,

ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தவாறே." [25]

என்ற இந்தப் பகுதி முருக வழிபாடு செய்யப்பட்ட நிலையைக் காட்டுவதாக அமைகிறது.

முருக வழிபாடு நிகழ்த்தப்படும் இடத்தில் சேவல் கொடி முதன் முதலாக ஏற்றப்படுகிறது. வழிபடும் இடத்தின் வாயிலில் நெய்யும் வெண்சிறுகடுகும் அப்பப்பெறுகிறது. கந்தனின் பெயர் சொல்லி இருகைகளையும் இணைத்து அவள் வழிபடுகிறாள். கையில் சிறுநூலைக் காப்பாக அணிந்தவளாக, இருவேறு வண்ண உடை அணிந்தவளாக வழிபாடு இயற்றும் பெண் விளங்குகிறாள். அவள் நெல் பொரியைக் களத்தில் சிதறுகிறாள். மேலும் அவ்விடத்தில் ஆட்டுக்கிடாயின் இரத்தம் கலந்த அரிசியைத் தூவுகிறாள். பிரப்பு அரிசியை உருவாக்குகிறாள். மஞ்சளையும் இன்னும் பிற பொருள்களையும் அங்குத்

தெளிக்கிறாள். செவ்வரளி மாலைகளைச் சுற்றிலும் தொங்கவிடுகிறாள். அங்குள்ளவர்கள் முருகன் பெயர் சொல்லி வாழ்த்திப் பாடுகின்றனர். மணப் புகை ஊட்டுகின்றனர். இனிய ஒலிக்கருவிகளை இசைக்கின்றனர். அழகான பூக்களைத் தூவுகின்றனர். துடி, தொண்டகம், சிறுபறை ஆகியன இசைக்கப்பெறுகின்றன. வேண்டுகிறவர்களுக்கு வேண்டிய வண்ணம் அருள் தரும் நிலையில் இவ்வழிபாடு இயற்றப்பெற்றது.

ஆறுபடைவீடுகளில் முருகன் அருளும் திறமும், வழிபடும் முறையும் விரிவாக திருமுருகாற்றுப்படையில் காட்டப்பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படையில் பின்னிணைப்பாக அமைந்துள்ள பத்து வெண்பாக்கள் முருகப்பெருமானின் அருள்சிறப்பைப் போற்றிப் பாடும் பாடல்களாகும். இவற்றின் இலக்கிய நலம் பாராட்டிற்குரியதாக உள்ளது.

“உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்-பன்னிரு கைக்
கோலப்பா! வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே! ” [26]

“அஞ்சும் முகம் தோன்றின், ஆறுமுகம் தோன்றும்
வெஞ் சமரில்,“அஞ்சல்“ என வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின், இரு காலும் தோன்றும்
“முருகா!“ என்று ஓதுவார் முன்." " [27]

என்ற இப்பாடல்கள் எளிய இனிய சொற்களால் முருக வழிபாட்டின் இயல்பினைச் சுட்டுகின்றன.

மதுரைக்காஞ்சியிலும், பட்டினப்பாலையிலும் முருகவழிபாடு பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவ்வாறு சங்க காலத்தில் முருகன் குறிஞ்சித்திணைத் தெய்வமாக விளங்கிப் பின்பு முதற்கடவுள் நிலைக்குத் திருமுருகாற்றுப்படையின் புனைவால் உயர்த்தப்பெற்றுள்ளான் என்பதை அறியமுடிகிறது.

இவ்விடத்தில் திராவிட, ஆரிய இணைப்பு நிலையில் முருகவழிபாடு அமைவதைச் சற்று உற்று நோக்க வேண்டியுள்ளது. "தமிழர்களின் சமய வரலாற்றில் முருகவழிபாடு குறித்து ஆராய்ந்தால் அது இரண்டு தளங்களில் இயங்கியதை நம்மால் உணரமுடியும். ஒன்று தமிழ் மரபிற்குட்பட்ட முருக வழிபாடு மற்றது தமிழ்மரபும், ஆரியமரபும் இணைந்து செறிவுற்ற நிலையில் உள்ள முருகவழிபாடு என்பதாகும். சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்ற முருகன் குறித்த செய்திகளும் வேலன் வெறியாடல் குரவையாடல் முதலியனவும் தமிழ்ப் பண்பாட்டுத் தளத்தில் நிகழ்த்தப்பெற்ற முருகவழிபாடுகளாகும். சங்கக் கால இறுதிப் பகுதியில் முருக வழிபாட்டின் வைதீக ஆரிய மரபுகள் சேர்ந்தன. சிவன் - பராசக்தி ஆகியோரின் மகனாக முருகன் உருவாவதும் தெய்வானையை முருகன் திருமணம் செய்வதும் முருகன் சுப்பிரமணியனாகவும், கார்த்திகேயனாகவும் அறிகப்படுத்தப்படுவதும், அவனை ஓர் ஆரியக் கடவுளாக உருமாற்றின எனலாம். தமிழருடைய வரலாற்றில் தமிழ் முருக மரபிற்கும் ஆரிய முருக மரபிற்குமான போராட்ட அடையாளங்களை ஆங்காங்கே காணமுடிகின்றது." [28] என்ற கருத்து முருக வழிபாடு என்பது , திராவிடச் சார்பும் ஆரியப் பூச்சும் பெற்றிருந்தது என்பதை அறிந்து கொள்ளச் செய்வதாக உள்ளது.

<u>சங்கம் மருவிய காலத்தில் முருகவழிபாடு</u>

சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் படைக்கப்பெற்றன. இவற்றில் உள்ள அகநூல்களில் முருக வழிபாடு வெறியாடலாகக் காட்டப்பெறுகிறது. ஐந்திணை எழுபது, திணைமாலை

நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது ஆகியவற்றில் வேலன் வெறியாடிய நிகழ்ச்சி சுட்டப்பெற்றுள்ளது.

" வார்குரல் ஏனல் வளைவாய்க் கிளி கவரும்

நீரால் தெளிதிகழ் கான்நாடன் கேண்மையே

ஆர்வத்தின் ஆர முயங்கினேன் வேலனும்

ஈர வலித்தான் மறி" [29]

என்ற பாடலில் ஆட்டுக்குட்டியைப் பலியாகக் கொண்டு வேலன் வெறியாட முயன்றான் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. திணைமாலை நூற்றைம்பது நூலில்

"வேலன் போக மறிவிடுக்க வேரியும்

பாலனார்க்கு ஈக பழியலான் பாலால்

கடும் புனலின் நீந்திக் கரைவைத்தாற்கு அல்லால்

நெடும் பணைபோல் தோள் நேராள் நின்று" [30]

என்ற பாடலில் நீரில் இருந்துக் காப்பாற்றிய தலைவனுக்கு அன்றித் தன் தோளை வேறு யாருக்கும் தலைவி தரமாட்டாள் என்று தோழி குறிக்கிறாள். தலைவியின் வாடிய நிலை கருதி வேலனை அழைத்து வெறியாடலை நிகழ்த்த தலைவியின் குடும்பத்தார் முயல்கின்றனர். அப்போது தோழி தலைவியின் வாடிய நிலைக்குத் தலைவன் மீது கொண்ட காதலே காரணம் என்கிறாள். அந்நிலையில் வேலனை வெறியாடாது இருக்கச் செய்க, பலியாகக் கொடுக்க உள்ள ஆட்டினையும் விடுக்க, பூசைப்பொருள்களை மக்களிடம் அளித்துவிடுக என்று தோழி சொல்வதாக இப்பாடலில் ஓர் குறிப்பு இடம்பெறுகிறது. இவ்வகையில் வெறியாடல் நிகழ்த்தப்பட இம்முன்னேற்பாடுகள் தேவை என்பது தெரியவருகிறது.

ஐந்திணை ஐம்பதின் இருபதாம் பாடலும் வெறியாடல் பற்றிய செய்திகளைத் தருகின்றது. இவ்வகையில் வெறியாடல் என்ற வழிபாட்டு நிகழ்வு சங்கம் மருவிய காலத்திலும் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது.

<u>சிலப்பதிகார காலத்தில் முருகவழிபாடு</u>

சிலப்பதிகார காலத்தில் முருகனுக்குக் கோயில் அமைக்கப்பெற்றிருந்தன. பல்வகைக் கோட்டங்களுடன் வேல் கோட்டம் ஒன்றும் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிக்கின்றது. முருகக் கோட்டம் காவிரிப்பூம்பட்டிணத்திலும், மதுரையிலும் இருந்தமையைப் பின்வரும் அகச்சான்றுகள் காட்டும். ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்[31], கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்[32] என்பன அவ்வகச் சான்றுகள் ஆகும். இவைதவிர நெடுவேள் குன்றம், வெண்குன்று, ஏரகம், சீரலைவாய் ஆகிய இடங்களில் முருகன் உறைந்தான் என்ற குறிப்பும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வகையில் சிலப்பதிகார காலத்தில் சங்க இலக்கிய வழிபாட்டு இடங்கள் தொடர்ந்து வழிபடப்பட்டு வந்துள்ளன என்பது உறுதியாகின்றது.

அணி முகங்கள் ஓர் ஆறும், ஈர்-ஆறு கையும்,

இணை இன்றித் தான் உடையான் ஏந்திய வேல்-அன்றே

பிணிமுகம் மேற்கொண்டு, அவுணர் பீடு அழியும்வண்ணம்

மணி விசும்பின் கோன் ஏத்த, மாறு அட்ட வெள் வேலே.

சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்

திரு முலைப் பால் உண்டான் திருக் கை வேல்-அன்றே-

வரு திகிரி கோல் அவுணன் மார்பம் பிளந்து,

குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடு வேலே”[33]

என்ற முருகனின் பிறப்பு சிறப்பு பற்றிச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது. மேலும் வெறியாடல் பற்றியும் சிலப்பதிகாரம் குறிக்கிறது.

"இறை வளை நல்லாய்! இது நகை ஆகின்றே-
கறி வளர் தண் சிலம்பன் செய்த நோய் தீர்க்க
அறியாள் மற்று அன்னை, அலர் கடம்பன் என்றே,
வெறியாடல் தான் விரும்பி, „ வேலன், வருக" என்றாள்!

ஆய் வளை நல்லாய்! இது நகை ஆகின்றே-
மா மலை வெற்பன் நோய் தீர்க்க வரும் வேலன்!
வரும் ஆயின் வேலன் மடவன் அவனின்
குருகு பெயர்க் குன்றம் கொன்றான் மடவன்.

செறி வளைக் கை நல்லாய்! இது நகை ஆகின்றே-
வெறி கமழ் வெற்பன் நோய் தீர்க்க வரும் வேலன்!
வேலன் மடவன் அவனினும் தான் மடவன்
ஆல் அமர் செல்வன் புதல்வன் வரும் ஆயின்
நேர் இழை நல்லாய்! நகை ஆம்-மலை நாடன்
மார்பு தரு வெந் நோய் தீர்க்க வரும் வேலன்!
தீர்க்க வரும் வேலன்-தன்னினும் தான் மடவன்,
கார்க் கடப்பந் தார் எம் கடவுள் வரும் ஆயின். ." [34]

என்ற பகுதிகள் வெறியாடல் சிலப்பதிகார காலத்திலும் மக்கள் வழக்கில் இருந்தது என்பதைக் காட்டுவதாக உள்ளது.

சிலப்பதிகார காலத்தில் மட்டும் இல்லாது சீவக சிந்தாமணியிலும் முருகன் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. சீவகனின் தோற்றம் பல இடங்களில் முருகன் தோற்றத்துடன் ஒப்புவைக்கப்பெற்றுள்ளது. அதற்கு ஒரு சான்று "பொறிமயில் இழியும் பொன்தார் முருகனின் பொலிந்து மாவின்"[35] என்பதாகும்.

திருமுறைகளில் முருக வழிபாடு

சைவத் தொகுப்பான பன்னிரு திருமுறைகளில் முருகன் பற்றி பல செய்திகள் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளன. சம்பந்தர் தேவாரத்தில்

"சேய் அடைந்த சேய்ஞலூரில் செல்வன சீர் பரவி,
தோய் அடைந்த தண்வயல் சூழ் தோணி புரத் தலைவன்-
சாய் அடைந்த ஞானம் மல்கு சம்பந்தன்-இன் உரைகள்
வாய் அடைந்து பாட வல்லார் வான் உலகு ஆள்பவ"[36]

என்ற இப்பாடலில் சேய் என்ற குறிப்பு முருகனைக் குறிப்பதாகும். முருகன் சிவபெருமானை வணங்கும் சிறப்பினை உடையது சேய்ஞ்ஞலூர் தலம் என்பது அத்தலத்திற்கான பெருமை ஆகும். முருகனை மக்கள் வழிபடல் என்ற நிலையினின்று மாறி முருகன் சிவனை வழிபட்டதாகத் திருமுறை காட்டுகிறது.

திருநாவுக்கரசரின் தேவாரத்தில்

"நம் கடம்பனை பெற்றவள் பங்கினன்
தென் கடம்பை திருக் கர கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"[37]

என்ற பாடலில் முருகப்பெருமான் பற்றிய குறிப்பினை வைத்துப் பாடியுள்ளார் நாவுக்கரசர். இதன்வழி நாவுக்கரசர் காலத்தில் குறிக்கத்தக்க இடத்தை முருகன் பெற்றிருந்தான் என்பது புலனாகின்றது.

சுந்தரர் தம் ஏழாம் திருமுறையில் சிவகுடும்பத்தைப் பின்வருமாறு அறிமுகம் செய்கிறார்.

“திங்கள் தங்கு சடையின் மேல் ஓர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல், வாய் திற(வ்)வாள் கணபதி(ய்)யேல், வயிறு தாரி
அம் கை வேலோன் குமரன், பிள்ளை தேவியார் கொற்று அடியாளால்
உங்களுக்கு ஆட் செய்ய மாட்டோம் ஓணகாந்தன் தளி உளீரே!”[38] .

என்ற இந்தப்பாடலில் குமரன் பிள்ளைப் பருவத்தானாக உரைக்கப்பெற்றுள்ளான். அவனுடன் பிள்ளையாரும் இணைத்துப் பாடப்பெற்றுள்ளார்.

தேவார மூவர் காலத்திலும் முருகவழிபாடு இருந்துள்ளது என்றாலும் அது சிவ நடைமுறைக்குள் உள்ளடங்கி அமைந்திருந்தது என்பதை உணரமுடிகின்றது. ஆரியச்சாயல் இங்கு வலுப்பெற்றது என்பதையும் உணரமுடிகின்றது.

எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே[39]

என்ற திருமந்திரப்பாடலில் அறுமுகன் என்ற அளவில் ஐந்துமுகம் அதனோடு இணைந்து அதோ முகம் என்ற ஆறுமுகம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆறுமுகச் சிவன் என்று திருமந்திரம் முருகனைக் குறிக்கிறது.

இவ்வாறு திருமுறைகளில் சிவனின் சக்தியாக முருகப்பெருமான் கொள்ளப்பெற்றுள்ளார். சிவபெருமானுள் அடங்கிய தெய்வமாக முருகன் வணங்கப்பெற்றுள்ளான்.

<u>கந்தபுராணமும் முருக வழிபாட்டின் உயர்வும்</u>

தனிப்பெருங்கடவுளாக கந்தபுராணம் முருகனை உயர்த்துகிறது. கச்சியப்ப சிவாச்சாரியார் முருகனின் பெருமை, முருகனின் வரலாறு, அவனை வழிபடும் முறைமை முதலானவற்றைத் தன் புராணத்துக்குள் இயம்பியுள்ளார்.

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி

ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி

மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்

சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி" [40]

என்று தொடங்கும் கந்தபுராணம் பத்தாயிரத்து முன்னூற்று நாற்பத்தைந்து பாடல்களில் கந்தனின் அருட்திறத்தை உரைக்கின்றது,

கந்தனின் வழிபாடு பற்றி தனிப்படலமே உள்ளது. அந்தப் படலத்தின் பெயர் கந்த விரதப்படலம் ஆகும். பகீரதன் பகை விலக்கியது சுக்கிரவார விரதம் ஆகும். இதனைப் பற்றி உரைப்பதே விரதப்படலம் ஆகும்.

"நன்றென வினவி மன்னன் ஞாயிறு முதலாம் நாளில்

ஒன்றெனும் வெள்ளி முற்றும் உணவினைத் துறந்து முன்பின்

சென்றிடும் இரண்டுநாளும் திவாவினில் அடிசில் மாந்தி

இன்துயில் அதனை நீக்கி யாண்டு மூன்றளவு நோற்றான்" [41]

என்று சுக்கிரவார விரதம் பற்றிய நடைமுறை காட்டப்பெற்றுள்ளது. வார நாள்களில் வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் உணவின்றி இருக்கவேண்டும்.

இந்நாளுக்கு முன்பும் பின்பும் ஆன வியாழன் , சனிக்கிழமைகளில் பகலில் ஒருபொழுது மட்டுமே உண்ணவேண்டும். இனிய உறக்கத்தை விட்டு முருகன் பாடல்களைப் பாடிப்பரவித் துதிக்க வேண்டும். இவ்வாறு மூன்றுஆண்டுகள் செய்யும் நடைமுறை சுக்ரவாரவிரதமாகும். இதுவே கந்தனுக்கு உரிய விரதம் என்கிறார் கச்சியப்பர். கந்தபுராணத்தில் இவ்வாறு விரத அமைப்பில் முருகவழிபாடு மக்கள் வழிபாடாகச் சிறந்துள்ளது.

பல தனிப்புலவர்கள் முருக அடியார்களாக விளங்கி முருக வழிபாட்டிற்கு உறுதுணை புரிந்துள்ளனர். ஆதி சங்கரர் திருச்செந்தூர் வருகை தந்து ஸ்ரீசுப்பிரமணிய புஜங்கம் என்பதைப் பாடியுள்ளார். தமிழ்க்கடவுளை வடமொழிவாணர் வணங்கிய தகைமை போற்றத்தக்கது. மேலும் பல தனிப்புலவர்களின் முருக வழிபாட்டு முறை பின்வரும் நிலையில் காட்டப்பெறுகிறது.

<u>கல்லாடத்தில் முருக வழிபாடு</u>

கல்லாடர் இயற்றிய கல்லாடத்தில் முருகப்பெருமான் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. இவர் முருகப்பெருமானுக்கு வேலன் வணக்கம் என்ற நிலையில் பாயிரம் பாடியுள்ளார்.

“அறிவுநிலை கூடாச் சின்மொழி கொண்டு
கடவுட் கூறா வுலவா வருந்தியும் சனனப்
பீழையுந் தள்ளாக் காமமும் தற்படு
துயரமு மடைவுகெட் டிறத்தலும்
தென்புலக் கோமகன் நீத்தெறு தண்டமும்
நரகொடு துறக்கத் துழல்வரு பீழையும்
நீளா திம்பரின் முடித்து
மீளாக் காட்சி தருதியின் றெனவே” [42]

என்று முருகப்பெருமானிடம் அருள் வேண்டுகிறார் கல்லாடர். ஆசை, ஒழிக்கப்படாத காமம், பெருந்துன்பம், முறைதவறி நடக்கும் தன்மை, இயமனின் துன்பம், நரகத்தும் சுவர்க்கத்தும் உலவுகின்ற துன்பம் ஆகியன நீட்டிக்காது இந்தப்பிறவியிலேயே முடிவு செய்து இப்பொழுதே எமக்கு முத்திப் பேற்றைத் த:ருவாய் என்று எண்ணி வெட்சி மாலை சூடிய முருகப் பாத மலர்கள் இரண்டையும் என் தலையில் சூட்டிக் கொண்டேன் என்ற கல்லாடர் பாடுகிறார். தலையால் பணிவதும், சொல்லால் போற்றுவதும் இவரின் வழிபாடு ஆகின்றது.

குமரகுருபரரின் முருக வழிபாட்டு முறை

குமரகுருபரர் முருகப்பெருமான் அருளால் பேசும் திறம் பெற்றவர் ஆவார். அவர் முருகப்பெருமான் மீது பல சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண்பா ஆகியன அவர் பாடியனவாகும். கந்தர் கலிவெண்பாவில் அவர் வேண்டும் முறை அழகியதாகும்.

பல்கோடி சன்மப் பகையும் அவமிருந்தும் பல்கோடி

விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி பாதகமும்

செய்வினையும் பாம்பும் பசாசும் அடல் பூதமுந்தீ நீரும்

பொருபடையும் - தீது அகலா வெவ்விடமும் துட்ட

மிருகம் முதலாம் எவையும் எவ்விடம் வந்து எம்மை

எதிர்த்தாலும் - அவ்விடத்தில் பச்சைமயில் வாகனமும்

பன்னிரண்டு திண்தோளும் அச்சம் அகற்றும்

மயில்வேலும் - கச்சைத்

திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு

அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரகிரணம்

சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்

எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண்.

எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து

உல்லாசமாக உளத்திருந்து - பல்விதமாம்

ஆசுமுதல் நாற்கவியம் அட்டாவ தானமும்சீர்ப்

பேசும் இயல் பல்காப்பியத் தொகையும் - ஓசை

எழுத்துமுத லாம் ஐந்த இலக்கணமும் தோய்ந்து

பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன்

இம்மைப் பிறப்பில் இருவா தனை அகற்றி

மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து

ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்

தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு

அடியேற்கு முன்னின்று அருள்” [43]

என்ற பகுதியின் வழியாகக் குமரகுருபரர் முருக அடியாருடன் என்னை இணைத்து அருள்புரிக என்று வேண்டுகிறார். முருகவழிபாட்டில் தனிமனித வழிபாடு தொடங்கிக் கூட்டுவழிபாடாகக் கனிந்த காலம் இதுவாகும்.

<u>அருணகிரிநாதர் காட்டும் முருக வழிபாடு</u>

அருணகிரிநாதரின் திருப்புகழ் அனைத்தும் முருகன் புகழ்பாடும் பனுவல்களாகும். அருணகிரிநாதர் கந்தப் பெருமான் இருக்கும் ஊர்தோறும் சென்று அங்குள்ள முருகனைப் பாடும் நன்முறையைப் பின்பற்றினார். அவரின்

பாடல்கள் திருப்புகழாகத் தொகுக்கப்பெற்றன. முருகவேள் பன்னிருதிருமுறையாகவும் தொகுக்கப்பெற்றது. அவரின் வழிபாட்டு முறைக்கு பின்வரும் ஒருபாடல் சான்றாகிறது. பல்லாயிரம் பாடல்கள் பாடிய அருணகிரிநாதருக்கு ஒரு பாடல் என்ற நிலை மிகக்குறைவானது என்றாலும் அவ்வொரு பாடல் கொண்டு அத்திருமுருகனின் அருள் திறத்தை அறிந்து கொள்ளஇயலுகின்றது,

“இயலினில் செஞ்சொற்பர பந்தமென

மதுர கவிகளில் மனம் பற்றிருந்து புகழ்

உரிய அடிமையுனை அன்றிபர பஞ்சமதை நம்புவேனே” [44]

என்றுப் பாடலால் பரவும் வழிபாட்டுமுறையை அருணகிரிநாதர் ஏற்றுள்ளார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வண்ணத்தியல்பு, அறுவகை இல்ககணம் ்போன்ற இலக்கண நூல்களை வரைந்தவர். புலவர் புராணம், ஆறு சமயக் கடவுளர்க்கு ஆயிரம் ஆயிரம் பாடல்கள், அருணகிரிநாதர் புராணம், தமிழலங்காரம் போன்ற ்பல பாடல்களை எழுதி உள்ளார். இவர் முருகனின் புகழைத் தமிழின் புகழாகக் கருதியவர்.

“கச்சியின் சைவப் பிராமணன் அன்று கனசபையில்

நச்சிய பாவலர் சொற்கேட்டு நெஞ்சகம் நாணும் அன்று

பச்சிளங் கொங்கைக் குறமாது கொண்கன்ஓர் பாவலனா

மெச்சியின் பந்தரச் சென்றதும் செந்தமிழ் வென்றியதே” [45]

என்ற ்நிலையில் கச்சியப்ப சிவாசாரியாருக்கு திகடச் சக்கரம் என்ற சொற்றொடருக்கு இலக்கணம் காட்ட முருகப் பெருமான் வந்ததைத் தமிழின் வெற்றி என்கிறார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். முருகனின் வெற்றியே தமிழின் வெற்றி என்னும் போக்கு இவரிடம் இருந்துள்ளது.

சிவப்பிரகாச சுவாமிகள்

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் எனப்படும் இவர் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்பெறுபவர். தன் குருவான சிவஞான பாலய தேசிக சுவாமிகளைப் பற்றி பல சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். இவர் பாடிண திருச்செந்தில் நீரோட்ட யமக அந்தாதி உதடு ஒட்டாது பாடக் கூடியது. இதனை ஒரு போட்டிக்காக சிவப்பிரகாசர் பாடினார்.

இந்நூலுள் இருந்து ஒரு பாடல் இவரின் முருக வழிபாட்டுத் திறத்தை எடுத்துரைப்பதாக உள்ளது.

“தினகரன் நந்த நனி இலங்கா நின்ற செய்ய நல்செந்
தில்நகரன் நம்தம் நிதி ஆயினன் அடல் சீர் அயில் ஏந்
தினகரன் அந்தகனைச் செற்ற த்தாளா திகழ் கனகா
தில்நகர் அனந்தன் நடனர் தனயன் என் சிந்தையனே”

46

என்ற இப்பாடல் வழி சிந்தையில் முருகனை நிறுத்தி வணங்கும் வழிபாட்டு முறையைச் சிவப்பிரகாசர் கைக்கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

சிற்றிலக்கியங்களில் முருக வழிபாடு

முருகப்பெருமான் குறித்துப் பல சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றுள்ளன. அதிக அளவில் சிற்றிலக்கியம் பாடப்பெற்ற கடவுள் ˙முருகன்தான் என்று சொல்லும் அளவிற்குப் பற்பல சிற்றிலக்கியங்கள் முருகன் மீது பாடப்பெற்றுள்ளன. தமிழ்விடுதூதில் முருகப்பெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அண்ணாமலை ரெட்டியாரின் ˙காவடிச் சிந்து மிகக் குறிக்கத்தக்க முருகன் குறித்த சிற்றிலக்கியமாகும். மதுரகவி ஆண்டவரின் போற்றி மடக்குபதிகம், பிச்சுவையர் இயற்றிய மயுரகிரி என்னும் குன்றக்குடி சண்முகநாதர்உலா, வீரபத்திரக் கவிராயர் இயற்றிய குன்றக்குடிக் குறவஞ்சி,

வைத்தியநாத தேசிகர் எழுதிய மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், ஆ.சிவலிங்கனார் இயற்றிய மயிலத் திருவாயிரம், கச்சியப்ப முனிவர் இயற்றிய திருத்தணிகை ஆற்றுப்படை, வரகவி மார்க்கசகாய தேவர் எழுதிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர் இயற்றிய திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ், கவிராஜ பண்டாரத்தையா எழுதிய திருமலை முருகன் பிள்ளைதமிழ், விசையகிரிவேலச் சின்னோவையன் எழுதிய பழனி பிள்ளைத்தமிழ், அந்தக் கவிராயர் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சிதம்பர சுவாமிகள் இயற்றிய போரூர் முருகன் பிள்ளைத்தமிழ், சிதம்பர முனிவர் எழுதிய சேத்திர கோவைப்பிள்ளைத்தமிழ் போன்றவாறு பல்வேறு சிற்றிலக்கியங்கள் முருகன் மீது பாடப்பெற்றுள்ளன. இதன் காரணமாக முருக வழிபாடு இடையீடு இன்றித் தொடர்ந்து தமிழர் வாழ்வில் இடம்பெற்று வந்துள்ளது என்பதை உணர முடிகின்றது.

வள்ளலார், பாரதியார், பாரதிதாசன் போன்ற பலரும் முருகனைப் பாடியவர்கள் ஆவர். சுப்பிரமணியர் துதியமுது என்ற சிற்றிலக்கியத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார்.

தற்காலத்தில் இலக்கியங்களில் திரைப்படங்களில் முருகவழிபாட்டு மரபுகள் எடுத்துரைக்கப்பெற்று வருகின்றன. இதன் காரணமாக முருக வழிபாடு தமிழர்களில் வாழ்வில் இழக்கமுடியாத ஒன்றாக நிலைபெற்றுள்ளது.

இந்நிலையில் முருகவேள் பன்னிரு திருமுறை என்ற தொகுப்பும் முருகவேள் பனுவல் தொகுப்பாக ஆக்கப்பெற்றது. அதன் இயல்பு, அமைப்பு பற்றி அடுத்த இயல் விரிவாக விவரிக்கின்றது.

தொகுப்புரை

முருக வழிபாடு என்பது தமிழர் வாழ்வில் கலந்த பக்தி பண்பாட்டு மரபாகும். தொல்காப்பிய காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதற்கொண்டு முருகப் பெருமானின் வழிபாடு தமிழ் நிலத்தில் திகழ்ந்து வந்துள்ளது. இன்றுவரை திகழ்ந்து வருகிறது. சங்க காலம் வரை திராவிடத் தெய்வ வடிவமாக விளங்கிய முருகப்பெருமான் பக்தி இலக்கியக் காலத்தில் ஆரியச் சாயல் பெற்று சிவ குடும்பத்திற்குள் கடைப்பிள்ளையாக இணைக்கப்பெறுகிறான். எனினும் கந்தபுராணம் முருகனைத் தனிப்பெருந்த தெய்வமாக உலகிற்குக் காட்டுகிறது. அதிக அளவில் சிற்றிலக்கியங்கள் முருகப்பெருமான் மீது பாடப்பெற்றுள்ளன. புலவர்கள் பலர் முருகப் பெருமானைப் பாடிப் பரவியுள்ளனர். தற்காலத்திலும் முருகப்பெருமானின் புகழ் தனிப்பாடல்களாலும், திரையிசையாலும் சிறப்புற்று விளங்கி வருகிறது. இதன் காரணமாக தமிழரின் பண்பாட்டு அடையாளமாக முருகனும் அவனது வழிபாடு விளங்குகின்றன என்பது உறுதி.

<u>சான்றாதாரங்கள்</u>

---

[1] இரத்தின வெங்கடேசன், வரலாற்று நோக்கில் முருகவழிபாடு ஒருபார்வை, தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் முருகவழிபாடு, ப. 41

[2] இரத்தின வெங்கடேசன், வரலாற்று நோக்கில் முருக வழிபாடு ஒரு பார்வை, தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் முருகன், ஆய்வுக்கோவை முதல்தொகுதி,ப.41

[3] ரா.பி. சேதுப்பிள்ளை, வேலின் வெற்றி,ப.3

[4] திருவி.கலியாண சுந்தரனார், முருகன் அல்லது அழகு, பக். 186-187

[5] இராமநாதன் பழனியப்பன், திருச்செந்தூர் கடலோரத்தில், ப. 60

[6] http://www.tamilvu.org/courses/degree/a061/a0614/html/a0614221.html

[7] தெ. முருகசாமி, முருகா எனும் நாமம், குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர், ப.150

[8] “தொல்காப்பியம் என்னும் பழைய தமிழ் இலக்கண நூல் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது" மு.வரதராசனார், தமிழ் இல்ககிய வரலாறு, ப.6

[9] தொல்காப்பியர், தொல்காப்பியம், நூற்பா எண். 5

[10] தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா எண். 63

[11] பரிபாடல் பாடல்எண் 19 அடி57

[12] அகநானூறு: பாடல்எண் 98 அடி1

[13] புறநானூறு, பாடல்எண் 23 அடி 4

[14] புறுநானூறு,பாடல் எண் 299

[15] பரி 8.∴.81,82

[16] - பொரு 131

[17] - அகம் 59.∴.11

[18] அகம் 158.∴16

[19] - புறம் 16.∴12

[20] - அகம் 1.∴3

[21] பதிப்பாசிரியர் குழு. பாட்டும் தொகையும், முரு. 107-108 116-117 206-211 264 தனி. 1-3 மது. 181 கலி. 105:17 அக. 120:1, 266:20-21-அசுரரை அழித்தல் குறு. 1:1-3-ஆடு பெற்றமை பரி. 5:61-62 -ஆறெழுத்து மறை முரு. 186-187- ஊர்தி புற. 56:7-8-கிரவுஞ்சமலையைப் பிளந்தமை முரு. 266-267 தனி 1:1-2குறு. க.வா.3-5 பரி. 5:9-10 19:101-103 21:8-9-குன்றம் அக. 149 14-16 கொடி முரு. 38-39 122 குறு. க.வா.3-5 பரி. 17:48-49 அக. 149:14-16 புற. 56:7-8-கொற்றவை சிறுவன் முரு. 258-259 பெரு. 457-459-கோழிக் கொடி பெற்றமை பரி. 5:55-58-சிவகுமாரன் முரு. 256-259 தனி. 3 கலி. 83:13-15-சூரனை வென்றமை முரு. 45-46 275 தனி.1.2:பெரு.457-459 பதி. 11:3-6 பரி. 5:1-7 9:70-71 14:18 18:3-4 19:101-103 21:8-9 28-29 கலி.27:15-16 93:25-26 104:13 அக. 59:10-12-செந்தில் நகர் புற. 55:18-19 -தெய்வயானை கணவன் முரு. 4-6 175-176 பரி. 9:8-11 தேவசேனாபதி. முரு. 260-தேவர் துயர்தீர்த்தல் முரு. தனி 1-2-பகைவரை அழித்தல் முரு. 98-100 பதி. 26:12 பரி. 21:66-67-பிறப்பு முரு. 253-255 பரி. 5:12, 27-54 8:12-13, 125-127 9:5-7 மயில் ஊர்தி பரி. 17:48-49 21:2-மயில் பெற்றமை பரி. 5:58-60-மாமரத்தை அழித்தது முரு. 59-61 பரி. 5:1-7 9:70-71 18:3-4 19:101-103 21:8-9, 28-29 கலி.27:15-16 104:13-மாலை முரு. 10-11 43-44 பெரு. 75 பரி. 21:10-11 -யானை முரு. 81-82 247: குறு. 1:1-3 பரி. 17:48-49-வள்ளி திருமணம் முரு. 100-102 பரி. 9:8-11:14:21-22 19:5-7, 95 பரி. தி. 8:7-8

[22] வெளிபாடிய காமக்கணியனார், அகநானூறு, பாடல்எண். 22

[23] கேசவனார், பரிபாடல் பாட்டு எண் 14

[24] கடுவன் இளவெயினனார், பரிபாடல் பாட்டுஎண். 5 அடிகள் 71-75

[25] நக்கீரர் திருமுருகாற்றுப்படை, அடி227-249

[26] திருமுருகாற்றுப்படை வெண்பா எண். 5

[27] திருமுருகாற்றுப்புடை வெண்பாஎண். 6

[28] இரத்தின வெங்கடேசன், தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் முருகன், ஆய்வுக்கோவை,1, ப. 44

[29] ஐந்திணை எழுபது, பாடல் எண் 13

[30] கணிமேதாவியார், திணைமாலை நூற்றைம்பது, பாடல்எண். 12

[31] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், இந்திரவிழவு ஊர் எடுத்த காதை, அடி 170

[32] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், ஊர்காண்காதை, அடி10

[33] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை, அடி 8-9

[34] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை,அடி 11,12,13

[35] திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி, பாடல்எண் 1908

[36] திருஞானசம்பந்தர், திருசேய்ஞ்ஞலூர் திருப்பதிகம் பாடல்எண். 11

[37] திருநாவுக்கரசர் தேவாரம், திருக்கநற்தொகை, ஐந்தாம் திருமுறை, பாடல்எண். 9

[38] சுந்தரர், ஏழாம் திருமுறை, திருஓணக்காந்தன்தளி, பாடல்எண். 2

[39] திருமூலர்,திருமந்திரம், பாடல்எண். 503

[40] கச்சியப்பர், கந்தபுராணம், பாடல்எண்.3

[41] கச்சியப்பர், கந்தபுராணம், கந்தவிரதப்படலம், பாடல்எண் 9957

[42] கல்லாடர், கல்லாடம் பாயிரம் பாடல்எண். 2

[43] குமரகுருபரர், கந்தர்கலிவெண்பா, 111-122)

[44] அருணகிரிநாதர்திருப்புகழ், பழனி, பாடல் 36

[45] வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், தமிழலங்காரம், பாடல்எண். 70

[46] சிவப்பிரகாசர், திருச்செந்தில் நீரோட்ட யமக அந்தாதி, பாடல்எண். 2

[25] நக்கீரர் திருமுருகாற்றுப்படை, அடி227-249

[26] திருமுருகாற்றுப்படை வெண்பா எண். 5

[27] திருமுருகாற்றுப்புடை வெண்பாஎண். 6

[28] இரத்தின வெங்கடேசன், தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் முருகன், ஆய்வுக்கோவை,1, ப. 44

[29] ஐந்திணை எழுபது, பாடல் எண் 13

[30] கணிமேதாவியார், திணைமாலை நூற்றைம்பது, பாடல்எண். 12

[31] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், இந்திரவிழவு ஊர் எடுத்த காதை, அடி 170

[32] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், ஊர்காண்காதை, அடி10

[33] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை, அடி 8-9

[34] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை,அடி 11,12,13

[35] திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி, பாடல்எண் 1908

[36] திருஞானசம்பந்தர், திருசேய்ஞ்ஞலூர் திருப்பதிகம் பாடல்எண். 11

[37] திருநாவுக்கரசர் தேவாரம், திருக்கநற்தொகை, ஐந்தாம் திருமுறை, பாடல்எண். 9

[38] சுந்தரர், ஏழாம் திருமுறை, திருஓணக்காந்தன்தளி, பாடல்எண். 2

[39] திருமூலர்,திருமந்திரம், பாடல்எண். 503

[40] கச்சியப்பர், கந்தபுராணம், பாடல்எண்.3

[41] கச்சியப்பர், கந்தபுராணம், கந்தவிரதப்படலம், பாடல்எண் 9957

[42] கல்லாடர், கல்லாடம் பாயிரம் பாடல்எண். 2

[43] குமரகுருபரர், கந்தர்கலிவெண்பா, 111-122)

[44] அருணகிரிநாதர்திருப்புகழ், பழனி, பாடல் 36

[45] வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், தமிழலங்காரம், பாடல்எண். 70

[46] சிவப்பிரகாசர், திருச்செந்தில் நீரோட்ட யமக அந்தாதி, பாடல்எண். 2

இயல்.2.

சேய்த்தொண்டர் புராணத்தின் அமைப்பும், பகுப்புகளும்

இயல்.2

சேய்த்தொண்டர் புராணத்தின் அமைப்பும், பகுப்புகளும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொகுப்பு முயற்சிகள் பல நிலைகளில் நடைபெற்றுள்ளன. சங்க இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் என்பன போன்ற தொகுப்புகளைச் செய்தவர்கள் இன்னார் என்று தெரியாதபோதும் அத்தொகுப்புகள் தமிழ் இலக்கியவரலாற்றின் தொகுப்பு அடையாளங்களாக விளங்குகின்றன.

இவை தவிர எட்டுத் தொகை நூல்கள் அனைத்தும் அடிவரையறையின் அடிப்படையில் தொகுக்கப் பெற்ற நூல்கள் ஆகும். திணை நிலைப்படியும் அவை தொகுக்கப்பெற்றுள்ளன. தொடர்ந்து எழுந்த பன்னிரு திருமுறைகள் தலமுறை, வரலாற்றுமுறையால் தொகுக்கப்பெற்றனவாகும் பன்னிரு திருமுறையைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்பது பொதுக் கருத்தாகும். இதுபோன்று நாலாயிரத்திவ்ய பிரபந்தமும் நாதமுனிகளால் தொகுக்கப்பெற்றது. அருட்பிரகாச வள்ளலார் பாடல்களும் பிற்காலத்தில் திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றன. இவ்வளவில் தொகுக்கப்பெற்ற நூல்களின் வரிசையில் அருணகிரிநாதரின் திருப்புகழும் அமைகின்றது.

அருணகிரிநாதரின் திருப்புகழைத் தொகுத்தவர் தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை ஆவார். இவர் தமிழக முருகன் கோயில்களுக்குச் செல்லும் வழக்கமுடையவர் என்பதால் திருப்புகழைத் தேடித் தொகுக்கும் முயற்சியில் இறங்கினார். இம்முயற்சி முருகவேளுக்குப் பன்னிரு திருமுறை என்ற அளவில் நீட்டம் பெற்றது. கந்தவேளின் பதினோரு திருமுறைகளைத் தொகுப்பதில் இவருக்கு இடைஞ்சல்கள் அதிகம் இல்லை. ஆனால் பனிரெண்டாம் திருமுறை என்ற ஒன்று

முருகனுக்கு அமையாத நிலையில், அதாவது முருகப்பெருமான் தொண்டர் புராணம் என்ற ஒன்று அமையாத நிலையில் இப்பன்னிரெண்டாம் திருமுறை நிறைவடையாமலே இருந்தது.

சைவம் சார்ந்த பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணம் என்ற பெரியபுராணம் ஆகும். இதனை இயற்றியவர் சேக்கிழார் ஆவார். இந்நிலையை முன்வைத்து முருகவேள் பன்னிரு திருமுறையிலும் ஒரு தொண்டர் புராணம் அமைக்கப்பட வேண்டிய நிலையில் சேய்த்தொண்டர் புராணம் என்பதைப் படைக்கவேண்டும் என்ற தேவை ஏற்பட்டது. இத்தேவை கருதிப் படைக்கப்பெற்ற சேய்த்தொணடர் புராணத்தின் அமைப்புமுறையை பற்றி ஆராய்வதாக இவ்வியல்அமைகிறது.

திருப்புகழ் தொகுப்புமுறை

அருணகிரிநாதர் முருகப்பெருமான் உறையும் தலங்கள்தோறும் சென்று முருகப் பனுவல்களைப் பாடிப் பரவினார். பாடிப் பாடி முருகன் அருள் பெற்றார். இவர் பாடியன பதினாறாயிரம் பாடல்கள் என்று கருதப்பெறுகின்றன. ஆனால் ஆயிரத்து முன்னூற்று ஏழு பாடல்கள் மட்டுமே தற்போது கிடைத்துள்ளன. இவ்வாயிரம் பாடல்களையும் திருப்புகழாகத் தொகுப்பது என்பது மிகப்பெரும் முயற்சியாக இருந்துள்ளது.

வ.த. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் திருப்புகழைத் தொகுக்கப் பல முயற்சிகளில் இறங்கியுள்ளார். இவரின் முயற்சிகள் பின்வரும் நிலையில் அமைந்திருந்தது. “1876 ஆம் ஆண்டு அவர் ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்ததைக் கண்டார். ஏப்ரல் மாதம் ஒரு புனித வெள்ளிக் கிழமையில் தான் கண்டு பிடித்த பனை ஓலைகளில் இருந்து

அவற்றை படித்து எழுதிக் கொள்ளத் துவங்கினார். 28.6.1878 வரை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அண்ணாமலை பிள்ளை என்பவரால் பனை ஓலைகளில் எழுதி இருந்த நிலையில் 750 பாடல்களுக்கு மேல் கிடைத்தன. செப்டம்பர் மாதம் 30 தேதிவரை சிதம்பரத்தைச் சார்ந்த பென்னாத்தூரில் இருந்த சீனிவாச பிள்ளை என்பவர் எழுதி இருந்த நிலையில் இன்னமும் 450 பாடல்கள் கிடைத்தன. 20.03.1881 ல் கருங்குளி ஆறுமுக ஐயர் என்பவர் இன்னும் 900 பாடல்களைத் தேடித் தந்தார். 1903 ஆம் ஆண்டு திருமாக்கரலில் புதிதாக ஒன்றை சேர்த்து 780 பாடல்கள் கிடைத்தன[1] என்ற குறிப்பு திருப்புகழ் பாடல்களைத் தொகுக்கின்ற பணியின் கடுமையைக் காட்டுவதாக உள்ளது.

இப்பாடல்களை இவர் திருத்தி, இருமுறை வந்தவற்றை விலக்கிச் செப்பமான பதிப்பாக உருவாக்கி ஆறுபடைவீடு பாடல்களை முன்னதாக வைத்து, அதன்பின் பஞ்சபூதத் தலப்பாடல்களை வைத்து, அதன்பின் தொண்டை நாடு, சோழநாடு போன்ற நாடுகளின் திருத்தலங்களில் பாடப்பெற்ற பாடல்களை வைத்து ஒரு வரிசைமுறையை ஏற்படுத்தினார்.. இவ்வளவில் திருப்புகழ் தொகுக்கப்பெற்றது. இதன்பின் இவ்வரிசையில் அச்சாக்கம் பெற்று வெளியிடப்பெற்றது.

இவ்வாறு வெளியிடப்பெற்ற திருப்புகழின் வரலாறு பின்வருமாறு.

“1895 ஆம் ஆண்டில்தான் திருப்புகழ் முதல் பாகம் வெளியிடப்பட்டது. அவற்றில் 603 பாடல்கள் இடம் பெற்றன. அடுத்து 1909 ஆம் ஆண்டு வந்த இரண்டாம் பதிப்பில் திருத்தங்களுடன் அது வெளியாயிற்று. 1921 ஆம் ஆண்டு வந்த மூன்றாம் பதிப்பில் அவருடைய மகன்களான வீ.எஸ்.சண்முகம், மற்றும் வீ.எஸ்.செங்கல்வராயன் இருவரும் பல புதிய பாடல்களை இணைத்து வெளியிட்டனர். 1931 ஆம் ஆண்டு வந்த நான்காம் பதிப்பில் திருப்புகழ் சிறப்பாயிரம்

என்ற இலக்கியத்துடன் வெளியிடப்பட்டது என்று முதல் தொகுதி வெளியிடப்பெற்ற நிலை விவரிக்கப்பெறுகிறது.

திருப்புகழின் இரண்டாம் தொகுதி வெளியீட்டு முயற்சியும் பின்வரும் நிலையில் அமைந்தது. “இரண்டாம் தொகுதி 1902 ஆம் ஆண்டு வெளி வந்தது. அதில் பஞ்சபூத ஸ்தல பாடல்களும் காசி, இராமேஸ்வரம் பற்றிய 158 பாடல்களும் இடம் பெற்றன. அதன் இரண்டாம் பதிப்பு 1923 ஆம் ஆண்டு வந்தது. அவருடைய மகன்களான வீ. எஸ். சண்முகம், மற்றும் வீ.எஸ். செங்கல்வராயன் வெளியிட்ட அதில் 32 புதிய பாடல்கள் இடம் பெற்றன” என்ற நிலையில் இரண்டாம்தொகுதி வெளியானது.

அடுத்துத் திருப்புகழின் மூன்றாம் தொகுதி வெளியிடப்பெற்றது. ‘1939 ஆம் ஆண்டு அந்தத் தொகுதி 309 பாடல்களை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. அதில் திருப்புகழ் பாடல்களைத் தவிர அருணகிரிநாதருடைய கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, மற்றும் திருவகுப்பு போன்றவை இடம் பெற்று இருந்தன. அதையும் தவிர இதனுள் அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு, அவர் எழுதிய பாடல்களின் ஆய்வு, அவருடைய எழுத்துக்கள் என மற்றவையும் இடம் பெற்று இருந்தன. திருவேழு கூற்றிருக்கை என்ற நூலை வ.த சுப்பிரமணியப் பிள்ளை வெளியிடாததின் காரணம் அதில் சில தவறுகள் இருந்தன என்பதே. ஆனால் அதன் சாரத்தைக் கண்டு அதில் ஈர்புற்ற அவருடைய மகன்கள் அதை மூன்றாம் பதிப்பில் இணைத்தனர்’’[2]

இவ்வாறு மூன்று தொகுதிகளாக அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் வெளியிடப்பெற்றன. இதுவே முதன் முயற்சியாகும். இதனைத் தொடர்ந்து வ. த. சுப்பிரமணியப் பிள்ளையின் மகனார் செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், முருகவேள்

பன்னிரு திருமுறை என்ற நூல் தொகுப்பினை வெளியிட்டார். வ.த. சுப்பிரமணியப் பிள்ளை வெளியிட்ட திருப்புகழ்களில் ஆறுபடைவீடு, பஞ்ச பூத தலங்கள் போன்ற வகைமைப்பாடு பின்பற்றப்படவில்லை. அவை பாடல்கள் கிடைத்தநிலையில் தொகுக்கப்பெற்றன என்பதே அரிய முயற்சியாகும்.

முருகவேள் பன்னிரு திருமுறை

தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை தன் தந்தையார் வ.த. சுப்பிரமணியப்பிள்ளை தொடங்கிவைத்த திருப்புகழ்ப்பணியை மேலும் செம்மைப்படுத்தினார். அவர் திருப்புகழுக்கு அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் உரைசெய்தார். இதன் தொடர்ச்சியாக முருகவேள் பன்னிரு திருமுறை என்ற நிலையில் ஒரு தொகுப்பினை அவர் தொகுத்தார். அதன் விபரம் பின்வருமாறு

முருகவேள் பன்னிரு திருமுறை எண்	பாடுபொருள்
முதல் திருமுறை	திருப்பரங்குன்றம்
இரண்டாம் திருமுறை	திருச்செந்தூர்
மூன்றாம் திருமுறை	திருஆவினன்குடி
நான்காம் திருமுறை	திருவேரகம்
ஐந்தாம் திருமுறை	குன்றுதோறாடல்
ஆறாம் திருமுறை	பழமுதிர்ச்சோலை
ஏழாம் திருமுறை	பொது திருப்புகழ் பாடல்கள்
எட்டாம் திருமுறை	கந்தர அலங்காரம், கந்தர் அந்தாதி
ஒன்பதாம் திருமுறை	திருவகுப்பு
பத்தாம் திருமுறை	கந்தர் அனுபூதி
பதினோராம் திருமுறை	நக்கீரர் கல்லாடர் போன்றோர் பாடிய பாடல்கள்

என்ற நிலையில் பதினோரு திருமுறைகளை இவர் வகுத்தார். இருப்பினும் பன்னிரண்டாம் திருமுறை சைவத்திருமுறை வரிசைபோல கந்தத் தொண்டர் புராணமாக இருக்கவேண்டும் என்று அவர் எண்ணினார். ‘இவ்வாறு பதினோரு திருமுறைகளும் வகுக்கப்பெற்று அவற்றுக்கு முறையான உரையும் எழுதி முடித்த தணிகைமணி அவர்கள் 1951 ஆம் ஆண்டில் அவற்றைப் பகுதி பகுதியாக வெளியிட்டார். இவ்வாறு வெளியிடப்பெற்ற முதற்பதிப்பின் முகவுரையில் “திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணத்துக்கு ஒப்ப முருகவேள் தொண்டர்களின் புராணம் சேய்த்தொண்டர் புராணம் என்னும் அருமைப் பெயருடன் ஒன்று வெளிவரலாம்” என்று குறிப்பிட்டார்.[3] என்ற குறிப்பின்படி முருகவேள் திருமுறையில் பதினோரு திருமுறைகள் வெளிப்படுத்தப்படும் நிலைவரை பன்னிரண்டாம் திருமுறையான கந்தத் தொண்டர் புராணம் அமையப்பெறாமல் இருந்ததை உணரமுடிகின்றது.

<u>சேய்த்தொண்டர் புராணம் - எழுதப்பட வேண்டிய சிந்தனை</u>

வ.சு. செங்கல்வராயப் பிள்ளை இவ்வாறு பன்னிரண்டாம் திருமுறையாகச் சேய்த் தொண்டர் புராணம் எழுதவேண்டிய நிலையை எண்ணி எண்ணி ஏங்கிய நிலையில் அவரின் பார்வைக்கு தேனூர் வரகவி சொக்கலிங்கன் என்பவர் எழுதிய “சுந்தரர் உலா” என்ற நூல் வந்தது. இதனைக் கண்ணுற்ற செங்கல்வராயர் உடன் சொக்கலிங்கருக்குத் தாங்கள் சேய்த்தொண்டர் புராணம் இயற்றித் தர வேண்டும் என்று கடிதம் வழி வேண்டினார்.

இதனைக் கண்ணுற்ற சொக்கலிங்கனாரும் ‘அப்படியே ஆகுக’ என்று பதில் எழுதினார். இதன்பிறகு செங்கல்வராயர் சேய்த்தொண்டர் புராணம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற கருத்துருவை அவருக்கு வழங்கினார். அவை பின்வருமாறு.

- சேய்த்தொண்டர் புராணம் என்பது நக்கீரர் தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த சேய்த்தொண்டர்கள் பற்றிய வரலாறுகளைக் கொண்டிருக்கவேண்டும்.
- புராணம் ˙பாடுவதற்கு முன்பாக சேய்த் தொண்டத்தொகை, பாடப்பெற வேண்டும். சேய்த் தொண்டத் தொகை “எம்மானெத் திருத்தணிகை அம்மானுக்காளே” என்று முடிவு பெறவேண்டும்.
- அதன்பின் சேய்த் தொண்டர் திருவந்தாதி பாடி அதனைத் தொடர்ந்து சேய்த் தொண்டர்புராணம் பாடப்பட வேண்டும்.

இத்தகைய வரையறைகள் அவருக்கு வழங்கப்பெற்றன.

இந்நடைமுறைகள் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் என்ற தொடர் படைப்பு நடைமுறையைச் சேய்த்தெமாண்டர் புராணமும் பின்பற்றப்பட வேண்டும் என்பதைச் சுட்டின. ஆனால் சேய்த் தொண்டத்தொகை, சேய்த் தொண்டர் திருவந்தாதி, சேய்த் தொண்டர் புராணம் ஆகிய அனைத்தும் வரகவி சொக்கலிங்கரே பாடும் சூழல் இதுபோது வாய்த்தது. இவற்றில் சேய்த்தொண்டத் தொகையை முதலில் எழுதி ˙அதனை செங்கல்வராயருக்கு சொக்கலிங்கர் அனுப்பினார். அதனைக் கண்டு மனம் மகிழ்ந்த செங்கல்வராயர் புராணம் பாட அவரை வழிப்படுத்தினார்.

<u>தேனூர் வரகவி சொக்கலிங்கனார் வாழ்க்கை</u>

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள துறையூர் என்ற ஊருக்குப் பக்கத்தில் அமைந்த தேனூரில் பிறந்தவர் சொக்கலிங்கனார். இவரின் பெற்றோர் மீனாட்சி,

செல்லப்பர் ஆகியோர் ஆவர். தேனூர் தேவாரப் பாடல் பெற்ற தலம் ஆகும். இவர் 14.11.1896 ஆம் நாளில் பிறந்தார். தேனூர் கோயிலுக்குத் திருவாசகம் ஓதிச் செல்வது இவரது இளமைப் பருவ வழக்கம்.

இவர் தன் இளம் வயதில் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுக்கு வணிகம் காரணமாகச் சென்றுள்ளார். இவர் மலேசியாவில் இருந்த காலத்தில் இவருக்குச் சற்று உடல் நலம் குன்றியது. மருத்துவ உதவிகள் பெற்றும் அவ்வுடல் நலக்குறைவு குறையவில்லை. எனவே இவர் ஆன்மீக நிலையில் அதனைத் தீர்த்துக்கொள்ள எண்ணினார். தன் பிறந்த ஊரான தேனூரில் இருந்து அங்குள்ள சிவாலய அம்பிகையின் அருள் வேண்டிப் பாடினார். மேலும் அவ்வம்மனின் திருவருள் பிரசாதத்தை அஞ்சல் வழிப் பெற்றார். இதனால் நன்மை பெற்ற அவர் தேனூர்ப் புராணம் பாடினார். அம்பிகை அருளால் நோயும் தீர்ந்தது. கவிபாடும் ஆற்றலும் அவருக்கு வாய்த்தது.

மலேயாவில் இருந்து 1934 ஆம் ஆண்டு திரும்பித் தன் சொந்த ஊருக்கு வந்தார். இதன்பிறகு இவர் துறையூரில் வாழ ஆரம்பித்தார். துறையூர் சுற்றியுள்ள ஆலயத் தெய்வங்கள் பற்றி இவர் பல பக்திப்பனுவல்களைப் பாடியுள்ளார். முருகூர்ச் சிவபிரான் தோத்திரத்திரட்டு, ஓமாந்தூர் காமட்சியம்மன் தோத்திர மஞ்சரி போன்றனவற்றைப் பாடினார். தொடர்ந்து சுந்தரர் உலாவைப் பாடினார். இந்நேரத்தில்தான் இவருக்குச் சேய்த்தொண்டர் புராணம் பாட வாய்ப்பு கிடைத்தது. சுந்தரர் உலா பாடிய காரணத்தினால் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை போன்ற நூல் செய்ய இவர் தேர்வு பெற்றார்.

இவர் பாடியனவாக இன்னும் பல நூல்கள் அமைகின்றன. திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா, சமயக்குரவர் நால்வர் அந்தாதி, சேய்த்தொண்டர் போற்றிக் கலிவெண்பா, சேய்த்தொண்டர் திருவந்தாதி, தேசிய சமரச கீதம் போன்றன

அவற்றுள் குறிக்கத்தக்கன. இவற்றுள் சேய்த்தொண்டர் புராணம் மிகக் குறிக்கத்தப் படைப்பாகும்.

இவரின் இலக்கிய வளத்திற்கு இவரது உழைப்பு, கல்வி ஒருபுறம் இருந்தாலும் பல ஆசான்களும் இருந்துள்ளனர். இதனை இவரே சேய்த்தொண்டர்புராணத்தில் குருவணக்கம் என்ற நிலையில் காட்டியுள்ளார். இவர் குரு என்ற நிலையில் மூவரைத் தம்முடைய குருவாகக் கொண்டுள்ளார். அவர்களுக்கு வணக்கம் தெரிவித்துப் புராணத்தைத் தொடங்குகிறார்.

"ஐந்தாண்டளவில் அழைத்தொன்ப தாண்டமுன்

சிந்தாத இன்பச் செழுத்தமிழ்போ தித்தருளி

மைந்தா நீ உய்தியென்ற மாதவ சென்ன கிருட்ணன்

செந்தாமரைப் பாதம் என்சென்னிவிட்டு நீங்காவே"[4]

என்றுத் தன் இளம் வயதில் தமிழ் அறிவித்த குருவான மாதவ சென்ன கிருட்ணன் அவர்களைக் குருவாகக் காட்டி குருவணக்கம் செய்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"நாட்டார் நகைக்கும் நகைக்கிலக்காம் நாயேனைப்

பாட்டே அருச்சுனையாம் பாடென்றெழுதிழர்

சீட்டாலாட் கொண்டருளும் செங்கல்வராய பிரான்

நாட்டாமரையென் தலைவிட்டகலாவே"[5]

என்று சேய்த்தொண்டர்புராணம் பாடத் தூண்டிய செங்கல்வராயப் பிள்ளையையும் தன் குருவாகக் கொண்டுத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் அவருக்கும் வணக்கம் செய்துள்ளார்.

"செங்கல்வராய சிகாமயியோர் சீட்டெழுதி

சங்கைதடித் தாட்கொள் தரந்தமியேற் கெய்துவித்து

மங்களமார் காஞ்சிநகர் வாழ் தியாகராயபிரான்

அங்கமலத் தாளென் அகம் விட்டகலாவே"[6]

என்று காஞ்சிபுரத்தில் வாழ்ந்த தியாகராசர் என்பவரையும் குருவாகப் போற்றுகிறார். செங்கல்வராயப் பிள்ளை தந்த சீட்டினைக் காஞ்சிபுரத்தில் இருந்த தியாகராசர் வழி பெறுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். தியாகராசரே இவரது சுந்தரர் உலாவைச் செங்கல்வராயரிடம் காட்டி இவர் புலமையை அவர் அறியச் செய்தார். மேலும் இவர் வழியாகவே கடிதம் வழங்கித் தேனூர் வரகவி சொக்கலிங்கனாரைத் தொடர்பு கொள்கிறார் செங்கல்வராயார்.

இவ்வாறு தன் ஆசான்களாக இம்மூவரையும் போற்றி நன்றி பாராட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இவர்களின் ஊக்குவிப்பால் சேய்த்தொண்டர் புராணம் என்ற பெருங்காப்பியத்தை இவரால் பாடமுடிந்துள்ளது.

<u>சேய்த்தொண்டத்தொகை</u>

சேய்த்தொண்டர் புராணம் பாடுவதற்கு முன்னாக இவர் சேய்த் தொண்டத் தொகை பாடிக் கொண்டார். இதில் பன்னிரண்டு தொகை அடியார்களும், அறுபத்தாறு தனியடியார்களும் அவர்களின் வாழ்க்கையும், முருகப் பணிகளும்

காட்டப்பெற்றுள்ளன. இதன் திறத்தை அறிய எடுத்துக்காட்டிற்கு முதற்பாடல் மட்டும் இங்குக் காட்டப்பெறுகிறது.

“செந்தில்வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்

தென்மலைய முனிவர்க்கும் பகீரதற்கும் அடியேன்

கந்தவேட் கினியமுக குந்தனார்க்கடியேன்

கருதுடுப்பூர் நாகனார் அ்டியார்க்கும் அடியேன்

அந்தமில் சீர் நக்கீரர் அடியார்க்கும் அடியேன்

அருளார்நல்லியக் கோடர் ஔவையார்க்கும் அடியேன்

எந்தைபிரான் சேந்தனார் அடியார்க்கும் அடியேன்

எம்மான் எந் திருத்தணிகை அம்மானுக்காளே”[7]

என்று சேய்த் தொண்டத் தொகையின் முதற்பாடல் பாடப்பெற்றுள்ளது. இதில் நிறைவு அடி திருத்தணிகை முருகனை வணங்குவதாக உள்ளது. இதன் காரணம் தணிகைமணி எனப் புகழப்பெற்ற செங்கல்வராயர் திருத்தணிகை முருகன் மீது ஆறாப்பற்று கொண்டிருந்த காரணத்தினால் நூல் எழுதுவதற்கு முன்பே தணிகைப் பெருமானைச் சிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்ட வேண்டுகோளே ஆகும். ஆனால் திருத்தொண்டர் புராணம் என்ற பெரியபுராணத்தில் திருவாரூர் சிறப்பிக்கப்பெறும்.

<u>சேய்த்தொண்டத் தொகையில் இடம்பெறும் தொகை அடியார்கள்</u>

தொகை அடியார்கள் என்பார் தொகுப்பாய் அமைபவர் ஆவார். திருத்தணிகையில் பிறந்தவர்கள் என்று குறிப்பிட்டால் அது திருத்தணிகையில் பிறந்த அனைவரையும், அனைத்து உயிர்களையும் குறிக்கும். இவ்வகையில் தொகுப்பாக அமைந்த அடியார்களைச் சுட்டுவதாக தொகை அடியார்கள் என்ற தொடர் அமைகிறது. சேய்த்தொண்டத் தொகையில் அமைந்த தொகையடியார்கள் பன்னிரு குழுவினர் ஆவர். அவர்கள் பின்வருமாறு.

1. செந்தில் வாழ் அந்தணர்
2. அரஹரவேல் மயிலென்பார்
3. ஆலயத் திருத்தொண்டர்
4. முருகனையே பாடுவார்.
5. முருகன் திருவருளைச் சிந்திப்பவர்
6. திருத்தணியிற் பிறந்தார்
7. காவடி செலுத்திக் கந்தனையே போற்றுவார்
8. சேய்த் தொண்டர் தொண்டரடித் தொண்டர்
9. முருகனுக்கு உரிய தமிழ் நூல்கள் பாடியதால் இறந்தும் இன்னும் வாழ்வோர்
10. குகத் தல புராணிகர்கள்
11. சேய்த்தொண்டத் தொகையில் பாடாது விடப்பட்டோர்
12. இனிவரும் சேய்த்தொண்டர்

என்ற பன்னிருவர் தொகை அடியார்களாக சேய்த்தொண்டத் தொகையில் குறிப்பிடப்பெற்றுள்ளனர்.

<u>தனியடியார்கள்</u>

தனியடியார் என்போர் ஒற்றை மனிதராக முருகத் தொண்டு செய்தோர் ஆவர். அவர்கள் அறுபத்தாறு பேரைப் பதிவு செய்கிறது சேய்த்தொண்டர் புராணம். அவர்கள் பின்வருமாறு.

1. அகத்தியர்
2. பகீரதனார்
3. முசுகுந்தர்
4. நாகனார்
5. நக்கீரர்
6. நல்லியக் கோடனார்
7. ஔவையார்
8. சேந்தனார்
9. கச்சியப்ப சிவாச்சாரியர்
10. முருகம்மையார்
11. பொய்யா மொழிப்புலவர்
12. அருணகிரிநாதர்
13. குமரகுருபர சுவாமிகள்
14. சிவப்பிரகாச சுவாமிகள்
15. திருஞானசம்பந்த தேசிகர்
16. சம்பந்த சரணாலயர்
17. மார்க்க சகாய தேவர்
18. குணசீலர்
19. சிதம்பர தேவர்

20. வென்றிமாலைக் கவிராயர்
21. பகழிக் கூத்தர்
22. செங்கோட்டைக் கவிராஜர்
23. கச்சியப்ப முனிவர்
24. மாதவ சுப்பிரமணிய முனிவர்
25. சிதம்பர முனிவர்
26. கந்தப்ப தேசிகர்
27. பாலசுப்பிரமணிய கவிராயர்
28. சின்னப்பர்
29. சாமிநாத தேசிகர்
30. குகனேரியப்பர்
31. ஞானவரோதயர்
32. இராமலிங்க அடிகள்
33. கவி குஞ்சரனார்
34. மாம்பழக் கவிச்சிங்கனார்.
35. தண்டபாணி சுவாமிகள்
36. குமரகுருதாசர்
37. கல்லாடர்
38. கடுவன் இளஎயினனார்
39. நல்லந்துவனார்
40. பூதனார்
41. அழிசியார்
42. கேசவனார்
43. நப்பண்ணனார்

44. அச்சுதனார்
45. சேறைக் கவிராஜர்
46. சிற்றம்பல நாடிகள்
47. கலிசைச் சேவகனார்
48. சிவஞான தேசிகர்
49. வைத்தியநாத தேசிகர்
50. சோமநாதர்
51. மேலகரம் பண்டாரத்தார்
52. அண்ணாமலையார்
53. கவிவீரராகவர்
54. தேவராயர்
55. நிரம்ப அழகியர்
56. வேதாந்த சுப்பிரமணியனார்
57. அழகு முத்துப்புலவர்
58. நாரதர்
59. போகர்
60. இடும்பனார்
61. பிரபுடதேவர்
62. பாடுவார் முத்தப்பர்
63. திருப்புகழ் சுப்பிரமணியனார்
64. சச்சிதாநந்த சுவாமிகள்
65. செல்லப்பர்
66. மீனாட்சி அம்மையார்

ஆகிய அறுபத்தாறு முருகனடியார்கள் பற்றிய வரலாற்றுத் தொடர்களைச் சேய்த்தொண்டர் தொகை எடுத்துரைக்கிறது. இவ்வகையில் மிகப்பெரும் ஆவணமாக சேய்த்தொண்டர்தொகை முருகனடியார்களுக்கு விளங்குகிறது.

இதனடிப்படையில் சேய்த்தொண்டர் திருவந்தாதி, சேய்த்தொண்டர் புராணம் ஆகியன பாடப்பட்டன.

சேய்த்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி போல சொக்கலிங்கனார் சேய்த்தொண்டர் திருவந்தாதி என்பதைப் படைத்துக் கொண்டுள்ளார். அந்தாதி யாப்பில் நூறு பாடல்கள் என்ற அமைப்பில் சேய்த்தொண்டர் திருவந்தாதி பாடப்பெற்றுள்ளது. இதன் சொல், பொருள் அழகிற்குப் பின்வரும் பாடல் சான்றாகிறது.

“புண்டரீ கத்தன் படைத்த படைப்பெலாம் போற்றிநலம்

கண்டுயர்க் கந்தன் கழல் போற்றிக் கந்தர் சட்டிக் கவசம்

விண்டவன் தளர் நீழல் மெுவிய தேவராயப் பெரியார்

முண்டகம் அன்னதாள் போற்றுவேன் இன்னருள் முன்னிற்கவே”[8]

என்ற பாடலில் தேவராய நாயனாரின் சிறப்பு ஒரு பாடலில் சேய்த்தொண்டர் திருவந்தாதியாகப் பாடப்பெற்றுள்ளது. கந்தர் சஷ்டிக் கவசம் பாடிய புலவர் தேவராயர் ஆவார். அவரின் வாழ்வில் இடம்பெற்ற உயர்வினை ஒரு பாடலில் சொல்லி மகிழ்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

இவரைப் பற்றிச் செய்த் தொண்டத் தொகையில் “இன்புறுவோம் தேவராயப் பெரியார்க்கடியேன்” என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவர் பற்றிய புராணம் பதினாறு பாடல்களில் பாடப்பெற்றுள்ளன.

<u>சேய்த்தொண்டர் புராண நூல் வரலாறு</u>

இந்நூல் செய்யப்பெற்ற வரலாற்றினைச் சொக்கலிங்கனார் பின்வருமாறு குறிக்கினறார்.

“பைந்தமிழ்மென் மொழிவடித் தொரு முருகன் அருட்கிலக்காய்ப் பரிவிற்பார்மேற்

செந்தமிழின் மொழி வளர்த்துச் சென்னையில்வாழ் செங்கல்வராயவேளாம்

எந்தையொடும் அன்னவர்மாட்டுழுவல்ன்பார் இளவழகனாரும் ஏவச்

சிந்தைமகிழ்ந்தொரு தமியேம் ஓதியதிச் சேய்த்தொண்டர் புராணம்அம்மா”[9]

என்னும் பாடலின்வழி, இப்புராணம் பாடப்பெற்ற வரலாற்றை எடுத்துர்ரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

தணிகைமணி செங்கல்வராயர் என்பவரும் அவரின் நண்பரான புலவர் இளவழகனார் என்பவரும் தூண்ட அதன் காரணமாகச் செய்யப்பெற்றது இப்புராணம் என்கிறது இப்பாடல். இதனை மெய்ப்பிக்கும் வண்ணம் முகவுரையில் வ.சு. செங்கல்வராயப் பிள்ளை பின்வருமாறு எழுதுகிறார்.

“திருக்குறள் அழகரடிகள் மாம்பாக்கம் குருகுல ஆசிரியர் திருவாளார் இளவழகனார் அவர்கள் 1951 ஆம் ஆண்டில் ஆனி மாதத்தை ஒட்டித் திருக்கழுக்குன்றத்தில் தமிழ்ப் பெரியோர்களின் அவையில் இப்புராணத்திற் சில

பாடல்களை அச்சிட்டு அரங்கேற்றுவித்தனர். பின்னர் தமிழ் ஞானம் தழைத்துத் தமிழ்ச்சுவையிற் பெரிதும் திளைத்து மகிழ்பவர்களும் திருப்புகழாகிய அருணகிரியாரின் நூல்களை நன்கு ஆய்ந்தறிந்து இன்பம் உறுபவர்களும் வள்ளிமைல திருப்புகழ் சுவாமி சச்சிதாநந்தா அவர்களின் சீடர்களுமான சகோதர்கள் எஸ்.வி. சுப்பிரமணியமும், அருட்கவி எஸ்.வி. சேதுராமரும் சேய்த்தொண்டர் புராணப் பாடல்களின் நயத்தையும் அழகையும் கண்டுகளித்து இந்நூலை அச்சேற்றுவதற்கு வேண்டிய சகல உதவிகளையும் மேற்கொள்ள ஒருப்பட்டனர். பின்னர் அவர்கள் விருப்பப்படி பிற சில அடியார்களின் வரலாறும் வரும்படி ஆசிரியர் மூலம் புராணம் வளர்ச்சி பெற்றது."[10] என்ற இக்கருத்தின்படி சேய்த்தொண்டர் புராண அச்சாக்கம் நிறைவேற ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத் தோறாம் ஆண்டு ஆகியுள்ளது என்பது தெரியவருகிறது.

சேய்த்தொண்டர் புராணம் அமைப்பு

சேய்த்தொண்டர் புராணம் சேய்த்தொண்டத்தொகையை அடியொற்றி எழுதப்பெற்றுள்ளனது. இதன் சருக்கங்கள் சேக்கிழார் அமைத்த முறையில் அமைக்கப்பெற்றுள்ளன. திருத்தொண்டத் தொகையின் முதல் சீரையோ அல்லது முதல் இரு சீர்களையோ சருக்கப் பெயராக அமைத்துக்கொண்டார் சேக்கிழார். அவ்வாறே தேனூர் வரகவி சொக்கலிங்கனாரும் சேய்த் தொண்டத்தொகையின் முதல் சீர் அல்லது முதல் இரு சீர்களை எடுத்துக் கொண்டுச் சருக்கமாக ஆக்கியுள்ளார். அதனைப் பின்வரும் பட்டியல் விளக்கும்

சேய்த் தொண்டத் தொகைத் தொடர்	சருக்கப்பெயர்
செந்தில் வாழ் அந்தணர் தம்	செந்தில் வாழ் அந்தணர் சருக்கம்
கம்பை சூழ்	கம்பை சூழ் சருக்கம்
குமரகுரபர அடிகள்	குமரகுருபரச் சருக்கம்
வென்றி மலை	வென்றிமலைச் சருக்கம்
அரஹரவேல் மயில் என்பார்	அரஹராச் சருக்கம்
காவடியில் தேன் பால்.	காவடிச் சருக்கம்
குகனேரியப்பர்	குகனேரிச் சருக்கம்
கல்லாடர்	கல்லாடச் சருக்கம்
தென்பழநிக் கடுவனிள	தென்பழநிச் சருக்கம்
நின்ற சீர் நிரம்ப	நின்ற சீர்ச் சருக்கம்
நாரத சீர்	நாரதச் சருக்கம்
வானார்ந்த சீர் கொள் திருப்புகழை	வானார்ந்த சருக்கம்

என்ற நிலையில் பன்னிரு சருக்கங்களை உடையதாக இந்நூல் விளங்குகின்றது. முருகப்பெருமானின் பன்னிரு கரங்கள் போல இந்நூலுக்கு பன்னிரு சருக்கங்கள் அமைந்துள்ளன.

இந்நூல் மூவாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று பாடல்களைக் கொண்டு இயற்றப்பெற்றுள்ளது. இந்நூல் பின்வரும் இரு பெரும் பகுப்புகளை உடையதாகும்.

1. முதற் காண்டம்
2. இரண்டாம் காண்டம்

என்ற இரு பகுப்புகளை உடையது.

<u>முதற்காண்டம்</u>

இரண்டாயிரத்து இருநூற்றுத் தொன்னூற்று ஏழு பாடல்களை உடையதாக முதற் காண்டம் விளங்குகின்றது. முதல் ஆறு சருக்கங்கள் இதனுள் அமைகின்றன. இவற்றில் அறுநூற்று இருபத்துநான்கு பாடல்கள் அருணகிரிநாதர் புராணமாகப் பாடப்பெற்றுள்ளது. பிள்ளை பாதி புராணம் பாதி என்ற் நிலையில் பெரியபுராணம் அ்மைய அருணகிரிக்குக் கால்வாசி என்ற அளவில் சேய்த்தொண்டர் புராணம் அமைக்கப்பெற்றுள்ளது.

முதற்காண்டத்தின் அமைப்பினைப் பின்வரும் செய்யுள் காட்டுகிறது.

‘நிலம்புனலென்˙ அடியெடுத்துப் பாயிரநாற்பத்தெட்டு நிகரில் பாவால்

நலந்திகழப் பாடி அதில் அவையடக்கம் முதற்பலவும் நவின்றுசெந்தில்

தலந்திகழந் தணர்கள் புராணம் முதலா முதற்காண்டம் சருக்கம் ஆறா

வலம்பெறவே வகுத்தீரா யரத்திருநூற்றைம்பதின் மாட்டொன்று மட்டும்.”[11]

என்று முதற்காண்டம் பற்றிய செய்திகள் இப்பாடலில் வகுத்துரைக்கப்பெற்றுள்ளன. ஏறக்குறைய இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்தோரு பாடல்கள் முதற்காண்டமாக கொள்ளப்பட்டன என்கிறது இப்பாடல். இருப்பினும் சேய்த்தொண்டர்புராணத்தின் முதற்காண்ட பாடல்தொகை இரண்டாயிரத்து இருநூற்று தொன்னூற்று ஏழு என்ற எல்லை உடையதாக உள்ளது.

<u>இரண்டாம் காண்டம்</u>

குகனேரியப்பர் சருக்கம் தொடங்கி பின் ஆறு சருக்கங்கள் இரண்டாம் காண்டமாக அமைகின்றன. பின்னுள்ள ஆயிரத்து முப்பத்தாறு பாடல்கள் இரண்டாம் காண்டத்தில் அமைகின்றன.

“நிறைந்த புகழ் நாற்பத்தொன்றடியார் புராணமும் முறையே நிகழுமன்பால்

அறைந்த இரண்டாம் காண்டமாய் அமைந்து ஆயிரத்து முப்பத்தாறு பாட்டால்

பறைந்தருளிப் பின்னாறு சருக்கமதும் முடிந்து நிலப்ப தங்கடைக்காய்”[12]

என்னும் பாடலின் வழி இரண்டாம் காண்ட அமைப்புமுறையை அறிந்துகொள்ளமுடிகின்றது.

யாப்பு

சேய்த் தொண்டர் புராணத்தில் பெரும்பாலும் விருத்தப்பா யாப்பே பின்பற்றப்பெற்றுள்ளது. அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீரடி ஆசிரிய விருத்தம், எண்சீர் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் ஆகியன பெரிதும் கையாளப்பெற்றுள்ளன. கலிநிலைத்துறை, கலி வெண்பா ஆகிய யாப்புகளும் இதனுள் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

நூலின் பெயர்

இப்புராணத்தின் பெயர் சேய்த் தொண்டர் புராணம் ஆகும். இதனை ஆசிரியர் தன் கவிதையில் ஏற்றிப் பாடியுள்ளார்.

“வினவிடில் இதற்கு நாமம் வியன் கடல் உடுத்த ஞாலம்

அனகமுற்றிட மாந்தர்க் கறிவெனும் சுடர் பரப்பி

மனஇருள் கிழிக்க தெய்வ வான் பதம் வழங்க

ஞானத் தினகரன் எனக்குலாவும் சேய்த் தொண்டர் புராணம் என்பாம்”[13]

என்ற பாடலில் புராணப் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. உலக மக்களின் மன இருள் நீக்கி, வான்பதம் வழங்குவதற்காக சூரியன் போல உதித்த நூல் சேய்த் தொண்டர் புராணம் என்று பெருமை படத் தன்நூலின் நாமத்தை எடுத்துரைக்கிறார் சொக்கலிங்கனார்.

<u>நூலின் காலம்</u>

சேய்த் தொண்டத் தொகை எழுதி ஓர் ஆண்டு காலத்தில் சேய்த் தொண்டர் புராணம் பாடப்பெற்றுள்ளது. இது வெளிப்பட்ட காலத்தினைச் செய்யுளில் அமைத்துப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

“அருளுலவு கலிசகத் தையாயிரத்தின் மேல்

அறுபத் தொன்றாவ தாண்டில்

வருமீன மதி வசம் ஆறைந்தங்காகரகன்

மருவு சித்திரை ஓரையில்

இருநிலம் பரவு சேய்த் தொண்டர்கள் புராணமீ

திறுதியா யுரையாடினேன்

திருமுருகன் அடியார்தம் மரபில் வரு செல்லப்பர்

சேய் சொக்கலிங்கன் இனிதே”

என்பது நூல் வெளிவந்த காலத்தைக் காட்டும் பாடலாகும். இந்நூல் கலியாண்டு ஐயாயிரத்து அறுபத்தொன்றில் வெளியிடப்பெற்றது என்பது இப்பபாடல் வழி

தெரியவருகிறது. இதனைச் சரியாக ஆங்கில ஆண்டிற்கு மாற்றினால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தியிரண்டாம் ஆண்டு என்பதாக அமையும்.

<u>நூலின் தொடக்கமும் முடிவும்</u>

சேய்த் தொண்டர் புராணம் “நிலம் புனல்” எனத் தொடங்குகிறது. இப்புராணத்தின் நிறைவுப் பாடல் “மகிழ்ந்தது தோமில்நிலம் “ என்று முடிகிறது. நிலத்தில் தோன்றி நிலத்தில் முடியும் படியாக இந்நூல் படைக்கப் பெற்றுள்ளது.

<u>நூலின் பாயிரம்</u>

நூலின் பாயிரப் பகுதியில் விநாயகர், நடராசர், சிவகாமிஅம்மை, முருகக்கடவுள், தெய்வகுஞ்சரி அம்மை, வள்ளியம்மை, வீரவாகுதேவர், வீரகேசரித்தேவர், வீர மகேந்திரத் தேவர், , வீர மகேசுரத் தேவர், வீரபுரந்தரத் தேவர், வீர ராக்கத தேவர், வீர மார்த்தாண்ட தேவர், வீராந்தகத் தேவர், வீரதீர்த்தேவர், இலக்க வீரர்கள், சக்திவேல், மயில், சேவல், திருமால், திருநந்தி தேவர், கலைமகள், திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், சண்டேசுரர், திருத்தொண்டர்கள், சேய்த்தொண்டர்கள், சேக்கிழார் போன்றோரை வணங்கிப் போற்றிப் பாடியுள்ளார்.

<u>நூல் அரங்கேற்றம்</u>

சேய்த்தொண்டர் புராணம் திருக்கழுக் குன்றத்தில் ˙அரங்கேற்றம் செய்யப்பெற்றது. இதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

“இலகுறு கலிசகத்தைம்பது நூற்றைம்பத்திரண்டின்மேல் ஒன்றியங்கு கரநல்ஆண்டில்

பலநலமார் திமிதுனம் தினமெண்மூன்றிற் பார்பரவு திருக்கழுக்குன்றம்மூதூரில்

நலமருவு திருமுறை மகாநன்னாடு நடந்தருள்கால் அவண்கெழுநற்றமிழ் முற்றோர்ந்த

புலவர்முதற் பெரியோர்கள்முன் சேய்த்தொண்டர்புராணமிது பொற்பினால்

அரங்கேற்றினேமால்'[14]'

என்ற பாடல் நூல் அரங்கேறிய வகையைக் காட்டுகிறது. திருக்கழுக் குன்றத்தில் திருமுறை மாநாடு நடந்த நேரத்தில் இந்நூலின் அரங்கேற்றம் நடைபெற்றுள்ளது என்பது கருதத்தக்கது.

இவ்வகையில் நூல் எழுத புறத்தூண்டல் ஏற்பட்டு அதன் வழி நூல் எழுதப்பெற்று அதனை வெளியிட்டு அரங்கேற்றிய நிலையில் சேய்த்தொணடர் புராணம் குமார அன்பர்களின் இயக்கமாக விளங்கியுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

<u>சேய்த் தொண்டர்க்கான இலக்கணம்</u>

சேய்த்தொண்டர் எனப்படுபவர்கள் பற்றிய வரையறைகளையும் இந்நூல் வழங்குகிறது.

"முத்திக்கு வித்தா்ம் முருகன் திருவருளால்

சித்திபல அடைந்த சேய்த்தொண்டர் திருவடியை

பக்தியோடு போற்றிப் ப்லவாறு உபசரித்துக்

கொத்திட்டு உளமகிழ்வார் கோடானுகோடிபேர்"[15]

என்று சேய்த்தொண்டர் இலக்கணம் சேய்த்தொண்டர் புராணத்தில் உரைக்கப்படுகிற்து. முருகன் அருளால் சித்தி, முத்தி அடைபவர்கள் சேய்த்தொணடர்கள் ஆவர் என்பது இப்பாடல் வழி பெறப்படும் சேய்த்தொண்டர்க்கான இலக்கணம் ஆகும்.

“முருகா எனும் அக்கர மூன்றை மொழித்

தொருகாலும் விடா திறைஞ்சுத் தமர்தம்

இருகால் களையேத் தியிறைஞ் சிடுதும்

வருகாலனை வெல்வகை வாய்த்த் திடவே”[16]

என்று சேய்த்தொண்டர்க்கான அடையாளம் சுட்டப்பெறுகிறது. முருகா என்னும் நாமத்தை எப்போதும் சொல்லுபவர்கள் சேய்த்தொண்டர்கள் ஆவர். முருகப்பெருமானின் இருகால்களை ஏத்து இறைஞ்சித் தம்மை நோக்கி வரும் காலனை வெல்வபவர்கள் சேய்த்தொண்டர்கள் ஆவர்.

இவ்வாறு காலம் தோறும் முருகப் பெயர் சொல்லி வாழ்ந்த் சேய்த்தொண்டர்கள் பத்தாயிரம் கோடி பேர் ஆவர். அவர்களில் தேர்ந்த சிலர் மட்டும் சேய்த்தொண்டர் புராணத்தில் காட்டப்பெறுகின்றனர்.

<u>சேய்த்தொண்டர் புராணத்தின் முன்னோடி திருத்தொண்டர் புராணம்</u>

சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் சேய்த்தொண்டர் புராணத்திற்கு முன்னோடியாக விளங்கியுள்ளது. தேனூர் வரகவி சொக்கலிங்கனார் திருத்தொண்டர் புராண படைப்பு வளர்ச்சி நிலையை நன்கு உணர்ந்து அதன்வழி செயல்பட்டுள்ளார்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தை ஏழாம் திருமுறையில் பாடுகிறார். இப்பதிகம் சிவனடியார்களின் தொண்டினையும் அவர்களின் பெயரையும் ஓரடி என்ற நிலையில் எடுத்தியம்புகிறது.

திருத்தொண்டத்தொகையை அடுத்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்பதைப் பாடுகிறார். இவரே அறுபத்துமூன்று நாயன்மார்கள் என்ற நிலையில் வரையறை செய்து திருத்தொண்டர் திருவந்தாதியை இவ்வறுபத்துமூவருக்கும் ஏறக்குறைய ஒருவருக்கு ஒரு பாடல் என்ற நிலையில் அமைக்கின்றார்.

இவ்விரு வளர்நிலைகளைத் தொடர்ந்து, திருத்தொண்டர் புராணம் என்ற புராணத்தைச் சேக்கிழார் பாடுகிறார். ஓரடியைத் தொடர்ந்து, ஒரு பாடல், ஒரு பாடலைத் தொடர்ந்து ஒரு புராணம் என்ற நிலையில் திருத்தொண்டர் புராணம் செய்யப்பெற்றுள்ளது.

இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்

அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்

சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்

வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம்[17]

“தம்பிரான் தோழர் அவர் தாம் மொழிந்த தமிழ் முறையே

எம்பிரான் தமர்கள் திருத்தொண்டு ஏத்தல் உறுகின்றேன்”[18]

என்று சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையைத் தம் திருத்தொண்டர் புராணத்தில் காட்டுகிறார் சேக்கிழார்.

நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, தனக்கு வழிகாட்டியாக அமைந்தது என்பதை

“அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை

நந்த நாதனா நம்பியாண் டார்நம்பி

புந்தி யாரப் புகன்ற வகையினால்

வந்த வாறு வழாம லியம்புவாம்”[19]

என்ற பாடலின் வழி காட்டுகிறார். இவற்றைத் தொடர்ந்து திருத்தொண்டர் புராணம் பாடப்பெற்றது.

இதே நிலையில் சேய்த்தொணடர் புராணம் என்பது படைத்துக்கொள்ளப்பெற்றுள்ளது. தேனூர் வரகவி சொக்கலிங்கனார் சேய்த்தொண்டர் புராணத்தை இயற்றுவதற்கு முன்பு சேய்த்தொண்டத்தொகை என்பதைப் பாடினார். இதனைத் தொடர்ந்து சேய்த்தொண்டர் திருவந்தாதி என்பதையும் இயற்றி இதனைத் தொடர்ந்து சேய்த்தொண்டர் புராணத்தை அவர் இயற்றத் தொடங்கினார். இம்முயற்சி பெரியபுராணத்தின் தோற்றத்திற்கு ஆக்கத்திற்குச் சுந்தரர் நம்பியாண்டார் நம்பி சேக்கிழார் ஆகியோர் வழிவகுத்த அமைப்பிலேயே நடந்துள்ளது என்பது குறிக்கத்தக்கது. ஆயினும் இச்சான்றோர்களை அடியொற்றி இம்மூவர் முயற்சிகளையும் முன்னுதாரணமாகக் கொண்டு, தேனூர் வரகவி சொக்கலிங்கம் அவர்கள் தான் ஒருவராகச் செய்தவை சேய்த்தொண்டத்தொகை, சேய்த்தொண்டர்

திருவந்தாதி, சேய்த்தொண்டர் புராணம் என்ற மூன்று படைப்புகள் என்பது குறிக்கத்தக்கது.

மேலும் சேக்கிழாரையும் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் தம் துதியில் வைத்துப் பாடியுள்ளார்.

"ஈடில் பொன் னம்பலத் தினிது நிர்த்தனம்

ஆடிஐந் தொழிலியற் றமரற் போற்றி மேல்

வீடினி துறுதிருத் தொண்டர் மெய்ப்புகழ்

பாடிய சேக்கிழார் பதம் வணங்குவாம்"[20]

என்ற பாடலின் வழி தனக்கு முன்னதாக நூல் செய்த சேக்கிழாரையும் துதி செய்து அவர் புராணம் செய்யத் தொடங்கிய முறைமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

திருத்தொண்டத் தொகை அருளிய சுந்தரரையும் சேய்த்தொண்டர் புராணத் துதியில் வைத்துப் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"சந்திர சேகரர் தமது தோழராய்

வந்திருத் தமிழ்மறை வகுத்து வான்தொழ

இந்திரன் ஊர்தி ஊர்ந்திறைவன் மாட்டுறு

சுந்தரர் பூங்குழல் தொழுதி றைஞ்சுவாம்"[21]

இவ்வாறு தான் புராணம் எழுத படைப்புத்திட்டம் வகுத்தளித்த படைப்பாளர்களை வணங்கித் துதி செய்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்களார்.

அறுபத்து மூவர் புராணம் என்று திருத்தொண்டத் தொகையைத் தம் புராணத்துள்ளும் எடுத்துக்காட்டியுள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“வந்தனர் வருங்கால் யாவையும் உணர்ந்த மாசிலா மணியெனும் நாமத்

தந்தமில் பெரியார் தந்திரு வாயால் அறுபத்து மூவர் புராணத்து

ஐந்துபேரறிவும் என்ற பாசுரஞ் சொற்றதன் பொருள் யாதென வினவ

எந்தைதம்வாக்கு தடைப்படத் திடுக்கிட்டெழுந்து அரியாசனத்து இழிந்து”[22]

என்ற நிலையில் குமரகுருபரர்க்கு வாக்கு தடைப்பட்ட பாடல் இடம்பெற்ற பெரிய புராணப் பாடல் நிலையைக் கூறும்போது பெரியபுராணத்தை அறுபத்துமூவர் புராணம் என்று உரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

சேய்த்தொண்டர் புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் ஒன்று பாலகவி முத்து கோ. இராமன் என்பவரால் இயற்றப்பெற்றுள்ளது. இதனுள் சேய்த்தொண்டர் புராணத்தின் படைப்பு நிலை பற்றிய செய்திகள் விளக்கம் பெற்றுள்ளன.

“வேய்த் தொன்று முத்தன் நகைபங்கன் சேயருளே

விளங்கும் தேனூர்

வாய்த்தோன்று சொக்கலிங்க வரகவிஞன்

தேனூறும் வாக்கால் செய்ய

சேய்த் தொண்டத் தொகைபாடி அந்தாதி

புரணாமுடன் திருந்த்த யாத்தே

சேயத்தொண்டர் சிகாமணியாத் திகழ்கின்றான்

சிறப்பிலகோர் தெரியவென்றே”[23]

என்று சிறப்புப் பாயிரம், தொகை பாடி அந்தாதி பாடி, புராணம் பாடப்பெற்ற நிலையை அதாவது சேக்கிழார் அமைத்துக் கொண்ட படைப்புத் திட்டத்தைத் தேனூர் வ்ரகவி சொக்கலிங்கனாரும் வரைந்து கொண்டார் என்பதைக் காட்டுகிறது.

இவ்வாறு பல நிலைகளில் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தின் கட்டமைப்பு தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் மனதிற்குள் கிடந்து அவர் தம் புராணத்தைச் செழுமைப் படுத்த உதவியுள்ளது என்பதை அறியமுடிகிறது.

கதைத் தலைவர்

சேக்கிழார் திருத்தொண்டர்புராணத்தின் கதை நாயகனாக சுந்தரரை அமைக்கிறார். தடுத்தாட்கொண்ட புராணம், வெள்ளாணைச் சருக்கம் போன்றனவற்றை அமைத்து காப்பியத் தலைவனுக்கு உரிய தலைமை இடத்தைச் சேக்கிழார் அளிக்கிறார். இவைதவிர சருக்க முடிவிலும் சுந்தரரைத் துதி செய்கிறார்.

இதுபோன்றே சேய்த்தொண்டர் புராணத்தில் கதை நாயகனை அமைப்பதில் எழுந்த சிக்கலை மிக எளிதாகத் தீர்த்துக் கொள்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

அருணகிரிநாதரின் பனுவல்கள் அதிக அளவில் முருகவேள் பன்னிரு திருமுறையில் அமைந்துள்ளன. அவரின் திருப்புகழ் கந்தவேளுக்கு மிகவும் இனிதானது. இதன் காரணமாக அருணகிரிநாதரைத் தன் புராண நாயகனாக அமைத்துக்கொள்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

அருணகிரிநாதர் துதியை ஒவ்வொரு சருக்கத்தின் நிறைவிலும், ஒவ்வொரு சருக்கத்தின் ஆரம்பத்திலும் அமைத்துக்கொள்கிறார். இம்முறை தவிர இவர் பல இடங்களில் அருணகிரிநாதரையும் அவரின் திருப்புகழையும் எடுத்துக்காட்டுகிறார்.

‘இளந்தமிழின் செழுங்கொண்டல் என உலகம் பரவும்

எம்பெருமான் அருணகிரிநாதர்க்கும் அடியேன்”[24]

என்று சேய்த்தொண்டத் தொகையில் அருணகிரிநாதரை இளந்தமிழின் செழுங்கொண்டல் என்று பாராட்டுகிறார்.

“இன்பம் தரல்போல் இடுக்கண் உண்டாக்கும் இலங்கிழையார்

துன்பம் தரப்பெற்றயன்மாற் கரிய செஞ் சோணவெற்பில்

முன்பன் சினகரத் தேறிக் குதித்து முற்றா முருகன்

அன்புக் கிலக்கா னவர்திருப் பாதமெற் காதரவே”[25]

என்ற பாடலின்படி அருணகிரிநாதர் திருப்புகழ் பாடத் தொடங்கிய நிலையை சேய்த் தொண்டத் தொகையில் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

அருணகிரிநாதர் சருக்கத்தைச் சேய்த்தொண்டர் புராணத்தில் அறுநூற்று இருபத்துநான்கு பாடல்களில் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இது இப்புராணத்தின் ஐந்தில் ஒரு பங்கு என்ற அளவினை உடையதாகும். நான்கில் ஒரு பங்கு என்ற அளவில் அருணகிரிநாதரின் புகழைப் பாடுவதாகச் சேய்த்தொண்டர் புராணம் வடிவமைக்கப்பெற்றுள்ளது. சேய்த்தொணடர் புராணத்தில் அதிக பாடல்களைப் பெற்ற புராணம் அருணகிரிநாதர் புராணம் மட்டுமே ஆகும்.

அவரையும் அவரின் திருப்புகழையும்

“தேடித் தேடி திருப்புகழாம் தெய்வத் தமிழைத் திருவாயாற்

பாடிப் பாடிப் பன்னிருகட்பரன்கைக்கிளியானாரருளை

நாடிப் பாடி அருணகிரிநாதா நம என்றங்கை முடி

சூடிக் கூடிக் கூத்தாடித் தொழுதா னந்தக் கடல் குடைவோம்”[26]

எனற பாடலின்வழி அருணகிரிநாதரின் திருநாமமும் அவரின் திருப்புகழும் உலகினர் உய்வதற்கான வழிகள் என்பதாகக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

அருணகிரிநாதர் துதி

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரரைப் போற்றி வணங்குவார். இதே நடைமுறையைச் சொக்கலிங்கனாரும் பயன்படுத்தியுள்ளார். சருக்கத்தின் நிறைவில் அருணகிரிநாதர் துதி என்ற நிலையில் பாடல் பாடப்பெற்றள்ளது. பெரும்பாலும் இரண்டாம் காண்டத்தில் இம்முறை தவறாது அமைந்துள்ளது. சில சருக்கங்களின் தொடக்கத்திலும் நிறைவிலும்

அருணகிரிநாதர் துதி பாடப்பெற்றுள்ளது. முதற்காண்டத்தில் சரிவர அமைக்கப்படவில்லை.

தென்பழநிச் சருக்கம் என்ற தலைப்பிலான சருக்கம் முடிவடையும்போது அருணகிரிநாதர் துதி பின்வருமாறு பாடப்பெற்றுள்ளது.

“போதார் பொழில் சூழ் வில்லிப்புத்தூர்ப்புலவர் பெருமான் அணுக இசை

வாதாடற்கந் தாதிசொற்றவ்வயவர் புறமிட்டிறைஞ்சுதிருப்

பாதா சாரணம் பெருங்கருணா பரணா சரணம் அருணகிரி

நாதா சரணம் சரணமென்றெங் ஞான்றும் வணங்கி நமனை வெல்வோம்”[27]

என்ற பாடலில் அருணகிரிநாதர் போட்டியில் வென்ற நிலை எடுத்துக்காட்டப்பெற்று அவரைச் சரணடைவதாகத் துதிக்கப்பெற்றளள்ளது.

இதனைத் தொடர்ந்து நிரம்ப அழகிய தேசிக நாயனார் புராணம் பாடப்பெற்றுள்ளது. இதன் முன்பகுதியில் அருணகிரிநாதர் துதி அமைக்கப்பெற்றுள்ளது.

“திருவார் பேரூர்க் குருபரனைத் தெரிசித் தற்குச் செல்லுங்கால்

கருமேகஞ்சூழ் காட்டிலையன கரங்கொள் கதிர்வேல் வழிகாட்ட

இருபாகத்துஞ் சேவல் மயில் இனிதே புரக்க நடந்தடைந்த

பெருமான் அருணகிரிநாதர் பெருமை தினம் பேசுகவே”[28]

என்ற பாடல் முதற் பாடலாக அமைகிறது. இதில் திருப்பேரூர்க்கு அருணகிரிநாதர் சென்றபோது நிகழ்ந்த புதுமைகள் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இவ்வகையில் அருணகிரிநாதர் துதிகள் பரக்க இப்புராணத்துள் காட்டப்பெற்றுள்ளன.

இவ்வகையில் அருணகிரிநாதரைத் தன் புராணத் தலைவராக ஏற்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

எனினும் சேய்த்தொண்டர் புராணம் சேக்கிழார் இயற்றியத் திருத்தொண்டர் புராணத்தில் இருந்து சில நிலைகளில் வேறுபட்டு அமைகிறது. திருத்தொணடர் புராணம் காட்டும் அறுபத்து மூன்று என்ற எண்ணிக்கை உடைய திருத்தொண்டர் அளவினைச் சேய்த்தொண்டர் என்ற நிலையில் எழுபத்தெட்டு என்று வளர்த்துக்கொள்வது முக்கியமான வளர்ச்சி நிலை வேறுபாடாகக் கொள்ளத்தக்கது.

திருத்தொண்டர் புராணம் போன்று நாட்டு, நகர வளங்களைக் காப்பிய அமைதிக்கு ஏற்ப தனியே பாடாமல் சேய்த்தொண்டர்கள் சார்ந்த நாடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டி வரும் நிலையில் நாட்டுவளம் பாடும் வேறுபாடு உடையதாகச் சேய்த்தொண்டர்புராணம் விளங்குகிறது.

திருநகரச் சிறப்பு, திருமலைச் சிறப்பு போன்றனவற்றைத் திருத்தொண்டர் புராணம் கொண்டுள்ளது. ஆனால் சேய்த்தொண்டர் புராணம் இவற்றைத் தனியாகப் பாடவில்லை. அவ்வப்போது பாடவேண்டிய நிலைகளில் பாடிக்கொண்டுள்ளது.

சுந்தரர் வரலாற்றைக் காப்பிய இடையீடாகப் பாடும் நிலையைச் சேக்கிழார் அமைத்துக்கொள்கிறார். ஆனால் சேய்த்தொண்டர்புராணத்தில் எவ்வித இடையீடும் இல்லாத நிலையில் புராணங்கள் தனித்த நிலையில் அமைக்கப்பெற்றுள்ளன.

திருத்தொண்டர் புராணத்துள் மனிதர்கள் மட்டுமே திருத்தொண்டர்களாக இடம்பெற்றுள்ளனர். சேய்த்தொண்டர் புராணத்துள் மனிதர்கள், அரக்கர்கள், தேவர்கள், அரக்கர்கள், முனிவர்கள், சித்தர்கள் புராணக் கதை மாந்தர்கள் போன்றோரும் சேய்த்தொண்டர்களாகக் கருதப்பெறுகின்றனர்.

சேய்த்தொண்டர் புராணத்துள் இடம் பெற்றுள்ள நாரதர், பகீரதன், முசுகுந்தர் ஆகியோர் புராணப் பாத்திரங்களாவர். மேலும் இடும்பன் அரக்கர் இனத்தவர். அகத்தியர் போன்றோர் புலவர்கள் ஆவர். போகர் போன்றோர் சித்தர்கள் ஆவர். இவர்களோடு அண்மைக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் கந்தன் மீதான ஈடுபாட்டையும் செய்த்தொண்டர் புராணம் எடுத்தியம்புகிறது.

சேய்த்தொண்டர் புராணத்துள்ளும் மூன்று பெண் அடியார்கள் காட்டப்பெறுகின்றனர். ஔவையார், முருகம்மையார், மீனாட்சி அம்மையார் போன்ற மூவரும் சேய்த்தொண்டர்களாக அமைக்கப்பெற்றுள்ளனர்.

இவ்வகையில் சேய்த்தொண்டர் புராணம் திருத்தொண்டர் புராணத்தை முன்னோடியாகவும் அமைத்துப் பாடிக்கொண்டுள்ளது. சில வேறுபாடுகளுக்கும் வழி வைத்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

தொகுப்புரை

சேய்த்தொண்டர் புராணம் முருகவேள் பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாவதாக அமைந்த இலக்கியமாக விளங்குகிறது. இது தேவை கருதி புனையப்பெற்ற இலக்கியமாகும். திருப்புகழை முருகவேள் பன்னிரு திருமுறையாக வகுத்த செங்கல்வராயப்பிள்ளை என்பவரால் இப்புராணம் எழுதப்பெற வேண்டும் என்ற வேண்டுகோளின்படி தேனூர் வரகவி சொக்கலிங்கனார் எழுதிய புராணம் சேய்த்தொண்டர் புராணம் ஆகும். இப்புராணம் செய்யப்பட சில வரையறைகளைச் செங்கல்வராயர் விதிக்கிறார். இப்புராணம் சேக்கிழார் படைத்த பெரியபுராணம் போல அமையவேண்டும் என்பது அவரின் எண்ணம். அவ்வகையில் தொகை, அந்தாதி, புராணம் என்ற நிலையில் இப்புராணத்தைப் பாட அவர் வரையறை வைத்தார். மேலும் திருத்தணிகை முருகன் வழிபடு கடவுளாகக் கொள்ளப்படவேண்டும் என்பதும் அவரின் வரையறையாகும். இவற்றை ஏற்றுத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் தொகை, விரி, புராணம் மூன்றையும் இவர் ஒருவரே பாடி நிறைவு செய்கிறார். இயல்பிலேயே கல்வி, கேள்வி, செய்யுள் புனைதலில் சிறந்து விளங்கிய தேனூர் வரகவி சொக்கலிங்கனாருக்கு இப்புராணம் மிகுந்த மனநிறைவைத் தரும் நிலையில் அமைந்தது. சேய்த்தொண்டர் புராணம் இருகாண்டங்களை உடையது. எழுபத்தொட்டு கந்தனடியார்களைப் பாடுவது. நிலம் எனத் தொடங்கி நிலம் என முடிவது. பெரிதும் திருத்தொணடர்புராணத்தை ஒத்து அமைவது. சிற்சில இடங்களில் வேறுபட்டு அமைகிறது. இப்புராணம் கந்தனடியார்களின் பக்திப் பதிவேடாக விளங்குகிறது.

<u>சான்றாதாரங்கள்</u>

---

[1] டாக்டர் செங்கல்வராயப் பிள்ளை எழுதிய திருப்புகழ் பதிப்பாசிரியர் வரலாறு என்ற நூலின் கருத்துகளில் இருந்துத் தொகுக்கப்பெற்றது.

[2] .டாக்டர் செங்கல்வராயப் பிள்ளை எழுதிய திருப்புகழ் பதிப்பாசிரியர் என்ற நூலில் தரப்பெற்றுள்ள செய்திகளின் சுருக்கம்

[3] சேய்த்தொண்டர் புராண பதிப்புரை

[4] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.5

[5] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.6

[6] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.7

[7] வரகவி சொக்கலிங்கனார், சேய்த்தொண்டத்தொகை பாடல்எண்.1

[8] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் திருவந்தாதி, பாடல்எண். 78

[9] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 48

[10] வ.சு. செங்கல்வராயப் பிள்ளை, சேய்த்தொண்டர் புராண முகவுரை, ப.3

[11] அருட்கவி சேதுராமனார், வே.செ. சொக்கலிங்கனார் வரலாறு, பாடல்எண்68

[12] அருட்கவி சேதுராமன், தேனூர் வரகவி சொக்கலிங்கர் வரலாறு, பாடல்எண். 69

---

[13] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் பராணம், பாடல்எண். 46

[14] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், அரங்கேற்றம், பாடல்எண். 3

[15] சொக்கலிங்கர், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 833

[16] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 36

17 சேக்கிழார், திருத்தொண்டர் புராணம்,பாடல்எண். 146

18 சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், பாடல்எண். 329

19 சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், பாடல்எண். 49

20 சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 37

21 சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.32

22 சொக்கலிங்கனார், சேய்த்தொணடர்புராணம், பாடல்எண்.1448

[23] இராமன், சேய்த்தொண்டர் புராணம் சிறப்புப்பாயிரம், பக் 875-876

24 சொக்கலிங்கனார், சேய்த்தொண்டத்தொகை, பாடல்எண்2

25 சொக்கலிங்கனார், சேய்த்தொணடர் தொகை, பாடல்எண்.17

26 சொக்கலிங்கனார், சேய்த்தொணடர்புராணம், பாடல்எண்.1295

[27] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடலஎண். 2774

[28] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண். 2775

இயல்.3.

சேய்த்தொண்டர்கள் வாழ்வும் பணியும் மதிப்பீடு

இயல். 3.

சேய்த்தொண்டர்களின் வாழ்வும் பணிகளும் மதிப்பீடு

முருகப் பெருமானின் அடியார்கள் சேய்த்தொண்டர்கள் எனப்படுகின்றனர். சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான காலத்தில் வாழ்ந்த முருகனடியார்களின் வரலாறு, தமிழ்ப்பணிகள், தெய்வத் தொண்டு ஆகியவற்றைத் தொகுத்தளிக்கும் நூலாக சேய்த்தொண்டர் புராணம் விளங்குகின்றது. அறுபத்தாறு தனிப் புலவர்களின் வரலாறு இதனுள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. தனிப்புலவர் வரலாறு என்பதைவிட தனிமனித வரலாறு என்பதாக இவற்றை நோக்க வேண்டும். தனி மனிதர்களின் மன எழுச்சி, அலையும் மனத்தைப் பக்தியால் சீரமைக்கும் நடைமுறை என்ற நிலைப்பட்டனவாக இத்தனியடியார்களின் வாழ்க்கை இந்நூலுள் படைக்கப்பெற்றுள்ளது.

ஒரு வாழ்க்கை வரலாறு எழுதுவது என்பதே மிகக்கடினம் என்ற நிலையில் அறுபத்தாறு முருக அடியார்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துச் செய்யுள் வடிவில் எழுதுவது என்பது மிகக்கடினமான முயற்சியாகும். “வாழ்க்கை வரலாற்று இலக்கியம் சமூக நிலைக்களன்களில் சாதனைகள் படைத்தோரின் பதிவுகளாக உள்ளன. வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் கற்பனைக்கு இடமின்மையால் உண்மைத்தன்மையுடன் விளங்குகின்றன”[1] என்ற கருத்து வாழ்க்கை வரலாற்று இலக்கியப் படைப்பிற்கும், உண்மைக்குமான நெருங்கிய தொடர்பினை எடுத்துரைப்பதாக உள்ளது. சேய்த்தொண்டர் புராணம் உண்மையுடன் நெருங்கிய தொடர்புடைய படைப்பாக அமைந்திருக்கிறது. இதனை இப்புராணம் காட்டும் நிகழ்ச்சிகள் வழியாக உணரமுடிகின்றது.

இவ்வகையில் வரலாற்றில் மறைந்துபோன முருகனடியார்களின் வாழ்க்கையைத் தேடித் தொகுத்துக் கவிதையாக்கமாக அரிதின் முயன்று தேனூர் வரகவி சொக்கலிங்கனார் வெளிப்படுத்தியுள்ளார். இவரின் பார்வையில் முருகடியார்களின் வாழ்க்கையை விவரிப்பதாக இவ்வியல் அமைகிறது.

தனியடியார்கள்

முருகப்பெருமானை வணங்கிய தனியடியார்கள் அறுபத்தாறுபேர் குறித்த வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் சேய்த்தொண்டர் புராணத்தால் பதிவு செய்யப்பெற்ற நிலையில் இங்கு எடுத்துரைக்கப்பெறுகிறது.

அகத்திய நாயனார்

இமயமலையில் சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடைபெற்றது. அப்போது தென்பால் உயர்ந்தது. வடபால் தாழ்ந்தது. இதனைக் கண்டுச் சிவபெருமான் நிலத்தை சரிசெய்ய ஒரு யோசனை செய்தார்.

''அந்நிலை அறிந்த ஐயன் அகத்தியர் தமை அழைத்தே

இந்நிலை நீங்கு தற்கோர் எதுவுண்டியம்பக் கேள்நின்

பன்னியும் நீயம் தென்பாற் பசுந்தமிழ்ப் புலம்புக் கிரேல்

தன்னிலை எய்துமற்றே நடத்தியால் அன்ப என்றான்''[2]

அகத்தியரை அழைத்துத் தென்பால் செல்ல சிவபெருமான் கட்டளையிடுகிறார். சிவகட்டளையை அகத்தியரால் மீற இயலவில்லை. இருப்பினும் தான் மணக்கோலம் காணவேண்டுமே என்று அகத்தியர் கேட்க பொதியமலையில் உனக்கு அக்காட்சி

கிடைக்கும் என்று சிவபெருமான் பதிலுரைக்கிறார். இதன் காரணமாக தென்பகுதி நோக்கி அகத்தியர் கிளம்புகிறார். அப்போது தமிழின் இனிமை அனைத்தையும் பாலன் முருகன்பால் கேட்டுப் பெறுவாய் என்றும் கூறுகிறார். அவ்வாறே தமிழின் பெருமையை அகத்தியர் முருகன்பால் அறிகின்றார். இதன்பின் அவருக்குப் பொதிகையில் மணக்காட்சி கிடைக்கிறது.

அங்கிருந்து மெல்ல நடந்து ' இலஞ்சியம்பதிக்கு வருகிறார். அங்கு ஒரு பெருமாள் கோயிலுக்குள் புக முனைகிறார். அங்கிருந்த வைணவர்கள் சிவனடியார் கோலத்தில் இருக்கும் அகத்தியரை உள் நுழைய அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக வைணவ நாமம் தரித்துக் கோயிலுக்குள் புகுகின்றார். அங்குப் புகுந்துப் பெருமாள் உருவை சிவலிங்கமாக பிசைந்து நிறுத்துகிறார்.

இதன்பின்பு பாண்டியநாடு, சோழ நாடு, தொண்டைநாடு போன்ற பல நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் உள்ள முருகப்பெருமானை வணங்கி மகிழ்ந்தார். சோழநாட்டில் காவிரி பாயச் செய்தாரும் இவரே. இவரிடத்தில் பன்னிருவர் பாடம் கேட்டனர்.

'முன்னிருந்து பன்னிருமா ணாக்கர் போற்ற

மூதலத்திற் கேனைநலம் இனிதின்ஆற்றிப்

பொன்னியெனும் புண்ணியகா விரியை இந்தப்

பூதலத்திற் கினிதருளிப்பொற்பான்மிக்க

சென்னியர்கோன் மீனவர்கோன் சேரர் பெருமான்

தினந்தேடும் பெருந்திருவாய்த் தென்பால் வெற்பிற்

பன்னியுடன் ஏனைநலந் துய்த்து வாழ்ந்தார்

பகர்தமியேம் உளங்குடி கொள் பொதியத்தையர்"[3]

என்று அகத்தியரின் பெருமையைக் குறிக்கிறது சேய்த்தொண்டர் புராணம்.

பகீரத நாயனார்

உலக முழுவதையும் தன் குடைக்குள் கொண்டு ஆண்டவர் பகீரதர் என்பவர் ஆவார். இவருக்கும் ஒரு பகைவன் இருந்தான். அவன் பெயர் கோரன். அப்பகைவனை வெல்லும் முறையைச் சிந்தித்தார் பகீரதர்.

சுக்கிரன் பாதத்தைப் பணிந்துக் கோரன் பகை தீர்க்க வழி கேட்டார். இதற்குச் சுக்கிர வார விரதத்தை முருகன் மீது இயற்றினால் பகை ஒழியும் என்று கூறினார். இச்சுக்கிர வார விரதத்தை மூன்றாண்டுகள் இயற்றினார் பகீரதர். இவ்விரதம் காரணமாக முருகவேளின் வேல் தோன்றிப் பகையை அழித்தது.

இதன் காரணமாக ‘‘கந்த நோன்பு நோற்றுய்ந்த பகீரதராக "[4] அவர் முருகத் தொண்டர்தம் வரலாற்றில் பதிவு செய்யப்பெறுகிறார்.

முசுகுந்த நாயனார்.

இமயமலையில் வில்வ மரத்தின் நிழலில் சிவனும் பார்வதியும் அமர்ந்திருக்கும் வேளையில் ஒரு குரங்கு வில்வ இலைகளை அவர்களின் மீது போட்டுக்கொண்டிருந்தது. இதனை உமையவள் புன்னகையுடன் பார்த்தாள். உமையம்பிகையின் உளக்குறிப்பு அறிந்து தான் செய்த தவற்றை மன்னிக்க

வேண்டியது குரங்கு. ஆனால் “நீ செய்தது சரியே ஆகவே நீ அடுத்த பிறவியில் அரசனாகப் பிறப்பாய்” என்று உமையவள் உரைத்தாள்.

குரங்கு அடுத்த பிறவியில் முசுகுந்த அரசனாகப் பிறந்தது. அரசன் அறத்துடன் நல்லாட்சி புரிந்துவந்தான். இருந்தபோதும் தம்மிடம் வலிமையான போர்வீரர்கள் இல்லையே என்று வருந்தினான் முசுகுந்தான். இதற்காகக் கந்தனிடம் வசிட்டர் சொன்ன விரதப்படி விரதமிருந்து வணங்கினான்

“அம்புடைக் கடல்சூழ் ஞாலம்அனைத்தையும் புரக்கும் ஆற்றல்

வம்புடை நீபத்திண்டோன் பரத நுன்அருளால் பெற்றேன்

வெம்படை வீரர் என்பால் வேறிலாதாகையால் வெற்றி

மொய்ம்புடை வீரவாகு முதற்படை வீரர் தம்மை ”[5]

என்ற நிலையில் வீரபாகு முதலான வீரர்களைத் தந்தருள் எனக் கேட்டார் முசுகுந்தர். இவரின் அன்பில் ஈடுபட்டு முருகப்பெருமானும் இவருக்கு வீரப் படையை அருளினார். அச்சமின்றித் தன் அரசை நடத்தி இவர் முருகனடி சேர்ந்தார்.

<u>நாகனார் நாயனார்</u>

உடுப்பூர் என்ற ஊரில் வேடர் தலைவன் நாகன் என்பவன் வாழ்ந்துவந்தார். அவருக்கு நீண்ட காலமாக குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. இதன் காரணமாக அவரும் அவரின் மனைவியாரும் கந்தனை எண்ணி எண்ணி வேண்டினர். முருகன் கோயிலுக்கு கோழி, அன்னம், கிள்ளை போன்றவற்றை விடுத்தனர். அழியாத நம்பிக்கையுடன் முருகனை வேண்டினர்.

மகப்பேறு பெறுதற்காக விழா எடுத்தனர். அப்போது முருகன் அருள் வந்து மகப்பேறு வாய்க்கும் என்றார். அவ்வாறே மகப்பேறும் வாய்த்தது.

‘பெண்ணெனப் பிறந்தோர்க் கெல்லாம் பெரியவர் பயந்த மைந்தர்

திண்ணென இருப்ப நாமம் திண்ணனார் என்று சாற்றிக்

கண்ணென வளர்த்தார் எந்தை காளையாம் பருவம் எய்தி

விண்ணென திகழ் காளாத்தி விமலர்தாள் நீழல் புக்கார்”

என்று பிறந்த குழந்தைக்குத் திண்ணன் எனப் பெயரிட்ட வரலாற்றை இப்பாடல் வழி அறியமுடிகிறது. கண்ணென வளர்ந்தவர் கண்ணப்பன் என்று அடுத்த பாடல் இதற்கு விடை தருகிறது.

இவ்வகையில் நாகனார் முருகப்பெருமானை முழுவதும் வேண்டிக் குழுந்தை வரம் பெற்றதால் முருகனடியார் ஆனார்.

<u>நக்கீர தேவ நாயனார்</u>

மதுரையில் வாழ்ந்தவர் கணக்காயர். இவருக்கு ஒரு மகன் பிறந்தான். இவர் பல கலைகள் கற்றார். தமிழ் மொழியில் வாதம் செய்யும் அளவிற்கு வளர்ந்தார். இவரின் வளர்ச்சியைப் பின்வரும் பாடல் காட்டுகிறது.

“பெற்றோரிடத்தும் பிறரிடத்தும் பேசுதமிழ்

கற்றோரிடத்தும் கலையெல்லாம் கற்றுணர்ந்து

மற்றோரிடத் தடைந்து வாதாடத் தக்கநலம்

உற்றோத நீர்ஞாலத் துயர் கலைஞர் ஆயினார்”[6]

தருமியின் பாடல் கொண்டு இவர் பின்னாளில் விவாதிக்கின்ற தன்மை பெற்றவர் என்பதால் இப்பாடலில் வாதாடத் தக்கநலம் உடையவராகப் படைக்கப்பெற்றுள்ளார் நக்கீரர்

இவரின் இலக்கிய வளம் மிக்க சீர்மிகுந் தன்மையால் சங்கப் புலவர்க்குத் திலகம் என ஆனார். அவரிடம் ஒரு விறகு வெட்டுபவன் உதவிகேட்டான். தமிழறி பெருமாள் என்ற பெண் என்னை ஏசிவிட்டாள். அவளின் கொட்டத்தை அடக்கி என்னை மணக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டான்.

இதனைக் கேட்ட நக்கீரர் அப்பெண்ணை அறிவால் அடக்க எண்ணி மதுரை நகர் விட்டுக் கிளம்பினார். தமிழறிபெருமாள் இருக்கும் இடத்திற்கே சென்று அவளின் அறியாமையை அவளுக்குக் காட்டித் தான் வென்று விறகு வெட்டியை மணக்கச் செய்தார்.

இக்காலத்தில் அவர் ஈங்கோய் மலை எழுபது என்ற நூலைப் பாடினார். அதன்பின் மதுரைக்கு வந்து சேர்ந்தார். அப்போது தமிழ்ச் சங்கத்தில் தருமி என்ற புலவன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலே மணம் உண்டு என்று உறுதி செய்து ஒரு பாடலைக் கொண்டுவந்தான். அப்பாடலில் பொருள் குற்றம் உள்ளது என நக்கீரர் மறுத்தார்.

இதனை அறிந்து இப்பாடலை எழுதித் தந்த சொக்கரே அவைக்கு வந்தார். மண்ணுலகப் பெண்கள், விண்ணுலகப் பெண்கள், உமையவள் என அனைவரின் கூந்தலுக்கும் இயற்கையில் வாசமில்லை என்று உறுதியுடன் நக்கீரர் கூற இதனை மறுத்து, சிவபெருமான் கோபிக்க, அவரின் நெற்றிவிழி விழிக்க நக்கீரர்

மயக்கமுறுகிறார். மயக்கம் தீர்ந்து எழுந்தபின் சங்ரனைப் போற்றுகிறார். அப்போது சங்கரன்

"அன்பா நீ மின்னார் அணியைப் பழித்ததனால்

நின்பால் இத்தீயவினை நேர்ந்ததஞ்சேல் நீங்குமென்று

தென்பாற் கலைமுழுதும் தேறக் கடைக்கணித்தே

என்பாலன் கந்தனைநீ ஏத்திட எல்லாம் அருள்வான்"[7]

என்று உரைக்கிறார்.

இதன்பின் கந்தன் உறையும் ஆறுபடை வீடுகளை அடைந்து முருகப்பெருமானை வணங்குகிறார். திருப்பரங்குன்றத்தில் தவத்தில் இருக்கையில்

"சீரிலங்குசெவ் வேள்பதம் சிந்தித்துப்

பாரில் எந்தைஅப் பள்ளி உற்றார் கையில்

ஓரிலைப் பழுப் பொல்லையில் வீழ்ந்தது

நீரிற் பாதி நிலத்தினிற் பாதியாம்"[8]

என்னும் நிலையில் நக்கீரர் கையில் ஓரிலை வீழ்ந்தது. அது நீரில் பாதியும் நிலத்தில் பாதியுமாக விழுந்தது. நிலத்தில் விழுந்தது பறவையாகவும், நீரில் விழுந்த்து மீனாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுத்தது. இந்தச் செயலால் முருகன் மீது வைத்த சிந்தை திரிந்தது. அந்நேரத்தில் ஒரு பூதம் இவரைத் தன் வசப்படுத்தியது. ஆயிரமாவது ஆளாக நக்கீரரைச் சிறை வைத்தது. முன்னமே

தொள்ளாயிரத்துத் தொன்னூற்று ஒன்பது தமிழ்ப்புலவர்கள் அச்சிறையில் பலகாலம் அடைந்து கிடந்தனர். இவர்களை ஆயிரம் என்ற எண்ணிக்கை வந்ததும் உண்பது சரியெனப் பூதம் நின்றது.

இவ்வேளையில் நக்கீரர் முருகப்பெருமானை வாவென்றழைக்க முருகன் வந்து பூதமழித்தான். வாவென்றழைக்க அவர் பாடியது திருமுருகாற்றுப்படை ஆகும்.

“உலகமுவப்ப வெனமுதல் அடி எடுத்திவ் வுலகமெலாம் உய்யும் வண்ணம்

இலகுதிருப் படைவீடு மூவிரண்டில் திருநாமம் இனிதிலங்கக்

குலவுபொருள் பல அமையக் குமரனுளங் குளிரகடைக் காப்புதன்னில்

மலைக்கிழவோய் என்றுதிருமுருகாற்றுப்படை திருவாய் மலர்ந்த காலை”[9]

முருகப்பெருமான் வருகை தந்து, அப்பூதத்தை அழித்து அதன் உடலங்களை நாய் நரி தின்னத் தந்தார்.

இவர் கயிலை பாதி காளாத்தி பாதி, கார் எட்டு, கண்ணப்பர் தம்மறம் போன்றனவும் பாடினார். நிறைவில் சோதியுள் கலந்து முருகன் திருவடி சேர்ந்தார்.

<u>நல்லியக்கோட நாயனார்</u>

திருமுனைப்பாடி நாட்டில் திண்டிவனம் என்ற பகுதியில் கிடங்கல் என்ற இடத்தை மையமாக வைத்து ஆண்டவன் நல்லியக்கோடன் ஆவான். இவன் முதல், கடை, இடை என்ற மூன்று நிலைப்பட்ட வள்ளல்களிலும் சிறந்தவனாக விளங்கினான். இதன் காரணமாக மூவேந்தர்களும் பிற வேந்தர்களும் இவன் ஆட்சி மீது பொறமை கொண்டு இவனை அவ்வப்போது எதிர்த்து வந்தனர்.

இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒருமுறை நல்லியக் கோடனை எதிர்த்தனர். போர் பல நாட்கள் நீடித்தது. நல்லியக் கோடனது படைகள் புறமுதுகு காட்டத் துவங்கின. இந்நேரத்தில் நல்லியக்கோடன் முருகனை வேண்ட அப்பெருமான் பொய்கையில் உள்ள தாமரைப் பூக்களைக் கொய்து அம்பில் மாட்டி எதிர்க்க என்றான்.

அவ்வாறு செய்ய கமலப் பூவின் ஒவ்வொரு இதழும் வேலாக மாறிப் பகைவர்களை விரட்டியது.

“வீசிய அலரின் இதழ்கள் ஒவ்வொன்றும் வேல்களாய் வீறு கொண்டெழுந்து

தூசிகள்சூறை மாருதச் சுழலிற் கழலல்போல் விசும்பிடைச் சுழன்று

மாசறு பெரியோர்க் கிடர்புரி மன்னர் வயநெடும் படையினர் கண்கள்

கூசிட மின்னித்தனித்தனி யோடிக் குத்தின குருதி கொப்பளிக்க”[1]

என்றவாறு போர்த்திறம் கண்டன தாமரைகள். இதன்பின் பகைவர்கள் நல்லியக்கோடனுடன் பகை மறந்து நட்பு பாராட்டினர். நெடுநாள் புவியாண்டு கந்த சுவர்க்கம் புகுந்தார் நல்லியக்கோடன்.

<u>ஔவை பிராட்டி</u>

ஆதி, பகவன் ஆகியோர்க்குப் பிறந்த பிள்ளைகளுள் ஒருவர் ஔவையார ஆவார். பிறந்தவுடன் குழந்தையை நீங்க வேண்டும் என்ற அடிப்படையில் ஆதியும் பகவனும் இக்குழந்தையை விட்டு நீங்குகின்றனர். ‘இட்டமென்று” தொடங்கும்

[1] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.397

பாடலைப் பாடி ‘அஞ்சாதே நீ’ என்று முடித்துப் பெற்றோருக்கு விடை தந்தது அந்தக் குழந்தை. அதனை ஏற்றுக் கந்தன் காப்பன் எனப் பெற்றோரும் நீங்கினர்.

இக்குழந்தையைப் பாணர் கூட்டத்தினர் எடுத்து வளர்த்தனர். தமிழ்போல் தழைத்து வளர்ந்த அவர் பல்வேறு தமிழ் நூல்களை இயற்றினார். ஆத்திச் சூடி, கொன்றைவேந்தன், நல்வழி , மூதுரை போன்றனவற்றை ஔவையார் இயற்றினார். இதன்பின் பாணர் குலம் விட்டு நகர்ந்தார்.

பல இடங்களுக்கு இதன்பின் சென்று அதியமானைக் கண்டார். அதியமான் இவருக்காக நெல்லிக்கனி ஒன்றைத் தந்தான்.

“அதியமான் இனித ளித்த அமிழ்துகா மலகம் உண்டு

புதியதோர் ஆயுள் பெற்றுப் பொற்புறு பிராட்டியாரப்

பதியதை அரிதின் நீங்கிப் பலதலங் கடந்து தொய்யல்

நதியது குதி கொள் கொங்கு நாட்டினை வலம் புரிந்தார்”[10]

என்று அதியமான் நீண்டநாள் வாழும் நெல்லிக்கனி தந்த வரலாறு இப்பாடலில் சுட்டப்பெறுகிறது. இதன்பிறகு சோழநாடு அடைந்து அங்குக் கம்பரிடம் தன் புலமை காட்டினார். தொடர்ந்து அசதிக்கோவை, கல்வி ஒழுக்கம், ஞானக் குறள் போன்ற நூல்களை இயற்றினார். பின் பாண்டியநாடு சென்று சங்கப்புலவர்கள் முன் பாடல் பாடித் தன் புலமை காட்டினார்.

பாண்டிநாட்டிலிருந்துத் திரும்பும் வழியில் இடியும் மின்னலும் மழையும் பெருக ஒரு குடிசைக்குள் அடைக்கலம் புகுந்தார். அங்கு இருந்த இரு பெண்கள் நனைந்து வந்து பெருமாட்டிக்கு நீலச் சிற்றாடை தந்து அவளின் நடுக்கம் நீக்கி உபசரித்தனர்.

‘கண்டதும் பாரி வள்ளல் கான்முளையாமின்னார்கள்

அண்டரும் வியப்ப அம்மை ஆடையை அகற்றித் தாம்பூண்

ஒண்துகில் இனிது சூட்டி உடலூறு குளிரச் சுற்றிப்

பிண்டியின அமுதுஉண்பித்தார் பேருப சாரத்தோடும்”[11]

என்ற பாடல் ஔவை பெற்ற ஆடையைக் காட்டுகிறது. தம்மை உபசரித்த பாரி மகளீரை ‘வெய்தாய் நறுவிதாய் ’ என்ற தொடக்கமுடைய பாடலினால் வாழ்த்தினார் ஔவையார்.

பின்பு மணம் ஆகாத நிலையைப் பாரிமகளிர் சொல்ல ஔவையார் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க முயன்றார். தெய்வீகன் என்ற அரசனிடம் இவர்களை மணந்து கொள்ளச் சொல்ல அ்வன் மூவேந்தரும் வந்து மணம் தந்தால் மணப்பேன் என்றான். இதற்காக ஔைவயார் அரசர்களிடம் பேசி அவர்களை அழைத்துப் பெரும் சிறப்புடன் திருமணத்தை நடத்தினார். சேதி நாட்டரசன் உணவு, இருப்பிடம் போன்றன நல்கினான். யானைமுகக்கடவுள் ஔவையாருக்குத் துணையாக இருந்து ஆகாதன எல்லாவற்றையும் முடித்து உதவினார். பொன்மழை பொழியத் திருமணம் நடந்தது. மூவேந்தரும் வந்திருக்கத் திருமணம் சிறப்புடன் நடந்தேறியது.

இதன்பின் பனந்துண்டத்தை உயிர்பெறச் செய்து, பாதி குறைந்த பலா நிரம்ப வளரச்செய்து, கிழி அறுத்து, பேயின் கொட்டம் அடக்கி அவர் செய்த செயல்கள் பலவாகும்.

இவ்வாறு பல ஊர்களுக்குச் சென்ற ஔவை ஒரு முறை அசதி காரணமாக நாவல் மரமொன்றின் கீழ் அமர்ந்தார். அம்மரத்தின் மேல் இருந்த சிறுவன் 'பாட்டி பழம் தரவா' எனக்கேட்க தருக என அவள் பதிலுரைத்தாள். அதற்கு அச்சிறுவன் 'சுட்ட பழம் வேண்டுமா' 'சுடாத பழம் வேண்டுமா' என்று கேட்டான். பழத்தில் ஏது சுட்ட பழம்,சுடாத பழம் என்று விழித்தாள் ஔவைபிராட்டி.

அப்போது அவன் பழங்களை உலுக்க அப்பழங்கள் மண்ணில் பட அதனை எடுத்து ஊதித் தின்றாள் ஔவை. 'பாட்டி பழம் சுடுகிறதா ' என்றான் சிறுவன். அப்போது தன் ஆணவம் அகற்றினாள் பாட்டி. வந்தவன் முருகன் என உணர்ந்தாள்.

அவனுடன் இலக்கியம் பகர்ந்தாள். முருகன் அவளிடம் அரியது, பெரியது, இனியது, கொடியது யாவை எனக் கேட்க அவற்றிற்கெல்லாம் பதிலிறுத்தாள். இவற்றைக் கேட்ட முருகன் மிக மகிழ்ந்து ஔவைக்கு வேண்டுவது யாது எனக் கேட்க ஔவை முருகனின் பொன்னார் திருவடி அடையவேண்டும் என்றாள்.

"ஒருகொம் பிருசெவி மும்மத நால்வாய் உடையபிரான் கழல்களைப் பரவி
பரமன் கயிலையில் நாவலர் பெருமான் பார்புகழ சேரர் பிரானிவருமுன்

கரமைந்துடைய பிரான் கரத்தேந்திக் கடிதின் விடுத்தருளத் திருமுருகா

சரணம் சரணமென் றழுகு சிவாக சமேத உமாதரனடி நிழல் புகுந்தார்."[12]

என்ற நிலையில் ஔவையார், வெள்ளானை ஏறிச் சென்ற சுந்தரர், குதிரையில் சென்ற சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய இருவருக்கும் முன்னாக யானைமுகன் துதிக்கையால் எடுத்துவைக்க சிவலோகம் புகுகிறார்.

சேந்தனார் நாயனார்

சோழ நாட்டில் உள்ள திருவீழிமிழலை என்ற ஊரில் வாழ்ந்தவர் சேந்தனார். இவர் முருகன் அடியார் ஆவார். தில்லையில் நடந்தத் தேர்த்திருவிழாவின்போது அத்தேர் நகராமல் நின்றுவிட இவர் பல்லாண்டு பாடி அத்தேரை உலாவச் செய்தார்.

"பரிவு மிகுந்துநடந்து தில்லைப் பதிபுக் கமலன் தேர் முனின்று

கிரிவில் வளைத்துப் புரம் பொடித்த கிருபைக் கடலே முறையோஎன்

இருகை குவித்து மன்னுக என்றியங்கும் பல்லாண்டு இசைத்தலுமப்

பொருவில் திருத்தேர் நகர்வலம் புரிந்து நிலை நின்றதைக் கண்டு"[13]

என்று திருத்தேர் நகர்ந்த வரலாறு பாடலில் காட்டப்பெறுகிறது. இதன்பிறகு பல தலங்களுக்கு இவர் சென்றார். திருவிடைக்கழியில் உள்ள முருகனைப் பற்றிப் பதிகம் பாடினார். பன்னிரு திருமுறையில் இடம்பெறும் முருகன் பற்றிய பதிகத்தில் இப்பதிகம் சிறப்பிற்குரியது. முருகனையே முதற்கடவுளாகக் காணும் இப்பதிகம் பாடியமையாலே சேந்தனாரைச் சேய்த்தொண்டராகச் சொக்கலிங்கனார் கருதியுள்ளார்.

"மாலுமா மனம்தந்(து) என்கையில் சங்கம்

வல்வினான் மலைமகள் மதலை

வேலுலாந் தேவர் குலமுழு தாளும்

குமரவேள் வள்ளிதன் மணாளன்

சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்

திருக்குரா நீழற்கீழ் நின்ற

வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்

என்னும் என் மெல்லியல் இவளே.’[14]

என்ற இத்திருமுறை முருகனுக்கு உரியதாகும். இதன்பின் பல நாள் வாழ்ந்து இறையின்பம் பெற்றார் சேந்தனார்.

<u>கச்சியப்பர்</u>

புகழ்மிக்கத் தொண்டை நாட்டில் உள்ள காஞ்சிபுரம் என்ற நகரில் காளத்தியப்பர் என்பவருக்கு மகவாகப் பிறந்தவர் கச்சியப்பர். கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற இவர் சின்மய குரு வழியாகச் சமய தீக்கையும் பெற்றார். வடமொழி, தென் மொழி இரண்டிலும் தேர்ந்தார். தந்தையார் கால வளர்ச்சியில் இறந்துபட அவர் குமரகோட்டத்தில் ஆற்றிவந்த அர்ச்சகர் பணியை இவர் மனமுவந்து ஏற்றுச் செய்தார்.

அவ்வாறு ஒருநாள் குமரக் கோட்டக் கடவுளுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து முடித்து இரவில் உறக்கம் கொண்டார். அவ்வுறக்கத்தில் கனவு ஒன்று வந்தது. அக்கனவில் “‘திகடச் சக்கரம்’ எனத் தொடங்கிக் கந்தபுராணத்தைப் பாடுக!” என்று முருகன் ஆணையிட்டான். இதனால் ஊக்கம் பெற்றுக் காலையில் எழுந்து தன் கடமைகள் ஆற்றிவிட்டுக் கந்தபுராணத்தை எழுதத் தொடங்கினார் கச்சியப்பர்.

“தினம் தினம் ஈரைம் பான் கவி வீதம் இசைத்ததை

நன்று தீட்டிய ஏடெழுத்தாணியை நாதன் தாளிலிட்டே தமதாலயம்

சென்று மற்ற தினத் தெடுத் தாய்ந்த திற்றிருத்தமோர்ந்துளத்தாந்நத மீக்கொடு

நின்று பின்பிறையைத் தொழுதித்தக நிகழுமோரயு தந்துமுன்னூற்றின்மேல்"[15]

என்ற பாடலில் நாள்தோறும் கந்தபுராணப் பாடல்களை எழுதி அவற்றை முருகப் பெருமான் திருவடியில் வைக்க அதில் சில தவறுகள் திருத்தப்பட்டிருக்கும் நிலையில் புராணம் வளர்ந்தது.

கந்தபுராணம் எழுதி நிறைவேறிய நிலையில் அப்புராணம் அரங்கேற்றம் செய்யப்பட முடிவு செய்யப்பெற்றது. பல புலவர்களும் நூல் அரங்கேற்றத்திற்கு அழைக்கப் பெற்றனர். நூல் அரங்கேற்றக் கச்சியப்பர் முயன்றார். முதல் பாடலான திகடச் சக்கரம் என்று தொடங்கினார். அப்போது அவையில் இருந்த ஒரு புலவர் திகடச் சக்கரம் என்ற புணர்ச்சி சரியில்லை என்றார். கச்சியப்பர் இது கந்தன் வாக்கு என்ற காரணத்தால் அவரால் இதற்குப் புணர்ச்சி இலக்கணம் சொல்ல இயலவில்லை. இதன் காரணமாக நாளை சொல்லுவதாகச் சொல்லிட அரங்கேற்றம் பாதியில் நின்றது.

இரவில் முருகனிடம் கனிந்துக் கச்சியப்பர் நூலைத் தடையின்றி அரங்கேற்றித் தர வேண்டினார். கந்தன் அவரின் கனவில் தோன்றித் "திகழ் தச சக்கரம் - திகடச் சக்கரம் ஆனது என்று புணர்ச்சிக்கு இலக்கணம் இருக்கிறது. அது வீரசோழிய நூலில் உள்ளது" என்றான்.

"எமதுரையாந் திகடசத்துக் கெதிர்ப்பறைந்த பெரியார்

எழில் வீர சோழியமாம் இலக்கண நன்னூலில்

தமிழெழுத்தின் புணர்வையறிந்திலர் போலும் மதனிற்

சந்தியெனும் படலமதில் ஈரொன்பான் கவியில்

நமதுரைக்கு விதியுளதத் திருமுறையை நாளை

நறுபுனனாட்டொரு புலவர் கொடுவருவரெனவே

குமதவாய் மலர்ந்தருளி இறையுருவங் கரந்தான்

குதுகலத்தோடெம்மடிகள் விழிதுயில்நீத்தெழுந்தார்”[16]

என்னும் பாடல்வழி சிக்கலுக்கு முருகன் தீர்வு சொன்ன திறத்தைச் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் படைக்கிறார்.

இதன்பின் அரங்கேற்றம் காலையில் தொடர்கிறது. சொன்னதுபோலவே ஒரு புலவர் வீரசோழியம் என்ற நூலின் பகுதியைக் காட்டிச் சிக்கலைத் தீர்க்கிறார். அதன்பின் அவர் மறைய வந்தவர் முருகப்பெருமான் என்று அனைவரும் அறிகின்றனர். கந்தபுராணம் எவ்விதத் தடையுமின்றி அரங்கேற்றம் பெற்றுக் கந்தன் புகழை உலகில் நிலைபெறச் செய்து வருகிறது.

இதன்பின் பல நாள்கள் வாழ்ந்து கந்தனடியைச் சேர்ந்தார் கச்சியப்பர்.

<u>முருகம்மையார்</u>

சோழநாட்டில் பழைய நகரமொன்றில் சம்பந்தம் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சேய்த்தொண்டர்களை வரவேற்று உபசரித்து உணவு தருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவருக்கு மகப்பேறு இல்லாக் குறை இருந்தது.

இவரின் இல்லத்திற்கு வந்த ஒரு முருகனடியார் சோதிடங் கணித்து ஒரு பெண் மகவு பிறக்கும் என்றார். மேலும் அவர் கிருத்திகைக்கு அடுத்த பஞ்சமிக்கு அடுத்த நாளில் கந்தனுக்கு விரதமிருந்தால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்றார்.

அதன்படியே விரதம் இருக்க இவர்க்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையைக் கந்தன் முன் கிடத்தி இவர் சடாட்சர மந்திரம் ஓதினார். அக்குழந்தை பேச்செல்லாம் முருகன் என்றே பேசியது. விளையாட்டை மறந்து முருகனையே எந்நேரமும் எண்ணியது.

“எத்தேவன் திருவருளால் இருநிலத்தோர் இறைஞ்ச திருஅவதாரம் புரிந்திட்டாரோ

அத்தேவன் திருநாமம் அனைத்தினும்தெள்ளமுத மயமாமுருகா முருகா என்றும்

மெய்த்தேவன் திருவருளைச்சிந்திப்பாராய் விளையாடல் மறந்ததனை அறைந்தந்நாமப்

பித்தேகொண்டிளம் பேதைப்பருவம்நீங்கிப் பெதும்பையெனும் பருவமுற்றார்எம்பிராட்டி”

என்று அக்குழந்தை முருகனின்மீது பற்றுவைத்த நிலையைப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

இப்பெண்மகவும் வளர்ந்து மணப்பருவம் எய்தியது. பெற்றோரும் மற்றோரும் இப்பெருமாட்டிக்கு திருமணம் செய்துவைக்க எண்ணினர். தனஞ்செயன் என்னும் மணாளனை மணம்முடித்துவ்வத்தனர்.

இல்லறம் நல்லறமாக நடந்தது. மணம் முடிந்தபின்னும் எல்லா நேரமும் முருகா எனும் நாமத்தை மறவாமல் இவ்வம்மையார் சொல்லியே வந்தார். இதனைக் கண்ட அருகிருந்தோர் இவளின் கணவனிடம் முருகன் என்ற ஆண்மகனுடன் இவளுக்குத் தொடர்புளது எனக் கூற இவளின் கணவனும் நம்பிக் கெட்டான்.

முருகா என்று சொல்லிச்சொல்லி வாழும் உன் வலது கரத்தை வெட்டுகிறேன். முருகன் அருளால் அது திரும்பட்டும் என்று இவளின் கரத்தை வெட்டினான்.

கரம் வெட்டுப்பட்டதும் முருகா முருகா இது உன் திருவிளையாடல் என்று அழுதார் இவ்வம்மையார்.

"ஒருகால் முருகாஎனும் உத்தமர்முன் ஓடோடிவருக் கருணாகரவேள்,

முருகா முருகாமுருகா எனுமும்முறை கூவிய அம்மையின் முன்மயில்மேல்

இருபாலுறு தேவியர் சூழ்ந்தருள இளஞாயிறு கோடி எழுந்ததெனக்

கிருபாகர மூர்த்தி எழுந்தருளக் கேடுற்ற வலக்கரம் ஒட்டியதால்"[17]

என்று கரம் ஒட்டியதைப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

இதனால் ஆச்சரியமுற்ற இவ்வம்மையாரின் கணவரும் முருகனடியாராக மாறி முருகா எனும் நாமம் சொல்லி வாழ்வின் நிறைவில் இருவரும் முருகனடி சேர்ந்தனர்.

<u>பொய்யாமொழியார் நாயனார்</u>

தொண்டைநாட்டில் செங்கட்டங்கோட்டத் துறையூர் என்னும் பதியில் குகபாதசிருதர், சத்திவேல் அம்மை ஆகிய இருவருக்கும் ஒரு மகன் பிறந்தான். அம்மகனை வளர்த்துக் கல்விக்கழகம் அனுப்பினார். கல்விக் கழகத்தில் இருந்த ஆசிரியர் அக்குழந்தைக்குக் கல்வி கற்பித்ததோடு வாழும் முறையையும் கற்றுத்தந்தார். ஆசிரியரின் வயலைக் காக்கும் பணியை மாணவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாள் காக்கவேண்டும் என்பது அவ்வாழ்க்கைப்பணி.

அந்தப்பணிக்கு இச்சிறுவன் சென்றான். நிழல், தென்றல் காற்று ஆகியன அச்சிறுவனுக்குத் தூக்கத்தை வரவழைத்தது. இத்தூக்கத்தில் குதிரையொன்று வயலை மேய்வதாகக் கனவு கண்டான். இக்கனவு உண்மையும் ஆயிற்று. மேய்ந்த அரச குதிரை மீதுக் கோபமுற்ற சிறுவன் ஒரு பாடல் பாடினான். அப்பாடலின் காரணமாக குதிரை செத்து வீழ்ந்தது. இச்செய்தி ஆசிரியருக்குத் தெரியவர ஆசிரியர் இறந்தது அரச குதிரை, ஆகவே அரச துரோகம் எனப் பழி வருமே எனக் கலங்கினார். இதனை அறிந்த அச்சிறுவன் உடனே மீண்டும் ஒரு பாட்டு பாடினான். அப்பாடல் முடிவுறும் தருவாயில் அக்குதிரை எழுந்தது. இச்சிறுவனின் மொழி பொய்யா மொழியாக இருப்பதை எண்ணி ஆசிரியர் பொய்யாமொழி எனவாழ்த்தினார். அதுவே அச்சிறுவன் பெயராயிற்று.

இதன்பின் தமிழ்வல்ல பொய்யாமொழியார் பல இடங்களுக்குச் சென்றார். சிவனை அன்றி அவன் மகனைப் பாடேன் என்பது அவர் கொள்கையாக இருந்தது. அதன்படியே நடந்து வந்தார். இருப்பினும் செவ்வேள் இவரிடம் பாடல் பெறுவேன் என்று திருவருள் கூடினான்.

மதுரைக்குச் சென்ற பொய்யாமொழியார் அங்குக் காணாது ஒழிந்த சங்கப்பலகையை மீட்டெடுத்தார். இவரின் இவ்வருமைச் செயலைப் பாராட்டாத பாண்டியன் மீது கோபமுற்றார். இவரின் கோபமறிந்த பாண்டிமாதேவி இவரின் பல்லக்குச் சுமக்கும் ஆளாக உருமாறி வந்து தன் இல்லம் வரவழைத்து அரச விருந்தும் விருதும் அளித்துப்போற்றினாள். பொய்யாமொழியார்பால் பாராட்டும் பாட்டும் பெற்றாள்.

இதன்பின் பாண்டிநாடு விட்டகன்றார் பொய்யாமொழியார். இவர் ஒரு காட்டில் நடக்கும் வேளையில் முருகன் வேடனாகத் தோன்றி இவருடன் விளையாடினான். வேடன் தன்னை ஒறுக்க வருகிறான் என்றறிந்த பொய்யாமொழியார் பயந்தார். வந்த

வேடன் தமிழ்ப்பாடல் கேட்க சற்று தெளிவுற்றார். வேடன் முட்டை என்பெயர் அதுவிளங்கப் பாடு என்றான்

இவரும் பாடினார். கோழியைப் பாடாது அதன் குஞ்சினைப் பாடேன் என்ற கொள்கை உடைய பொய்யாமொழியாரை முட்டையையே பாடவைத்த திருவிளையாடல் இதுவாகும். மேலும் பொய்யாமொழியார் பாடிய பாடலில் குற்றம் கண்டுபிடித்து அவரின் ஆணவத்தையும் முருகப் பெருமான் அடக்கினான். மேலும் தான் ஒரு பாடலைப்பாடி தன் உருக் காட்டினான் கந்தன். அவன்உரு கண்டு அதிசயித்தார் பொய்யாமொழியார்.

'அறியாமை எனுமருளால் உனைப் பரவமறுத்தேன்

அண்ணாஎன் அப்பாஎன் ஆருயிர்க்குயிரே

சிறியனென் பிழைமுழுதும் பொறுத்தெழுந்த துரையே

சிவசமயத் திருவிளக்கே திருவிளக்கின் ஒளியே

வறியேனை வலிந்தடிமை கொள எழுந்தஅரசே

வள்ளலே நின் அடியை வணங்கிவழிபடுநன்

னெறியோடுன் பழ அடியார் நேமுதன் கருளாய்

நீக்கமர எங்கெங்கும் நிறைந்த பரம்பொருளே”[18]

என்ற நிலையில் இவர் முருகனடி பணிந்தார். இதன்பின் பல பாடல்கள் பாடி கந்தனடி சேர்ந்தார்.

அருணகிரியார்

அருணகிரியாரின் திருப்புகழ் முதல் பத்துத் திருமுறைகளாக அமைய அதனைத் தொடர்ந்து சேய்த்தொணடர் புராணம் எழுதப்படுவதால் அருணகிரிநாதருக்கு இப்புராணத்தில் அதிகமான பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. அறுநூறுக்கும் மேற்பட்ட பாடல்களில் அருணகிரிநாதர் வரலாறு உரைக்கப்பெற்றுள்ளது.

திருவண்ணாமலையில் பிரபுட தேவன் என்பவனின் ஆட்சியில் ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் எப்போதும் காமவின்பம் காண்பதையே தன் வாழ்வின் பயன் என்பதாகச் செயல்பட்டு வந்தார். இதனால் அவரின் உடல்நலத்தை அவர் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக தொழுநோய் அவரைப் பற்றியது. இந்நோய் போக்க அவர் திருவண்ணாமலை கோயிலுக்குள் புக எண்ணினார். ஆனால் கோயிலில் உள்ளோர் அவர் வருகையை விரும்பாது அவரை விலக்கினர். இதனால் மேலும் துன்புற்றார் அருணகிரியார்.

தன் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணி, அவர் திருவண்ணாமலைக் கோபுரத்தின் மீதேறி நின்று அங்கிருந்துக் குதித்து உயிர்விட எண்ணினார்.

“சகல லோக காரணா சொல் சர்வ மங்களாகரா

புகலடைந்த நாயினேனென் புன்க ணோய கற்றெனாச்

சிகரகோபுரதினின்று சேவல்˙வேல் நல் மயிலெனாக்

குகநமோநமோ நமோ நமோ எனக் குதித்தனர்”[19]

என்ற பகுதி அவர் உயிர்விடத் துணிந்த செய்தியைக் கூறுவதாக உள்ளது. இவர் குதித்த நேரத்தில் முருகப்பெருமான் தன் கரங்களால் அவரைத் தாங்கினார். மேலும் அவரின் உடல் துன்பங்களைப் போக்கி, நாவில் வேலால் தமிழ் படைப்பு பெருக்கும் நிலையில் எழுதினார். உடன் அவர் 'முத்தைத்தரு பத்தி' என்று தொடங்கி பாட ஆரம்பித்தார். அதுமுதல் அவர் பாடிய பாடல்கள் முருகன் திருப்புகழ்களாயின.

இவரின் அருள்திறம் உணர்ந்த அன்பர்கள் இவரைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று பெருமைப்படுத்தினர். முருகனை நினைந்து திருவண்ணாமலை வலம் வந்து அவர் வணங்கினார். அதன்பின் பல தலங்களுக்குச் சென்று அங்குள்ள முருகப் பெருமான் பற்றித் திருப்புகழ் பாடினார். இவற்றைத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் தொடங்கும் அடி காட்டி இப்புராணத்துள் விவரித்துள்ளார்.

இவ்வாறு இவர் செல்லும் போதில் வில்லிப்புத்தூரார் என்பவர் ஞானம் நிரம்பப் பெற்றவராக ஆணவத்துடன் திரிந்தார். அவரைச் சந்தித்து அருணகிரியார் "தான் சொல்லும் கந்தரந்தாதிக்குப் பொருள் வரைந்தால் நீவிர் வென்றதாக நாங்கள் ஒப்புவோம்" என்றார். 'திதத்த' எனத்தொடங்கும் பாடலைப் பாடினார் அ்ருணகிரிநாதர். இதற்குப் பொருள் சொல்லமுடியாது திண்டாடினார் வில்லிப்புத்தூரார். எனவே அருணகிரி வாதில் வென்றதாகவும் வில்லிப்புத்தூரார் தோற்றதாகவும் தீர்ப்பு வழங்கப்பெற்றது. இப்போட்டியின் நியதிப்படி தோல்வி அடைந்தவரின் காதை வென்றவர் வெட்டவேண்டும் என்ற அமைப்பு இருந்தது. ஆனால் அருணகிரியார் அவ்வாறு செய்யாமல் "தான் தந்த பரிசாக உமக்குக் காது அமையட்டும்" என்று வில்லிப்புத்தூராரை பெருமிதத்தால் அணைந்து கொண்டார்.

இதன்பின் அருணகிரிநாதர் பல தலங்களுக்குச் சென்று கந்தன் கருணையைப் பரவினார். இந்நேரத்தில் பிரபுடதேவன் என்ற திருவண்ணாமலையைத் தலைநகராக

வைத்து ஆண்டு வந்த அரசன் அருணகிரியைத் தோற்கடிக்க ஒரு போட்டி வைத்தான். சம்பந்தாண்டான் என்ற சமண முனிவரின் வாயிலாக காளிதேவியை நேரில் வரவைப்பேன் என்று கூறினார். அதனைக் கேட்ட அருணகிரியாரும் "யானும் எனது கடவுளாகிய முருகனை நேர்முகமாக அனைவரும் காணவைப்பேன்" என்று சபதம் ஏற்றார்.

காளியைச் சம்பந்தாண்டன் வருக என அழைக்க அத்தெய்வம் வரவில்லை. ஆனால் அருணகிரியார் அழைக்க தூணில் இருந்த முருக உருவம் மயில் தோகை விரிக்க அதன்மீது ஊர்ந்து நின்றது. இக்கடவுளை அனைவரும் தரிசித்து அருணகிரியாரின் பெருமையை அனைவரும் உணர்ந்தனர். இதன்பிறகு அவர் ஷேத்திரக் கோவை, வேல் திருவிருத்தம், மயில் விருத்தம், கந்தரனுபூதி ஆகியனவும் பாடினார்.

அருணகிரியாரின் பெருமை இவ்வாறு பரவப் பரவ பலருக்கு அது பிடிக்கவில்லை. எனவே இவரைச் சோதனைக்குள் உள்ளாக்கத் தேவலோகத்துப் பாரிஜாதமலரைக் கேட்டான் அரசன். இதனைத்தேடி அருணகிரியார் வான்வழி பறந்தார். அவ்வாறு பறக்கும் நிலையில் தன் உடலைக் கோயில் கோபுரத்தில் வைத்துவிட்டுக் கிளி உருவம் எடுத்துக்கொண்டுப் பாரிஜாத மலர் பறிக்கச்சென்றார்.

இந்திரன் தோட்டத்திற்கு அக்கிளி பரந்து சென்றது. அங்கு இருந்தக் கற்பக மரம் கண்டது. அதனுள் இருந்த பாரிஜாத மலரைக் கிளி பறித்துக்கொண்டு மண்ணுலகு வந்து சேரத் துவங்கியது. வந்து சேர்ந்தால் அவரின் உடலம் காணாமல் எரிக்கப்பெற்றிருந்தது. இதன் காரணமாக கிளி உருவமாகவேத் திரிந்தார் அருணகிரியார் இந்நேரத்தில் திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை போன்றனவற்றைப் பாடினார். இவரின் தமிழ்ப்பணி கருதி முருகப் பெருமான் கிளியாகத் தன் கரத்தில்

அமர்த்திக்கொண்டார். இவ்வாறு அருணகிரிநாதர் வரலாறு இப்புராணத்தில் சொல்லப்பெற்றுள்ளது.

<u>குமரகுருபரர்</u>

பாண்டி நாட்டில் பொருநை ஆற்றின் கரைமேல் கைலாயபுரம் என்றொரு நகரம் உள்ளது. இதனில் சண்முகசிகாமணி, சிவகாம சுந்தரியார் ஆகியோர் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாத நிலையில் திருச்செந்தூர் சென்று வேண்டிக்கொண்டனர். இதன் காரணமாக ஓர் ஆண்மகவு பிறந்தது.

'ஈனமிக்குடைய ஞாலத் தவர்க்கிதம் எய்துவிப்பான்

ஞானமுத் திரையினோடும் நாயகன் அருளப்பெற்ற

மோனமுத்திரை கொண்டுள்ள மூர்த்தியின் சீர்த்தி ஓரார்

ஊனமிக்குடைய மாந்தர் ஊமரென்று உறுதி கொண்டார்"[20]

பிறந்த குழந்தை மோனத் தவம் கொண்டு இருந்ததாம். ஆனால் ஊனக் கண் உடைய உலகோர் இக்குழந்தை ஊமை என்று உரைத்தார்களாம். பெற்றோரும் இதனைக்கருதி திருச்செந்திலம்பதி நோக்கிக் குழந்தையை அழைத்துச் செல்ல குழந்தையின் மோனத் தவம் நீங்கும் காலம் வந்தது.

திருச்சீரலைவாய் சென்று முருகப் பெருமானிடம் பெருமானே உனதருளால் பெற்ற பிள்ளை இப்படி ஊமையாய் இருப்பது சரியா என்று இக்குழந்தையின் பெற்றோர் மனமுருக வேண்டினர். அவ்வாறு இக்குழந்தையின் ஊனத்தைப் போக்கவில்லை என்றால் நாங்கள் கடலில் வீழ்ந்து இறப்போம் என்று அவர்கள் கந்தனிடம் இறைஞ்சினர்.

இவ்வாறு ஏழு நாட்கள் கடந்தபின் குழந்தையின் கனவில் கந்தன் தோன்றி "குருபரா! உன் நாவைக்காட்டு வேலால் எழுதுகிறேன்" என்று கூறினார். குழந்தையும் சற்று நேரத்தில் கண்விழித்துத் தன் தந்தையை அப்பா என்றும் தன் அம்மையை அம்மா என்றும் அழைத்தது. இக்குழந்தையின் பெயரும் குமரகுரபரர் என்பதாயிற்று.

குமரகுருபரர் தன் மோனத் திரையை விலக்கிய கந்தன்மீது 'பூமேவு செங்கமலப் புத்தேளும்' எனத் தொடங்கும் கந்தர் கலி வெண்பா பாடினார். தந்தையின் தோள்மீது அமர்ந்து முருகப்பெருமான் புகழ் பாடினார். இது சம்பந்தரும் அவரின் தந்தையார் சிவபாத இருதயரும் போல நடந்த நடப்பினைப்போன்று அமைந்திருந்தது.

பின்னர் பல்வேறு தலங்களுக்குக் குமரகுருபரர் யாத்திரை மேற்கொண்டார். திருப்பரங்குன்றம் சென்று முருகனைத் தரிசித்து அதன்பின் மதுர்ரை வந்துச் சேர்ந்தார். இவர் மதுரை வந்து சேர்ந்திருந்த நிலையைத் திருமலை நாயக்க மன்னருக்கு மீனாட்சியம்மையே கனவில் உரைத்தாள்.

மதுரை நகரங் கயற்கண்ணம்மை மன்னன் கனவில் எழுந்தருளி

முதிர் முத்தமழோ தாதுணர்த்தி முருகன் இனிதாட் கொண்ட ஒரு

சதுரன் நம்மைத்தொழுது பிள்ளைத்தமிழ்என்றொரு நூல்சாற்றியுளான்

அதனை நமது சந்நிதியில் அரங்கேற்றுதி என்றறைந்தருளி"[21]

என்று மீனாட்சியம்மையே தன் பிள்ளைத்தமிழைத் தன் சந்நிதியில் அ்ரங்கேற்றிக்கொள்ள மன்னர் தம் கனவில் எழுந்தருளினாள். இதன் காரணமாக இவரை மதுரை முழுவதும் மன்னர்தம் பணியாளர்கள் தேடினர். நிறைவில் கண்டனர்.

அவரை அரச சின்னங்களுடன் வரவேற்று உபசரித்துப் பிள்ளைத்தமிழ் நூலை அம்பாள் சந்நிதியில் அரங்கேற்றி மகிழ்ந்தனர்.

முத்தப்பருவம் அரங்கேறுகையில் முத்துவடம் ஒன்றை மீனாட்சி அம்மை சிறுபிராட்டியாக வந்து மன்னர் கழுத்தில் இருந்து எடுத்துக் குமரகுருபரர்க்கு அளித்தாள். இதனைக் கண்டு அவையோர் அதிசயித்துக் குமர குருபரரின் பக்தித் திறத்தை வியந்தனர். திருமலை நாயக்க மன்னரும் புலவர் பெருமானுக்குப் பல விருதுகள் அளித்துப் போற்றினார். வீரக்காண்டாமணி ஒன்றை அவருக்கு அணிவித்தார். அவருக்கு மன்னர் பொன்னால் அபிடேகம் செய்தார். ஒட்டகம், சிவிகை, சின்னம் போன்ற பலவற்றைத் தந்தார். இருபதாயிரம் பொன் வருவாயைத் தரவல்ல நாயக்கபுரத்தை அவருக்கு அளித்தார்.

குமரகுருபரர் மேலும் மதுரையில் இருந்து மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, நீதிநெறிவிளக்கம் ஆகியன பாடி மகிழ்ந்தார். மதுரை விட்டகன்று மெல்ல திருவானைக்காவல் வந்து சேர்ந்தார். அங்குப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்பரை வாதில் வென்றார். இதனையடுத்துத் தருமபுரம் சென்றார். அங்கு ஆதீன மாசிலாமணித்தம்பிரானிடம் உரையாடினார். அப்போது குமரகுருபரரை “ஐந்து பேரறிவும் கண்களே கொள” என்ற பெரியபுராணப்பாடலுக்கு விளக்கம் தர அவர் கூறினார். குமருகுருபரர்க்கு உரை தடுமாறியது. எங்கு உரைக்கு முட்டுப்பாடு தோன்றுகிறதோ அங்கே குருவின் அருள் கிடைக்க உள்ளது என்பதை அறிந்து குமரகுருபரர் அவரையே குருவாகக்கொண்டு சைவ நன்முறைகளைக் கற்றார்.

இதன்பின் பல்வேறு இறை தலங்கள் அடைந்து காசி வரை குமரகுருபரர் சென்றார். காசிக்கலம்பகம் பாடினார். சகலகலா வல்லிமாலை பாடி வடமொழி

அறிவும் பெற்றார்.இதன் பின் பாதுஷா அவைக்குச் சிங்கத்தின்மீது ஏறிச் சென்றார்.அரசவை சென்று கொதிக்கும் பொன் தண்டு ஏந்தி சைவசமயமே சமயம், முருகனே கடவுள் என முழங்கினார். இதன்பின் அவருக்கு அளிக்கப்பட்ட உணவில் பன்றிக்கறி இருக்க அவ்வுணவைத் தன் திறத்தால் சைவ உணவாக்கி அருந்தினார். இதன் காரணமாக காசியில் இவர் போற்றப்பெற்று குமாரசாமி மடம் என்ற ஒன்றை தமக்கான மடமாக ஆக்கி மகிழ்ந்தார். இதன்பின் வெள்ளை ஏற்றில் ஏறி சுவர்க்கம் புகுந்தார்.

<u>சிவப்பிரகாச சுவாமிகள் நாயனார்</u>

தொண்டை நாட்டில் காஞ்சி நகரில் குமாரசாமி தேசிகர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு தெய்வக் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சிவப்பிரகாசம் எனப் பெயரிட்டனர். இவருடன் இரு ஆண்மகவுகள், ஒரு பெண்குழந்தை அக்குடும்பத்தில் உதித்தனர். சிறிது காலத்தில் தந்தையும் தாயும் காலமான காரணத்தினால் இவர்கள் தனித்து விடப்பட்டனர்.

சிவப்பிரகாசர் தமக்குப் பின்னவர்களுக்கு முன்னவராகி அவர்களைக் காத்தார். அவரே பின்னவர்களுக்குக் குருவானார். அனைவரும் திருவண்ணாமலை நோக்கிப் பயணித்தனர். அங்கு தம்பியர் புடைசூழ சிவப்பிரகாரசர் சோணசைல மலையை வலம் வந்தார். அவ்வாறு வலம் வரும் நேரத்தில் நூறு பாடல்கள் பாடினார். அதுவே சோண சைல மாலை ஆகியது.

இதன்பின் சோழ நாடு வந்து, அதனைத் தொடர்ந்து துறைமங்கலம் சேர்ந்தார் சிவப்பிரகாசர். அப்பகுதியின் சிற்றரசன் அண்ணாமலை என்பான் தனக்குக் குருவாக அமையக் கேட்க இவரும் ஒப்பினார். இதற்காக அவன் ஒரு மடத்தை நிறுவினான்.

அதில் அமர்ந்தார் சிவப்பிரகாசர். பல ஆண்டுகள் இங்கிருந்துப் பலருக்கு உபதேசம் செய்தருளினார் சிவப்பிரகாசர்.

அதன்பின் இவ்விடம் விட்டு அகன்று சிந்துபூந்துருத்தி என்ற இடத்தில் இருந்த வெள்ளியம்பலவாணர் மடம் எய்தி செந்தமிழ் இலக்கணம் கற்க முனைந்தார். தேசிகர் இவரின் புலமையை வியந்துத் தங்களுக்கு நான் பாடம் சொல்வதாக என்று கூறி தாங்கள் என்னை ஒப்பவர் என்று கூறி சரியாசனம் தந்தார். ஐந்திலக்கணத்தையும் அவர்வழி கற்றார் சிவப்பிரகாசர். கற்ற கலைக்கு இவர் பொன் காசுகளைக் குருதட்சணையாக அளிக்க முயல, குருவோ என்னை மதிக்காத ஒருவர் என்னை இழித்துரைத்துத் திரிகின்றார். அவரைத் தாங்கள் அடக்கி ஆண்டால் அதுவே எனக்கான குருதட்சிணை என்றார்.

சிவப்பிரகாசரும் தேசிகரை மதிக்காதவரைக் காண திருச்செந்தூர் சென்றார். முருகனை முதலில் வணங்கி பின்பு அவரைக் கண்டார். அவரிடம் வாது செய்ய முனைந்தார். எவ்வகையில் வாது செய்வதென இருவரும் பேசினர். அப்போது அம்மூடன் நீரோட்ட யமக அந்தாதியை இருவரும் படைப்போம். யாரால் அந்தாதி பாட முடியவில்லையோ அவர் தோற்றவர் என்ற முடிவு எட்டப்பட்டது. நீரோட்டயமக அந்தாதி என்பது உதடு ஒட்டாத நிலையில் பாடப்பெறும் ஒலிகளை உள்ளடக்கிய அந்தாதிச்செய்யுள் ஆகும்.

அவர் ஒரு கவிதை பாடுதற்கு முன்பு இருபத்தைந்து கவிதைகள் பாடினார் சிவப்பிரகாசர். இதன் காரணமாக சிவப்பிரகாசரின் வெற்றியை அவர் ஏற்றுக்கொண்டான். பெருமிதத்தோடு அவரைத் தண்டிக்காமல் தன் குருவிடம் அவரை அழைத்துச் சென்றார் சிவப்பிரகாசர். மிக மகிழ்ந்தார் தேசிகர்.

பின்பு திருவேங்கை நகர் சென்று அங்குள்ள இறைவன் மீது பல பாடல்களைப் பாடினார். திருவேங்கைக் கோவை, வேங்கைக்கலம்பகம், வேங்கை அலங்காரம் போன்றவற்றைப் பாடினார். இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் அடைந்து பிரபுலிங்க லீலை, திருக்கூவபுராணம் ஆகியன பாடினார்.

இதன்பிறகு வீரமாமுனிவருடன் எதிர்வாதம் பேசி, ஏகமத நிராகரணம் என்னும் நூல் பாடினார். தன்னுடன் பிறந்த தமக்கையாரைச் சாந்தலிங்க அடிகளுக்கு மணம் புரிந்து வைத்தார். அதன்வழி மயிலம் பொம்மபுர ஆதீனகர்த்தர் சிவஞான பாலய சுவாமிகள் பற்றி அறிந்து மனிதரைப் பாடாத தன் கொள்கையை விடுத்து, சிவஞான பாலய சுவாமிகள் மீது பல சிற்றிலக்கியங்கள் பாடினார்.

இதன்பின் நல்லாற்றூரில் மடம் நிறுவி அங்கு இருந்து சமயப் பணிகள் ஆற்றினார். வாழ்வின் நிறைவில் கந்தவேள் அடி பற்றினார்.

<u>திருஞானசம்பந்த தேசிகர்</u>

உலகிற்கு ஞானமழை பொழிந்து வரும் ஆதீனங்களுள் ஒன்று தருமபுர ஆதீனம். இவ்வாதீனம் குமரி முதல் காசி வரை மடங்கள் நிறுவிச் சைவப்பணி ஆற்றிவருகிறது. இத்தருமையாதீனத்தின் ஆறாம் பட்டமாக அமர்ந்தவர் திருஞானசம்பந்த தேசிகர். இவர் வேதவித்தாய்த் திகழ்ந்து அருள் ஞான ஒளி பரப்பினார். இவர் மாணவர்களுக்கு வேதாந்தம், சிந்தாந்தம் ஆகியவற்றை விளக்கி அறிவிப்பார். அவ்வாறு ஒருநாள் பாடம் நடத்துகையில் ஒரு மாணவர் எழுந்து, தென்திசைத் தலங்களைத் தங்களுடன் தரிசித்து இன்பம் பெறவேண்டும் என்று வேண்டினார். அதனை ஏற்று இவரும் அவ்வாறு தலயாத்திரை மேற்கொள்ளத் தீர்மானித்தார். தன்னுடன் தன் மாணவர்களையும் அழைத்துக்கொண்டுத்

தலயாத்திரை செய்யப் புறப்பட்டார். இவரைத் தருமை ஆதீன அன்பர்கள் வழியனுப்பி வைத்தனர்.

பாண்டிநாடு அடைந்து பன்னிரு சிவத்தலங்களையும் இவர் தன் மாணவர்களுடன் தரிசித்தார். திருநெல்வேலி சென்று வணங்கினார். தான் சந்தித்தவர்களுக்கெல்லாம் தீக்கை அருளினார்.

வேள்விமலை என்னும் தலத்திற்கு இவர் வந்துற்றார். அங்கு முருகவேளின் ஒரு சக்தியான வள்ளியம்மையை அவரால் காண இயலவில்லை. கோயில் கட்டிட அமைப்பில் வள்ளி பெருமாட்டியைக் காண இயலாது இவர் தவித்தார். இவருக்காக வள்ளி உருவம் வளைந்து வந்து வெளிப்படத் தெரிந்தது.

“வருந்தி விசனத் திங்கிலையோ வள்ளித்தாயார் என மிகவும்
பரிந்து வினவும் போழ்திலிதோ பாரிங்குள்ளேன் அன்பாநீ
வருந்தல் ஒழிதி என மேனி வளைந்து காட்சி அளித்தினருள்
புரிந்து மறையக் கண்டடிகள் புளகப் போர்வை கண்டருளி”[22]

என்று வள்ளி உருவம் வெளிப்பட்ட வகையைப் பாடியுள்ளார் சொக்கலிங்கனார். இதன்பிறகு திருஞானசம்பந்த தேசிகர் குற்றாலம் அடைந்துப் பணிந்தார். அடுத்து சிந்துப்பூந்துறை சேர்ந்து அங்கு பல நாள்கள் இருந்தார். அதன்பின் தருமையாதீனம் வந்தடைந்து, மடத்தைச் சிறப்பாக நடத்தினார்.

<u>சம்பந்த சரணாலய நாயனார்</u>

சம்பந்த சரணாலயர் என்பவர் தருமையாதீன ஆறாவது பட்டம் திருஞான சம்பந்த தேசிகர் இடும்பணியைச் செய்து வந்தார். இவரின் பணிவும் ஆர்வமும்

கண்டு தேசிகர் இவரைத் தம் மாணவர்களுள் ஒருவராகவும் ஆக்கிக்கொண்டார். மேலும் ஆசிரியர் மாணவரின் விருப்பம் இன்னும் ஏதேனும் இருக்கிறதா எனக் கேட்க, அதற்கு அவர் என் பெயரைச் சம்பந்த சரணாலயர் எனச் சாற்றி உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே குருபிரானும் இவரின் பெயரைச் சம்பந்த சரணாலயர் என மாற்றி அமைத்தார்.

மாணவர்களுடன் பழகி, புலமை மிகக் கொண்ட இவரின் புகழ் பல்வேறு இடங்களுக்குப் பரவியது. இதன் காரணமாக கர்நாடக சிற்றரசன் ஒருவன் இவரைக் காண வந்தான். வந்தவன் இவரின் கரிய நிறத்தைக் கண்டு முதலில் கேலி பேசினான். அண்டங்காக்கையையா நான் காணவந்தேன் என்று கேலி பேசினான். 'நீயே பெரிய அண்டம் காக்கை" என்றார் அவர். இதன் காரணமாக சம்பந்த சரணாலயத் தம்பிரானின் நாவன்மை கருதி அவரைப் பணிந்துத் தன் தவறை மன்னித்து அ்ருள வேண்டினான். மேலும் தன் நாட்டிற்கு வருகை தந்து சிவபலம் பெருக்கவேண்டும் என்றான். இதற்காக தன் குருவான ஞான சம்பந்த தேசிகரிடம் ஆணை பெற்றார் சம்பந்த சரணாலயர்.அந்நாடு அடைந்துச் சீலம் பெருக்கினார். அப்போது இவரின் தருமை வாழ்க்கை பற்றிக் கேட்க அதற்கு அவர் பின்வருமாறு பதிலுரைத்தார்.

"ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து

காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்வி கேள்வியல்லால்

ஓய்வார் சிவாநந்தவாரியுள்ளே ஒன்றிரண்டு மறத்

தோய்வார் கமலையுள் ஞானப் பிரகாசன் மெய்த்தொண்டர்களே"[23]

என்று தருமை வாழ்வைச் சிறப்பித்துக் கூறுகிறார் சம்பந்த சரணாலயர்.இதன்பின் தருமைக்கு மீள எண்ணம் கொண்டார் சம்பந்த ச்ரணாலயர்.

அதுபோது அவ்வரசன் கந்தபுராணத்தைத் தாங்கள் சொல்லி நாங்கள் கேட்கவேண்டும் என்று சொல்ல கந்தபுராணச் சுருக்கத்தை இவர் பாடல்களாக வரைந்தளித்தார். இப்பகுதி திருச்செந்தூரில் அரங்கேற்றம் ஆனது. இவ்வகையில் சிறப்பு பெற்ற நூலை எழுதிச் சிலகாலம் முருகப்பெருமான் அருளால் வாழ்ந்து நிறைவாழ்வைப் பெற்றார் சம்பந்த சரணாலயர்.

<u>மார்க்க சாகய தேவ நாயனார்</u>

திருவிரிஞ்சிபுரம் என்ற ஊரில் மார்க்க சகாயதேவர் என்ற பெருமான் ஒருவர் வாழ்ந்தார். முருகப்பெருமானையே நாளும் துதித்து அவர் வாழ்ந்தார். ஒவ்வொரு நாளும் கந்த ஆலயம் சென்று வழிபடுவது அவர் பழக்கம். அவர் முருகனைக் குழந்தையாகக் கண்டார். இதன் காரணமாக விரிஞ்சிபுர முருகன் மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார்.

> “எழுந்து காட்சி அளித்தருளி இம்மென்றையன் உருக்கரப்ப
>
> விழுந்து பணிந்தாண்டவருளை வியந்து போற்றி மெய்மறந்து
>
> குழந்தைவடிவேல் அமலனிருங் குணங்கள் பரவி நறுங்கனிகள்
>
> பிழிந்ததெனலாம் பேரின்பப் பிள்ளைத் தமிழ் ஒன்றோதி”[24]

பிள்ளைத்தமிழ் பாடிய முறையைச் சொக்கலிங்கனார் பாடுகிறார். இவர் பாடிய பிள்ளைத்தமிழின் சிற்றில் பருவத்தின் முதல் பாடல் பின்வருமாறு

”   “வேதன் முடியிற் படும்கமலம் விண்ணோர் சிரத்தில் அணிபதுமம்

விசய மயில்மேல் எழும்முளரி விமலர் புயம்சேர் திருக்கஞ்சம்

சாத மொழிக்கும் அம்புயம்எம் தலைமேல் இருக்கும் புது நளினம் தண்டை

சதங்கை கிண்கிணிசேர் கலகம் புவியிற் படலாமோ?

காதம் புதிய மணம்கமழும் கடம்பா முருகா கதிர்வே லா

கந்தா குமரா பெருங்கருணைக் கண்ணா வண்ணா – கதியருளை

யாதண் களபம் அணிமார்பா அடியேம் சிற்றில் அழியேலே அரசே

விரிஞ்சைப் பதிவாழ்வே அடியேம் சிற்றில் அழியேலே.”[25]

என்ற பாடல் இவரின் இலக்கியத்திறத்திற்கு ஒரு சான்றாகும். இவர் திருமுருகத் தலங்கள் பலவற்றிற்குச்சென்று, பின்பு முருக சுவர்க்கம் புகுந்தார்.

குணசீல நாயனார்

கொங்குநாட்டில் உள்ள திருச்செங்கோட்டில் மொழி நூல் வல்ல குணசீலர் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் சொன்மாலை சூட்டும் புலவர் குலத்தவர் என்பதால் நாளும் புகழ்மாலையைக் கந்தன்மீது தொடுத்துவந்தார்.

திருக்குருகூரில் பிரதிவாதி பயங்கரம் என்ற புலவர் தருக்கித் திரிந்தார். இவரையும் குணசீலரையும் வாது புரிய வைக்கவேண்டும் என்று இறைதிருவுளம் எண்ணியது. இதற்காக ஒற்றர்கள் வழி வாது செய்யும் நிலை உருவாக்கப்பெற்றது. அந்நாளும் நெருங்கியது. பிரதிவாதி பயங்கரம் தமிழால் வெல்வதைவிட சூழ்ச்சியால்

வெல்பவர். எனவே குணசீலர்க்கு நடுக்கம் வந்தது. அவர் முருகப்பெருமானிடம் இறைஞ்சினார். திருச்செங்கோட்டு வேலனிடம் முறையிட்டு வாதில் வெல்ல வழி கேட்டு உறங்கினார். உறக்கத்தில் வந்த கனவில் முருகன் தோன்றி வாதில் வெல்வோம் கவலை கொள்ளாதே என்றார்.

வாது செய்ய உள்ள நாளில் முருகப் பெருமான் சிறுவன் வடிவம் கொண்டு சபை வந்தார். பிரதிவாதி பயங்கரம்

"சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமென்ன

அமரிற் படம் விரித்து ஆடாதது என்"

என்று பாடலைத் தொடங்கினார். இப்பாடலைக் குணசீலர் முடிக்கவேண்டும். குணசீலரால் முடிக்க இயலவில்லை. இந்நேரத்தில் குணசீலரின் கடை மாணவனான முருகச் சிறுவன் இப்பாடலை முடித்து உதவினான்

நமரன்

குறவள்ளி பங்கன் எழுகரை நாடுயர்ந்த குமரன்

திருமருகன் மயில் வாகனம் கொத்துமன்றே"

என்று பாடல் முடிக்கப்பெற்றது. திருச்செங்கோடு பாம்பு மலை என்றால் ஏன் படம் விரித்து அது ஆடவில்லை என்பது பாட்டின் முதல் பகுதி. அது படம் விரித்து ஆடாமல் அடங்கிக் கிடப்பதற்குக் காரணம் முருகப்பெருமானின் மயில் கொத்தும் என்பதே என்று இப்பாடல் கேள்விக்குப் பதில் தந்தது.

இப்பாடலை முடித்தவன் குணசீலரின் சிறுவன் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான். மேலும் குணசீலரால் மந்தன் என ஒதுக்கப்பெற்று பாடம் சொல்லித்தரப்படாத கடைமாணவன் என்று அவன் மேலும் கூறினார். இதன் காரணமாக வாதில் வென்றார் குணசீலர். பிரதிவாதி பயங்கரம் தன் அகந்தை தீர்ந்து வெட்கினார். இதன்பின் முருகனடி பணிந்துச் சுவர்க்கம் புகுந்தார் குணசீலர்

சிதம்பரதேவ நாயனார்

சிதம்பரதேவ நாயனார் சிறந்த பக்தியாளர். இவர் ஒரு முறை நிட்டையில் இருக்கும்போது முருகப்பெருமான் காட்சி தராமல் மயிலேறிச் சென்றுவிடும் காட்சியைப் பெறுகிறார். இதற்கு யாது காரணம் என்று தன் குருவிடம் கேட்க அவர் மதுரைக்குச் சென்று மீனாட்சி பதம் பணிந்தால் நிட்டை கைகூடும் என்றார்.

மதுரை வந்து மாதவம் இருந்தும் நிட்டை கைகூடவில்லை. நோய் இவரைத் தாக்க கலிவெண்பா பாடினார். இதன் காரணமாக பெருமாட்டி தோன்றி வடதிசையில் முருகன் சுயம்புவாகத் தோன்றியுள்ளான். அவ்விடம் சென்று கோயில் எழுப்புக என்றார்.

இவரும் இடம்தேடி அலைந்தார். விருத்தாசலத்தில் இருந்த குமார வேத தேசிகரைச் சந்தித்தார். அவருடன் உறைந்து ஞானத் தெளிவு பெற்றார். பின் கிளியனூர் தலம் சென்றார். அங்கு அம்மை “திருப்போரூர் செல்” என்றார். அவ்வாறு அவரும் திருப்போரூரில் பனந்தோப்பு ஒன்றை அடைந்தார்.

“அங்கொருசார் இளநுங்கீன்று

தழைந்த ஒரு பெண்பனைக் கீழ்ச் சுயம்புவாய் முளைத்தெழுந்தனித்திலங்கும்

குழந்தைவேல் அமலனையிங்கிதந்துனாம் புயமலர்கள் குளிரக்கண்டார்”[26]

என்ற நிலையில் முருகனைக் கண்டெழுந்தார். ஆலயம் சமைக்க முதலில் விநாயகர் கோயில் கட்ட முனைந்தார். கட்டடம் கட்டத் தொடங்கிய மூன்றாம் நாளில் கள்வர் சிலர் பொருள் பல பெற்றதால் கோயில் கட்டுகிறார் என்று எண்ணி அவரிடம் உள்ள பொருளை அபகரிக்க வந்தனர். இவரிடம் பொருள் கேட்டுத் துன்புறுத்தினர். அந்நேரத்தில் வந்தவர்களின் கண்கள் ஒளியிழந்தன. கள்வர்கள் உடனே சிதம்பர சுவாமிகளைச் சரணடைந்து தங்கள் தவறை ஒப்புக்கொண்டனர். சிதம்பர சுவாமிகள் கள்வரை இனி ஐம்பாதகச் செயல் செய்யமாட்டோம் என உறுதி கொடுத்தால் நன்மை கிட்டும் என்று சொல்ல அவர்களும் உறுதி தந்தனர். மேலும் இதுவரை கொள்ளையடித்த பொருளைக் கோவில் கட்டத் தருவதாகவும் ஒப்புக்கொண்டனர். இதன் காரணமாக இழந்த கண்ணொளி மீண்டும் கிடைக்கப்பெற்று கண்கள் தெரியப்பெற்றனர்.

கள்வர் பொருள் தந்துத் திருந்தினர். இதன்பின் ஒருநாள் இவர் குளித்து முடித்துக் கோயில் வரும்பொழுதில் துறவி வடிவில் பெருமான் வருவதைக்கண்டார். அன்னை மீனாட்சி அருளால் கோயில் கட்டத் தேடப்பட்ட இடம் இது என்பதையும் இது கொண்டு உறுதி செய்தார். மேலும் கந்தன் காட்சி கண்டோம் என்றுக் களிப்புற்றார்.

கண்ணுவப்பேட்டில் வாழ்ந்த ஒரு குயவர் கண்ணிழந்துத் தவித்தார். அவர் திருப்போரூர் வருகை தந்து சிதம்பர சுவாமிகளிடம் ஆசிபெற்று கண்ணொளி பெற்றார். இதுபோன்று முடவன் ஒருவன் கால் நலம்பெற்றான். இதன் காரணமாக மக்கள் திருப்பணிக்கு உதவினர். கோயில் வளர்ந்தது.

கிளியனூர் பெருமாட்டி, பாளையத்தார் செட்டியார் போன்றோர் உதவ கோயில் முழுமைபட்டது. அக்கோயிலுக்கு உலகு போற்ற கும்பாபிடேகம் கண்டார் சிதம்பர் சுவாமிகள்.

கற்கோயிலோடு சொற்கோயிலும் கட்டினார் சிதம்பரசுவாமிகள். திருப்போரூர் முருகன்மீது ஒரு பிள்ளைத்தமிழ், அலங்காரம், மாலை, தாலட்டு, திருப்பள்ளி எழுச்சி, பதிகங்கள், எச்சரிக்கை, விருத்தம், குயிற்பத்து, கிளிப்பத்து, கட்டளைக்கலிப்பா, கொச்சகக் கலிப்பா, திருவூஞ்சல், கட்டளை கலித்துறை போன்றன பாடினார். இவற்றைத் திருப்போரூர் சந்நிதி முறை என்று பின்னாளில் தொகுத்தனர்.

"நம்பெருமான் இதுகாறுங் குமுதவாயால்
நவின்ற திருத்தமிழ்மாலை அனைத்துஞ் சேர்த்துச்
செம்பொன்நிகர் ஏட்டில்வரைந்ததற்கு நாமம்
திருப்போரூர்ச் சந்திதி மாமுறை என்றிட்டு
தம்பெருமான் கழல் பரவி இனிதுறுங்கால்
தயானைய கிளியனூர் எம்பிராட்டி
எம்பெருமான் கமலபதம் பரவி மற்றோர்
ஏகாலியம்மையை ஆண்டருளமாறு"[27]

என்று இவரின் நூற்தொகுப்பு பற்றி உரைக்கிறார் சொக்கலிங்கர்.

கோயிலும் வளர்ந்தது, சந்நிதி முறையும் வளர்ந்தது. அருளும் பெருகியது. சிதம்பரரின் ஆற்றலும் பெருகியது. நிறைவாழ்வினை அடைந்து முருகபிரான் அருள் கலந்தார் சிதம்பர சுவாமிகள்.

வென்றிமாலை நாயனார்

திருச்செந்தூரில் வென்றிமாலை நாயனார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு இளம் வயதில் கல்வி வரவில்லை என்பதனால் அவரை மடைப்பள்ளியில் சமைக்கும் தொழில் செய்யவைத்தனர். நாளும் முருகனுக்குத் தவறாமல் நெய்வேத்தியம் அளிக்கும் பணி அவருக்கு வழங்கப்பெற்றது. அவர் ஒருநாள் முருகப்பெருமானுக்குக் காலம் தாழ்த்தி நெய்வேத்தியம் கொண்டு சென்றார். இதன் காரணமாக கோயில் பணியாளர்கள் இவரின் கடமை தவறியது கருதி அடித்தனர். இது பொறுக்கமுடியாமல் இவர் கடலில் விழுந்து மாய எண்ணினார்.

கடலும் இவரை ஏற்கவில்லை. கடல் கூட என்னை ஏற்கவில்லையே எனக் இவர் கலங்கினார். அந்நேரத்தில் திருச்செந்தூர் புராணம் பாடும்படி இவருக்கு அசரிரீயாக சொல் எழுந்தது. இதனை இவரும் ஏற்று அவ்வூரில் பாடல் எழுத வல்லமை பெற்றவரான கிருஷ்ண சாஸ்திரிடம் சென்றார். அங்குச் சென்றதும் தான் தல புராணம் பாடவேண்டும் என்று சொல்லக் கிருஷ்ண சாஸ்திரி இவருக்கே காத்திருந்தது போல வடமொழியில் இருந்ததை இவருக்குத் தமிழில் எடுத்துரைத்தார். இதனை இவர் உள்வாங்கி நல்ல தமிழ்க்கவிதையில் தலபுராணம் பாடினார். இதனை அரங்கேற்ற திருச்செந்தூர் கோயில் அலுவலர்களிடம் கேட்டபோது மடைப்பள்ளி மடையன் புராணம் பாடுவதா என்று கேலி செய்தனர். இதன் காரணமாக மிக வெறுத்து இவர் ஓலைகளைக் கடலில் இட்டார். கடலில் பட்டவை இலங்கை நாடு அடைந்தன. அங்கு இதனைக் கண்ணுற்றோர் அரிய புராணம் இது என்று புகழ்ந்தனர். இலங்கையில் கொடிய நோய் பரவியபோதும் திருச்செந்தூர் தலபுராணம் இருந்த வீட்டில் அந்நோய் எதுவும் செய்யவில்லையாம். இவ்வோலைச்சுவடிகளையே கந்தனாக அவர்கள் வழிபட்டனர்.

"சிந்து நன்னக ரத்திலே பிறக்கினுஞ் சிறந்த

சிந்து நன்னக ரத்தையே தெரிசனஞ் செயினும்

சிந்து நன்னக ரத்திலே யிறக்கினுந் தெய்வச்

சிந்து நன்னக ரெண்ணினு முத்திசேர்ந் திருப்பார்"[2]

நூலே கந்தனாக வலுப்பெற்ற புராணம் இதுவாகும். இதன்பின் இறையடி சேர்ந்தார் வென்றிமாலை நாயனார்.

பகழிக் கூத்தர்

தென்பாண்டி நாட்டில், சதுர் வேத மங்கலத்தில் வாழ்ந்தவர் பகழிக் கூத்தர். இவர் வைணவர். இவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. இது தீரவே இல்லை. இதன் காரணமாக முருகனே தெய்வம் எக்காலத்தும் இதில் மாறேன் என்று இவர் ஓதி திருநீறு இட்டார். அவரை வாட்டிய வயிற்றுவலி தீர்ந்தது. இதன் காரணமாக முருகப்பெருமான் மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாட எண்ணினார் அவர்.

அவ்வாறு பாடி அதனைத் திருச்செந்தூரில் அரங்கேற்ற எண்ணினார். இதற்காக மலர்க்காவடி செய்து அதில் இவ்வேடுகளை வைத்துச் சுமந்து வந்து கோயிலில் அரங்கேற்றினார். அரங்கேற்றம் சிறப்பாக இருந்தது. ஆனால் எவ்வித சன்மானமும் அவருக்குத் தரப்படவில்லை. அவர் அரங்கேற்றியபின் ஆலயச்சுற்றிலே உறங்கினார்.

---

[2] வென்றிமாலைக கவிராயர், திருச்செந்தூர் தலபுராணம. பாடல்எண். 93

அப்போது கந்தவேள் மார்பில் இருந்த பதக்கம் ஒன்று காணாமல் போனதாகப் பலரும் தேடினர். அப்போது முருகப்பெருமான் அணிந்திருந்த பதக்கம் இவர் மார்பில் விழுந்து கிடந்தது. இவர் விழிக்கும் வரை அலுவர்கள் காத்திருந்துப் பின் அவரிடம் அப்பதக்கம் பற்றிச் சொல்லிப் பெற்றனர். இருப்பினும் தாங்கள் நூல் பாடியவருக்கு எவ்வித மரியாதையும் செய்யாததை எண்ணி வருந்தி அவருக்குப் பல சிறப்புகள் செய்தனர்.

பின்னர் இவர் பல தலங்களுக்குச் சென்று முருகனடி சேர்ந்தார்.

'அமிழ்தினும் மிக இனிதென் றறிஞு ரீட்டம்

அறைந்தேத்தும் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்

தமிழ் திருவாய் மலர்ந்தருளிக் குகதுறக்கம் சார்ந்து"[28]

என்று இவரின் சிறப்பினைப் பாடுகிறார் சொக்கலிங்கர்.

<u>கவிராஜ பண்டாரத்தடிகள் நாயனார்</u>

செங்கோட்டை என்ற பதியில் வாழ்ந்தவர் கவிராஜபண்டிதர். இவர் பண்பை நகர் சார்ந்த முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடியவர். முருகனையே எண்ணி வாழ்ந்தவர்.

'எவராலும் தொழத்தக்க தெய்வ மாய இளங்குமரன்

மேவு திருத்தலங்கள் தோறும்

தவறாமல் அடைந்து தொழுதினிதோர் பிள்ளைத்தமிழ்

திருவாய் மலர்ந்துகுக துறக்கம் புக்க கவிராஜபண்டாரத்தடிகள்”[29]

என்ற நிலையில் கவிராஜ பண்டிதர் சேய்த்தொண்டராக ஆனார்.

<u>கச்சியப்ப நாயனார்</u>

சோழ நாட்டில் திருவையாற்றில் பிறந்தவர் கச்சியப்பர். இவர் ஞானம் பெற ஏங்கினார். அப்போது காஞ்சிபுரத்தில் சிவஞான முனிவர் என்பவர் இருப்பதாக அறிந்து அவரின்பால் சென்று, ஞானம் பெற விழைந்தார். அவரிடம் இணைந்து இலக்கணம், இலக்கியம்., தத்துவம் ஆகியவற்றில் அறிவுபெற்று சந்நியாசமும் பெற்றார்.

இதன்பின் பல்வேறு இடங்களுக்குச் சென்று கந்தவேளைத் தரிசித்தார். திருவானைக்கா சென்று திருவானைக்கா மான்மியம் பாடினார். குற்றாலம், மதுரை, போன்ற பல தலங்கள் சென்று அவர் முருகவேளைப் பணிந்தார். திருத்தணிகையில் சில காலம் தங்கியிருந்தார். அப்போது சிலர் சீவக சிந்தாமணி நல்ல இலக்கியம் என்று படித்துக்கொண்டி:ருந்தனர். அதனை மாற்ற தணிகைமான்மியம் என்ற நூலை இவர் பாடினார். பின்பு திருக்காஞ்சி மான்மியம் பாடினார். பஞ்சாக்கர அந்தாதி பாடினார். வாழ்வின் நிறைவில் இவர் இறையோடு கலந்தார்.

<u>மாதவ சுப்பிரமணிய நாயனார்</u>

சோழநாட்டைச் சார்ந்த காட்டுமன்னார்குடி என்ற ஊரைச் சார்ந்தவர் மாதவ சுப்பிரமணிய நாயனார். இவர் ஆடுதுறையில் இருந்த அம்பலவாணரிடம் மாணவராக விளங்கி இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம் போன்றனவற்றைக் கற்றார்.

பின்பு காஞ்சி சென்று பல நூல்களை எழுதினார். கமலைக்கோவை, காஞ்சி சந்திதிமுறை, பஞ்சரத்னம், பதிற்றுப்பத்தந்தாதி போன்றனவற்றை அவர் பாடினார்.

இவரின் அருள் தன்மை உணர்ந்து தொழுநோயாளன் ஒருவர் இவரிடம் தன் நோய் போக்க வேண்ட இவர் அதற்காகத் திருவிருதம் ஒன்று பாடினார். திருநீறு சாத்தி அவனின் தொழுநோயைப் போக்கினார். இவர் கண்ணொளி இழந்த ஒருவனைக் கண்ணொளி பெறவைத்தார். இவரின் பெருமையை

"குருவருள் பெற் றுலகுவப்பப் பலநூல் சாற்றிக்

குகனருளால் ஓர் அன்பர் தொழுநோய் போக்கி

இருவிழிஇல் அந்தகற்கம் பகமளித்திவ்

இரு ஞாலம் தொழ வாழ்ந்து குகதுறக்கம்

மருவுறு சுப்பிரமணியர் "[30]

என்று இவர் பெருமையைப் பாடுகிறார் சொக்கலிங்கர்.

சிதம்பர முனிவ நாயனார்

காஞ்சியில் பிறந்தவர் சிதம்பரமுனிவர் ஆவார். இவருக்கு நோய் வந்து துன்பப்பட்டபோது, முருகனையே முழுவதும் நம்பினார். இவரின் நம்பிக்கை நிறைவுறுமாறு முருகப் பெருமான் தோன்றி இவர் உடலின் நோய்ப் பகுதிகளை நீவிவிட்டு அவரை நலம் பெறச் செய்தார்.

‘கந்தக்கடவுள் உருக்கரப்பக் காயும் கொடுநோய் தீரப் பெற்

நெற்தம் அடிகள் திருமேனி எழலோடிலங்கக் கண்டுதம்முன்

வந்து வினைதீர்த்தாட்கொண்ட வரதன் அருளை மிகவியந்து

சந்தமதுரங் செறிபிள்ளைத் தமிழொன் றறைவான் உளங்கொண்டு”[31]

என்று இவரின் உருவ அழகையும், பாடல்புனைதிறனையும் ஒருசேரப் பாடுகிறார் சொக்கலிங்கனார். இவர் கந்தனை எண்ணியே தன் நிறைநாளை மகிழ்வுடன் கழித்தார்.

<u>கந்தப்ப நாயனார்</u>

திருத்தணிகையில் பிறந்தவர் கந்தப்ப நாயனார். இவரின் மனைவி தெய்வானை. இவர் தணிகாசல புராணத்தைப் பாடிய பெருமைக்கு உரியவர். இந்நூல் அரங்கேறியபோது அனைவரும் மகிழ்ந்து கந்தனருள் பெற்றனர். மேலும் இவர் தணிகை ஆற்றுப்படை ஒன்றும் பாடினார்.

இவர் வள்ளி என்ற மற்றொரு பெண்ணையும் மணந்து இல்லறம் நடத்தினார். இருவருக்கும் குழந்தை இன்மையால் முருகனை எண்ணிக் குழந்தைப் பேற்றுக்காகக் காத்திருந்தனர். இருவருக்கும் கரு வாய்த்து ஆண்குழந்தைகள் பிறந்தன. பிறந்த குழந்தைகளுக்கு திருமால் பெயர்கள்தான் வைக்கப்படவேண்டும் என்று மனைவியர் சொல்ல இவரோ கந்தன் பெயர் வைக்கப்படவேண்டும் என விரும்ப இரண்டையும் ஏற்கும் நிலையில் விசாகப்பெருமாள், சரவணப்பெருமாள் என்ற பெயர்களை இட்டனர். இவ்விரு மக்களுக்கும் தானே தமிழையும் முருக அருளையும் கற்றுத்தந்தார்.

திருத்தணிகை சந்நிதி முறையைப் பாடினார். வாழ்வின் நிறைவில் முருகநாமம் சொல்லிய வண்ணமே சுவர்க்கம் புகுந்தார்.

<u>பாலசுப்பிரமணிய நாயனார்</u>

முருகத் தலமான பழனியில் பெரியான் கவிராயர் என்பவரின் மகனாகப் பாலசுப்பிரமணிய நாயனார் பிறந்தார். இவர் பிறந்தவுடன் கண், காது ஆகியன இயல்பான திறங்களுடன் அமையவில்லை. எனவே இவரின் பெற்றோர் இவரை முருக சந்நிதியில் இட்டனர். முருகப்பெருமான் இவரின் குறைகளை நீக்கி அருளினான்

“ வீற்றருளித் தவமுயனற்றார் முயல்வ தோர்ந்த

விமலனொரு சங்கமன்போல் எழுந்து காதும்

தோற்றமுமற் றல்லலுறும் சிறுவர் தம்முன்

தோன்றிஅவருடல் வருடிப் பூங்கரத்தில்

நாற்றமிகு தீபமலர் ஒன்றித்துன் நயனத்தும்

செவிப்புலத்தும் இனிதொத்தென்று

சாற்றிஅருந் தவமுயல்வார் தமக்கும் சாற்றிச்

சங்கமனாய் எழுந்த பெருங்கருணைமூர்த்தி”[32]

என்று இக்குழந்தை அருள் பெற்ற திறம் சேய்த்தொண்டர் புராணத்தில் பாடப்பெறுகிறது.

தந்தையிடத்தும் தக்கோரிடத்தும் தமிழ், வடமொழி, வாது புரிதல் போன்ற கல்விகளை இவர் கற்றார். பலரை வாதில் வென்று முருக உண்மையை இவர் நிறுத்தினார். பழனி மான்மியம் என்பதை இவர் பாடினார். பிள்ளை லோகாசாரியரை இவர் வாதில் வென்றார். கௌமார நெறிப்படி நின்றார். உலகையும் நிற்க வைத்த பெருமை அவரையே சாரும்.

<u>சின்னப்ப நாயனார்</u>

பாலசமுத்திரம் என்ற ஊரில் வாழ்ந்த கோவிசய கோபலன் என்பருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சின்னப்பர் என்று பெயரிட்டு வளர்த்தனர். இவர் நாள்தோறும் பழனி முருகன் பாதத்தை நீங்காது மனதில் இருத்தி வணங்கி வாழ்ந்து வந்தார். பிள்ளைத்தமிழ் பாடி அம்முருகனைத் துதித்தார்.

“நற்புகழ் கொண்டெஞ் ஞான்றும் இழுக்கின்ற நறுந்தொண்டாற்றிப்

பற்பல வளமியங்கும் பழநியங் குன்ற மேவும்

சிற்பர முருகன் பிள்ளைத் தமிழ் என்னும் தெய்வப்பாடல்

முப்பது மொழிந்தம் மூர்த்தி முளரியங் கழல் பராவி ”[33]

என்று இவர் பிள்ளைத்தமிழ் பாடிய சிறப்பைச் சொக்கலிங்கனார் பாடியுள்ளார். இதன்பின் பல தலங்கள் வணங்கி முருகப்பெருமான் அருள் எண்ணித் தன்வாழ்நாளின் நிறைவை எய்தினார்.

சாமிநாத நாயனார்

திருநெல்வேலியில் பிறந்தவர் சாமிநாதர். இவர் சீர்காழியில் வாழ்ந்த அம்பலவாணர் என்ற குருவிடம் பணிந்து அவரின் வழி நடந்து வாழ்ந்தார். இவரின் பணிவைக் கண்ட மயிலேறும் பெருமாள் இவரை அருகழைத்து இவரின் பணிகளைப் பாராட்டினார். மேலும் திருநெல்வேலிக்கு வருக என்றழைத்தார். அங்கு இவரை ஈசான தேசிகாராக்கி மக்களை நல்வழிப்படுத்தக் கேட்டுக்கொண்டார். இவர் சிந்தாந்தம், தமிழ் இலக்கணம் கற்றார். இலக்கணக் கொத்து எனும் நூல் எழுதினார். தசகாரியம் என்பதும் இவர் படைத்த நூலாகும்.

இவர் திருச்செந்தூர் சென்று முருகப்பெருமானைத் துதித்துத் திருச்செந்தில் கலம்பகம் பாடினார். தன் வாழ்வின் நிறைவு நாள் வரை முருகப்பெருமான் அருளால் நலம் பெற்றுச் சுவர்க்கம் புகுந்தார்.

குகனேரியப்பர் நாயனார்

தொண்டை வளநாட்டில் காஞ்சி நகர்தன்னில் சிவாநந்த முதலியார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவரின் துணைவியார் அமுதாம்பிகை ஆவார். நெடுநாள் பிள்ளையில்லாதிருந்து இவர்கள் பிள்ளை பெற்றனர். அவருக்குக் குகனேரியப்பர் என்று பெயர் வைத்தனர். சிவாநந்த முதலியார் இக்குழந்தைக்குக் கந்தபுராணத்தைத் தக்க மதிப்போடு கற்றுத் தந்தார். மேலும் குருவின்பால் சங்க இலக்கியம், சைவத் திருமுறை, பதினெண் புராணம் போன்றனவற்றைக் கற்றார்.

இவருக்குள் கந்தபுராணத்தில் உபதேச காண்டம் எழுதப்படாமல் உள்ளது என்ற எண்ணம் இருந்தது. இதனைக் கயிறு சார்த்திப் பார்த்து அப்பகுதியை இவர் எழுதத் தலைப்பட்டார். அவ்வாறு எழுதிக் கந்தக்கடவுளுக்கு விழா எடுக்க

எண்ணியபோது பெருமழை வருவதற்கான அறிகுறி தோன்றியது. இவ்விழா நடக்க மழைவராது தடுக்க முருகக்கடவுளை வேண்டினார். மழை வருதலும் நின்றது. விழா சிறந்தது.

> "கற்றார் கருதும் உபதேச காண்டந்திருவாய்
>
> மலர்ந்தருளி மற்றோர் கவியால் மழை தடுத்த
>
> மனித மணிகோனேரியப்பர் " [34]

என்று இவர் பெருமை பாடப்படுகிறது. இதன்பின் அவர் கந்தனடி சேர்ந்தார்.

<u>ஞானவரோதய நாயனார்</u>

ஞானவரோதய நாயனார் சோழநாட்டைச் சார்ந்தவர். வயலூர் அவரின் ஊர் ஆகும். இவர் சிறுவயதில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் பிரம்படிக்குப் பயந்து முருகப்பெருமான் கோயிலில் புகுந்து கொள்வார். முருகனிடம் இதிலிருந்து மீள வழி கேட்பார். முருகனும் "கவலற்க" என்று ஒரு நாள் இச்சிறுவனுக்கு அபயம் தந்தார். மேலும் உபதேசம் மொழிந்தார்.

இதனை இவர் உபதேச காண்டமாக எழுதத் தொடங்கினார்.. எழுதியவற்றை கந்தன் முன் வைக்க அதில் உள்ள குற்றமெலாம் களைந்து நல்லதாக ஆக்கி முருகன் தரும் முறைமையை உணடாக்கினான். இவ்வாறு எழுதியவற்றை அரங்கேற்றி இவர் மகிழ்ந்தார். இதனை எண்ணி எண்ணி மகிழ்ந்து முருகனடி சேர்ந்தார்.

இராமலிங்க நாயனார்

சோழநாட்டில் மருதூரில் சின்னம்மையாருக்கும் இராமையா பிள்ளையாருக்கும் பிறந்தவர். இவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்து அவை இறந்தன. இதனால் கவலை அடைந்த இவர்கள் குழந்தைவரம் வேண்டி நின்றனர். அப்போது ஒரு தவத்தார் இவரின் இல்லம் தேடிவந்து உணவருந்தினார். அவர் எம்போல ஒரு குழந்தை உங்களுக்கு வாய்க்கும் என்றார்.

அவர் சொன்ன வாக்கு பலித்தது. இரு ஆண்குழந்தைகள் ஒரு பெண் குழந்தை பிறந்தன. குழந்தைகள் பிறந்த சிலநாள்களில் இராமையா இறந்துபட பொன்னேரிக்குக் குடிபெயர்ந்தது இக்குடும்பம். மூத்த ஆண்குழந்தை சபாபதியார் ஒரு கல்விக் கூடத்தில் ஆசிரியராக அமர்ந்தார். இளம்பிள்ளை இராமலிங்கர் உலகப் பற்று துறந்து காவியும் உருத்திராட்சமும் கந்தவேள்மேல் நினைப்பும் கொண்டிருந்தார்.

இவருக்கு மணம் முடிக்க எண்ணி தமக்கையார் மகள் தனுக்கோடி அம்மையை மணம் செய்து வைத்தனர். இவர் மணம் செய்து கொண்டாலும் இல்லற இன்பத்தில் ஈடுபடவில்லை. மாறாக இரவு முழுவதும் மோனத் தவத்தில் முருகனை எண்ணினார்.

சிலநாள்களில் இவரின் தாயார் இறக்க இவர் தல யாத்திரை மேற்கொண்டார். தில்லை சென்று அடைந்திருக்கும் கூத்தனைக் கண்டு அவனை வடலூரில் எழுந்தருள்விக்க மனம் கொண்டார். சத்தியஞானசபையைத் தோற்றுவித்தார். அருட்பனுவல்கள் பல பாடினார். சமரச சுத்த சன்மார்க்கம் ஏற்படுத்தி கொல்லாமையை உலகம் முழுவதும் பரவ அவர் வகை செய்தார். பின் கருங்குழி, மேட்டுக்குப்பம் அடைந்து வாழ்ந்தார்.

தான் சித்தி அடையும் காலம் அறிந்து அவரே சித்தியடைந்தார்.

"புடைகெழுதல் அன்பர்கள்பால் இனியுமது விழியிற்
புலப்படாதுலவிடுவோம் எனக் குறிப்பால் உணர்த்தி
நடைபெறுமிக் கலி நாய்பத் தொன்பது நூற் றெழுபான்
நாலதன்மேல் நாலாவதாண்டு மதி மகரத்
திடைதிகழ்நாள் ஒருபத்தொன்பது புநர்பூசத்தில்
இந்திரிய வாயல்கள் தான் இட்டிவாழ்வதற்கு
விடையருளி விளங்கும் அருட்பெருஞ்சோதி அதனில்
வேற்றப்புப் கின்பவிளையாடல் புரிந்தனரால்"[35]

என்று இவரின் சரிதத்தைச் சேய்த்தொண்டர் புராணம் அறிவிக்கின்றது.

கவிகுஞ்சர நாயனார்

பெருங்கரை என்ற இடத்தில் வாழ்ந்தவர் சுப்பிரமணியர். இவருக்குப் பல நாள்கள் குழுந்தை இல்லாமல் இருந்துக் குழந்தைப் பேறு கிடைத்தது. அக்குழந்தைக்குக் கவிகுஞ்சரபாரதி என்னும் பெயர் வைத்தார்.

இக்குழந்தை இசையறிவு, கல்வியறிவு பெற்று வளர்ந்தது. இக்குழந்தை வளர்ந்துத் தமிழ்ப்புலவராக விளங்கியது. இந்நிலையில் கவி குஞ்சரனார் என்று அவர் உலகினரால் அழைக்கப்பெற்றார். இவர் கந்தபுராணத்தைக் கீர்த்தனை

வடிவில் படைத்தளித்தார். மேலும் இதனை நாள்தோறும் கீர்த்தனமாக இவர் பாடிப் பரவினார். இசைத்தமிழுக்கு இவர் இதன்வழி செய்த தொண்டு அளப்பரியது.

பதிவேந்தருளி ஆதரித்துப் பரவும் பெருமை பெற்று தினம்

கதிர்வேல் முருகன் கழல்பரவிக் கனிந்துள்ளுருகி நறுந்தமிழில்

மதுரஞ் செறிபல் கீர்த்தனம் வாய்மலர்ந்து வணங்கும் தொண்டாற்றிப்

புதினம் செறிகீர்த்தனத் த்மழில் பொறப்பார் கந்தபுராணத்தை”[36]

என்று இவரின் தொண்டைச் சிறப்பிக்கிறது சேய்த்தொண்டர்புராணம்.

மாம்பழக் கவிச்சிங்க நாயனார்

பழனியில் பிறந்தவர் மாம்பழக் கவிச்சிங்கர். இவர் கண்ணொளி இலாது பிறந்தார். இதனை இவர் தீர்க்கப் பழனி முருகனிடம் வேண்ட அவர் புறக்கண் ஒளியில்லை, அகக்கண்ணில் ஒளிரும் என்று கனவில் உரைத்தார்.

இக்குழந்தை கல்வி கற்றது. வாதிடும் திறமை பெற்றது. கவி பாடும் திறம்பெற்றது. இதன் காரணமாக பழனி முருகன் சொன்ன சொல் தவறவில்லை என்று பெற்றோர் மகிழ்ந்தனர்.

நாற்கவிச்சிங்கம் என்று இவர் போற்றப்பெற்றார். மேலும் வேளுக்குறிச்சி ஆதீனம் சென்று அங்கு கௌமார நெறி பரவி சந்திரவிலாச சதகம் பாடினார்.

கௌமார நெறி பரப்பி நாளும் வாழ்ந்து நிறைநிலை பெற்றார் மாம்பழக் கவிச்சிங்கர்.

வண்ணச் சரபம் தண்டபாணி நாயனார்

பாண்டி நாட்டில் திருநெல்வேலியில் செந்தில் நாயகம் பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் பெண்கள் மூவரைத் திருமணம் செய்த நிலையிலும் மகப்பேறு வாய்க்கவில்லை. இதன் காணரமாக நான்காவதாக பேச்சிமுத்தம்மை என்பாரை மணந்தார். இவர் கருக்கொண்டார். பிள்ளை பிறந்தது. பிறந்த பிள்ளைக்குச் சங்கரலிங்கம் என்ற பெயர் சூட்டி வளர்த்தனர். நல்ல தமிழ்க்கவி பாடும் ஆற்றல் இக்குழந்தைக்கு வாய்த்தது.

சங்கரலிங்கம், முருகவேள் மீதிருந்த பற்றின் காரணமாக தன் வடிவை முருகப் பெருமான் போன்றே அமைத்துக்கொண்டார்.

‘மிக மகிழ்வோடுபெற் றென்றும் வேல்வழிபாடும் இன்பக்

குகவழிபர்டம் ஆற்றிக் கோவணங் குறடு பொற்பார்

சிகை திருநீற்றுப் பொற்பை செபமணி மாலை மற்றும்

புகலணி பலவவும் பூண்டு பொலியுமா தவசிற் கோலம்’[37]

என்றவாறு இவர் கோலம் கொண்டார். இவர் கைகளில் தண்டு கமண்டலம் கொண்டே இருப்பார். இதன் காரணமாக இவரின் பெயர் தண்டபாணி சுவாமிகள் என ஆனது.

பழனியில் மடம் அமைத்து தண்டபாணி சுவாமிகள் தங்கியிருந்தார். தில்லை திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம் ஆகியன பாடினார். அருணகிரிக்கு அருளியதுபோல தனக்கும் அருளவேண்டும் என்று தண்டபாணி சுவாமிகள் வேண்டித்

தன் உயிரைப் பணயம் வைத்தார். முருகப் பெருமானும் அருள் புரிந்தார். முருகப்பெருமான் சோடச நூல் ஒன்று எழுதுக எனச் சொல்ல இவரும் எழுதினார்.

மேலும் திருச்செந்தில் கோவை படைத்து அதனை திருச்செந்தூரில் அரங்கேற்றி மேலும் பெருமை பெற்றார் தண்டபாணி சுவாமிகள். இதன்பிறகு கௌமார ஆதீனம் நிறுவி அவர் முருகக் கொள்கை பரப்பினார். நிறைவாய் முருகப் பெருமான் நீழலடைந்தார்.

குமரகுருதாச நாயனார்

பாண்டிநாட்டில் உள்ள பாம்பன் என்ற ஊரில் பிறந்தவர் குமரகுருதாசர். இவர் முருகப் பெருமான் மீது பக்திப் பெருக்கு கொண்டவர். கந்தர்சஷ்டிக் கவசம் நாளும் பாடி அதுபோல மந்திரப்பனுவல்கள் எழுதவேண்டும் என்று எண்ணியவர்.

இவருக்கு இல்லறத்தில் பற்று இல்லையென்றாலும் சேதுமாதவ ஐயரின் வற்புறுத்தல் காரணமாகக் காளியம்மை என்பவரைத் திருமணம் புரிந்து கொண்டார். இவருக்கு இரு ஆண்பிள்ளைகள் ஒரு பெண் குழந்தை பிறந்தது.

முருகனை அடைய இவர் தவம் மேற்கொள்ள முனைந்தார். பிரப்பன்வலசை என்ற இடத்தில் சதுரக்குழி வெட்டி தவமேற்கொண்டார். முருகப்பெருமான். இவரின் தவத்திற்கு மதிப்பளித்து, அவரை வேலால் தொட்டு நீ எண்ணியதை எல்லாம் முடித்து எம்பதம் அடைவாய் என்றார்.

பல தலங்கள் தரிசித்து முருகன் அழகு கண்டார். பழனிக்குச் செல்ல தன் குடும்பத்தாரை அழைத்தார். ஆனால் இறைவன் திருவுளம் பழனிக்கு அவர் வரக்கூடாது என்று சத்தியம் செய்யவைத்துத் தடுத்தது.

இதன்பின் சென்னையில் வசித்தார் சுவாமிகள். அப்போது அவர் பாம்பன் சுவாமிகள் என்று அறியப்பெற்றார். கந்தகோட்டம் சென்றுக் கந்தக்கடவுளை வணங்கினார். திரவலங்கற் திரட்டு என்பதைப் பாடினார்.

சுப்பிரமணிதாசர் என்ற இளைஞனைத் தன் வழிப்படுத்தி அவருக்கு முருகவேளை அடையும் முறை பற்றி அருளினார்.

ஒரு பகலில் இவர் மட்டும் தனித்து உலாவுகையில் இவரின் கால் இடறி முறிந்தது. இதன் காரணமாக மருத்துவமனையில் இவர் சேர்க்கப்பெற்றார். அம்மனையில் சண்முகக் கவசம் பாடியவாறு அன்பர்கள் இருந்தனர். அப்போது இவரின் கால்களை வேல்கள் தாங்கும் காட்சியைக் கண்டனர்.

'பந்தத்தொடும் பாடிக்குகப் பரமன் திருவருளைச்

சிந்தித்தனர் சிந்தித்திடும் திருநாள்களில் ஒருநாள்

வந்தித்தவர் முழந்தாண்மிசை வைவேலிரண்டொன்றாய்ச்

சந்தித்ததென் பொன்றித்துபுண்தழும்பூறிய திதைத்தாம்"[38]

என்று முருகவேல்கள் காத்ததைச் சேய்த் தொண்டர் புராணம் பாடும். பின்னர் கௌமார நெறி நின்று உலகம் உய்ய நல்வழி காட்டிவந்தார். நிறைவாய் முருகபதம் பெற்றார்.

<u>கல்லாட நாயனார்.</u>

தென் பாண்டி நாட்டில் திருப்பரங்குன்றம் எனும் பதியில் கல்லாடர் வாழ்ந்துவந்தார். நாள்தோறும் பூக்கள் கொண்டு முருகனை அர்ச்சிப்பது அவர்

பணியாகும். மேலும் பாண்டியன் வகுத்தத் தமிழ்க்கழகமதில் ஒரு சான்றோராய்க் கல்லாடர் இருந்தார். மேலும் கல்லாடம் என்ற நூலை யாத்தார். கண்ணப்பர் மறம் என்ற நூலையும் அவர் செய்தார். முருகப்பணி ஆற்றி தன்வாழ்நாளின் இறுதியை முருகபதத்தில் கழித்தார்.

<u>கடுவெண் இள எயின நாயனார்</u>

இவர் பரிபாடலில் ஐந்தாம் பாடலை எழுதியவர். அப்பாடல் செவ்வேள் பெருமை போற்றுவது. யான்வேண்டுவது பொன்னும் பொருளும் போகமும் அல்ல. அன்பும் அருளும் என உறுதியாய் மொழிந்தவர் இவர்.

<u>நல்லந்துவ நாயனார்</u>

மதுரை நகரில் கவிமழை பொழியும் அன்பராய் இருந்தவர் நல்லந்துவனார். இவர் சங்கப்புலவர் அவையில் இருந்தார். பரிபாடலில் எட்டாம் பாடலைச் செவ்வேள் பற்றிப் பாடியவர் இவர். எமனை விலக்கும் ஆற்றல் பெற்றவர் முருகப்பெருமான் என்று வழிகாட்டுகிறார். இவர் முருகபிரான் அருள் பெற்றுய்ந்தவர்.

<u>குன்றம்பூத நாயனார்</u>

பரிபாடலில் எட்டாம் பாடலையும், பதினெட்டாம் பாடலையும் பாடியவர் குன்றம்பூதனார். இவர் திருப்பரங்குன்றம் சென்று முருகனை வழிபட்டு நன்னிலை பெற்றவர்

<u>நல்லழிசியார்</u>

இவரும் பரிபாடலில் முருகவேள் பற்றிய பாடல் எழுதியவர். பதினேழாம் பாடல் இவர் பாடியது. இவர் முருகனின் வீரதீரச் செயலைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

கேசவ நாயனார்

இவர் பதினான்காம் பாடலை செவ்வேள் குறித்துப் பரிபாடலில் பாடியவர். இவரும் திருப்பரங்குன்றம் தொழுத புலவர் ஆவார்.

நப்பண்ண நாயனார்

இவர் பரிபாடலில் பத்தொன்பதாம் பாடலைப் பாடியவர். இவர் வள்ளி மணம் கொண்ட செய்தியைத் தன் பாடலில் காட்டியுள்ளார்.

நல்லச்சுதநாயனார்

இவர் திருப்பரங்குன்றில் மக்கள் வழிபாடு இயற்றும் முறை பற்றி பரிபாடலில் இருபத் தோராம் பாடலில் பாடியுள்ளார்.

சேறைக் கவிராஜ நாயனார்

சோழநாட்டில் உள்ள சேறை என்னும் ஊரில் கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞராக கவிராஜப்பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் தம்மூர் இளைஞர்களுக்கு கல்வி ஓதி வந்தார். அச்சமயத்தில் ஒரு மாணவர் பாம்பால் கடிபட விஷம் தலைக்கேறியது. இதனால் மருண்ட மாணவர்கள் செய்வதறியாது திகைத்தனர். இவர் விஷம் ஏறியது போலவே இறங்கவும் முருகன் ஆணை துணை செய்யும் என்று கவி ஓதினார்.

“ஆறுமுகன் ஆணை அவனடியார் தம்மாணை

ஏறு மயிலாணை என்னாணை – வீறுபுகழ்

தேறு கவிராச ராசன் திருவாணை

ஏறியவாறே இறங்கு என்”[39]

எனப்பாட மாணவர்க்கு ஏறிய விஷம் இறங்கியது. இதனால் கந்தன் மீது மேலும் களிப்புற்று ஆர்வம் எய்திய இப்புலவர் சேறை நகர் உலா பாடினார். இன்னும் பல பதிகள் சென்றார். காளத்திநாதர் உலா பாடினார்.

பிறவாமை தரும் அண்ணாமலை சென்று வண்ணம் பாடினார். இதனை ஏற்று அண்ணாமலை வாழ்பவர்கள் பெரிதும் பாராட்டினர். இவ்வாறு தமிழ் வளர்த்து, செவ்வெள் கருணைத்திறம் பாடி நிறைவாழ்வு பெற்றார்.

<u>சிற்றம்பலநாடிகள் நாயனார்.</u>

முருகனடியார் சிற்றம்பல நாடிகள் திருச்செந்தூர் இறைவன்மீது அதிகப் பற்று கொண்டவர். அவர் மீது அகவலொன்றைப் பாடினார். அவருடன் அவர் மாணவர்களும் எப்போது உடன் இருப்பார்கள். இவர் அவ்வப்போது. அவர்களுக்கு ஆணவம், கன்மம், மாயை பற்றிய விளக்கங்கள் சொல்லி வந்தார்.

ஒருநாள் விருந்து உண்ணும் வேளையில் ஒரு மாணவர் நெய்க்குப் பதில் சமையல்காரர் வேப்ப எண்ணெய் பரிமாறினார் என்றார். இதுவரை வேப்ப எண்ணெய்தான் பரிமாறப்பட்டது. உணவின் சுவை அறியாது பாடத்தின் சுவை அறிந்து மாணவர்கள் கற்றனர். ஆனால் இன்று ஒரு மாணவர் உணவின் சுவை அறிந்தார் என்றால் அவரின் கல்வி ஆர்வம் நிறைவுற்றது என்று பொருள் என்று கொண்டு அவரைச் சிற்றம்பல நாடிகள் மாணவர் குழுவில் இருந்து விலகிட வேண்டினார். அந்த அளவிற்கு மாணவர்கள் கல்வி ஆர்வம் கொள்ள வேண்டும் என்பது தெரியவருகிறது.

மேலும் சிற்றம்பல நாடிகள் சமாதி அடைய விரும்பினார். மாணவர்களும் அவருடன் சமாதி கொள்ள விரும்பினர். சோழ மன்னனிடம் இடம் கேட்டார்

சிற்றம்பல நாடிகள். அனைவருக்கும் இடம் ஒதுக்கப்பெற்றது. அனைவரும் சமாதி நிலை பெற்றனர். இச்செய்தி அறிந்து முன்னர் விலக்கப்பட்ட மாணவர் வந்தார். எமைவிட்டு சமாதி அடையலாமா? என்று அழுதார். அவரையும் உளப்படுத்திட சிற்றம்பல நாடிகள் உட்கொண்டு எழுந்து அவரையும் அணைந்தார்.

இவ்வாறு அனைவரும் முத்தி நிலை பேற்றை அடைய உதவியவர் சிற்றம்பல நாடிகள்.

<u>கலிசைச் சேவக நாயனார்</u>

கலிசை என்னும் ஊரில் வாழ்ந்த கலிசைச் சேவகனார் சிறந்த சிவபக்தர். முருக அன்பர்கள் மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். முருகனடியார்களை உபசரித்து, வேண்டுவன நல்கி அவருளம் மகிழ விருந்து வைப்பது அவரின் கடமைகளுள் ஒன்று. முருக பக்தர்களை வரவழைத்துத் தாங்கள் இக்குடிசை வந்தது எம் நற்பேறு என்பார். அவர்கள் விருந்து உண்டு வெற்றிலை இடுதல் வரை காத்திருந்து பின்பு அவர்களுக்குப் பெருமை செய்வது இவரின் வழக்கம்.

இவர் அருணகிரிநாதரின் தோழராகவும் விளங்கியவர். வீரை என்னும் இடத்தில் முருகன் கோயில் கட்டி வழிபட்டவர். இவரின் முருக தொண்டால் நாடும் முருக தொண்டர்களும் நன்மை பெற்றனர்.

<u>சிவஞான தேசிக நாயனார்</u>

சைவம் வளர்க்கும் தருமை ஆதீனத்தின் பத்தாம் பட்ட ஆதீனகர்த்தராக விளங்கியவர் சிவஞான தேசிக நாயனார். இவர் புள்ளிருக்குவேளூர் அடைந்து அங்குள்ள முருகன் மீது பல பாடல்கள் பாடி முருகனருள் பெற்றார்.

வைத்தியநாத தேசிக நாயனார்

திருவாரூரில் பிறந்தவர் வைத்தியநாத தேசிகர். இவர் தருமை ஆதீன பத்தாம் பட்ட ஆதீனகர்த்தருக்குச் சீடர். இவரின் கனவில் முருகப் பெருமான் வந்துதித்துக் "கவிகள் தருக" எனக் கூறினான். கனவில் முருகன் வந்த காட்சியைக் கண்டு இவர் அதிசயித்தார். இந்த அதிசயத்தைக் கவி சந்த விருத்தம் என்பதாக மகிழ்வாகப் பாடினார். இன்னும் பல சிற்றிலக்கியங்கள் எழுதி அவர் முருகனருள் பெற்றார்.

சோமநாத நாயனார்

முனைப்பாடி நாட்டில் புத்தூர் என்ற ஊரில் சோமநாதர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் அருணகிரிநாதரை தம் ஊர் அழைத்துப் போற்றினார். திருப்புகழ் அமுதைப் போற்றினார். முருகநீழல் சார்ந்தார்.

பண்டாரக் கவிராஜ நாயனார்

மேலநகரம் நகரில் வாழ்ந்தவர் பண்டாரக் கவிராஜநாயனார். இவர் திருக்குற்றால மான்மியம் என்பதைப் பாடினார். இவர் நாள்தோறும் முருகப் பெம்மானை வணங்கினார்.

அண்ணாமலை நாயனார்

சென்னிகுளம் என்ற நகரில் முத்து ரெட்டி என்பவர் வாழ்ந்து வந்தார். அவரின் பிள்ளை அண்ணாமலை ரெட்டியார். இவர் விளையாட்டுப் பிள்ளை. இவர் சுட்டித்தனம் பல செய்வார். இதன் காரணமாக வீட்டிற்குள் வரக் கூடாது என்று இல்லத்தார் சொல்ல இவர் கழுகுமலைக்குச் சென்றுவிட்டார். இவர் உண்ணாமல்

மலையேறி பெரும் துன்பப்பட்டார். இரவு வர கோயில் கதவுகளைச் சாத்தி விட்டு அனைவரும் அகன்றனர். இவர் மட்டும் தனித்திருக்க முருகன் காட்சி தந்தான்.

காட்சி தந்த கந்தனிடத்தில் உண்ணச் சோறு, ஓதாமல் உணரும் பேறு, கவிபுனையும் ஆற்றல் இவை தரக் கேட்டார். முருகன் பாலும் பழமும் கொடுத்தான். மழையாய்க் கவி பொழியும் ஆற்றலும் தந்தான். அப்போதே கழுகுமலைக் கந்தன் மீது பாடல் பாடினார். காவடிச் சிந்து ஒன்று பாடினார். அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து என்று அது உலகப் புகழ் பெற்று விளங்குகிறது. நிறைவில் இவர் கந்தனருள் பெற்றார்.

<u>வீரராகவ நாயனார்</u>

தொண்டை வள நாட்டில் களந்தை என்னும் ஊரில் வடுகநாதர் என்பவர் வாழ்ந்தார். அவரின் புதல்வர் வீரராகவர் ஆவார். இவருக்குக் கண்ணொளி இல்லை. இருப்பினும் இவருக்கு முதுகில் எழுதிக் கல்வி கற்பிக்கப்பட்டது. இவர் நல்ல கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்தார். அதனால் அந்தக்கவி வீரராகவர் என்று அழைக்கப்பெற்றார். இவர் கந்தன் மீது பிள்ளைத்தமிழ் பாடினார். இவர் பலருடன் வாதுகள் புரிந்து வென்றார். இவர் இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கும் பயணம் செய்து தன் தமிழ்ப்புலமையை வெளிப்படுத்தினார். நிறைவில் இவர் முருகன் அடி சேர்ந்தார்.

<u>தேவராய நாயனார்</u>

தேவராய சுவாமிகள் பழனி அடைந்து கிரிவலம் சுற்றி வந்து அயர்ந்தார். அப்போது அவர் கனவில் வந்த முருகன் என் திருநீற்றுக்கு பில்லி, சூன்யம்,

பேய்,பிசாசு தொல்லை அகலும். அதனால் அதனை மையப்படுத்தி ஒரு பாடல் பாடு என்றார்.

இவரும் கந்தர்சஷ்டிக் கவசம் என்பதைப் பாடினார். இவரும் இதனைப் பாடி அச்சம் நீங்கினார். மக்களும் இதனைப் பாடி அச்சம் நீங்கினர்.

<u>நிரம்ப அழகிய தேசிக நாயனார்</u>

திருமறைக்காடு என்னும் ஊரில் முருகனடியாரை வணங்கி ஏத்தும் பெருமை கொண்டவர் நிரம்ப அழகிய தேசிகர் ஆவார். இவர் மதுரையில் சொக்கலிங்கரையும், திருப்பரங்குன்ற முருகனையும் கண்டு தரிசித்து ஆனந்தம் எய்தினார். கருணை ஞானதேசிகர் என்பரிடத்தில் தீக்கை பெற்று முறையாய் கந்தனுக்குப் பூசைகள் இயற்றினார்.

பின்னர் திருச்செந்தில் போன்ற தலங்களுக்குச் சென்றார். சேதுபதி அரசர் சேதுபுராணத்தைத் தமிழில் செய்க என வேண்ட மூவாயிரத்து நானூற்று முப்பத்தெட்டு என்ற எண்ணிக்கையில் பாடல்களைப் பாடி சேதுபுராணம் செய்தார். பின்னர் சேது தலத்தில் சிலநாள்கள்வரை தங்கியிருந்தார். தொடர்ந்து முருகப்பணியாற்றிச் சுவர்க்கம் புகுந்தார்.

<u>வேதாந்த சுப்பிரமணிய நாயனார்</u>

தென்மதுரையில் தெய்வசிகாமணி என்ற பெரியார் வாழ்ந்து வந்தார். அவர்க்கு ஒரு மகன் பிறந்தான். அவருக்குச் சுப்பிரமணியன் என்றுப் பெயரிட்டு வளர்த்தார். இவர் நாள்கடமைகள் முடித்து நண்பகல் பொழுதில் முருகஅடியார் ஒருவருக்கேனும் உணவிட்டு உண்பதைத் தன் பழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் மதியானப் பொழுதில் அடியார் ஒருவரும் வந்திலர். அடியார் வரவிற்காக ஏங்கினர்.

காலம் கடந்தபின் அடியார் ஒருவர் வந்தார். வந்தவர் என்னுடன் உடன் வருவதாக இருந்தால் இங்கு உண்பேன் என்றார். அதற்குச் சரி என்று வேதாந்த சுப்பிரமணியனார் அவருக்கு விருந்தளித்துத் தானும் உண்டார். அவருடன் உடன் உறைவதாக ஒத்துக்கொண்டார். உண்டவர் உறங்கினார் உறங்குமுன் ஒரு சுவடிக் கட்டினைத் தந்து இது குன்றக்குடி புராணம். இது வடமொழியில் உள்ளது. இதனைத் தமிழல் தர வல்லார் யார் என்று எண்ணி உம்மை அடைந்தோம். நீவீர் இதனைத் தமிழில் தரவேண்டும், இதற்காகவே என்னுடன் உறையவேண்டும் என்றுக் கட்டளையிட்டேன் என்று உரைத்தார்.

வேதாந்த சுப்பிரமணியரும் நன்று நீங்கள் உறங்குங்கள் என்றார். இவரும் உறங்கச் சிறிது நேரத்தில் வந்தவர் உறங்கிய இடம் வெற்றிடமாக இருந்தது. வந்தவர் கந்தபிரான் என்பதை அறிந்தார். கந்தனைக் கண்ட இவர் முயன்று குன்றக்குடி புராணத்தைப் படைத்தார்.

> “மலரடி களைப் பல் முறை தொழுதுள்ள மகிழ் வொடு கற்பனை சுவைகள்
> நலனணி பொருள்சீர் கருத்தொடு பொருத்தம் நடைதொடை மற்றவும் கவினப்
>
> புலமையினக்கம் புலப்படக் குன்றக்குடிப் புராணம் புகறிறஞர்
>
> பலர் தொழக் குமர நாயகன்திருமுன் பரிந்தரங் கேற்றிப் பல் சிறப்பும்”[40]

என்று இவர் குன்றக்குடி புராணம் வரைந்த நிலையைப் பாடுகிறது சேய்த்தொண்டர் புராணம். பின்பு திருக்கொடுங்குன்றம் மேவி அங்கும் சிலநாள் தங்கி முருகனருள் பெற்றார். நிறைவாழ்வில் இவர் முருகனடி சேர்ந்தார்.

அழகு முத்து நாயனார்

நாகப்பட்டிணத்தில் வாழ்ந்தவர்கள் அம்பலவாணர், காமசுந்தரி என்பார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகளும், ஒரு மகளும் மகவாய்ப் பிறந்தனர். இந்நால்வரில் ஒருவர் அழகு முத்து என்று நாமம் பெற்றார். இவர் வளர்ந்து பருவம் எய்தியபோது இவருக்குத் தொழுநோய் வந்தது. இவர் பதினாறு ஆண்டுகாலம் முருகப் பெருமான் கோயிலில் இருந்து ஒருவேளை பானகம், மோனத்தவம், இரவு முருகப் பிரசாதம் உண்டு விரத வாழ்வு வாழ்ந்தார்.

ஒருநாள் இரவு உணவு கொள்ள இவர் மறந்தார். உடல் வாடினார். எப்போதும் இரவு கந்தப் பிரசாதம் அளிக்கும் அந்தணர் இவரைக் காணவில்லை என்று கருதி உணவிடாது சென்றுவிட்டார். இவர் பசிக் களைப்பால் நேரம் கழித்துவர அந்தணர் போலவே முருகப்பெருமான் வந்து இவருக்கு உணவிட்டான். இவரின் நோய் தீர்ந்தது. புத்துயிர்ப்பு பெற்று இவர் எழுந்தார்.

அதன்பின் பல கோயில்கள் சென்று நாகைப்பட்டிணம் வந்தார். வந்தவர் கோயிலுக்குள் செல்வதை அனைவரும் கண்டனர். அதன்பிறகு அவரைக் காணவில்லை. இவ்வாறு முருகப் பெருமான் சீரடி மேவினார் அழகு முத்து நாயனார்.

நாரத நாயனார்

நாரதர் ஒரு காலத்தில் தன் அன்பர்களுடன் வேள்வி இயற்றினார். அவ்வேள்வியில் வேள்வித்தீ பெரிதாய் எழுந்தது. அதில் ஒரு பூதம் எழுந்து அச்சுறுத்தியது. இதனை அடக்க நாரதர் முருகனை வேண்ட முருகன் நவ வீரர்களுடன் எழுந்து வந்து அதனை அடக்கினார்.

இதன் காரணமாக நாரதர் முருகனடியார் ஆனார். அவர் வள்ளிமலையில் வேடர் குலத்தில் உதித்த வள்ளியை முருகன் மணம் கொள பல வழிகளிலும் உதவினார். முருகனால் ஆட்கொள்ளப்பெற்றார் நாரதர்.

போக நாயனார்

போகர் சீன நாட்டைச் சார்ந்தவர். அவர் அந்நாடு விட்டு ஆவினன்குடி வந்துத் தங்கினார். பற்பல சித்த மருந்துகள் திருவிளையாடல்கள் செய்து ஆவினன் குடியில் இருந்தார். இவரே பழனிமலையில் உள்ள பழனியாண்டவர் உருவை வடித்தார்.

இடும்ப நாயனார்

அசுரர்களுக்கு ஆசிரியராக விளங்கிவயர் இடும்பன். இவர் அசுரர்கள் முருகவேளால் அழிபட்ட காரணத்தினால் அகத்தியரிடம் சென்று தன்னை ஆட்கொள்ளும்படிக் கேட்டார். அதற்கு அவர் இவரை நல்லவராக ஆக்கும் எண்ணத்தில் “கேதாரத்தில் இருந்து இரு மலைகளைப் பெயர்த்து தென்பகுதிக்கு வா” என்றார்.

இவரும் மலைகளைக் கிள்ளிக் காவடியாக்கித் தூக்கி வந்தார். வந்தவர் சற்று அயர்ந்து ஆவினன் குடியில் இரு மலைகளையும் இறக்கி வைத்தார். வைத்த மலைகள் மீண்டும் எடுக்க வரவில்லை.அப்போது மர நிழலில் இருந்த ஒரு சிறுவன் நகைத்தான்.

அவரை இடும்பன் அழிக்கப் பாய்ந்து இடும்பன் தோற்று அழிந்தார். இதன்காரணமாக இடும்பனின் மனைவி இடும்பி அரற்ற முருகப்பெருமான் இடும்பனை உயிர் பெறச்செய்தார். அவன் கொண்டுவந்த மலையைத் தன் மலையாக்கினார்.

பழனி மலை உண்டான வரலாறு இதுவாகும். முருகப் பெருமான் அன்பர்கள் காவடி தூக்கிவர இடும்பனே காரணம்.

<u>பிரபுட தேவ நாயனார்</u>

இவர் அருணகிரியார் காலத்தவர். திருவண்ணாமலையை ஆட்சி செய்தவர். சம்பந்தாண்டனுக்கு எதிராக கந்தக்கடவுளை திருவண்ணாமலை ஆலயத் தூணில் எழுந்தருளிய செய்தியைக் கேட்ட இவர் அருணகிரிநாதர் மீது ஈடுபாடு கொண்டிருந்தார். அருணகிரிநாதரை தன் அ்ரசவைக்கு அழைத்துப் போற்றினார். அப்போது தூணில் வெளிப்பட்ட மூர்த்தியை அவையில் காட்டினால் ஏற்போம் என்றார். இதன் காரணமாக அரசவையில் முருகக் காட்சியை அருணகிரிநாதர் காட்டுவித்தார்.

சம்பந்தாண்டர் போன்ற இன்னல் பிறவிகளால் தூண்டப்பெற்ற பிரபுட தேவன் பாரிஜாத மலர் கேட்க அதனைக் கொண்டுவர அருணகிரியார் முயல, அவர் தன்னுடல் விட்டு கிளியுருக் கொண்டு மேல் உலகம் சென்றார். இதுவே தக்க சமயம் என்று இவரின் பூதவுடலை எரியூட்ட இவர் ஆணையிட்டார், அருணகிரிநாதர் மீளவும் தன் உடல் தேடியபோது கிடைக்காது போனது. இவ்வாறு அருணகிரி நாதர் வாழ்வில் இடை வந்தவர் பிரபுட தேவர் ஆவார்.

<u>முத்தப்ப நாயனார்</u>

செம்பி வளநாட்டில் நேம நகரில் அழகப்பர் என்பவர் வாழ்ந்து வந்தார். முருகனருளால் இவர்க்கு ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு முத்தப்பர் என்று பெயர் வைத்து வளர்த்தனர். இவர் வணிகக் குடியினர். கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற இவர் மிதிலைப்பட்டி சென்று தன் தமிழறிவை மேலும் வளர்த்துக்கொண்டார்.

ஒருமுறை இவர் சந்தையில் முகம் வாடி இருந்தபோது ஒருவர் உணவு தந்து உபசரித்தார். அவரின் குடி எந்நாளும் குபேரன் போல் செல்வத்துடன் இருக்க வேண்டும் என்று வாழ்த்தினார். இதன் காரணமாக குடி விளங்கியது.

ஒருமுறை இவர் கள்வர்களினால் துயருற்றபோது சில அரசாங்க வீரர்கள் இவரைக் காத்தனர். அவர்கள் யாரென வினவ இங்கிலீஷ்காரப் படை என்றதும் இங்கிலிஷ் கொடி பறக்க இளையாற்றங்குடி சிறக்க என்று பாடினார். இதனால் இரண்டும் சிறந்தது.

கவிப்புலி என்பான் இவருடன் போட்டிக்கு இறங்கினான். கடாவின் தலை வீழப் பாடிய அவன் முன் அதன் தலை இணைந்து உயிர்வர இவர் குன்றக்குடி முருகன் அருள் வேண்டினார். கடா உயிர்பெற்றது. பாடுவார் முத்தப்பர் புகழறிந்துக் கவிப்புலி இவரிடம் மன்னிப்புக் கேட்டு ஆணவம் அழிந்தான்.

குன்றக்குடி முருகன் மீது திருமுக விலாசம் பாடினார். மேலும் செயங்கொண்டார் சதகம் பாடினார். இவ்வாறு இலக்கியம் வளர்த்த இவர் இறைநீழல் அடைந்தார்.

<u>திருப்புகழ்ச் சுப்பிரமணியனார்</u>

தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தில் கற்பகப் பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். இவருக்குப் பத்துப்பிள்ளைகள். இப்பத்துப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு இல்லறம் நடத்துவது சிரமமாக இருந்தது. இதனை முருகனிடம் முறையிட்டபோது தென்திசை சென்று எம்மை வழிபடு, உன் வறுமை நீங்கும் என்றார். அவ்வாறு இவர் தென்திசை செல்ல முயலும் தருவாயில் இவருக்கு அரசுப் பணி கிடைத்தது.

இவருக்கு உடல்நலம் ஒருமுறை குன்றிப்போனது. கொப்புளங்கள் தோன்றின. இவற்றை முருகப் பெருமான் அருளால் தடுத்துக் குணம் பெற்றார். இருப்பினும் இவர் வீட்டருகில் இவருக்குச் சூனியம் வைத்தவன் இறந்ததாகவும் வரலாறு செவிவழிச் செய்தியாக உள்ளது. இவ்வாறு பற்பல நிலைகளில் முருகன் அருள் இவருக்கு முன்னின்றது. இவரின் பிள்ளை தணிகாசலனார். இவரின் ஒரே பிள்ளை சுப்பிரமணியனார்.

சுப்பிரமணியனார் ஒரே பிள்ளை என்பதால் பெற்றோரைப் பாதுகாத்துக் கல்வியும் கற்கவேண்டியவரனார். இவரின் உயர்கல்வி வாய்ப்புகள் பலமுறை தடைபட்டன. இருப்பினும் அவர் படித்துக் கொண்டே இருந்தார். இவருக்கும் வள்ளியம்மாள் என்பவரும் திருமணம் நடைபெற்றது. பிள்ளைகள் பிறந்தனர். அவரில் ஒருவரே தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை.

மஞ்சக்குப்பத்தில் இவர் பணியாற்றியபோதுத் திருப்புகழ் பதிப்புப் பணியைத் தொடங்கினார். பல இடங்களுக்குச் சென்று பெற்றார். இவரே முதன் முதலாகத் திருப்புகழ் தொகுக்கும் பணியைத் தொடங்கியவர். இவ்வாறு திருப்புகழ் கிடைக்கச் செய்த சான்றோராக இவர் விளங்குகிறார்.

<u>சச்சிதாநந்த நாயனார்</u>

பூநாச்சி எனும் கிராமத்தில் சிதம்பரம், இலக்குமி ஆகியோருக்கு மகனாக அர்த்தநாரி என்பவர் பிறந்தார். இவருக்குக் கல்வி நலம் சிறக்கவில்லை. எனவே வேறு தொழில் செய்யக் கற்க வைக்க முயன்றனர். அப்போது மைசூரில் இவரின் உறவினர் மன்னரிடம் சமையல் தொழில் புரிந்தார். அவருடன் இவரைச் சமையல் தொழிலுக்கு துணை செய்ய அனுப்பிவைத்தனர்.

இவ்வாறு சமையல் தொழில் செய்து வருகையில் ஒரு திருமணத்திற்குப் பார்வையாளராக இவர் சென்றார். அங்கு வந்த மாப்பிள்ளை வலிப்பு நோயால் இறக்க முன்னரே திருமணமாகி இருந்த இவர் மாப்பிள்ளை ஆனார். இரண்டாம் திருமணம் ஆயிற்று இவர்க்கு. இரு மனைவியரும் பூநாச்சியில் அமைத்து இவர் வாழ்ந்தார்.

சில நாட்களில் முதல் மனைவியும் அவளின் குழந்தைகளும் இறந்தனர். இரண்டாம் மனைவியின் குழுந்தைகளும் இறக்க ஒரு ஆண்மகவும் அவளும் மிஞ்சினர். இதனால் பெரிதும் வருத்தமடைந்தார் அர்த்தநாரி. மேலும் அவருக்கு வயிற்று நோய் வந்தது. எம்மருந்து உண்டும் பலனில்லை. எனவே பழனிக்குச் சென்று பழனி முருகன் அபிடேக நீரை உண்டுவரத் திட்டமிட்டார். அதுவும் நிறைவேறியது. ஒரு மண்டல காலத்தில இவரின் வயிற்றுவலி நீங்கியது.

பழனி மலையில் நடந்த நடன நிகழ்ச்சியில் கேட்ட திருப்புகழ் இவரைக் கவர்ந்தது. இனித் திருப்புகழே நம் நூல் என இவர் கொண்டார். இவர் பல கந்தன்பதிகள் சென்று வணங்கினார். திருவண்ணாமலை வந்து ரமண மகரிஷியைச் சந்தித்தார். அங்கு சேஷாத்திரி சுவாமிகளைச் சந்தித்தார். அவர் இவரைப் பார்த்து உனக்கு நூல் திருப்புகழ், மலை வள்ளிமலை என்றார். இதனை ஏற்று வள்ளிமலைத் தலத்தில் திருப்புகழ் நிலவ உறுதிபூண்டார்.

இவர் வள்ளிதிருமணம் பற்றிப் பேசினால் தீராத கவலை தீரும். வள்ளிமலையில் மடம் அமைத்து உயிர்களுக்குக் கௌமார நெறி பரப்பி வருகிறார். மேலும் இவர் சென்னையில் தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை இல்லத்தில் தங்குவார். திருத்தணிகை மலையில் படிவிழா தொடங்கியவர் இவர். இவ்வாறு பல நிலைகளில் கந்தனுக்குத் தொண்டாற்றி இவர் நிறைபதம்பெற்றார்

செல்லப்பர்

சேய்த் தொண்டர் புராணத்தின் ஆசிரியர் வரகவி சொக்கலிங்கனாரின் தந்தை செல்லப்பர். வேங்கடம் காமாட்சி ஆகிய இருவரின் இல்லறத்தால் விளைந்தவர் இவர். செல்லப்பருடன் ஐவர் பிறந்தனர். இருவர் பெண்கள். அவர்களின் திருமணம் முடிந்த நிலையில் வேங்கடம் காலமானர். அதன்பின் காமாட்சி அம்மையின் வழிகாட்டல்படி மகன்கள் மூவரும் செயல்பட்டனர்.

இதில் செல்லப்பர்க்குத் தீராத வயிற்றுவலி இருந்தது. இதனைத் தீர்க்க கந்த உபதேசம் செய்து திருநீறு இட்டு, வாயில் திருநீறு வைத்து அ்ருளினார் தாயார். இதே காட்சியைத் தன் கனவில் கந்தன் செய்வதாகக் கண்டு அதிசயித்தார். இவரின் வயிற்றுவலி குணமாகியது. அன்னை இறந்தபின் இவர் திருமணம் செய்து கொள்ளும் காலநிலை வந்தது. மீனாட்சி என்பவரை மணந்து பெண்கள் நால்வர் ஆண்கள் நால்வர் என எழுவரைப் பயந்தனர். மெல்ல நிறைநாள் வர இவர் முருகன் பதம் சேர்ந்தார்.

மீனாட்சியம்மை

வரகவி தேனூர் சொக்கலிங்கனாரின் தயார் இவர். இவர் தன் கணவனுக்குத் தொண்டுகள் செய்து முருகபிரான் அருளால் வாழ்த்து வாழ்ந்தார்.

இத்தனியடியார்களைத் தவிர பன்னிரு தொகை அடியார்களும் இப்புராணத்தில் குறிக்கப் பெற்றுள்ளனர். தொகையடியார்கள் என்போர் ஒற்றை ஆளாக இல்லாமல் தொண்டர் குழாமாக இருந்துத் தொண்டாற்றுபவர்கள் ஆவர். இவர்கள் பற்றிய செய்திகள் பின்வருமாறு.

செந்தில் வாழ் அந்தணர்

திருச்செந்தில் என்று அழைக்கப்பெறும் திருச்செந்தூரில் வாழும் அந்தணர்களை முதல் தொகையடியாராகக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இவ்வூர் அந்தணர்கள - திருசுதந்திரர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரமாகும். இவர்கள் முருகப்பெருமான் கோயிலை நாளும் வலம் வரும் இயல்பினர். அவ்வாறு வரும் நிலையில் கைகளில் பூக்கள், நறும்புகைக் கலம் போன்றன கொண்டிருப்பர். இவர்கள் கனவிலும் நனவிலும் கந்தமூர்த்தியை மறவாத இயல்பினை உடையவர்கள் திருச்செந்தில் அந்தணர்கள். உருத்திராட்சம், திருநீறு அணிந்துத் திருப்புகழை நாளும் பாடும் இயல்பினராக இவ்வந்தணர்கள் விளங்குகின்றனர். ஞானம், கலைகள் கற்றவர்களாக விளங்கும் இவ்வந்தணர்கள் தானம், தவம் இரண்டினையும் நன்கு இயற்றும் இயல்பினர் ஆவர். விடியுமுன் பூக்களைப் பறித்துத் தொடுத்து நாளும் நாயகன் முருகனுக்குச் சூட்டும் தொழிலை இவர்கள் குறைவிலாது செய்துவந்தனர். இவ்வாறு திருச்செந்தில் வாழும் அந்தணர்கள் தொகை அடியவர்களாகக் கொள்ளப்பெறுகின்றனர்.

அரஹர வேல் மயிலென்பார்

காலையில் படுக்கை விட்டு எழும்போதும், நீராடும்போதும், திருநீறு அணியும்போதும், பன்னிருகண் பாலனை எண்ணும்போதும், ஆலயம் சென்ற போதும், தாய், தந்தையரை வணங்கும் வழிபாட்டின்போதும், உண்ணும்போதும், நடக்கும்போதும், உறவினரை உபசரிக்கும் நேரத்திலும், தொழில் செய்யத் துவங்கும்போதும் அரஹர வேல் மயில் என்று உரைக்கும் பான்மையர் அரஹரவேல் மயிலென்று சொல்லி இன்பம் பெறும் இயல்பினர் அரஹர வேல் மயில் என்று கூறும் கந்தனடியார்கள். இவர்களும் தொகையடியார்களுள் ஒருவர் ஆகின்றனர்.

ஆலயத் திருத்தொண்டர்

பல பிறப்புகள் பிறந்து அவற்றில் நற்றவம் செய்ததால் முருகன் ஆலயத்தில் தொண்டுகள் பல புரியும் தொகையடியார்கள் ஆலயத் திருத்தொண்டர் ஆவர். இப்பிறப்பில் முருகன் ஆலயத்தில் தொண்டுகள் செய்யும் இவர்கள் முருகலோகத்திலும் சென்று பல தொண்டுகள் செய்வர். இவர்களை முருகலோகத்தில் உள்ளவர்கள் வந்து பணிந்து வரவேற்பர்.

முருகனையே பாடுவார்

முருகனைச் செந்தில் முதல்வனைத் தமிழில், வடமொழியில், மலையாளத்தில், தெலுங்கில், மற்றும் உள்ள மொழிகளில், உலக நாடுகளில் அங்குப் பேசப்படும் மொழிகளில் கரும்பும் தேனும் கசக்கும் அளவிற்கு இனிய நிலையில் முருகப்பெருமானின் பெருமையைப் பாடும் அன்பர்கள் முருகனையே பாடுவார் ஆவர். ஆசு முதல் நாற்கவிகளால் சொல்மாலை புனைந்து மலர் போன்ற கரங்களால் வணங்கி, மெய் மறந்து, வியர்வை அரும்ப, விழிநீர் சொட்டி, எலும்பு நெக்குறுக வணங்குபவர்கள் முருகனையே பாடுவார் என்ற தொகையடியார் ஆவர். இவர்கள் நாளும் வாழ்ந்து முருகனடியார்கள் எதிர் அழைப்பச் சொர்க்கம் புகுவார்கள்.

முருகன் திருவருளைச் சிந்திப்பார்.

உத்தம குணம் பெற்றவர்கள், அறிவினால் முருகனை அளந்து அறிபவர்கள், முருகப்பெருமான் நற்குணங்களை வியந்து போற்றுபவர்கள், முருகனையே சரணம் என்று அடைபவர்கள், முருக நாமத்தை இடைவிடாது உச்சரிப்பவர்கள் என்ற நிலையில் முருகன் திருவருளைச் சிந்திப்பவர்களின் இயல்புகள் அமைந்திருக்கும்.

திருத்தணியிற் பிறந்தார்கள்

அசுரர்களை அழித்து முருகன் தன் கோபத்தின் எல்லையைக் கடந்த தலம் திருத்தணிகை ஆகும். இங்கு வாழ்வோர் குடி அடிமை பெற்றவர்களாக முருகப் பெருமானுக்கு விளங்குகின்றனர். இவர்கள் அமரர்களோடு ஒத்து அமைபவர்கள். இவர்கள் மலர்கள் கொண்டு முருகனை வணங்குபவர்கள். இத்தகையோர் திருத்தணியிற் பிறந்தார் என்ற தொகை அடியார்கள் ஆவர்.

காவடி செலுத்திக் கந்தனையே போற்றுவோர்

பால், தயிர், மோர், நெய், கன்னல், மதுரப்பாகு, சர்க்கரை, கற்கண்டு, சீனி, இளநீர், அன்னம், தேமதுரம், பழங்கள், சாம்பிராணி, புனுகு, சவ்வாது, சந்தனம், குங்குமம், கற்பூரம், திருநீறு போன்றவற்றை முருகப்பெருமானுக்காகத் தேடிக் காவடியாகக் கொண்டு வந்துத் தரும் அன்பர்கள் காவடி செலுத்திக் கந்தனையே போற்றுபவர்கள் ஆவர். கண்ணீர் சொட்ட, கால்களில் கிண்கிணி முழங்க, வாய்மணக்க முருகன் நாமம் சொல்லி இவர்கள் காவடி தூக்கிவருவர். இவர்கள் கட்டவிழ்த்து விட்டதும் கன்றானது தாய்ப்பசுவை நாடுவது போல கந்தனை நாடுவர். இவர்கள் முருகனுக்கு என்றும் உரிமையுடையோர் ஆவர். இவ்வாறு காவடி செலுத்திக் கந்தனையே போற்றுவோர் நலம் சேய்த்தொண்டர் புராணத்தில் பேசப்படுகிறது.

சேய்த் தொண்டர் தொண்டரடித் தொண்டர்

இவர்கள் முருகனடியார்களுக்கு அன்பர்களாய் விளங்குபவர்கள். முருகனடியார்களின் மனம் எண்ணி அவர்கள் சொல்லும்முன்னே அவர்களுக்கு வேண்டிய செய்து நிற்பவர்கள் ஆவர். இவர்கள் தொண்டர்களை வழிபடும்

தொண்டையே தம் கடமையெனக் கொண்டவர்கள் ஆவர். இவர்களை முருகப்பெருமான் தொண்டர்கள் எதிர் அழைப்ப கந்த சொர்க்கம் புகுவர்.

<u>இறந்தும் இறவாமல் இருப்பவர்கள்</u>

காவடி தூக்கிவரும் அன்பர்களுக்கு குளிர் பானம் தரும் நிலையினர், முருகன் கோயில்களுக்குச் செல்லும் வழிகளைச் செப்பம் செய்துப் படிக்கற்கள் அமைப்பவர்கள், கலம்பகம், கலிவெண்பா, ஊசல் போன்ற பாடல்களை இயற்றுபவர்கள் போன்றோர் இறந்தும் இறவாம் இருப்பவர்கள் என்ற பட்டியலில் அடங்குகின்றனர்.

<u>குகத் தல புராணிகர்கள்</u>

கண்ணில் காண்பனவெல்லாம் கந்தன் உருவம் என்று கருதுவோர், தீங்கு எவர்க்கும் எண்ணிடாத இதயத்தோர், திருநீற்றை மெய்யெல்லாம் பூசுவோர், முருகனைத் தவிர வேறெதையும் பாடாதோர், முருகன் கோயில் குருக்களாகத் திகழ்வோர் புராணிகர்கள் என்ற தொகையடியார்கள் ஆவர்.

<u>பாடாது விடப்பட்டவர்கள்</u>

சேய்த்தொண்டர் புராணத்தில் பாடாமல் விடப்பட்ட முருக தொண்டர்கள் பலர் இருக்கலாம். அவர்களையும் ஒரு தொகையாக்கி அவர்களுக்கும் ஒரு புராணத்தை ஒதுக்கி அவர்களையும் முருகக் கடவுளின் தொகையடியாராகக் காண்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

இனிவரு சேய்த் தொண்டர்

சேய்த்தொண்டர் புராணம் பாடி முடித்த நிலையில் அதற்குப்பின் பிறப்பெடுத்து முருகன் நாமத்தை உலகுபுகழப் பரப்ப உள்ளோர்கள் அனைவரும் இனிவரும் சேய்த்தொண்டர் வரிசையில் அடங்குவர். அவ்வகையில் அவர்களுக்கும் ஒரு புராணம் அமைக்கிறார் இப்புராண ஆசிரியர்.

இவ்வாறு பன்னிரு தொகையடியார்களையும் வரையறை செய்து அவர்களின் தொண்டு, பணி, இயல்பு ஆகியன பற்றிக் குறிப்பிட்டுள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

மதிப்பீடு

சேய்த் தொண்டர் புராணம் அறுபத்தாறு முருகன் அடியார்களின் வாழ்வை விளக்கமாக தருகிறது. இத்தொண்டர்கள் பல்வேறு சமுதாயம் சார்ந்தவர்களாக உள்ளனர். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், பெண்கள், புலவர்கள், சமையல் கலைஞர்கள், தேவர்கள் போன்ற பல சமுதாய நிலைப்பட்டவர்கள் இப் புராணத்தின் நாயகர்களாக உள்ளனர். சமுதாய ஏற்றத்தாழ்வற்ற பக்தி சமுதாயத்தைப் படைக்கச சேய்த்தொண்டர் புராணம் முயன்று அதில் வெற்றி பெற்றுள்ளது.

முருகம்மையார், மீனாட்சியம்மையார், ஔவையார் ஆகிய மூவரும் பெண் அடியார்கள் ஆவர். சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தில் நாயன்மார் என்ற அடிப்படையில் மூவர் இடம்பெறச் செய்யப்பெற்றிருப்பதைப் போல இப்புராணத்திலும் மூவர் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளனர்.

திருத்தொண்டர் புராணத்தில் சுந்தரரின் தாயும் தந்தையும் இடம்பெறுவதைப் போல, இப்புராணத்திலும் நிறைவாகச் சொக்கலிங்கனாரின் தாயும் தந்தையும்

இடம்பெற்றுள்ளனர். இதில் தணிகைமணி செங்கல்வராயர், சொக்கலிங்கனார் ஆகியோர் இடம்பெறவில்லை. இதற்கும் காரணம் உண்டு புராணம் வாழ்வு நிறைவுற்றவர்களை மட்டும் காப்பிய நாயகர்களாகப் பாடியதால் வாழ்ந்தோரை அவர் பாட முயலவில்லை.

முருகனடியார்களின் பொதுப் பண்பாக அரகர என்று முருகன் நாமத்தை அயராது சொல்லுதல் என்பது அமைகின்றது. முருகன் உறையும் தலங்களுக்குச் செல்லுதல், முருகவிழா எடுத்தல் என்பதும் துணைப்பண்புகளாக விளங்குகின்றன. மேலும் முருகன் பற்றிய பனுவல்களை எழுதியவர்களாகப் பெரும்பாலன சேய்த்தொண்டர்கள் இருக்கிறார்கள். முருகவேளின் பன்னிரண்டாம் திருமுறைக்குள் முருகனைப்பற்றிப் பாடியவர்கள் அனைவரையும் கொண்டுவந்துத் தொகுக்கும் முயற்சியாக சேய்த்தொண்டர்புராணம் படைக்கப்பெற்றுள்ளது.

சேய்த்தொண்டர் புராணத்தில் முருக அடியார்கள் எதிர் கொள்ளும் சிக்கல்கள் பின்வரும் ஐந்தாகும்.

1. குழந்தையின்மை
2. வாது செய்து வெற்றிபெறவேண்டிய கட்டாயம்
3. வயிற்றுவலி
4. முருகக் காட்சி காணத் துன்பப்படல்
5. நூல் அரங்கேற்றத்தில் ஏற்படும் குறை நிறைகள்

இப்புராணத்தில் முருகன் அருள் துணை நிற்கக் குழந்தைப் பேற்றினைப் பெற்றதாகப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. வாதில் வெல்ல வேண்டிய கட்டாயம் அருணகிரிநாதர், குணசீலர், அந்தகக்கவி வீரராகவர் போன்றோருக்கு எழுந்துள்ளது. இதில் முருகன் துணை நின்று உதவி செய்துள்ளான். வயிற்றுவலியும் முருகன்

அருளால் தீர்ந்துள்ளது. முருகக் காட்சியைக் கனவில் நனவில் காண வேண்டும் என்று முருக அன்பர்கள் தவமிருந்துள்ளனர். கந்தபுராணம் போன்ற நூல்களின் அரங்கேற்றத்தின்போது எழுந்த சிக்கல்களை முருகப் பெருமான் தீர்த்துள்ளார்.

மேற்கண்ட சிக்கல்கள் தீர ஒரே தீர்வாக முருகனருள் காட்டப்பெறுகிறது.

அகத்தியர், நாரதர், இடும்பன், போகர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள், அருணகிரியார், தண்டபாணி சுவாமிகள் போன்ற இலக்கிய ஆளுமைகளை முருகப் பெருமான் அடியார்கள் என்று காட்டுவதன் வழி கௌமார நெறியை இப்புராணம் வளர்க்க உதவியுள்ளது.

தொகையடியார்கள் என்ற நிலையில் முருகத் தொண்டினைப் புரிந்தவர்கள், புரிய வருபவர்கள், பாடாது விடப்பட்டவர்கள் ஆகியோரைச் சொக்கலிங்கனார் தொகுத்துரைத்துள்ளார். இதன் காரணமாக எவரையும் விடாது அனைவரையும் முருகத் தொண்டர் என்பதனுள் அடிக்கிவிடுகிறார் படைப்பாளர்.

<u>தொகுப்புரை</u>

முருகப்பெருமான் அருளைப் பெற்றவர்கள் சேய்த்தொண்டர்கள் ஆவர். இவர்களில் தனியடியார்கள் அறுபத்தாறு பேர் ஆவர். பன்னிருவர் தொகை அடியார்கள் ஆவர். அகத்தியர் முதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரை வாழ்ந்த அறுபத்தாறு அடியார்களின் வாழ்க்கை, கந்தப் பணிகள், நூற்பணிகள் ஆகியன சேய்த்தொணடர் புராணத்துள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. புலவர்கள், மன்னர்கள், அந்தணர்கள், புராணிகர்கள், பெண்கள், அரக்கர்கள், புராணச் சான்றோர்கள், சங்கச் சான்றோர்கள் போன்ற பல நிலையினரும் சேய்த்தொண்டர்களாக விளங்கியுள்ளனர்.

சேய்த்தொண்டர்களாக விளங்குபவர்கள் முருகன் மீது ஆறாப் பற்று உடையவர்களாக விளங்கியுள்ளனர்.

சேய்த்தொண்டர்கள் தம் வாழ்வில் ஏற்பட்ட பல இன்னல்களைத் தீர்க்க முருகன் அருள்வான் என்ற நிலையில் முருகனை எண்ணினர். முருகக் கடவுளை எண்ணினோர் கைவிடாப்படா நிலையில் முருகனால் அருள் வழங்கப்பெற்றுச் சேய்த்தொணடர்கள் ஆட்கொள்ளப்பெற்றுள்ளனர். இதன் காரணமாக இச்சேய்த்தொணடர் புராணங்களைக் கற்போர் கந்தன் மீது ஆறாத பக்தி உடையவர்களாக விளங்கும் நிலை இப்புராணத்தால் வருவிக்கப்பெற்றுள்ளது.

தொகையடியார்கள் என்பவர்களும் முருகனையும் முருகனடியார்களையும் வணங்கும் குழுவினர் ஆவர். இவர்களும் முருகனை வழிபட்டு முருக சுவர்க்கம் அடைந்துள்ளனர்.

இவ்வகையில் இறை நம்பிக்கை மிக்க புராணமாக, இறைவன் தொண்டர்களின் தொண்டு, உறுதிப்பாடு ஆகியவற்றை விவரிக்கும் புராணமாகச் சேய்த்தொண்டர் புராணம் விளங்குகிறது என்பது உறுதியாகின்றது.

சான்றாதாரங்கள்

[1] மு. அருணாசலம் இராஜா வரதராஜா, தமிழ்இலக்கிய வ்ரலாறு,ப. 488

[2] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 88

[3] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.135

[4] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.146

[5] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.166

[6] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.231

[7] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.279

[8] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.317

[9] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.332

[10] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.439

[11] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.438

[12] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.495

[13] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.502

[14] சேந்தனார், திருவிசைப்பா, திருவிடைக்கழி,பாடல்எண். 1

[15] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 543

[16] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 562

[17] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 607

[18] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 658

[19] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 915

[20] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 1312

[21] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 1368

[22] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 1691

[23] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 1733

[24] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 1809

[25] மார்க்க சகாயதேவர், விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், சிற்றில் பருவம் பாடல் எண். 1

[26] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்1851

[27] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 1914

[28] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 1976

[29] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 1982

[30] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.2126

[31] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண். 2133

[32] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்.2217

[33] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 2249

[34] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 2335

[35] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 2475

[36] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 2482

[37] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்2514

[38] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்2581

[39] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண்2642

[40] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் புராணம், பாடல்எண் 2806

இயல்.4.

சேய்த்தொண்டர் புராணத்தின் இலக்கியத்திறன்

இயல். 4

சேய்த்தொண்டர் புராணத்தின் இலக்கியத்திறன்

இலக்கியங்கள் மனித மனங்களின் உணர்வுகளைச் சரிப்படுத்தி நேரான உயர்வான பாதையை நோக்கி அழைத்துச்செல்கின்றன. இலக்கியங்களில் படைக்கப்பட்ட நன்மாந்தர்கள் வாழும் மாந்தர்களுக்கு முன்மாதிரிகளாகின்றனர். இலக்கியங்களில் காணப்படும் இலக்கியத் திறன்கள் கற்றோருக்கு இனிமையையும் கற்பதற்குச் சுவையையும் அளிக்கின்றன. இனிமை, சுவை கருதிய இலக்கியங்களே பெரிதும் மக்களால் படிக்கப்பெற்று காலம் கடந்தும் அவை நிற்கின்றன. அவ்வகையில் சேய்த் தொண்டர் புராணமும் மக்களின் மையத்தில் நிலைத்த இடத்தைப் பெறுவதற்கு அதன் இலக்கியத்தன்மை உதவுகின்றது.

சேய்த்தொண்டர் புராணம் என்பது விரிந்த வடிவம். இதன் விரிந்த வடிவத்தைச் சுருக்கி அறிந்து கொள்ள சேய்த்தொண்டர் திருவந்தாதி உதவுகின்றது. இதனினும் சுருக்கி அறிந்து கொள்ள சேய்த் தொண்டத் தொகை உதவுகின்றது. இதனால் ஒரு இலக்கியத்தின் விரிவையும் அதன் சுருக்கத்தையும் கற்போர் உணர்ந்து அதன்பால் ஈடுபாடு கொள்ள முடிகின்றது.

சிதம்பரதேவ நாயனாரைப் பற்றி தொன்னூறு பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. இதனைச் சுருக்கி ஒரே பாடலாகத் தருகிறது சேய்த்தொண்டர் திருவந்தாதி.

“சீரார் செழுங்கூடல் மீனாட்சி யம்மை செஞ் சேவடியை

ஏரார் கலி வெண்பா ஒன்றைந் தேத்தி எழிலியங்கும்

போருர்த் திருச்சந்நிதி முறை சாற்றிப் பொலன் கடப்பந்

தாரானருளேய் சிதம்பர தேவர்தாள் தஞ்சமெற்கே”[1]

என்ற ஒரு பாடலில் சிதம்பர சுவாமிகள் வரலாற்றைச் சேய்த் தொண்டர் திருவந்தாதியல் பாடுகிறார் சொக்கலிங்கனார். இவரைப்பற்றி இன்னும் சுருக்கமாக ‘எமது சிதம்பர தேவர் அடியார்க்கும் அடியேன்” என்று சேய்த்தொண்டத் தொகை பாடுகிறது.

இவ்வாறு சுருக்கமும் விரிவும் உடைய பனுவல்கள் மூன்றை ஒன்றன் பின் ஒன்றாக விரைந்த காலத்தில் பாடிய சிறப்பிற்குரியவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இவரின் கவிதையாற்றலுக்கு, எண்ணியவுடன் கவிபாடும் படைப்புச் சிறப்பிற்கு தொகை, அந்தாதி, புராணம் என்பன நிலையான சான்றுகளாக அமைகின்றன.

இப்புராணம் சொற்சிறப்பும், பொருள் சிறப்பும் ஓசைச்சிறப்பும், கவிதையழகும், வருணனை போன்ற இலக்கிய உத்திகளும் கலந்து பாடப்பெற்றுள்ளது. இதன் காரணமாக இப்புராணத்தின் சிறப்பு மேலும் வளருவதாக உள்ளது.

இம்மூன்றையும் எழுதியவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் ஆவார். இவரின் கவியாற்றல் நினைத்தவுடன் கவிபாடும் திறமை பெற்றது. இவரின் சொல், பொருள், அணி ஆற்றலை இவ்வியல் விளக்குகின்றது.

<u>இலக்கியத் திறன்</u>

ஒரு படைப்பாளர் தான் படைக்கும் இலக்கியத்தில் பல்வகைத் திறன்களைக் கையாளுகிறார். ‘இலக்கியம் என்பது தனி ஒருவர் ஒரு மொழியை ஒரு குறிப்பிட்ட வகையில் கையாளும் கலை ’[2] என்று இலக்கியப் படைப்பாற்றலை வரையறை செய்கின்றனர்.

“இலக்கியம் என்பது ஒரு படைப்புக்கலை. கலைஞர் அல்லது கவிஞர் தம் உள்ளத்தை அசைத்து உணர்வைப் பெருக்கிக் கலையுணர்வைத் தட்டியெழுப்பும் ஒன்றனுக்கு நல்ல வடிவம் கொடுத்துக் கற்பவர் உள்ளம் களிப்புக் கொள்ளுமாறு அல்லது பயில்வாருக்கு ஆர்வத்தை உண்டாக்கும் வண்ணம் இலக்கியத்தைப் படைக்கின்றனர்” [3] என்று இலக்கியப் படைப்பாக்கம் பற்றி ஆய்வாளர் கருதுகின்றனர்.

மேற்கண்டவற்றின் வழியாக இலக்கியப் படைப்பாக்கம் என்பது படைப்பாளன் தன் கருத்தை மற்றவர் ஏற்கும் வண்ணம், கலைவடிவமாகத் தரும் முறை என்ற முடிவிற்கு வரமுடிகின்றது.

கற்பனை, உணர்ச்சி, சொல்லாட்சி, அணிகள் போன்றனவற்றைக் கொண்டு செய்யப்படுவது கவிதையாகின்றது. மூவாயிரம் பாடல்களுக்கு மேற்பட்டுள்ள பெரிய படைப்பொன்றை படைக்கும் நிலையில் படைப்பாளன் பெருத்த சவால்களுக்கு உள்ளாகிறான். தொய்வின்றி இலக்கியத்தை அவன் நடத்திச் செல்ல அரும்பாடு படவேண்டியுள்ளது. இந்நிலை சேய்த்தொணடர் புராணத்தின் படைப்பின்போது தேனூர் வரகவி சொக்கலிங்கனாருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

தேனூர் வரகவி சொக்கலிங்கனார் தன் நீண்ட இலக்கியமான சேய்த் தொண்டர் புராணத்தைப் பல படைப்பு உத்திகளைப் பயன்படுத்தி, தொய்வின்றி நடத்திச் செல்ல முனைந்துள்ளார்.

<u>சொல்லாட்சி</u>

‘ஒரு குறிப்பிட்ட சொல்லானது மக்களின் பேச்சிலும் உரை நடையிலும் பொதுவாகப் பெறும் ஆற்றலைவிடப் பாட்டினுள் தொடுக்கப்படும்போது பெறும்

ஆற்றல் மிகுதியாகும்"[4] என்று சொல்லின் ஆற்றல் குறித்துக் கருத்துரைக்கப்பெறுகிறது. சேய்த்தொண்டர் புராணத்தில் சொல்லாட்சி மிகச் சிறப்புடன் அமைந்துள்ளது. இதனைப் பின்வரும்பகுதி சான்றுகளுடன் நிறுவுகின்றது.

<u>கோடி, பத்து கோடான கோடி</u>

அருணிகிரிநாத சுவாமிகள் புராணத்தில் கோடி என்றொரு சொல்லை எடுத்துக்கொண்டுத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் பாடும் தன்மை பின்வருமாறு.

"உம்பர் திருவே ஒரு முருகா என்றுருகிச்

செம்பொற் பதமலரைச் சிந்தித் துடல் பொடிப்ப

அம்பிட்ட கண்களொடும் ஆனந்தக் கூத்தாடி

கும்பிட்டுப் போற்றுவார் கோடானு கோடிபேர்"[5]

என்ற பாடலில் முருகனடியார் கோடான கோடி பேர் என்று காட்டுகிறார் சொக்கலிங்கனார். இதுபோலவே பத்துப்பாடல்கள் கோடான கோடி என்று முடிகின்றன. இதன் காரணமாக பத்துக் கோடான கோடிப்பேர் முருகனடியார் என்று குறிப்பிடுகிறார் சொக்கலிங்கனார். தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை இன்றைய அளவில் ஏழு கோடியைத் தொட, இவர் பத்துக் கோடானு கோடி பேர் எனக் குறிப்பிட்டது எப்படி என்று எண்ணினால் உலகமுழுவதும் உள்ள அனைவரையும் முருகனடியார்களாக கொண்டதுதான் காரணம் என்பது புரியவரும். இது தொண்டர்களைச் சிறப்பிப்பதாக உள்ளது.

கும்பிட்டுப் போற்றுபவர்	கோடானு கோடி
நடமிடுவார்	கோடானு கோடி
கோவில் வலம் செய்வார்	கோடானு கோடி
மலர் சொரிவார்	கோடானு கோடி
சதங்கை கொஞ்சக் கூத்தாடுபவர்	கோடானு கோடி
கரங் கூப்பிக் கொண்டாடுபவர்	கோடானு கோடி
பாத காணிக்கைச் செலுத்துபவர்	கோடானு கோடி
முழவம் கொட்டுபவர்	கோடானு கோடி
தாள் தொழுவார்	கோடானு கோடி
பக்தியோடு உபசரிப்பவர்	கோடானு கோடி

இவ்வகையில் பத்து கோடானா கோடிபேர் என்ற அளவில் உலகம் முழுவதையும் முருகனடியாராக் காண்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

<u>உத்தம நெறிகள்</u>

வாழ்வில் கடைபிடிக்கவேண்டிய உத்தம நெறிகள் அனைத்தையும் ஒரே பாடலில் அடுக்கிச் சொல்வரிசை காட்டுகிறார் சொக்கலிங்கனார்.

“சத்தியம் அறிவு ஒழுக்கம் தயை பொறை உறுதி அன்பு

வித்தகம் தமிழ் பாராட்டு விறல்கொடை மேம்பாடு ஊக்கம்

அத்த மெய்த்தெய்வம் பேணல், அடியவர் வழிபாடு ஏனை

உத்தம நெறிகள் யாவும் உலவும் ஒவ்வொருவர் பாலும்”[6]

பதினாறு பேறுகள் என்று சொல்வதுபோல பதினாறு உத்தம குணங்களை இப்பாடலில் காட்டிவிடுகிறார் சொக்கலிங்கனார்.

<u>இரட்டைச் சொற்கள்</u>

சொற்களை இரட்டை இரட்டையாக அமைத்துப் பாடும் அழகையும் சொக்கலிங்கனார் பயன்படுத்தியுள்ளார்.

‘கோடி கோடி மகாமறை மந்திரங் கூறி ஈறில் நறும்புகழ் யாவையும்

பாடிஆடிப் பரிந்திரந்தெல்லையில் பக்தி கொண்டுவாதி வெறுத்துடல்

வாடியூடி வருந்தி வணங்கிமாமௌன யோகத்துமற்றைய மார்க்கத்தும்

நாடி நேடி யொருவருங் காணொனாநாதன் எந்தை பொனாகத்தை நீவியே”[7]

என்ற நிலையில் இரட்டை அடுக்குச் சொற்களைச் சொக்கலிங்கனார் பயன்படுத்திச் சொல்லழகு கூட்டுகிறார்.

இதே நிலையில் மற்றொரு பாடலை அமைத்து அவர் பாடுகிறார்

“தேடித் தேடித் திருப்புகழாம் தெய்வத் தமிழைத் திருவாயாற்

பாடிப் பாடிப் பன்னிருகட் பரன்கைக் கிளியானாரருளை

நாடிப்பாடி அருணகிரிநாதா நமஎன் அங்கைமுடி

சூடிக் கூடிக் கூத்தாடித் தொழுதானந்தக் கடல் குடைவோம்”[8]

இப்பாடலிலும் தேடித் தேடி, பாடிப்பாடி, நாடிப்பாடி, சூடிக் கூடி என்று சொற்கள் அடுத்து அடுத்து அமைத்து அழகுவரப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

<u>அழுத்தமுடன் சொற்களைப் பலமுறை பயன்படுத்தல்</u>

சில சொற்களைப் பல முறை ஒரு பாடலில் சொல்லி அச்சொல்லுக்கு அழுத்தம் தரும் கவிப்போக்கினை உடையவராக விளங்குகிறார் சொக்கலிங்கனார். கச்சியப்பர் வருகையை வருகின்றார் என்ற சொல் தொடரப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

“ஐயர் வருகின்றார் கச்சி அப்பர் வருகின்றாராம் பொன்

மெய்யர் வருகின்றார் சைவ விரதர் வருகின்றார் உலகோர்

உய்யக் கந்தவேள் சரிதம் உரைத்தோர் வருகின்றாரென்று

செய்ய தமிழ்நாவலர் சாற்றிச் சிரமேற் செங்கை கூப்பிவர”[9]

என்ற நிலையில் வருகின்றார் என்ற சொல் அழகு பெறுகின்றது.

இதுபோல ஒரு சாரர் என்பதை ஒரு சார் என்பதாக ஆக்கி அதனைப் பல இடங்களில் ஒரே பாடலில் பயன்படுத்தி அழகு கூட்டுகிறார்

“வரிசைகள் தாங்கி நடப்பவர் ஒரு சார்

மங்கல ஆலம் எடுப்பவர் ஒரு சார்

அரிபொரி வெல்லம் வழங்குநர் ஒரு சார்

ஆனந்த நிர்த்தனம் ஆடுநர் ஒரு சார்

முருகன் அரும்புகழ் பாடுநர் ஒரு சார்

முழவொடு சின்னம் முழக்குநர் ஒரு சார்

இருகை குவித்து நடப்பவர் ஒருசார்

இன்னவாக எழுந்தனர் அம்மா”[10]

என்பதில் ஒருசார் என்ற சொல் திரும்பத் திரும்ப இடம் பெற்று அழுத்தம் பெறுகிறது. வந்தவர்கள் கூட்டத்தின் அழகையும் ஒற்றுமையையும் காட்டுகிறது.

மற்றொரு பாடலில் உற்றன என்ற சொல்லும் இலக்கியமாகின்றது.

‘அருகுற்றனர் பெரியாரென்றோர்ந்தாலி பொழிந்தன முகிலின் ஈட்டம்

பெருகுற்றன அகல் நீர் நிலையம் பீருற்றன புனல் ஊற்றெங்கும்

குருகுற்றன தடம் எங்கெங்கும் குளிருற்றன நறும் பூம்பொழில்கள்

முருகுற்றன எழிலார் மலர்கள் முழக்குற்றன பல பண்ணிகள்”[11]

என்ற பாடலில் பெரியோர் அருகில் இருப்பதால் முகில் கூட்டம் தவறாது மழை பொழிந்தது. நீர் நிலைகள் எல்லாம் இதனால் பெருகின. புனல் எங்கும் ஊற்றெடுத்தது. இதன் காரணமாக நீர்நிலைகளில் பறவைகள் ஒன்று கூடின. மழை காரணமாக பூங்காக்கள் மலர்கள் நிறைந்து காணப்பட்டன. அழகு (முருகு) உற்றன மலர்கள். இதன் காரணமாக வண்டுகள் இனிது பாட பண்கள் பல பரவின என்று சான்றோர் பெருக்கத்தின் இயல்பால் நடந்தவற்றை அடுக்கி உரைக்கிறார் சொக்கலிங்கனார். இதில் முருகுற்ற என்பது அழகைக் குறித்தாலும், முருகனின்

வடிவத்தைப் பெற்றன என்று கொள்கிற அளவிற்கு முருகுற்றன என்ற சொல் நலம் சேர்க்கிறது.

இன்னொரு பாடலில் துரை என்ற சொல் நலம் பெறுகிறது

“அம்மையுமை அகமகிழும் ஆநந்தத் துரையே!

அடலவுணர் குலமுழுதும் அற எழுந்த துரையே!

வெம்மை தடிந் தடியாரை வாழ்விக்கும் துரையே!

மின்னகுவேல் கரத்தேந்தி விளையாடும் துரையே!

செம்மைநலந் திரண்டெழுந்த சிங்காரத் துரையே

சிகியேறி உலகைவலஞ் செய்துவருந் துரையே

எம்மையுமோர் பொருட்படுத்தி எழுந்ததிருத் துரையே

இனியுனது திருவடியை இமைப் பொழுதும மறவோம்”[12]

என்ற பாடலில் துரை என்ற சொல் பலமுறை பயின்றுவந்து முருகனை அழுத்தமுடன் துதிப்பதாக உள்ளது. துரை என்ற சொல் இதனைத் தொடர்ந்து இன்னும் இரு பாடல்களில் தொடர்கிறது.

ஒலி என்ற சொல் பல இடங்களில் ஒலித்து இனிமை சேர்க்கும்படி ஒரு பாடலை அமைத்துள்ளார் சொக்கலிங்கனார்.

“குழலொலி யாழொலி கொம்பு சங்கொலி

முழவொலி முல்லைமென் முறுவலார் நடம்

பழகொலி தொண்டர்கள் பரவும் பேரொலி

விழவொலி பொழுதெலாம் விம்மும் வான்பதி”[13]

என்று பலஒலிகள் பெருகும் தலமாக திருவண்ணாமலை இருந்துள்ளது. இதில் ஒலி என்ற சொல் பன்முறை வந்து இனிமை செய்கிறது.

போற்றி, போற்றி

முருகப் பெருமான், சிவபெருமான் முதலான தெய்வங்களைப் போற்றும் பல போற்றித் துதிகள் சேய்த் தொண்டர் புராணத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. இவற்றைக் காணுகையில் இப்புராணம் ஒரு தோத்திர நூலாக அமையத் தக்கது என்று எண்ணத் தோன்றுகிறது.

சிவபிரான் போற்றி

1. சங்கரா போற்றி போற்றி
2. சயம்புவே போற்றி போற்றி
3. பொங்கரா அணியும் வேணிப் புண்ணியா போற்றி
4. கொங்கறா மலரின் வரிள கொண்டகோமடியக் காய்ந்த போற்றி
5. செங்கணா போற்றி போற்றி
6. சிவசிவா போற்றி போற்றி
7. நித்தனே போற்றி போற்றி
8. நின்மலா போற்றி போற்றி
9. அத்தனே போற்றி போற்றி

10. அநேகனே போற்றி போற்றி
11. முத்தனே போற்றி போற்றி
12. முத்தொழில் இயற்ற வல்ல சித்தனே போற்றி போற்றி
13. சிவசிவா போற்றி போற்றி
14. மூலமே போற்றி போற்றி
15. மும்முலை மடவாள் பாகக் கோலமே போற்றி போற்றி
16. குரைகடல் அமரர்கட்கு அமுதளித்த சீலமே போற்றி போற்றி
17. சிவசிவா போற்றி போற்றி
18. காற்று மண் புனல் வான் அங்கி கதிர் மதி புலன்கள் போற்றி
19. சாற்று பல்பூதம் யாவும் தன்வயங் கொண்டு தானாய்த் தோற்றுவாய் போற்றி
20. தொண்டர் துய்க்க வீடு அருளும் நின்சீர் போற்றி
21. நின் கமலப்பாதம் போற்றி"[14]

என்று இருபத்தோரு முறை போற்றி உரைக்கிறார் நக்கீரர். தான் செய்த தவறுக்காக இறைஞ்சி அவர் சிவபிரானைப் போற்றும் நிலை இதுவாகும்.

<u>முருகப்பெருமான் போற்றி</u>

இதே நக்கீரர் முருகனையும் போற்றித் துதிக்கிறார். பூதத்திடம் அகப்பட்டுக் கொண்ட தன் முதலாகிய நூற்றுவரை மீட்க அவர் முருகனை வேண்டுகிறார்.

பன்னிருகண் கற்பகமே பரங்கருணைப் பார்க்கடலேபரமன் பெற்ற

நன்னிதியே நல்லடியார் நற்றுணையே நங்கைவள்ளி நாயகா நின்

பொன்னடியே துணைகொண்டு வாழ்தமியோம் பூதத்தாற் பொறிகலங்கி

இன்னலுற்றோம் எமைஆள்வான் இத்தருணம்வந்தருளாய் எந்தாய் எந்தாய்”[15]

என்று அபயம் வேண்டிப் பணிகிறார் நக்கீரர். இதனைத் தொடர்ந்தமையும் இருபாடல்கள் முருகனைப் போற்றி வணங்குவதாக உள்ளது.

குமர குருபரர் சருக்கத்திலும் முருகப் போற்றி ஒன்று இடம் பெறுகிறது.

“அத்தனே அனகனே அன்பர்க்கின்பருள் அமலனே! விமலனே! ஆதி அந்தமில்

நித்தனே! நீக்கமற்றுலகம் எங்கணும் நிறைபரிபூரணாநனந்த மூர்த்தியே!

முத்தனே! முதல்வனே! மூப்பிறப்பிலா மூலமா முருகனே! யாவும்வல்ல ஓர்

சித்தனே! சின்மாயனந்த வாரியே! சிற்பரா! செயசெய என்று போற்றியே”[16]

என்று குமரகுருபர் பேசா நிலையில் அக்குழந்தையைப் பேச வைக்க அவரின் பெற்றோர் வேண்டுகின்றனர்.

ஔவையார் முருகனைத் துதிக்கும் போற்றிகளாகப் பின்வருவனவற்றைக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“செந்தமிழின் திருவுருவே! செல்வமக மேரே!

தித்திக்கும் செந்தேனே! தெவிட்டாத கரும்பே!

பைந்தமிழின் நறுங்கனியே! பழங்கனிந்த ரசமே!

பதம்பரவும் அடியார்தம் பவங்களையும் மருந்தே!

அந்தமிலா முழுமுதலே வேல்மயிலென் றறைவோர்

அகத்திலறு திருவிளக்கே! ஆறெழுத்தின் பயனே!

எந்தமையோர் பொருட்படுத்தி எழுந்த திருத் துரையே!

இனியுனது திருவடியை இமைப்பொழுதும் மறவேம்”[17]

என்று ஔவையார் போற்றும் நிலையில் முருகப்பெருமான் பெருமைகள் அனைத்தும் தெரியவருகின்றன.

இவ்வகையில் பல்வேறு சொல்லாடல்களை அழகுடன் அமைத்து நிற்பது சேய்த்தொண்டர் புராணம் ஆகின்றது.

எண்ணலங்காரம்

சொல்லால் அலங்காரம் செய்து தன் புராணத்தை வலுவூட்டியதுபோல எண்களைக் கொண்டு அலங்காரம் செய்து புராணத்தைச் சிறப்பித்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இத்திறத்திற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்.

‘இயம்புபல மொழியனைத்தும் இயங்குபொருளொன்றாய்

இருசுடராய் மும்முதலாய் ஈரிரண்டுமறைாயய்ச்

சுயம்புவாய்ப் புலனைந்தாய் சமயமிரு மூன்றாய்த்

தடங்கடல்கள் ஓரேழாய்த் திசைகள் இருநான்காய்

நயம்புரிகோள் ஒன்பதாய் நாடிகள் ஈரைந்தாய்

நவில்பதினோரு ருத்திரராய் ஞாயிறு முந்நான்காய்

அயம்பலவாயுறு முதல்வா நின்சரிதம் அரங்கேற்ற

அவையிலெனக் கபசெயம்நேராமல் எழுந்தருளே"[18]

என்ற பாடலில் ஒன்று முதல் பன்னிரண்டு வரை முருகப்பெருமானைப் பாடுகிறார் சொக்கலிங்கனார். இப்பாடல் கச்சியப்பர் கந்தபுராணத்தை அரங்கேற்றும்போது ஏற்பட்ட தடங்கலைத் தவிர்க்க முருகனை வேண்டிய நிலையில் பாடப்பெற்றுள்ளது. முருகப்பெருமானின் பன்னிரண்டு கரங்களும் கச்சியப்பருக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வகையில் பாடலைப் புனைந்துள்ளார் சொக்கலிங்கர்.

ஒன்று - இயங்கு பொருள்

இரண்டு – சுடர்கள் (சூரியனும் சந்திரனும் இயங்குவது முருகனால்)

மூன்று - மும்முதல் (மூன்று கடவுளர்க்கும் முதலான கடவுள் கந்தன்)

நான்கு - மறைகள் நான்கிலும் உறைபவன் முருகன்

ஐந்து - புலன்கள் ஐந்தின் இயக்கத்தையும் கட்டுப்படுத்தும் கடவுள்

ஆறு - சமயங்கள் ஆறு அவற்றில் கௌமாரத்தின் தலைவன் முருகன்

ஏழு - கடல்கள் ஏழு அவற்றின் வடிவமானவன் கந்தன்

எட்டு - திசைகள் எட்டு அவற்றைக் காப்பவன் கந்தன்

ஒன்பது - கோள்கள் ஒன்பது, அதன் இயக்கத்தைக் கணக்கிடுபவன் முருகன்

பத்து - நாடிகள் பத்துவகை. அவற்றின் தலைவன் முருகன்

பதினொன்று- ருத்திரர் பதினொருவர் அவர்களை இயக்குபவன் முருகன்

பன்னிரண்டு- பன்னிரு ஞாயிறுகளாக விளங்குபவன் முருகன்

என்று ஒன்று முதல் பன்னிரண்டு எண்களை அடுக்கிப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

இவ்வகையில் எண்களை அலங்காரமாகத் தந்துக் கவிதையைச் சிறக்கச் செய்யும் எண்ணலங்காரக் கவிஞராகச் சொக்கலிங்கனார் விளங்குகிறார்.

வருணனை

கவிதைக்கு அழகு சேர்ப்பதில் வருணனை முக்கிய இடம் பெறுகிறது. வருணனை என்பதற்கு " நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்படி அழகுற விவரித்து உரைத்தல் -புனைவுரை"[19] என்று பொருள் தரப்பெறுகிறது. சேய்த்தொண்டர் புராணத்தில் பல்வேறு நாடுகள், நகரங்கள், ஊர்கள் இடம்பெறுகின்றன. முருகனடியார்கள், முருகன் ஆகியோரையும் வருணிக்கும் நிலை உள்ளது. இவ்வகையில் நேரில் காண்பது போன்ற நிலையில் வருணனையை அமைத்துச் சிறக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"மலைகடல் நாடு வளநகர் பருவம்

இருசுடத் தோற்றம் என்றினையன புனைந்து"[20]

என்று வருணனையைக் காப்பிய இலக்கணத்தில் ஒன்றாகக் கருதுகிறது தண்டியலங்காரம். மலை வருணனை, கடல் வருணனை, நாடு வருணனை, நகர வருணனை, பருவ வருணனை, இருசுடர் தோற்றத்தின் வருணனை என்று இவை பலவாறாக அமையலாம்.

சேய்த் தொண்டர் புராணத்தில் நாடு, நகர வருணனைகள் சிறப்பிடம் பெறுகின்றன. ஏனெனில் சேய்த்தொண்டர்கள் வேறு வேறு நாடுகளில் நகரங்களில் பிறந்ததனாலும், அவர்கள் பல முருகன் தலங்களுக்குச் சென்றதனாலும் நாடு, நகர வருணனைகள் சிறப்பிடம் பெறுகின்றன. இவை தவிர நாநில வருணனை, உருவ வருணனை போன்றனவும் சேய்த்தொண்டர் புராணத்துள்ள இடம்பெற்றுள்ளன.

நாடு வருணனை

சேய்த் தொண்டர் புராணத்தில் தமிழ் நாட்டின் உட்பிரிவுகளாகக் கடந்த காலத்தில் விளங்கிய பாண்டிநாடு, சேரநாடு, சோழநாடு, நடுநாடு, தொண்டைநாடு, திருமுனைப்பாடி நாடு போன்ற பகுதிகளில் வாழ்ந்த கந்தனடியார்களைப் பாடும் பொழுதுச் சொக்கலிங்கனார் நாடு வருணனையைக் கையாண்டுள்ளார்.

சோழநாடு

கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும், தெற்கில் வெள்ளாறும், மேற்கில் கோட்டைக்கரையும், வடக்கில் ஏணாடும் அமைய இருபத்து நான்கு காத நிலப்பரப்பு உடையது சோழநாடு ஆகும்.

“தேவர்கள் அரிமால் வேதன் தேடரும் பொருளதானோன்

யாவனோ அவன்சீர் கொள்வதே வாரம்˙தருள வந்த

பாவலர் மூவர் சொற்ற பசுந்தமிழ் மாலை பூண்ட

கோவில் நூறொடு தொண்ணூறு கொண்டதெங்குளிர் நீர்நாடு

பையரா அணியும் வேணிப் பரமனாம் யாவருக்கும்

ஐயனாம் அவன்பொற் றாளை அன்பொடு பரவி அன்னான்

செய்யதாள் நீழல் மேய திருத்தொண்ட ரேழொன்பானந்

துய்யரின் முப்பத்தேழ்வர் தோன்றிய நெஞ்சோ ணாடு”[21]

என்றெல்லாம் சோழநாடு வருணிக்கப்படுகிறது. நால்வரால் பாடப்பெற்ற சிவத்தலங்கள் நூற்றுத் தொன்னூறு உடைய நாடு சோழநாடு. சிவத்தொண்டர்கள் அறுபத்து மூவரில் முப்பத்தேழுபேர் சோழநாட்டைச் சார்ந்தவர்கள். அவர்களைக் கொண்ட நாடு என்று சோழநாட்டைப் பெரியபுராண வழியில் சிறப்பிக்கிறார் சொக்கலிங்கனார்.

வள்ளலார் பிறந்த நாடு சோழநாடு. வள்ளலாராகிய இராமலிங்க நாயனார் புராணத்தில் சோழநாடு வருணனை நலம் பெறுமாறு சிறப்பிக்கப்பெறுகிறது.

“விதியைச் சிறையிலிட்டளவில் திருவிளையாட்டயர்ந்தோன் திருவருளாற்

பொதியக் குருக்கள் அநுக்கிரகம் பொலிநீர்ப் பொன்னி நதியருள்நல்

நிதியைப் பகுவாயான் மடுத்து: நிமிர்ந்த பொலிநன்னெடுமாடம்

மதியைச் சுடரைப் பொர எழல்போல் வயங்குவது பூம்புனல்நாடு”[22]

விதியை அதாவது தலைவிதியை எழுதுபவனான பிரம்மனைச் சிறை செய்த கந்தன் அருள் பெற்றவர் பொதிகை முனி அகத்தியர். அவரால் சோழநாட்டில் காவிரி ஆறு

ஓடியது. பெரிய மாட மாளிகைகள், சந்திரனைத் தொட்டுவிடுவதுபோல எழுந்துயர்ந்து நிற்கும் மாளிகைகள் பெற்ற நாடு சோழநாடு ஆகும்.

இவ்வாறு சோழநாடு பெருமைபட சேய்த்தொண்டர் புராணத்தில் வருணிக்கப்பெறுகிறது.

<u>தொண்டை நாடு</u>

தொண்டை நாடு என்பதன் எல்லை மேற்குத் திசையில் பவள மலை, வடக்கு திசையில் வேங்கட மலை, கிழக்கில் வங்காள விரிகுடா கடல், தெற்கில் பினாகினி என்ற அளவில் இருபது காத நில எல்லை உடையது தொண்டை நாடு. இதனைத் தன் புராணத்தில் பல இடங்களில் பாடியுள்ளார் சொக்கலிங்னார்.

“காலி பெருகக் கழனி தொறும் கழுநீர் மலர நந்தி மலை,

மோலி மிசைநின் றிழித்தாழி முழக்கின் முழங்கித் திசைகள்தொறும்

கோலி நெடுமா நிலமினுளங் குளிரத் தழுவிக் குதுகுலிக்கும்

பாலியருளாற் பல நலனும் பயக்கும் தொண்டை வளநாடு”[23]

என்று தொண்டை நாட்டின் வளம் பாடுகிறார் சொக்கலிங்கனார். மழையின் வருகையால் நிலம் குதூகலிக்கும் பெருமை வாய்ந்தது தொண்டை நாடு என்று இந்நாடு வருணிக்கப்படுகிறது.

திருப்புகழ்ச் சுப்பிரமணியனார் பிறந்த நாடு தொண்டை நாடு. அவர் பிறந்த நாட்டைச் சிறப்பிக்கும் நிலையில் பின்வரும் பாடலைப் படைக்கின்றார் சொக்கலிங்கனார்.

“வான்றோய் நந்தி நெடுங்குவட்டின் வயினும் பவித்து மணியுந்தித்

தோன்றோய் பைம்போதள்ளி வரும் தெய்வப் பாலி நலங்கொழிப்ப

மான்றோய் அங்கைப் பரமனருள் வடிவேல் முருகன் அருட்கிலக்காம்

சான்றோர் பலர்க்கும் பிறப்பிடமாயத் தழையும் தொண்டை வளநாடு”[24]

என்ற நிலையில் சிறப்புடையது தொண்டைநாடு. முருகப்பெருமான் அருளுக்கு இலக்காகி நிற்பது தொண்டைநாடு. மேலும் சான்றோர் பலர் பிறப்பதற்கு இடமாக அமைந்தது தொண்டைநாடு. நந்தி மலை வானோங்கி மழை பொழியச் செய்யும் வளமுடையது தொண்டைநாடு என்றும் இப்பாடல் குறிக்கிறது. கச்சியப்பர் பிறந்ததும் தொண்டைநாடு ஆகும்

“சேயிரு பதங்களல்லால் வேறெதுவும் சிந்தியாநல்

நேயர்நற் கல்வி கேள்வி யாவையும் நிறைந்த நெஞ்ச

ராயின சீலர் மேலோர் அறிஞரைப் புலன்கடிந்த

தூயர் மற்றெவருஞ் சூழ்ந்து வாழ்வது தொண்டைநாடு”[25]

என்ற நிலையில சிறப்புடையது தொண்டைநாடு. கல்வி, கேள்விகளில் சிறந்தவர்கள், முருகன் புகழ் தவிர மற்றவர் புகழ் பாடாதவர்கள், புலன்கள் அடக்கிய அன்பர்கள், தூயவர்கள் ஆகியோர் வாழும் நாடு தொண்டைநாடு என்பது இப்பாடலின் பொருள். இவ்வாறு தொண்டைநாடு சிறப்புற சேய்த்தொண்டர் புராணத்தில் வருணிக்கப்பெற்றுள்ளது.

பாண்டிய நாடு

வெள்ளாற்றை வடக்கிலும், தெள்ளாரை மேற்கிலும், கன்னியாகுமரியைத் தெற்கிலும் கிழக்கில் வங்காளவிரிகுடாக் கடலையும் கொண்டது பாண்டிய நாடாகும். இது ஐம்பத்தாறு காத அளவு நிலப்பரப்பினை உடையது.

பாண்டியநாடு மீனாட்சிஅம்மையால் ஆளும் தன்மை பெற்றது. இதனைப் பின்வருமாறு வருணிக்கிறார் சொக்கலிங்கனார்

"பச்சைக் கொடியும் பைங்கொடியோர் பாகனும் பைந்தேனார்

செச்சைத் தொடைபூண் ஆண்டகையும் சிம்மாசனமுற் றிரு ஞாலம்

மெச்சத் தனிக்கோல் ஓச்சியநன் மேம்பாடுற்றுப் பூதலமேல்

விச்சைத் தமிழுக் கொருதாயாய் விளம்பும் பாண்டித் திருநாடு'[26]

என்று பச்சைக் கொடி போன்ற நிறமுடைய மீனாட்சியையும், பாகத்தில் பெண்ணை வைத்த சிவபெருமானும் இணைந்த இடம் பாண்டி நாடு. மேலும் தனியாட்சி செலுத்தும் நிலையில் சிம்மாசனம் கொண்டு மீனாட்சி ஆண்ட நாடு பாண்டிநாடு. தமிழுக்குத் தனியாட்சி தந்த நாடு பாண்டிநாடு என்று இந்நாட்டின் பெருமை காட்டப்பெறுகிறது.

பாம்பன் சுவாமிகள் பிறந்த நாடும் பாண்டிநாடு. அவரைப் பற்றிப் பாடுகையில் பின்வருமாறு அவரின் நாட்டை வருணனை செய்கிறார் சொக்கலிங்கனார்.

"வானவனே பல காலந் துருவரிதாய் வளர்ந்த மணிமவுலி மீதோர்

கூனலிளம் பிளைமிலைச்சும் கருணை நெடுங் குன்றினொரு கூறு கொண்ட

மீனவிழி இறைவிதிருச் செவிமடுத்துப் புளகமுற மிழற்றும் இன்பப்

பானன்மொழிச் சேவகனோர் தனித்திகிரி உருட்டியது பாண்டிநாடு"[27]

மேற்காண்பாடலில் மீனாட்சியம்மை தனித்து அரசசக்கரம் உருட்டியது பாண்டிநாடு. மேலும் மீனாட்சிக்குக் காது குளிர சேதிகளைச் சொல்லும் அன்பன் சிவபிரான். இவர்கள் இருக்கும் இடம் பாண்டிநாடு என்றுச் சிறப்பிக்கப்பெறுகிறது. இதன் காரணமாக மீனாட்சி அம்பிகையின் அ்ரசாட்சி இனிய காட்சியாகப் படிப்பவருக்குக் கிடைக்கின்றது.

நடுநாடு

நடுநாட்டின் எல்லையைச் சொக்கலிங்கனாரே விவரிக்கிறார்.

'வடதிசை கடியாறாமிளங் கதிரோன் வருங்கீழ்பாற்

கடலது வெள்ளாறாமது தென்பாற் கவினாரும்

குடதிசைக் கொல்லிக்கிரி இதன் நடுவிற் குளிர்பூமின்

நடமிட மன்னும் சீருடைத் தம்மா நடுநாடு"[28]

நடுநாட்டின் எல்லையை விளக்குகிறது மேற்பாடல். கிழக்கில் கடல், தென்பகுதியில் வெள்ளாறு, மேற்குதிசையில் கொல்லிமலை, வடதிசையில் ஆறும் விளங்கும் நாடு நடுநாடு என்கிறார் சொக்கலிங்கனார்.

'நேயர்கள் தம்மைத் தாங்குதலானும் நிலம் போற்றும்

தூயர்கள் சாருஞ் சீருறலானும் துகளென்னும்

தீயன தம்மைக் காயுதலானும் சிகியேறும்

நாயகன் என்னப் பொலிவுறும் அம்மா நடுநாடு"[29]

என்று நடுநாட்டின் புகழ் பரவப்படுகிறது. நடுநாடு முருனை ஒத்தது. ஏனெனில் முருகப்பெருமான் தன்னடியார்களைத் தாங்குபவன். அதுபோல நடுநாடு முருகனடியார்களைத் தாங்குகிறது. முருப்பெருமான் தன் அடியார்களைப் பெருமைப்படுத்துவான்.அதுபோல நடுநாடும் முருக அடியார்களைப் பெருமைப்படுத்தும். தீயவற்றை அழிப்பவன் முருகன். அதுபோல நடுநாடும் தீயனவற்றைக் காயும் தன்மையது. எனவே முருகனைப் போன்ற பண்புகளை உடையது நடுநாடு எனப் போற்றுகிறார் சொக்கலிங்கனார்.

பொத்தப்பி நாடு

இறைவனுக்குக் கண் தந்த கண்ணப்பர் பிறந்த நாடு பொத்தப்பி நாடாகும். கண்ணப்பரின் தந்தையார் சேய்த்தொண்டருள் ஒருவராகக் கொள்ளப்பெற்றுள்ளார். நாகன் என்னும் பெயருடைய அவரின் சிறப்பினைச் சொல்லும் புராணத்துள் பொத்தப்பி நாடு பற்றி செய்திகள் தரப்பெற்றுள்ளன.

"காமர்வண் டிசைமி ழற்றக் களிமயில் நடனம் ஆடத்

தாமரை மலர்கள் பூப்பத் தடமெலாம் தரளங் காலச்

சேமநன் னிதிகொழிக்கும் செறுவெலாம் விழைவுதுன்ற

பூமகள் வதனம் என்னப் பொலியும் பொத்தப்பி நாடு" [30]

என்ற வருணனை பொத்தப்பி நாடு இயற்கை வளம் நிறைந்தமைந்திருந்தது என்பதைக் காட்டுகிறது. வண்டுகளின் பாடலும், மயிலின் ஆடலும் ஒருபுறம் நிகழ, தாமரைகள் பூத்துநிற்க. செல்வ வளம் கொழிக்க பூக்களால் செய்யப்பெற்ற மகளின் உடல் போலக் காட்சி தருவது பொத்தப்பி நாடு என்கிறார் இப்புராண ஆசிரியர்.

திருமுனைப்பாடி நாடு

நல்லியக் கோடன் வாழ்ந்த நாடு திருமுனைப்பாடி நாடு ஆகும். இந்நாட்டின் சிறப்பினை

“ மண்ணை ஆள்பவர் திருவினைக் கண்டுளம்மிக மகிழ்ந்து
விண்ணை ஆள்பவர் குடிபுகலாம் என விரும்பப்
பெண்ணை ஆறெனும் செவிலியின் பேரருள்
பண்ணை சூழ்வது திருமுனைப்பாடி நன்னாடு” [31]

“ கோல மாடமும் குளிர்செழுஞ் சோலையும் குலவ
நீல வாவியும் தாமரைப் பொய்கையும் நிலவச்
சால ஏனைய பொருள்களும் புலந்தொறும் தழைய
ஞான மூன்றினும் நிகரிலாதது நடு நாடு” [32]

என்று நடுநாட்டின் ஒருபகுதியாக விளங்கும் திருமுனைப்பாடி நாட்டினை வருணிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். விண்ணை ஆள்பவர் குடிபுகலாம் என்ற நிலையில் பெண்ணையாற்றின் செவிலித்தன்மையால் சிறப்புறுவது

திருமுனைப்பாடி நாடு. கோல மாடம், குளிர்சோலை, நீலவாவி, தாமரைப் பொய்கை என இயற்கை சிறப்புடன் திகழ்வது திருமுனைப்பாடி நாடாகும்.

இவ்வாறு சோழநாடு, தொண்டைநாடு, நடுநாடு, பாண்டியநாடு, திருமுனைப்பாடி நாடு, பொத்தப்பி நாடு ஆகிய நாடுகளின் சிறப்பினை நாட்டுவளமாக வருணித்துப் பாடுகிறார் சொக்கலிங்கனார்.

நகர வருணனை

திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, நாகப்பட்டிணம் போன்ற நகரங்களையும் முருகனின் படைவீடான பழனி, திருப்பரங்குன்றம், திருத்தணிகை, திருச்செந்தூர் போன்ற பல ஊர்களையும் தம் புராணத்தில் வருணித்து பாடி மகிழுகின்றார் சொக்கலிங்கனார். இவ்வருணனை வழியாக அந்த அந்த நகரத்திற்குச் சென்ற வாய்ப்பினைப் படிப்பவர்கள் பெறுகின்றனர்.

திருவண்ணாமலை

சேய்த்தொண்டர் புராணத்தினால் அதிக பாடல்களால் பாடப்பெற்ற அருணகிரிநாதருக்கும் திருவண்ணாமலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதன் காரணமாக அதன் பெருமையைப் பல பாடல்களில் பாடுகிறார் சொக்கலிங்கனார். திருவண்ணாமலைத் தல வரலாறு முழுவதையும் சொக்கலிங்கனார் அறிந்து அவற்றை, நாற்பத்தோரு பாடல்களில் பாடியுள்ளார்.

“இனையநன் நாட்டில் மால்அயன் கீழ்மேல் எனமும் புள்ளமாய்த் துருவ

அனையவர் காணற் கருந்தழற் கிரியாய் அடியவர்க் கங்கைஅங்கனியாய்ப்

புனைபல நாமத் தொன்றினை ஒரு கால் பொற்பொடு நினைப்பவர்க்கெல்லாம்

வினைகளைந் துயர்வீடருள்குக தலமாய் விளங்குவது அருணை மாநகரம்”[33]

என்ற பாடலில் அடி முடி தேடிய புராணச் செய்தி காட்டப்பெற்றுள்ளது. திருமால், பிரம்மாவால் அடைய முடியாத இறைவனை அவன் நாமம் ஒன்றைச் சொல்லி பொற்போடு ஒருகால் நினைப்பவர்க்கு அவன் எளிதில் காட்சி தந்து வீடு அருளும் தலம் திருவண்ணாமலைத்தலம் என்று அடியவர்கள் எளிதில் அடையக் கூடிய தலம் திருவண்ணாமலை என்பதாகக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

திருவண்ணாமலையில் உள்ள தீர்த்தச் சிறப்பு பற்றியும் சொக்கலிங்கனார் பாடுகிறார்.

“ஈனமில் ஆறெழுத்து இயம்பி ஆடினோர்க்

கூனமில் ஞானமும் உலகம் போற்றுறும்

மானமும் தந்தருள் வசிட்ட தீர்த்தமும்

ஏனைய தீர்த்தமும் இலகும் தொல்பதி”[34]

என்று வசிட்டத் தீரத்தம் முதலான பல தீர்த்த மேன்மைகளை உடையது என்று பெருமைப்படுத்துகிறார் சொக்கலிங்கனார்.

<u>மதுரை</u>

நக்கீர தேவ நாயனார் பிறந்த ஊர் மதுரை.அதன் புகழைப் பல நிலைகளில் சிறப்பித்து வருணிக்கிறார் சொக்கலிங்கனார்.

“திங்களுஞ் சடைமுடித் தெய்வநாயகன்

அங்கயற் கண்ணியோடு அமர்ந்து செய்ய கோல்

செங்கரத் தெடுத்தர சாட்சி செய்தநன்

மங்கலம் பொலிவது மதுரை மாநகர்"[35]

என்று மதுரையைச் சிறப்பிக்கிறார் சொக்கலிங்கனார். அங்கயற்கண்ணியுடன் பெருமான் எழுந்தருளிய இடம் மதுரை, மீனாட்சி செங்கோல் கொண்டு வாழும் நகரம் மதுரை என்று மதுரை நகரம் பெருமை கொள்கிறது. மதுரையின் வணிகச் சிறப்பினை

"பட்டுடை நூல்உடை கனகம் பன்மணி

ஒட்டுடை அணிபணி உணவு தானியம்

மட்டுடை மலர்முதல் ஒழிந்த மற்றவும்

செட்டுடை வாணிகம் சிறக்கு மாநகர்"[36]

என்று பாடுகிறார் சொக்கலிங்கனார். பட்டு, பொன், பன்மணிகள், உணவு தானியம், மலர், மற்ற பொருள்கள் விற்கும் நகரம் மதுரை என்று அதன் வணிகச் சிறப்பினைப் பாடுகிறார் புராண ஆசிரியர்.

<u>காஞ்சிபுரம்</u>

கச்சியப்பர் முதலான பல முருக அன்பர்கள் பிறந்த இடம் காஞ்சி மாநகரம், இந்நகரின் பெருமையும் அளவிடற்கரியது.

'அடிகளுக்கு அணியடியவரைத் தாங்குதல்

குடிகளுக்கு அணியிளங் குகனைப் பேணுதல்

படிகளுக்கு அணி செழும் பரத கண்டமாங்

கடிநகர்க்கணி திருக்காஞ்சி என்பவவே"[37]

நகர்களுக்குள் அணியெனத் திகழ்வது காஞ்சி என்று அதன் பெருமை மேற்பாடலில் காட்டப்பெறுகிறது.

நாகப்பட்டிணம்

அழகு முத்து நாயனார் என்னும் சேய்த்தொண்டர் பிறந்த நகரம் நாகப்பட்டிணம் ஆகும். இதன் காரணமாக அந்நகரின் வளத்தைப் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"பொன்னி தினமா தந்தநடம் புரிமா வளவர் திருநாட்டிற்

கன்னி ஒருபங் கினரளித்த கந்தக் கடவுள் கமலபதம்

சென்னிமிசை கொண்டுஇனிதிறைஞ்சும் செல்வக் குடிகள் சிறப்போடும்

மன்னி மகிழ்வாய் வாழ்வதுநீன் மகரி வளமார் திருநாகை"[38]

என்று நாகப்பட்டிண நகரின் பெருமையைப் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். மேலும் நாகப்பட்டிணக் கடல் வணிகச் சிறப்பினைப் பின்வருமாறு வருணிக்கிறார்.

"சிங்கை யவனம் சீனம்பல் தீவு தொறும்நம் செழுங்கீர்த்தி

பொங்க வணிகம் வலபுரிந்தப் புலங்கள் அருள்பல பொருளீட்டு

வங்கம் கொண்டு வருபவற்றை வாங்கித் திருவாய் மடுத்தோங்கும்

துங்க நெடுமா ளிகைமாடம் துவன்றுவது சீர் கெழுநாகை" [39]

நாகப்பட்டிணத்தில் உள்ள மாளிகைகளின் சிறப்பினை இப்பாடலில் காட்டுகிறார் புராண ஆசிரியர். சிங்கப்பூர், யவன தேசம், சீனா போன்றவற்றில் இருந்து நாகப்பட்டிணத் துறைமுகத்திற்குப் பெரும் பொருள்கள் வந்துள்ளன. அவற்றை நெடுமாளிகைகள் கொண்டு விளங்குகின்றன என்று கடல்வணிகத் தலமாகக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

திருச்செங்கோடு

திருச்செங்கோட்டில் சிவபெருமான் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி தருகிறார். அவர் உறையும் அவ்வூர் சார்ந்தவர் குணசீல நாயனார். அவரைப் பற்றிப் பாட வருகையில் திருச்செங்கோடு பற்றியும் வருணிக்கிறார் சொக்கலிங்கனார்.

"ஓதிய தி.ஃ.தொன் றோபல் உலகருள் மரகதக் கொம்

பாதியில் அயன்மால் தேடி அறியொணா வண்ணம்

அம்பொற் சோதியின் வடிவாய் நின்ற சுந்தரத் திருக்கோலத்திற்

பாதி கொண்டுவகை பூத்த பழம்பதி திருச்செங்கோடு" [40]

உருவில் ஒரு பாதியை உமையவளுக்குத் தந்து மறுபாதியைத் தான் எடுத்துக் கொண்டு உவகை பூக்கும் உருவமாக எம்பிரான் சிவபிரான் எழுந்தருளிய மலையை

உடைய பழம்பதி திருச்செங்கோடு என்று இங்குத் திருச்செங்கோட்டின் பெருமை வருணிக்கப்படுகிறது. சுந்தரத் திருக்கோலம் இப்பாடலைப் படிப்பவரின் கண்களுக்குத் தெரியும் வண்ணம் வருணனை அமைந்துள்ளமை சிறப்பாகும்.

திருவாரூர்

திருவாரூரின் சிறப்பினை ஆறு பாடல்களில் வைத்தியநாத தேசிக நாயனார் புராணத்தில் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“இத்திரு நாட்டினில் அம்பிகை பங்குடை இறையவனருள்ஞான சக்தி

தான்பல சிறப்பொடெழுந்தருள் தமனியக் கோயில் தோறும்

எத்திறத்தவர்களும் கண்டுகண்டின்புற இயங்கு பொற்கோபுரங்கள்

சித்திரத் தோவியர் தீட்டருஞ் சிறப்பொடு தோன்றுவது திருவாரூர்” [41]

என்று கோபுரங்களும் சித்திர மாளிகைகளும் கொண்டமைந்தது திருவாரூர் என்கிறார் வரகவி சொக்கலிங்கனார்.

மேலும் இவர் திருவாரூர்ப் பெருமையை சைவப் பெருமை கொண்டு காண்கிறார்.

“கன்றொன்றைக் காய்ந்த ஓர் கான்முளையைத் தேர்க்காலாற்

கொன்றொன்றும் பேர்படைத்த கோமானூர் திருவாரூர்

புன்றொண்டு பூண்டொழுகும் புலைச் சிறியேன் தினம்போற்றும்

வன்றொண்டப் பெருந்தகையார் வாழ்ந்தவூர் திருவாரூர்”[42]

என்று திருவாரூர் நகரினைச் சைவத் திருநகராகக் காண்கிறார் வரகவி சொக்கலிங்கனார். கன்று அழிந்தது கருதி, தன்மகனைத் தேர்க்காலில் இட்ட கோமானாம் மனுநீதிச் சோழன் வாழ்ந்த ஊர் திருவாரூர் என்றும் தான் தினம் வணங்கும் சுந்தரர் வாழ்ந்த ஊர் திருவாரூர் என்றும் பெருமைபட மொழிகின்றார் இப்புராண ஆசிரியர்.

இவ்வாறு பல்வேறு நகரங்களின் அழகினைப் பாடும் தேனூர் வரகவி சொக்கலிங்கனார், முருகனின் ஆறுபடைவீடுகளின் அழகினையும் பாடுகிறார் குறிப்பாக நக்கீரர் வரலாற்றில் ஆறுபடைவீடுகளின் அழகு சிறப்புடன் காட்டப்பெறுகிறது.

<u>திருச்சீரலைவாய்</u>

முருகப்பெருமான் போர்க்கோலத்தில் வீற்றிருக்கும் இடம் திருச்செந்தூர் ஆகும். இத்திருச்செந்தூர் சேய்த்தொண்டர் புராணத்தின் தொடக்க ஊராகவும் அமைகிறது.

“மயிலினம் நடமிட மறையின் இன்னிசை

குயிலினம் கூவிடக் குளிரும் பூம்பொழில்

வெயிலவன் ஒளிவிழா விதம் இயங்கிடும்

கயிலையங் கிரியதெம் கடவுள் ஆலயம்” [43]

என்றும்

“ அத்தலத் தொருபகல் அமரர் ஈட்டமும்

சித்தரும் முநிவரும் பிறருஞ் சேவகன்

உத்தரங் கோடு புகுந்துமையொர் கூறுடை

நித்தனை இறைஞ்சி நின்றிவை நிகழ்த்துவார்” [44]

என்று திருச்செந்தூர் தேவர்கள் வந்து செல்லும் இடமாகவும், சித்தர்கள் முனிவர்கள் வந்து கூடும் இடமாகவும், மயில்கள் நடமாடும் இடமாகவும், வேதங்கள் ஒலிக்கும் இடமாகவும், குயிலினம் கூவும் இடமாகவும் பூம்பொழில்கள் சூழ் இடமாகவும் சேய்த்தொண்டர் புராணத்துள் காட்டப்பெறுகிறது.

பழனி

முருகன் வாழும் ஆறுபடை வீடுகளில் முக்கியமானது தென்பழனி ஆகும். இங்கு முருகப்பெருமான் தனியாக துறவுக் கோலத்துடன் வீற்றிருக்கிறார். இப்பழனியின் பெருமையைப் பல பாடல்களில் பாடுகிறார் தேனுர் வரகவி சொக்கலிங்கனார்.

‘விழவு மிக்கது விள்ளற் கொணாதபே

ரழகு மிக்கது குன்றுதோறாடினங்

குழகன் ஆலயங் கொண்டு குலாவு தென்

பழநி என்னும் நன்னாமப் பழம்பதி”[45]

என்று பழனியம்பதியை விழாக்கள் நடைபெறும் நகரமாகக் காண்கிறார் இப்புராண ஆசிரியர்.

“கலைம டந்தையு லாவகவன் கண்ணது

அலைம டந்தையு லாவும் அகத்தது

மலைம டந்தை மகன் பதம் போற்றித்தம்

தலைவ ணங்கு தபோதனர் சார்வது”[46]

என்ற நிலையில் முப்பெருந் தேவியர் வாழும் தலமாகப் பழனித்தலம் விளங்குவதாக தேனூர் வரகவி சுப்பிரமணியனார் காண்கிறார். இதனை

“சேரர் தந்திரு நாட்டிற் சிறப்பது

ஈர மார்தமி ழின்பங் கொழிப்பது

வீர தீர விவேகிகள் மிக்கது

பார திற்றனக் கொப்பறு பண்பது” [47]

என்று பழனி நகரின் பெருமையைப் பாடுகிறார். இவையன்றி இன்னும் பல பாடல்களில் இத்தலத்தின் புகழை விரித்துரைக்கிறார் இப்புராண ஆசிரியர். இவற்றைப் படிக்கும் வாசகர்கள் அந்நகரின் அழகை அணு அணுவாக ரசிக்க இயலும்.

திருவேரகம்

"செந்தில்முதல் ஏனைய திருத்தலம் அடைந்து
கந்தனடி போற்றிமணி கால அலைமோதி
உந்திஎழு காவிரி உலாவுதிருநாட்டிற்
சந்தர மிகுந்துயர் சுவாமிமலை கண்டார்" [48]

என்று திருவேரகம் பாடப்படுகிறது. அலைகள் மோதும் காவிரி, அலைகள் உந்தி எழும் காவிரி பாயும் திருநாட்டில் அமைந்துள்ளது சுவாமி மலை என்று நக்கீரர் இவ்விடத்திற்கு வந்தபோது சுவாமிமலையின் அழகைப் பாடுகிறார் சேய்த்தொண்டர் புராண ஆசிரியர்.

திருப்பரங்குன்றம்

நக்கீரர் திருப்பரங்குன்ற மலைக்குச் சென்று வழிபட்ட நிலையில் அதன் அழகையும் வருணிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"தல்லியென அன்பர்கள் நமக்கருள் கொழிக்கும்
செல்வ முருகன்பதும சீரடிகளுக்கு
நல்லன ஊறுந்தமிழ் நறுந்தொடையல் சூட்டிப்
பல்வளம் இயங்குறு பரங்கிரி அகன்றார்"[49]

என்றவாறு பரங்கிரியும் பாடல் பெறுகின்றது.

திருத்தணிகை

முருகப்பெருமானின் சீற்றம் தணிந்த இடம் திருத்தணிகை ஆகும். திருத்தணிகையில் பிறந்தவர்கள் அனைவரும் சேய்த்தொண்டர்கள் என்று உரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“அமரரும் அமரர்கட் கரசனும் வேதனும்

ஆயனும் பூதரும் ஆயநீர் அற்றைநாள்

எமதுநல் அனிகராய்ப்ப் போதர அளப்பரும்

இழிசெயல் ஆற்றுவெஞ் சூரனைக் குழுவொடும்

சமரிடைத் தாக்கியே சங்கரித் தச்செருத் தணித்ததால்

இத்தலத் தணிகைதந் நாமங்கொண்

டெமதொரு திருப்பதி என விளங்கிடுமிவண்

இனிதுநீர் உரைமின்என அழகிய குமரவேள்

கட்டளை யிடுதலும் கடவுளர் ஈட்டமும்

கனிவுடை பூதர்முன் கணமுந்தம் ஐயன்மேல்

மட்டவிழ் மாமலர் மாமழை தூரத்துநின் வழிவழிக்

குடிகளாய் வதிகுவம் எங்களை

விட்டகலாதி வண் விளங்கும்இப் பொலன்கிரி

மீதெழுந் தருளுதி என அவர் வேண்டலும்

நெட்டிலை வேலினான் தணிகையங் குவட்டிடை

நின்றனன் உலகெலாம் நிறைகயஞ் சோதியாய்"[50]

என்ற பாடல்களில் திருத்தணிகையின் வரலாறும் பெருமையும் வருணிப்பும் இடம்பெறுகிறது. சூரனை வென்றபோது, தேவர்கள் குழுவாக ஒற்றுமையாக நின்று முருகனுக்கு உதவினர். அவர்கள் சிறந்து வாழ ஓரிடம் தந்தான் முருகன். அதுவே கோபம் தணிந்த இடமான தணிகை மலை. அங்கு அமரர்களை வாழக் கட்டளை விடுத்தான் முருகன்.

இக்கட்டளையை ஏற்று முருகனுக்கு மாமலர்கள் தூவி அவர்கள் வாழத் தலைப்பட்டனர். இருப்பினும் முருகனது அருள் தம் குடிதோறும் வந்து அருள வேண்டும் என்பதாக முருகனிடம் வேண்டுகோள் வைத்தனர். முருகப்பெருமானும் அதனை ஏற்றுத் திருத்தணிகை மலையில் அமர்ந்தான் என்று புராண வரலாறு வெளிப்படும் அளவில் இவ்விருபாடல்களை அமைத்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

குன்றுதோர் ஆடல் என்ற நிலையில் மற்றும் பல படைவீடு முருகனுக்கு உண்டு. இதனை அடிப்படையாக வைத்து, வள்ளிமலை, ஈங்கோய்மலை போன்ற பல தலங்களைப் பாடியுள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

இந்நகரங்கள் அன்றி நாநில இயல்பினையும் வருணனை செய்யும் இயல்பினராக வரகவி சொக்கலிங்கனார் விளங்குகிறார்.

நாநில வருணனை

அருணகிரிநாத நாயானர் புராணம் அளவால் பெரியதாகச் சேய்த்தொண்டர் புராணத்துள் பாடப்பெற்றுள்ளது. இப்புராணத்துள் நாநில வருணனை சிறப்பிடம் பெறுகிறது. இதன் காரணமாக அகப்பொருள் இலக்கணம் பாடுவதில் வல்லவராகவும் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் விளங்குகிறார் என்பது தெரியவருகின்றது.

குறிஞ்சி நில வருணனை

குறிஞ்சி நிலக் கடவுள் முருகன் ஆவார். அவரின் அடியார் அருணகிரிநாதர். அருணகிரிநாதரும் அவரின் திருப்புகழும் முருகப் பெருமானின் மிகு விருப்பத்திற்கு உரியனவாகும். இவ்வகையில் அருணகிரிநாதர் பிறந்த நடு நாடு அனைத்து நில வளங்களையும் கொண்டது என்றுச் சிறப்பிக்கிறார் வரகவி சொக்கலிங்கனார்.

“தேனலங் குலவும் கனிகளும் மதுரத் தேறலும் மற்றவும் ஒருபால்

கானக வேங்கை உகிரெயிறொருபால் கரிமருப் புழை மருப்பொருபால்

மானதன் புலித்தோல் முதலிய ஒருபால் மறிஎலிகளின்மயிரொருபால்

ஏனல் மற்றனவோர் பாலிவை யாவும் இலங்குவ தனித்தனி மலைபோல்”[51]

என்று நடுநாட்டில் அமைந்த குறிஞ்சி நிலத்தைப் பாடுகின்றார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். குறிஞ்சி நிலத்தில் ஒரு மலை மட்டும் இல்லையாம். பற்பல மலைகள் உள்ளனவாம். கனிகள், தேன் போன்றன மலைகளாக விளைந்துள்ளன. வேங்கையின் நகங்கள் ஒருபுறம் மலைபோல் குவிந்துள்ளன. யானையின் தந்தங்கள் ஒருபுறம் மலையாகக் குவிந்துகிடக்கின்றன. மான், புலி ஆகியவற்றின் தோல் பகுதிகள் ஒருபுறம் மலையாக உள்ளன. காட்டு எலிகளின் மென்மையான தோல்

பகுதிகள் ஒருபுறம் குவிந்து கிடக்கின்றன. பன்றியின் கொம்புகளும் அவ்வாறே மலை போலக் கிடக்கின்றன. எனவே இவையெல்லாம் பற்பல மலைகளாகத் தோன்றும் அளவில் வளம் உள்ளதாக குறிஞ்சி நிலம் பற்பல வளமிகு மலைகளை உடையதாக விளங்குகின்றது.

குறிஞ்சி நிலத்தில் உள்ள விலங்குகளைப் பட்டியலிட்டும் அந்நில வளத்தைக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“கிம்புரிக் கோட்டுக் கடகரி யனைய கேழல்குடாவடி மரைமான்

கம்புள் குறும்பூழ்முதலொழிந்தனவும் கலங்குற கார்முகம் வாங்கி

அம்புகள் ஏவி அளப்பரு நிதி கொண்டலுடைக்காளையர் மீள்வர்

வம்புறு பிணையல் மறுலரு கூந்தல் மடநலார் கொண்டுள மகிழ”[52]

என்ற நிலையில் குறிஞ்சி வளம் வரகவி சொக்கலிங்கனாரால் பாடப்படுகிறது.

<u>முல்லைநில வருணனை</u>

முல்லை நிலத்தின் அழகு, அந்நிலத்தில் பெய்யும் மழை, வாழும் விலங்குகள், பறவைகள் அனைத்தையும் அழகுற தேனூர் வரகவி சொக்கலிங்கனார் பாடுகிறார்.

“மின்பயில் நெடுவான் வியன்கட்ல்மேய்ந்து மிளிர்மரகதமெனச் சூல்கொண்

அன்பமுதுகுக்கக் கானகங் கனிய ஆயர்கள் ஏருழுதளவில்

இன்ப முற்றுகுத்த வித்தின் முளைகண்டிலை பிரிந்தெழிலொடு தழைப்பப்

பொன்பயில் உடலில் மரகத ஆடை பூண்டெனப் பொலியு மென்முல்லை”[53]

என்ற பாடலில் கடலில் மேய்ந்து, சூல்கொண்டு பெய்யும் மழையையும், அதனால் விளைந்த நெற்பயிர் என்னும் மரகத ஆடையையும் காணமுடிகின்றது. நில வளத்தை ஒரு புகைப்படக் காட்சியாகத் தரும் அளவிற்கு இப்பாடல் வருணனைத் திறம் மிகுந்ததாக விளங்குகிறது.

முல்லை நிலத்தில் இயற்கை நாட்டிய அரங்கம் ஒன்றை கூட்டுவிப்பதாகப் பின்வரும் பாடல்வழி அறியமுடிகின்றது.

“புறவுகொம் பூதப் பொற்புறு கீதம் பூவைகள் பாடஅம் பொறியார்

இறகுடைச் சிரவம் பேரிகை முழக்கச் சிட்டினம் மத்தளங் கொட்ட

நறவுறுகுருந்தும் மவ்வலும் நோக்கி நகைத்தலர் தூற்றமற்றேனைப்

பறவைகள் நடனம் புரிதிறம் நோக்கிப் பல்பரிசருளுமென் முல்லை”[54]

என்ற பாடலில் புறாக்களல் கொம்பு போன்று ஒலி எழுப்புகின்றன. கிளிகள் கீதம் இசைக்கின்றன. இறகுகளை உடைய கௌதாரி முரசுகள் முழுங்குவதுபோல ஒலிக்கின்றன. சிட்டுக்குருவிகள் மத்தளம் முழங்குவதுபோல் ஒலிக்கின்றன. ஆடும் பறவைகள் அனைத்து இவ்வோசைக்கேற்ப ஆடுகின்றன. இதனால் ஆடரங்கமாக முல்லை அலங்காரம் தருகின்றது. நாரத்தை மலர்களும் மவ்வல் மலர்களும் கண்விழித்து இக்காட்சியைக் காண்கின்றனவாம். இவ்வாறு முல்லைநிலம் அழகு பெறுகிறது.

<u>மருத நில வருணனை</u>

உழவின் மேம்பாடு உரைக்கும், மருதநிலத்தினையும் அழகுற வருணிக்கிறார் தேனூர் சொக்கலிங்கனார்.

"சாலிசெங் கன்னல் வாழைபைங் கமுகுதலைக்குலைத் தெங்கு
பலாமா நீலிநன் மஞ்சள் இஞ்சிமற் றொழிந்த நிற்பவும் கிடப்பவும்
வாலிய கதிர்காய்க் குலைகளைத் தாங்கி வன்பொடு தோன்றுறு சிறப்பால்
வேலிறை மயில்மேல் இலங்குவ தென்ன விளங்குறும் வளங்கெழு மருதம்"[55]

என்று மருதநிலம் வருணனை செய்யப்படுகின்றது. சாலி, கன்னல், வாழை, கமுகு, தெங்கு, பலா, மா, மஞ்சள், இஞ்சி போன்ற தாவரங்கள் நின்றும், கிடந்தும் மருதநிலத்தின் வளத்தினைக் காட்டி நிற்கின்றன. வயல்களில் நெற்கதிர்கள் தலைசாய்த்து நிற்கின்றன. அவற்றின் கீழ் பச்சை நிறம் காணப்படுகிறது. இது மயில்மீது வேல் ஏந்திய வேலன் காட்சியைப்போல தெரிகிறதாம் புலவர்க்கு. இவ்வகையில் காணும் பொருள் எல்லாம் கந்தன் காட்சியாகவேத் தெரிகிறது தேனூர் வரகவி சொக்கலிங்கனாருக்கு.

'மன்னுசெவ் வாம்பல் மலர்நறு நீழல் மல்குற அதைமடு வெங்கும்
வன்னி படர்ந்ததென வெருண்டலரும் மட அனங்களும் இளங்குருகும்
கன்னல் உடைந்த சாறடு புகையைக் கருமுகில் எனக்குயில்ஏங்கப்
பொன்னிறக் கலவம் விரித்தக மகிழ்ந்து புரிவன நடமடமஞ்ஞை"[56]

என்ற நிலையில் மயில் நடமாடும் வளமுடையதாக மருதநிலம் விளங்குகின்றது. ஆம்பல் பூத்த நிலம். மடு எங்கும் நீர் நிறைந்து காணப்படுகிறது. அன்னங்கள் கிளிகளின் போக்கால் வெருள்கின்றன. இளங்குருகும் வெருள்கின்றன. கரும்பில் இருந்து வெல்லம் தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்படும் அடுப்பின் புகை மேகமாக விளங்குகிறது. இதனைக் கண்டு பொன் தோகை விரித்து மயில் ஆடுகிறது. இவ்வகையில் இயற்கை நலம் உடையதாக மருத நிலம் விளங்குகிறது.

நெய்தல்நில வருணனை

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் ஆகின்றது. இந்நிலத்தையும் அழகுற வருணிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“தமருடன் மள்ளர் திருவிழா ஆற்றிச் சயசய வேல்மயில் என்று
குமரனைப் போற்றிக் கூனரி வாள்கை கொண்டு செந்நெற்கதிர் அரியும்
விமரிசை மல்கும் செல்வ நீள் மருதவேலியின் ஒரு புடை மிளிரும்
ஞிமிறுணச் சோறு கால்நறுங்கைதை நீழல்சார் கருங்கழி நெய்தல்”[57]

என்று நெய்தல் நிலத்தின் வளம் சேய்த்தொண்டர் புராணத்துள் எடுத்தாளப்பெறுகிறது. வண்டுகள் மொய்க்கும் உப்பங்கழிகளை உடையது நெய்தல்நிலம் என்ற வருணனை இங்கு மனம் கொள்ளத்தக்கது.

“வித்துரு மங்கள் விளக்கொள்ளி பரப்ப வேலையம்பலை நெடுங் கரத்தால்
மத்தள முழக்க வரிவனை ஒலிக்க வண்டுகள் செவ்வழி நிழற்ற
அத்திரம் வேல்வாள் வில்வளை தாங்கிஆழ்கடல் எங்கணும் குலவி

நித்திலம் உலரும் நிலவுகால் மன்றில் நிர்த்தனம் இடும் நறு நெய்தல்"[58]

என்று நெய்தல் நிலத்தின் வருணனை மேலும் புனையப்பெற்றுள்ளது.

மின்னல் விளக்கொளியாய் நிற்கிறது. அலைகள் தம் கரத்தால் மத்தளம் முழங்குகின்றன. வண்டுகள் பாடுகின்றன. நிலவின் கால்கள் கடலின்மீது அம்பு, வேல், வாள், வில், வலை போன்றவாறு விழ ஆர்ப்பரித்து நிற்கிறது கடல்

இவ்வாறு நாநில வளமுடையதாக நடுநாடு விளங்குகிறது. இவற்றைப் பாடுவதன் வழி தமிழ் மரபறிந்து வருணிக்கும் புலமை பெற்றவராகத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் விளங்குகிறார் என்பது உறுதியாகின்றது.

<u>பிற வருணனைகள்</u>

நாடு., நகர வருணனைகள் தவிர மற்றையவற்றையும் வருணிக்கும் போக்கு தேனூர் வரகவி சொக்கலிங்கானாரிடம் காணப்படுகிறது. ஆற்றின் வருணனை, காட்சி வருணனை, நீர்நிலை வருணனை போன்றனவும் இவரின் வருணனைத் திறத்தை எடுத்துக்காட்டுவனவாக விளங்குகின்றன.

"மண்ணை ஆள்பவர் திருவினைக் கண்டுளம் மகிழ்ந்து

விண்ணை ஆள்பவர் குடிபுகலாம் என விரும்பப்

பெண்ணை ஆறெனும் செவிலியின் பேரருள்

பண்ணை சூழ்வது திருமுனைப்பாடி நாடு"[59]

என்று தென்பெண்ணை ஆற்றின் வளத்தினைப் பாடுகிறார் வரகவி தேனூர் சொக்கலிங்கனார். தென்பெண்ணை ஆற்றின் கரையில் வாழ்பவரின் நிலை கண்டு விண்ணவர்கள் வந்து புகலாம் என்ற பெருமையை உடையது தென் பெண்ணை ஆற்றின் கரை. செவிலித் தாயின் அன்பினைப் போல் அன்புடன் மக்களைக் காப்பது இவ்வாறு. இவ்வாற்றின் அருகில் திருமுனைப்பாடி நாடு அமைந்துள்ளது என்று ஆற்றின் பெருமையைப் பாடுகிறார் சேய்த் தொண்டர் புராண ஆசிரியர்.

காவிரி நதியையும் பல நிலைகளில் வருணிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"கொங்கார் மலரின் திருளுந்திக்கு வடொடித்துச்

சங்காரல் அள்ளித் திரைமோதித் தவழுகின்ற

நங்கா விரிநன் னதிநன்லம் ஏன்றெஞ் ஞான்றும்

மங்காதுயர்நீள் வளமார்வதெம் சோழவளநாடு"[60]

என்று காவிரி நலம் பெறுகிறது. குங்குமப் பூக்கள் காவிரி ஆற்றின் நீரில் மிதந்துவர, சங்குகள் காவிரியாற்றின் அலைகளினால் மோதி வெளிப்பட, என்றைக்கும் மங்காப் புகழுடைய காவிரி நதி பாய்வது சோழ வளநாடு என்று காவிரியின் வண்ணம், ஓட்டம் இப்பாடலுள் காட்டப்பெறுகிறது.

இவ்வாறு ஆற்றினை வருணிப்பதிலும் இவரின் வருணனைத் திறம் புலப்படுகின்றது. பொழில் ஒன்றும் இக்கவிஞரால் வருணிக்கப்படுகிறது. இராமலிங்க சுவாமிகள் புராணத்துள் ஒரு பொழில் இடம்பெறுகிறது. அது பற்றிய வருணனை பின்வருமாறு.

‘இன்குயில் கூவ சுரும்பொடு கிள்ளைகள் இன்னிசை பலபாட

மின்குலவுங் கலபப்பகத் தோகை விரித்தெழில் மயிலாடத்

தென்குல வுங்கலங்கள் மலர்ந்த செழும்புனல் ஓடைபல

நன்கு நிறைந்திடும் அப்பொழிலூடுறு நந்திநலாசிரமம்”[61]

என்று ஆசிரமத்தின் சிறப்பினைப் பாட வந்தவர் அதனருகில் இருக்கும் பொழில் பற்றிப் பாடுகிறார். குயில் பாடுகின்றன. வண்டுகள், கிள்ளைகள் அதனுடன் இணைந்து பாடுகின்றன. மயில்தன் தோகையை விரித்து இசைக்கேற்ப ஆடுகிறது. பல ஓடைகள் வந்து அந்தக் குளத்தில் கலக்கின்றன. இவ்வகையில் வளமுடன் திகழ்ந்தது அந்தக்குளம்.

இவ்வாறு நீர்நிலைகளை வருணிப்பதன் வாயிலாகவும் இவரின் கவியழகு தெரியவருகிறது.

உருவ வருணனை

உருவ அழகினைக் காட்டுவதில் வருணனை முக்கிய இடம்பெறுகின்றது. அவ்வகையில் பலரின் உருவத்தைக் காட்டும் நிலையில் தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் இலக்கியப் புனைதிறன் வெளிப்படுகிறது.

“மிகமகிழ்வொடுபெற் றென்றும் வேல்வழிபாடும் இன்பக்

குகவழிபாடும் ஆற்றிக் கோவணங் குறடு பொற்பார்

சிகைதிருநீற்றுப் பொற்பை செபமணி மாலை மற்றும்

புகலணி பலவும் பூண்டு பொலியுமா தவசிற்கோலம்”[62]

என்று தண்டபாணி சுவாமிகளின் கோலம் சிறப்புடன் காட்டப்பெறுகிறது. வேல்வழிபாடு, குகவழிபாடு ஆகியனவற்றை ஆற்றும் தன்மையராக கௌமார நெறி நிற்பவராகத் தண்டபாணி சுவாமிகள் விளங்கினார். அவர் கோவணம், பாதுகை, நீண்ட முடி, திருநீற்றுப் பொற்பை, செபமணி மாலை ஆகியவற்றுடன் தவத்திற்கு உரிய கோலம் புணைந்து தண்டபாணி சுவாமிகள் இருந்த காட்சியை இப்பாடல் விளக்குகிறது.

வேதாந்த சுப்பிரமணிய நாயனார் புராணத்துள் ஒரு கிழவர் வருகிறார். அவரின் காட்சி நலமுடன் வருணிக்கப்பெறுகிறது. ˙எப்போதும் யாருக்காவது ஒரு கந்தன் அடியார்க்காவது உணவளித்தபின் உண்ணும் வழக்கமுடையவர் வேதாந்த சுப்பிரமணியர். ஒரு நாள் உணவு உண்பதற்கான கந்தன் அடியார் எவரும் வாராது காத்திருந்தார். இதன் காரணமாக நெடுநேரம் தேடி நெடுந்தூரம் சென்றார். அப்போது ஒரு அந்தணக் கிழவர் வருகிறார். அவரின் வருகையைப் பின்வரும் நிலையில் இப்பாடல் பதிவு செய்கிறது.

“புண்டர நுதலர் புத்தகக் கரத்தர் பூத்தபுன்முறுவலர் பூணூல்

கொண்டமார்பினர் ஒண்துகிலினர் ஊன்று கோலினர் கூசி மென்நடைகொள்

முண்டகக் கழலர் சதாமுருகன்பேர் முழங்கு செவ்வாயினர் அணுகக்

கண்டரி எதிர்பங்கயமெனத் தலைமேற்கரமுகிழ்த் தெதிர் கொளற்கோடி”[63]

என்ற நிலையில் அவ்வந்தணக் கிழவரைக் காட்சிப் படுத்துகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். சதா சர்வ காலமும் முருகன் பெயர் சொல்லும் கிழவராக அவர்

இருந்தார். கைகளில் புத்தகமும் வாய் நிறைய புன்னகையும், மார்பில் பூணுலும், மெல்லிய ஆடையும், கையில் ஊன்றுகோலும் கொண்ட அவரின் தோற்றம் நேரில் காண்பது போல இங்குக் காட்டப்பெற்றுள்ளது.

முருகக் காட்சி வருணனை

முருகப்பெருமான் பலருக்குச் சேய்த்தொண்டர் புராணத்துள் காட்சி அளித்ததாகக் குறிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். அவ்வகையில் அக்காட்சிகளின் வருணிப்பில் அவரின் கவிநலம் அழகுடன் திகழ்கிறது.

அகத்தியருக்குத் தமிழ் அருள முருகப்பெருமான் தானாக வந்துக் காட்சி தருகிறார். இக்காட்சியைப் புராணத்துள் தந்து கந்தக்காட்சியைக் கற்போர் அனைவரும் காணும் வகை செய்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“செஞ்சரணச் சிறுசதங்கை கலகலென்னத்

திருவரையிற் பொன்னரைஞான் பளபளென்ன

அஞ்சலென்ற அபயகரத் தணிகள் கொஞ்ச

அகன்மார்பில் அணிமணிப்பூண் அழகெறிப்பக்

குஞ்சிரிப்புக் கொண்ட செவ்வாய் பவளந்துன்னக்

குளிர்நளின திருவிழியிற் கருணை பொங்க

விஞ்சுசெவிக் குண்டலங்கள் திருவில் வீச

வெண்ணீற்றின் ஒளிநுதலில் வெயில் பரப்ப” [64]

“நவமணிகொள் கடிகை திருமுடியின் மீது

நவகோடி இளங்கதிர்கள் நகைஇலங்கச் ”[65]

என்று முருகவேளின் காட்சி பாதாதிகேச வருணனையாக இடம்பெறுகிறது. தெய்வங்களை வருணிக்கும் நிலையில் பாதம் முதல் தொடங்கி முடி வரை பாடும் மரபு தமிழ் மரபில் உண்டு. அதனைப் பின்பற்றி இங்குத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் வருணனை செய்கின்றார்.

நக்கீரர் பூதப்படைக்குள் விழுந்த காலத்தில் அதனின்று மீள அவர் முருகப்பெருமானை அழைக்கிறார். முருகப் பெருமான் வந்து காட்சியைக் கண்முன் கொண்டுவருகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“அஞ்சலென தன்பவருகின்றனன் எனும்குரல் அகண்ட புவனங்கலங்கச்

செஞ்சரணம் ஒன்றிய சிலம்பொடு சதங்கை ஒலி செய்செய எனப்புலம்ப

வெஞ்சமர மிக உக்ர அயிலொடுகதாயுதம் விறலுறு கரத்திலங்க

விஞ்சுதிறல் ஒன்றுகுக் குட நெடுங்கொடிநெடுவிசும்பினை அளந்துலாவ”[66]

“குலவரைகள் கிடுகிடென் அதிருற திசாதிசைக் குமரர் முதலோர் நடுங்க

அலரவனு மாயவனும் அவைவிற் புரண்டுவிழ அமலன்உளம் அதிசயிப்ப

மலர்மழை பொழிந்தமரர் செயசெய எனப்போற்ற மணிஉரகர் அவசமுறவே

கலபரதமிசை ஒரு செழுஞ்சுடர் எழுந்தது கணக்கிடுவதாகும் அளவோ”[67]

என்று முருகப்பெருமானின் அருள்வெளிப்பாடு படைக்கப்பெற்றுள்ளது.

கால்களில் சிலம்புகளும், ஒரு கையில் கதாயுதமும் மறுகையில் வானைத் துழாவும் மயில்கொடியும் விளங்க, எண்திசைக் காலவர்கள் நடுங்க, பிரம்மாவும், திருமாலும் புரண்டு வீழ சிவபெருமானின் உளம் அதிசயிக்க ஒரு பெருஞ்சுடராய் முருகப்பெருமான் நக்கீரரின் துன்பம் துடைத்தான்.அப்பேரொளியின் அளவினைக் கணக்கிடுவது அரிது என்கிறார் புராண ஆசிரியர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தை அரங்கேற்றம் செய்ய முயன்றார். அவர் எழுதி முதல் பாடலிலேயே தவறுளது என்று சுட்டிக்காட்ட இதன் காரணமாக அவர் மனமொடிந்து இருந்தார். அவர் இரவில் தூக்கம் கொள்ளும் வேளையில் அவரின் கனவில் முருகப்பெருமான் வந்து முதல் பாடலில் உள்ள தவறினை ஏற்க வீரசோழியம் என்ற நூலில் இடம் உள்ளது என்று உரைக்கிறார். மேலும் காலையில் வருகை தந்து அவையினரிடத்தில் அந்நூலைக் காட்டிக் கந்தபுராணம் அரங்கேற்றம் காணச் செய்வேன் என்று உறுதியும் அளித்தான். இதனால் ஆறுதல் அடைந்து கச்சியப்பர் அடுத்தநாள் அரங்கேற்று மண்டபத்தில் நூலை விரித்து முருகப் பெருமானை எண்ணியபடி இருந்தார். அப்போது ஒரு புலவர் வருகை தந்தார்.

“வந்த பெரியோர் பேரவையோர் மகிழ்வுற்றுணரும்படி இதனுக்

கிந்த நூலில் விதியுளதென்றெடுத்துக் காண்பித்தவையீர்நுஞ்

சிந்தை மயக்கந் தீர்ந்ததோ தீர்ந்ததோ என்றெந்தையிடம்

அந்த நூலை இனிதருளி அம்மா மறைவுற்றனரன்னார்”[68]

என்ற நிலையில் ஐயம் தீர்க்கப்பெற்றது. ஐயம் தீர்ந்த பின்னர், வந்த புலவர் மறைகின்றார். அவர் மறைந்தபின்னரே வந்தவர் முருகன் என்று அவையோர் அறிகின்றனர்.

பொன்னார் மேனிக் குகமணியோ, புலவர் உளத்துக் கற்பகமோ தென்னாட்டவர் தந்திருவிளக்கோ, தேவதேவன் திருமகனோ, எந்நாட்டவர்க்கும் பெறற்கரும்பே என்று பலவாறு பாராட்டுகின்றனர் அவையினர். இவ்வகையில் முருகன் புலவராக வந்து புலவர் துன்பம் தீர்த்தநிலை இதன்வழி தெரியவருகிறது.

இவ்வாறு பல்வகை வருணனைகள் கொண்டு சேய்த்தொண்டர் புராணம் படைக்கப்பெற்றுள்ளது.

அணிநலம்

அணிகள் அணிபவருக்கு அழகு தருவதுபோல செய்யுளுக்கு அணிகள் அலங்காரத்தைத் தருகின்றன. “அணிபெறச் செய்யப்படவில்லையென்றால் செய்யுளானது பொருள் இருந்தாலும் சிறவாது. எனவே செய்யுளுக்கு அணி இன்றியமையாதது” [69] என்ற நிலையில் அணியிலக்கணத்தின் இன்றியமையாமை சுட்டப்பெறுகிறது.

சேய்த்தொண்டர் புராணத்தில் தன்மையணி, உவமை, உருவகம், சொல் பொருள் பின்வருநிலை அணி, தற்குறிப்பேற்ற அணி, அதிசயவணி போன்ற பல அணிகள் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளன. இதன் காரணமாக செய்யுள்கள் அழகுபெற்றுப் படிப்பவர்க்கு இனிமை தருகின்றன.

<u>தன்மையணி</u>

தன்மையணி பெரிதும் சேய்த்தொண்டர் புராணத்துள் இடம்பெறுகின்றன. எழுபத்தெட்டு முருகனடியார்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்க வேண்டும் என்ற நிலையில் பல பாடல்கள் தன்மையணியிலேயே அமைக்கப்பெற்றுள்ளன. செய்திகள், வரலாறுகள், நூல்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை இடம்பெறச் செய்யவேண்டும் என்ற நிலையில் தன்மையணி பெரிதும் தேனூர் வரகவி சொக்கலிங்கானருக்குப் பயன்பட்டுள்ளது.

“எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்

சொல்முறைத் தொடுப்பது தன்மைஆகும்” [70]

என்று தன்மையணியின் இலக்கணம் காட்டப்பெறுகிறது. மெய்வகை விளக்குமாறு எவ்வித புனைதலும் இன்றிச் செய்யுள் இயற்றும் நிலை தன்மையணியாகின்றது. இத்தன்மை அணி பொருள், குணம், இனம், தொழில் ஆகிய அடிப்படையில் பிறக்கும் என்று அதன் இயல்பு பற்றியும் தண்டியலங்காரம் குறிக்கிறது.

அருணகிரிநாதர் முதல் திருப்புகழ் பாடும் சூழலைப் பின்வருமாறு தன்மையணியில் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இது தொழில் அடிப்படையில் அமைந்த தன்மையணிப் பாடலாகும்.

“வெள்ளியெழ வேஅருணகிரிநாதர் ஆயலம் விட்டு நதி நீரினாடிப்

புள்ளி மயில் வாகனன் திருவாலயம்புக்கு போற்றி செயசெய போற்றியென்று

தெள்ளிய பசுந்தமிழில் முத்தித் திருபத்தியாந் திருப்புகழ றைந்தருளவே

வள்ளிகுஞ்சரிசமேதன் கலப மஞ்ஞைமேல் மகிழ்ந்து நிர்த்தனமாடியே”:[71]

என்ற பாடலில் அருணகிரிநாதர் நீராடிக் கோயில் புகுந்த நிலையும், அவர் முதன் முதலாகத் திருப்புகழ் பாடிய நிலையும் அதற்கு முருகன் ஆடிய நிலையும் தன்மையணியாகப் படைக்கப்பெற்றுள்ளன.

முருகனடியார்களின் பண்பினைப் பாடும் பின்வரும் பாடல் தன்மையணியில் அமைந்து சிறக்கின்றது. இது முருகனடியார் என்ற இனம் சார்ந்துவந்த தன்மையணி பாடலாகும்.

“சாலைவழி நடக்கையிலும் உணவருந்தும் சமயத்தும் நண்பருறவினரைக் காணும்

காலுமினிதே பிறரை உபசரிக்கும் காலத்தும் செய்தொழில்கள் துவங்கும் காலும்

மேல்வருவாய் பெறமார்க்கம் பலவாறாயும் வேளையினும்மற்றும்பல் வேளைதோறும்

வேல்மயில்எனு மேலோர்கள்”[72]

என்ற பாடலில் வேல்மயில் என்று அழைக்கும் கந்தனடியார்களின் இனத்தைப் பற்றிய செய்திகள் தரப்பெற்றுள்ளன. இது கந்தனடியார் என்ற இனம் பற்றிப் பாடப்பெற்ற தன்மையணி சார்ந்த பாடலாகும்.

அகத்திருயருக்கு முருகப் பெருமான் தமிழ் அறிவித்தபோது தமிழின் தன்மையை பொருள் குறித்த தன்மையணிப் பாடலாகப் படைத்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“துலக்குமுறும் இயலிசைநாட டகமென் றேஇத்

தொல்லுலகில் திகழ்தமிழின் தொகையும் பஞ்ச

இலக்கணமும் கணிதமும்மற் றனவும் நாயேற்

இனிதருளி எப்பொழுதும் எந்தை உன்னை

நலக்கவழி படுமுயற்மெய்ஞ்ஞானம் யாவும்

நன்கருளென் றிறைஞ்சிமிக நயந்து கேட்பக்

கலக்கமற வேட்டதெலாம் அவர்க்குண்டாகக்

கனிந்துகடைக்கணித்தருளிக் கந்தமூர்த்தி”[73]

என்ற பாடலின்வழி தமிழின் தன்மையை அறிந்து கொள்ளமுடிகின்றது. திருமுருகன் ஐந்திலக்கணம், கணிதம், ஞானம் போன்றவற்றை அகத்தியர்க்கு அறிவித்துள்ளான்.

நக்கீரரைப் பூதம் ஒன்று ஆயிரமாவது தமிழ்ப்புலவராகக் கொண்டு அடைத்து வைத்து உண்ண திட்டமிட்டது. அப்போது அப்பூதத்தின் குணத்தினைப் பாடும் பாடலில் தன்மை அணி சிறந்து நிற்கிறது.

“பகல் இரவைக் கண்டறியோம் பலகாலம் இக்குகை வாய்ப்பட்டிருந்தோம்

இகலுடைய பெரும்பூதத்தெண்ணம்போல் நம்முடன் ஆயிரவர் ஆனோம்

புகலுவதென் இனுஞ்சிறிது பொழுதில்நாம் அனைவரும் அப்பூதநாதன்

அகல்வயிற்றுகிரையாகப் போகின்றோம் இனி நம்மால் ஆவதென்ன”[74]

என்று பூதத்தின் இயல்பினை எடுத்துரைக்கும் நிலையில் தன்மை அணி இடம்பெறுகிறது. இவ்வாறு சேய்த்தொண்டர் புராணத்தின் முக்கால் பங்கு தன்மையணி பாடல்களினால் சிறப்புறுவதாக அமைகின்றது.

உவமைஅணி

அணிகளுள் தலைமை வாய்ந்த சிறப்பினை உடைய அணி உவமை அணியாகும். தொல்காப்பியர் உவமையியல் என்று தனித்த இயல் ஒன்றையே அவ்வணிக்காக அமைத்துள்ளார்.

‘பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்

ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து

ஒப்புமை தோன்றச் செய்வது உவமை”[75]

என்பது உவமை அணியின் இலக்கணமாகும். அணியிலக்கணங்களில் சிறப்பிடம் பெறும் உவமையணியினைப் பல்வேறு நிலைகளில் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் எடுத்தாண்டுள்ளார்.

பண்பு குறித்த உவமை அணி

திருவண்ணாமலைத் திருத்தலத்தின் வீதிகளின் பெருமையை எடுத்துரைக்கும் நிலையில் உவமை அணியைப் பயன்படுத்துகிறார்

“கற்பனை எதுகை மோனை கவினுறும்நாற் கவிகள் வல்ல

விற்பனர் திருவுளம்போல் விளங்கும்வேலங்க ரத்துச்

சிற்பரன் அருள்கோண்டொப்பின் சித்திரக்கலைகள் மல்கப்

பொற்பணி புரியு மேலோர் பொலிமணிமாட வீதி”[76]

என்று கவிதையை, கவிஞர்களை உவமை சொல்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். கவிவிற்பனர்களைப்போல பல்வகை படைப்புத்திறன் மிக்கதாக வீதி விளங்கியது என்பது இப்பாடலில் பயின்று வரும் உவமையாகும்.

அருணகிரிநாதருக்கும், வில்லிப் புத்தூராருக்கும் இடையே புலமைப் போட்டி நடைபெறுகிறது. அருணகிரிநாதர் கந்தபிரான் அருள் பெற்றவர். அவர் பல்வகைப் பாடல்கள் புனைய வல்லவர். அவரைப் போட்டியாகக் கருதி வில்லியாண்டான் என்பவன் பல சூழ்ச்சிகளைச் செய்கிறான். இவனது சூழ்ச்சி வினை இயல்பினைச் “சீத மதியைப் பொருதற்கோர் சிறுமீன் எழல் போலும்”[77] என்ற உவமையால் குறிப்பிடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். முழுநிலவின் ஒளியைப் பார்த்து விண்மீன் போட்டி கொள்வதுபோல் அருணகிரிநாதரின் மீது வில்லியாண்டான் பொறாமைப் பண்பினைப் பெற்றிருந்தான் என்று குறிக்கிறார் சேய்த்தொண்டர் புராண ஆசிரியர்.

தாய்மைப் பண்பு பற்றியும் ஒரு உவமையைக் கையாள்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“வான்தோய் கோவிலுற்றே மகிழ்வோடு இறைதாள் தொழுதே

ஈன்றாள் போலடியார்க் கிரங்கும் கருணாகரவேள்

சான்றோர் கண்டுவப்பப் புரிதாண்டவங் கண்டிரண்டு

தோன்றோய் பாசுரங்கள் திருாய்மலர்ந்தே அகன்று”[78]

என்ற பாடலில் கந்தவேளின் கருணத்திறம் பெற்ற தாயின் பண்பினுக்கு உவமை காட்டப்பெற்றுள்ளது. தாயானவள் தன் பிள்ளை குற்றமே புரிந்தாலும் அதனை குறை எனக் கொள்ளாது தன் பிள்ளைக்கு நல்லதே செய்யும் நற்பண்பினள். அத்தகைய பண்பினைப் பெற்றவன் முருகப்பெருமான் என்று இந்த உவமை தாயன்பின் சிறப்பினைக் காட்டுகிறது.

<u>தொழில்சார் உவமை</u>

வினை அல்லது தொழில் சார்ந்தனவற்றை உரைக்கும் நிலையிலும் உவமைகளைப் பயன்படுத்தி அலங்காரம் செய்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“கன்றினைப் பிரிந்த ஆன்போல் தொண்டர்பால் கனிந்திரங்கும்” [79] என்ற நிலையில் கன்றினைப் பிரிந்த பசுவைப்போல தொண்டர்களுக்கு கனிந்து அருளும் செயலுடையவன் முருகப்பெருமான் என்ற நிலையில் இங்கு வினைஉவமம் செயற்படுகிறது.

சின்னப்பர் என்பவரைத் தன் நாட்டின அமைச்சனாகப் பாண்டிய மன்னர் அமைக்கிறார். அப்போது அம்மன்னர் அமைச்சராக்கிய நிலையை மாணிக்கவாசகர் உவமை கொண்டு எடுத்துரைக்கிறார் வரகவி சொக்கலிங்கனார்.

“வாதவூர்ச் செம்மலைமுன் அழைத்ததுபோல்

கனிவினழைத் தருக்கிதுதிக்கக் களிப்போடும் பல முகமன்

இனிதறைந்து சின்னப்பர் எனும் சிறப்புப் பெயர் சூட்டிப்

புனிதமிகு பட்டாடை பொலனணிமற்றைய சிறப்பும்

நனிவழங்கி மதியமைச்சர் நாயகமாந் திறம் நல்க. [80]

என்ற பாடலின்வழி மாணிக்கவாசகரைப் பாண்டிய மன்னன் தானாக வந்து அமைச்சனாக்கிக் கொண்டதுபோல சின்னப்பரும் அமைச்சர் பொறுப்பினை மன்னர்தரப் பெற்றார் என்று இப்புராணம் உவமை காண்கிறது.

"மதிகண்ட பௌவமென மகிழ்வின் ஈன்று

மாதேவி வளர்க்கவளர் அமயத் தன்பர்

துதிகண்டு துணக்குற்றுத் துடிதுடிக்கும்

தோகையந்தேர் ஊர்ந்தஞ்சேல் அஞ்சேல்என

குதிகொண்டு வருகுழந்தை வடிவேலப்பன்

குழுவொடு பண்டாடியது போலும் ஆடுத்

ததிகண்டுங் காணார்போல் தவத்தாற் பெற்ற

தாதையார் குகத்துறக்கம் சார்ந்திட்டாரால்"[81]

என்ற பாடலில் முழுமதி வெளிப்படும் நிலையில் கடலானது எழுச்சி கொள்ளும். அதுபோல குழுந்தை தாயால் எழுச்சியுடன் வளர்க்கப்படுகிறது. மேலும் அக்குழந்தை வடிவேலன்போல ஆடல் நிகழ்த்துகிறது என்று உவமைகளை வினை கருதி அமைக்கின்றார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"கதிரவன் மதியெனும் கணக்கிற் காதலம்

புதல்வர்கள் இருவரும் பொலிய நாயனார்

குதுகுல நெடும்புனல் குடைந்து வப்பெனும்

புதுமது மாந்திமெய்ப்புளகம் ஏய்தியே" [82]

என்ற பாடலில் சென்ற பாடலைப் போலவே மதி உவமையாகக் காட்டப்பெறுகிறது. இரு குழந்தைகள் பிறக்கின்றன. அவற்றிற்கு சரவணப்பொருமாள், விசாகப் பெருமாள் என்று பெயர் சூட்டி மகிழ்கின்றனர். அவ்விரு குழந்தைகளும் கதிரவன், நிலவு போல வளரத்தொடங்கின என்று தொழிலால் உவமை சொல்லப்படுகிறது.

"சந்திரன் உதயங் கண்ட தடங்கடல் என விளங்கும் இந்திரை அனைய நல்லார் சாமரம் இரட்ட" [83] என்று பெண்களின் மென்மைப் பண்பிற்கும், ஒளிர்விற்கும் சந்திரனையும் கடலையும் உவமை காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

இவ்வாறு தொட்ட தொட்ட இடங்களில் எல்லாம் உவமை நலம் சிறக்கும் பாடல்களைப் பாடிச் சேய்த்தொண்டர் புராணத்தை வளப்படுத்தியுள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

<u>பயன்சார் உவமை</u>

பெறும் பயன் கருதியும் உவமை சொல்லப்படலாம். அவ்வகையில் பயன் உவமையைத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் பயன்படுத்தியுள்ளார்.

"நாலு் ஆறும் வெற்றி கொண்ட நாகை ஞான பண்டிதன்

ஆலயம் புகுந்து வீழ்ந்தெழுந்து நின்றக் காரமும்

பாலும் தேனும் என்ன மூன்று பாசுரங்கள் பாடிஎக்

காலும் பாலனாய்க்குலாவும் கந்தனைப்பராவியே" [84]

என்று அருணகிரிநாதரின் பதிகம் தரும் பலனை அறிவிக்கிறது இப்பாடல். அக்கார அடிசில் அதனுடன் பால், தேன் ஆகியன கலந்து உண்டால் எவ்வளவு இனிப்புடன் இருக்குமோ, அது எவ்வாறு உடலுக்குப் பயன் தருமோ அதுபோல் மூன்று பாசுரங்களை அருணகிரிநாதர் பாடினார் என்று இப்பாடல் உவமைநலம் கொள்கிறது.

மாலை உவமை

உவமைகளை அடிதோறும் வைத்துத் தொடுப்பது மாலை உவமையாகின்றது. இது உவமை வகைகளுள் ஒன்றாகும். இம்மாலை உவமையும் தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் படைப்பாற்றல் பெற்று மிளிர்கிறது.

"இடிமு ழக்கென முழங்கின ஏனைய முழவம்

கடல்மு ழக்கென முழங்கின தொளையுடைக் கருவி

குடைக வித்தெனப் பறந்தன ஏனைய கொடிகள்

படைமு கத்தினர் வகுத்தனர் பற்பல யூகம்"[85]

முழவுகள் இடி முழக்கம்போல முழங்கின. தொளைக் கருவிகள் கடல் முழக்கமென் முழங்கின. கொடிகள் எல்லாம் குடைகளைக் கவித்ததுபோல நிழல் தந்து நின்றன. என்றவாறு உவமைகளை அடுக்கிய வண்ணம் மாலை உவமையாகப் பாடலைப் படைத்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

மற்றொரு பாடலில் இரு உவமைகள் அடுக்கி மாலையாக்கப்பெற்றுள்ளன.

“உலகுடை இறைவன் கோயில் உட்புகத் தகுதி யில்லாப்

புலையுடல் இதனை இன்னே போக்குவல் எனப் புலம்பி

விலைமினார் இதம் நுகர்ந்து விளக்கின் வாய் விட்டில் ஒத்த

நிலையினை எண்ணி எண்ணி நெடுந்தழல் மெழுகின் நைந்தார்.”[86]

இப்பாடலில் இரு உவமைகள் இடம்பெற்றுள்ளன. விளக்கினைச் சுற்றும் விட்டில் பூச்சி போல விலைமாதர்களின் பின்னால் அருணகிரிநாதர் தன் இளவயது காலத்தில் கிடந்த தன்மை உவமையாக்கப்படுகிறது. அதிலிருந்து மீள முடியாமல் கோயிலுக்கு நுழைய முடியாமல் நெருப்பில் பட்ட மெழுகினைப் போல அருணகிரிநாதர் தவித்தார் என்று மற்றொரு உவமை அமைகிறது. இவ்வகையில் மாலை உவமைத்திறனையும் தன் புராணத்தில் காட்டி இலக்கிய வளம் கொள்கிறார் சேய்த்தொண்டர் புராண ஆசிரியர்.

இவ்வாறு தேர்ந்தெடுத்த உவமைகளை இணைத்துத் தம் புராணத்தை இலக்கியச் செறிவுள்ளதாக அவர் படைத்துள்ளார்.

<u>உருவக அணி</u>

உருவக அணியையும் தம் காப்பியத்தில் இடம்பெறச் செய்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து

ஒன்றுஎன மாட்டின் அஃது உருவகம் ஆகும்”[87]

என்பது உருவக அணியின் இலக்கணமாகும்.

“திருவாயிலின் முன் வீழ்ந்தெழுந்து செல்வக் குழந்தை வேல்முருகன்
மருவார் கமலச் சேவடியை மனதால் வணங்கி அலைமோதிப் பொருநீர்
வேலை அருகணைந்து போற்றிப் பரவும் அடியார்தம்
கருவேர் அறுத்து வீடருளும் கந்தக் கடவுள் கமலபதம்”

இப்பாடலில் கமல பதம் என்ற நிலையில் உருவகம் உரைக்கப்பெற்றுள்ளது. இறைவனான கந்தனின் கமலமாகிய பாதங்கள் அடியவரின் வினை என்னும் கருவேரை அறுக்கும் பணியைச் செய்யவல்லது என்பதை அறிவிக்க வந்த தேனூர் வரகவி சொக்கலிங்கனார் கமலபாதம் என்ற உருவக நிலையை இதற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

“வாவி உற்றது மாறிற்று மச்சமாய்
பூவில் உற்றது புள்ளுருவாய் அதைத்
தாவி ஈர்ந்திட மற்றதிற் சாத்தினார்
பாவலோர் தம்பிரான் விழிப் பங்கயம்”[88]

என்பதில் விழிப் பங்கயம் என்பது உருவகமாகும். நக்கீரர் பொழிலில் வீழ்ந்த பொருள் ஒன்றினைக் காணும் நிலையில் அவர் அதிசயத்துப் பார்க்கும் நிலைக்கு விழிகளைத் தாமரைகளாக்கி உருவகமாக்கியுள்ளார்.

இவ்வாறு உருவகமும் சேய்த்தொண்டர் புராணத்துள் அமைந்து சிறக்கின்றது.

சொல் பொருள் பின்வருநிலை அணி

அணிகளுள் எளிதானதாகவும், இனிதானதாகவும் இயற்றத்தக்கது சொல் பொருள் பின்வருநிலை அணியாகும்.

"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயின்

பின்வரும் என்னில் பின்வருநிலையே"[89]

முன்பு வந்த சொல் பின்னரும் பல நிலைகளில் திரும்பத் திரும்ப வந்து அணி செய்யுமானால் அதற்குச் சொற்பொருள் பின்வருநிலையணி என்று பெயர். அவ்வகையில் பல இடங்களில் இதனைப் பயன்படுத்துகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"ஐயசர ணம்சரணம் அமலசர ணம்சரணம் அறுமுக விநோத சரணம்

பையர வணிந்த சிவ சங்கரன் இடங்குலவு பரைமகிழும் இளைய சரணம்

மையனைய சூழலிகுற வள்ளிகுஞ் சரிதழுவி மகிழுமண வாள சரணம்

வெய்யபூ தந்தின இருந்த எளியோங்கள் விடுவித்த விமல சரணம்"[90]

என்னும் இப்பாடலில் சரணம் என்ற சொல் பலமுறை திரும்பித் திரும்பி வந்து சொற்பொருள் பின்வந்நிலை அணியாக விளங்குகின்றது.

"என்னம்மை என்னம்மை என்றறிஞர் ஈட்டமெல்லாம்

பன்னம்மை முக்கட் பரமர் திருவாயான்

முன்னம்மை என்றழைக்கும் பேறு பெற்ற மூதாய்தேச்

சின்னம்மை என்னும் செழுந்திருவைப் பெற்றோர்கள்”[91]

என்ற பாடலில் அம்மை என்ற சொல் பலமுறை வந்து அதே பொருள் தருவதால் இப்பாடலும் சொல்பொருள் பின்வருநிலையணிக்குச் சான்றாக அமைகிறது.

“பான்ம ணப்பது மத்தர்கொண் டாட்டுசெந்

தேன்ம ணப்பது தேமரக்கனி

தான்ம ணப்பது தாமரை மேலவன்

மான்முதற்பலர் போற்றுறு மாண்பது”[92]

என்னும் இப்பாடலில் மணப்பது என்ற சொல் “மணம் தருவது” என்ற பொருளில் பலமுறை திரும்பத் திரும்ப வந்து சொல் பொருள் பின்வருநிலையணியாக அமைகிறது.

இவ்வாறு சொல்பொருள் பின்வருநிலையணியினைத் தம் புராணத்தில் அணிபெறும் நிலையில் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் பயன்படுத்தியுள்ளார்.

<u>தற்குறிப்பேற்ற அணி</u>

இயற்கையாக நடக்கும் நிகழ்வில் புலவர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறும் அணி தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

“பெயர் பொருள் அல்பொருள் என இருபொருளினும்

இயல்பின் விளை திறன் அன்றி அயல் ஒன்று

தான் குறித்து ஏற்றுதல் தற்குறிப்பேற்றம்”[93]

என்பது தற்குறிப்பேற்ற அணியின் இலக்கண வரையறையாகும்.

அருணகிரிநாதர் உடல் நோயால் பாதிப்புறுகிறார். அவரின் நிலை கண்டு, ஆற்றமுடியாமல் விரைவில் கதிரவன் மறைகிறான் என்று தன் குறிப்பினை ஏற்றிப் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“கதிரவன் இவர்தந் துன்பங் கண்டதைச் சகியானாய்த் தன்

குதிரைகள் கடிது செல்லக் கோல் கொடு சாடி மேற்கில்

கொதி திரைக்கடலிற் பாய்ந்தான் குளிர் நிலாக்கற்றை வீசி

மதிகுகா சரணென் றையன் மலரடி தொழுதெழுந்தான்” [94]

கதிரவன்தன் தேரில் கட்டப்பெற்றிருந்த குதிரைகளைக் கோல் கொண்டு சாடி, மேற்கில் செல்ல விரைவுபடுத்தினானாம் என்று கதிரவன் மறையும் இயற்கைக் காட்சியை அருணகிரிநாதரின் அவதியைப் பொறுக்கமுடியாமல் சூரியன் விரைவில் மறைந்தான் என்று தற்குறிப்பேற்றமாகப் புராண ஆசிரியர் பாடியுள்ளார்.

இரவில் நடுச் சாமத்தில் அருணகிரிநாதர் தற்கொலை புரிந்து கொள்ள முயன்றபோது முருகப்பெருமான் தன் கைக் கொண்டு காத்து தமிழ்ப் பனுவல் பாட அருளினான். இதன் காரணமாக காலையில் கதிரவன் எழும்போது இரவிலும் அடியார்க்கு அருளுதல் முருகப்பெருமானைத்தவிர வேறு கடவுள் இல்லை என்று கரங்கூப்பி கதிரவன் எழுந்தான் என்று அங்கும் தற்குறிப்பேற்றம் செய்கிறார்.

“ஆலுமயில் சேவகன் சேவடிபரா வுகால் ஆதித்தன் அடிகளே நும்

போலுமோர்இராவில் அருள்யாவர் பெற்றாரெனப் போற்றுவதுபோல் எழுந்தான்”[95]

என்று தற்குறிப்பேற்ற அணியையும் தம் புராணத்தில் அமைத்துச் சிறந்துள்ளார் வரகவி சொக்கலிங்கனார். தொடர்ச்சியாகக் கதிரவன் மறைவும் கதிரவன் எழுச்சியும் இங்குத் தற்குறிப்பேற்றமாகப் பாடப்பெற்றுள்ளது இன்னும் சிறப்பாகும்.

அதிசயவணி

“மனப்படும் ஒரு பொருள் வனப்பு உவந்து உரைப்புழி

உலகு வரம்பு இறவா நிலைமைத்து ஆகி

ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்”[96]

என்ற நிலையில் அதிசயவணி என்பது பாடலுக்கு அணிசெய்கிறது.

சேய்த் தொண்டர் புராணத்துள் முருகப்பெருமான் அருளால் பல அதிசய செயல்கள் நடைபெறுகின்றன. அவ்வதிசய செயல்களினைப் பாடும் நிலையில் அதிசய அணி அமைந்து நிற்கிறது.

முருகம்மை என்பவர் முருகா முருகா என்று அழைத்த வண்ணமே இருப்பதால் அவரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட கணவன், அவ்வம்மையாரைச் சந்தேகித்துத் தண்டிக்கும் நிலையில் வலக்கரத்தை வெட்டுகிறான். இந்நிலையில்

“ஒருகால் முருகா எனும் உத்தமர் முன் ஓடோடி வருக் கருணாகர வேள்

முருகாமுருகா முருகா எனமும் முறை கூவிய அம்மையின் முன்மயில்மேல்

இருபாலுறு தேவியர் சூழந்தருள இளஞாயிறு கோடி எழுந்ததெனக்

கிருபாகரமூர்த்தி எழுந்தருளக் கேற்ற வலக்கரம் ஒட்டியதால்”[97]

என்று வலக்கரம் ஒட்டிய அதிசயத்தைப் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

பாம்பன் சுவாமிகளுக்கு ஒரு முறை கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. அப்போது அவரின் சீடர்கள் அவரை மருத்துவமனையில் அனுமதித்து அவரைச் சுற்றிச் சண்முகக் கவசம் ஓதினர்.

“பந்தத்தொடும் பாடிக்குகப் பரமன் திருவருளைச்

சிந்தித்தனர் சிந்தித்திடும் திருநாள்களில் ஒருநாள்

வந்தித்தவர் முழந்தாண்மிசை வைவேலிரண்டொன்றாய்

சந்தித்ததென் பொன்றித்து புண்தமுழும்பூறிய திதைத்தம்”[98]

இப்பாடலில் முழந்தாள் மீது, வேல் இரண்டு தாங்கி நிற்பதுபோல் முருகப்பெருமான் அருள் சுரந்தான்.இதன் காரணமாக அவருக்கு எலும்பு முறிவிற்குப் பின் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நிலை தவிர்க்கப்பட்டது. இவ்வகையில் இதுவும் அதிசய அணி பெற்ற பாடலாகின்றது.

“கொஞ்ச முங்க லக்க மின்று கோபு ரத்தி னின்று‘நீ

தஞ்ச’ மென்று பாய்ந்த அன்பர் தரணி மீதுவிழுமுன்

செஞ்ச தங்கை கிண்கி ணென்க செஞ்சிலம்ப

லம்பவந் தங்ச லஞ்ச லென்று கந்தன்அங்க ரங்கொ டேந்தியே"[99]

என்று முருகப்பெருமான் அருளால் அருணகிரிநாதர் காப்பாற்றப் பெற்ற செய்தியை அதிசயமுற்று அறிவிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இங்கும் அதிசயவணி அமைந்திருக்கிறது.

குமரகுருபரர் டில்லியில் மன்னரைச் சந்திக்கச் சிங்கம் மேலேறிச் சென்றார். இந்தச் சிங்கம் வந்த சூழலைப் பின்வருமாறு அதிசயமுடன் அறிவிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"நினைத்துப் போற்ற வேற்றடக்கை நிமலன் அருளால் உயிர்தொகைகள்

அனைத்தும் வெருவ மாகாளி அம்மை உறு சந்திதியின்றி

கனைத்து வயவால் முறுக்கி அழல் கக்கும் விழியோடோர் மடங்கல்

முனைத்தல் ஒழிந்தான் என அடிகள் முன்னுற்றிறைஞ்சி நின்றதம்மா"[100]

என்ற சிங்கம் வந்த நிலையை அதிசயத்துடன் காட்டுகிறார் புராண ஆசிரியர்.

இவ்வாறு உலகநிலையில் நின்று அதிசயங்கள் பலவற்றை நிகழ்த்தும் குமரன் அருட்கருணையை வியக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

இவ்வாறு பல்வேறு அணிகளை உட்படுத்தி அணிநலம் கொண்ட புராணமாக சேய்த் தொண்டர் புராணத்தைப் பாடியுள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

ஓசை நலம்

நல்ல கவிதைக்குப் பாடலுக்கு மேலும் அழகு சேர்ப்பது அதனுள் அமைந்து கிடக்கும் சொற்களும் அவை தரும் ஒலிநலனுமாகும். “பலநூறு பாகுபாடு செய்து போற்றபட்டு வரும் ஒலி நயமே பாட்டுக்கலையின் உடல்”[101] என்கிறார் மு.வரதராசனார்.

பாடலில் காணப்படும் ஒலிநயம் பொருளை உணர்த்துவதுடன். உணர்ச்சியையும் வெளிப்படுத்தி நிற்கிறது. உணர்ச்சியை வெளிப்படுத்தி ஒலிநயம் தன்னை மறைத்துக்கொள்ளும் நிலை அமைவதும் உண்டு. இவ்வகையில் பாடல்களை ஒலிநயத்துடன் உணர்ச்சியுடன் அமைப்பதில் வெற்றி பெற்ற புலவர்கள் தம் படைப்புகள் அழிய நிலை பெறுகின்றன.

சேய்த்தொண்டர் புராணத்துள் ஓசையின்பமும் உணர்ச்சிப் பெருக்கும் இணைந்துச் சிறக்கின்றன. நல்லியக்கோடன் தன் எதிரிகளை அழிக்கும் போர்க்களத்தின் இயல்பினைப் பின்வரும் பாடல் அறிவிக்கின்றது.

“கரி பரந்தன பரந்தனர் கனல்விழி காலாள்

பரி பரந்தன பயாபரி உறுதேர்

எரி பரந்தன பரந்தன இருதரப் படையும்

பொரி பரந்தன பரந்தன விசும்பெலாம் புழுதி”[102]

என்ற பாடலில் போர்ப்படைகள் படைசெய்யும் நிலையில் அவற்றின் பரபரப்பான உணர்ச்சிநிலையும், அதனை வெளிப்படுத்தும் ஓசைநிலையும் அமைந்து கிடப்பதை உணரமுடிகின்றது.

நக்கீரரைப் பூதங்கள் தாக்க வருகின்றன. அச்சூழலை

“கோரைப் பற்கள் கொதித்தெழு கண்கள்பீள்

தாரை கக்குறு தாடை மிடாவயின்

வாரிவற்ற மடித்த பேழ்வாய்ப்புலைச்

சோரி கக்குறும் தோற்றம் உடைத்தரோ”[103]

என்னும் இப்பாடலில் பூதங்களின் செயல்கள் ஒலிநயத்துடன் அமைத்துள்ள நிலையை உணர்கையில் தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் படைப்பாற்றலை அறியமுடிகிறது.

அருணகிரிநாதர் கந்தன் இருக்கும் ஊர்கள் தோறும் நடந்து செல்லும் நிலையில் அந்நடையைப் பின்வரும் பாடலில் ஓசையுடன் அறிவிக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“விருதும் ஆலவட்டமும் விரைந்து செல்லவே வயக்

கரிகள் ஆர்வ முற்றெழக் கனைத்தெழுப்ப ஒட்டகம்

பரிகள் ஏறு பாய்ந்தெழப் பராக்கியம்பி அன்பர்கள்

முருகவேள் நறும் புகழ் மொழிந்து முன்னடப்பவே”[104]

என்ற பாடலில் நடைத்திறத்தைத் தன் சொல் திறத்தால் நடை ஓசைக்கு ஏற்ப படைத்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

<u>பக்தி உணர்வு</u>

தொண்டர்தம் பக்தியை அடிப்படையாகக் கொண்டுப் படைக்கப்பெற்றது சேய்த்தொண்டர் புராணம். பக்திக் காப்பியமாகவே சேய்த்தொண்டர் புராணம் விளங்குகின்றது. இதன் காரணமாக பக்தி உணர்வு இக்காப்பியத்தில் சிறப்பிடம் பெறுகிறது. பக்தி உணர்விற்கு ஏற்ப மெல்லிய இன்னோசை கொண்டுப் பக்தியை வெளிப்படுத்தும் பாடல்கள் படைக்கப்பெற்றுள்ளன.

உணர்வில் சிறப்பாய் பக்தி உணர்வினைக் கொள்கிறது சேய்த்தொண்டர் புராணம். கந்தனடியார்கள் அனைவரும் பக்தி உணர்வில் திளைத்தவர்களாக விளங்கியுள்ளனர். அவர்களின் பக்தி உணர்வினைப் பல பாடல்களில் வெளிப்படுத்துகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“உடல் பொடிப்ப கரங்குவியக் கண்ணீர் சொட்ட

உளம் நெகிழ வியர்வரும்பக் கால் தள்ளாடி

நடை தளர மொழிகுழற மெய்ம்மறந்து

நறும்புளக் கடலாடிநாதன் மேவும்

தடவரையின் அருகணைந்து வீழ்ந்

தெழுந்து சண்முகஓம் சண்முகஓம் என்றியம்பி

மடலவிழ்பூங் கடம்பணி தோட் குமரமூர்த்தி

மருவுதிரு ஆலயத்தின் மருங்கணைந்து”[105]

என்ற நிலையில் பக்தியை வெளிப்படுத்தும் உணர்ச்சிகள் சேய்த் தொண்டரிடத்தில் காணப்படும் என்று காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“வீதிதோறும் வீழ்ந்தெழுந்தங் கரங்குவித்து

வெற்றிவேல் மயில் முழக்கி வீதி மண்ணாம்

பூதியழ கொழுகுதிருமேனி முற்றும்

புதைய நறும் புளிகிதமாம் போர்வை பூண்டே

ஆதியில் நம் அருணகிரிநாதர் செவ்வாய்

அலர்ந்த திருப்புகழ்பாடி ஆர்வந்தூண்டக்

கோதில்திருக் கூத்தாடிக் குதுகலித்து

குமரதிரு ஆலயத்தின் அருகணைந்து”[106]

என்று பக்தி பெருக்கின் அளவினை அளந்து உரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“கடவிழ்த்துவிட்டவுடன் தாயை நாடிக்

கன்று குதித்தோடுதல்போற் கணிந்து கண்ணீர்

சொட்ட மயிர்கால் பொடிப்ப வியர்வ ரும்பச்

சுந்தரச் செஞ்சதங்கைகலின் கலினென் றார்ப்ப

அட்டதிசை போற்றுமுருகையன் நாமம் அத்தனையும்

அறைந்து பாமா நந்தக் கூத்

திட்டுநடந் தீடிணையில் குமரமூர்த்தி

எழுந்தருளா லயமடைந்துன் காணிக்கை”[107]

என்பதும் பக்தியுணர்வுப் பெருக்கின் ஆற்றலாகின்றது. இவ்வாறு பக்தி உணர்வினை மென்மை, மேன்மையான சொற்களால் தொண்டு உள்ளத்தால் சிறப்புடன் புனைந்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

தமிழின் வகைமைகளை அறிவித்தல்

தமிழ் மொழி இலக்கண வளமும் இலக்கிய வளமும் தத்துவ வளமும் சிறந்து விளங்கும் மொழியாகும். இதன் இப்பெருக்கத்தை வரிசை பட மொழிந்துத் தமிழ் மொழியின் சிறப்பினை வெளிப்படுத்துகிறார் தேனூர் சொக்கலிங்கனார்.

“புனித முத்தமிழ் இலக்கணம் இலக்கியம் புணர்ச்சி

தொனி, எழுத்தியல், யாப்பிவை முதற் பல துறையும்

கனிவின் ஊட்டியிங் கெம்மொடு நீசில காலம்

இனிது வைகுதி என்று சந்யாசமும் வழங்க”[108]

என்ற பகுதியில் தமிழ் இலக்கண வகைகள் பலவற்றையும் எடுத்துரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். முத்தமிழ் இலக்கணம், தொனி எனப்படும்

குறிப்புப் பொருள் இலக்கணம், எழுத்தியல், யாப்பு போன்ற பல இலக்கணங்களைத் தமிழின் சிறப்பினதாக இங்குக் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

தமிழில் எழுந்த தத்துவ வரிசையையும் தம் பாடலில் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"சைவ சித்தாந்த தரிசனம் பாஞ்ச ராத்திரிக மத பேடிகையும்

தைவிகம் திகழ் வேதாந்த சித்தாந்த சமரசதீபமும்சாற்றி மெய்வழி விளக்காம்

கூவிள நீப மான்மியம் மேதக விளம்பிக் கைவரு நெல்லிக்கனி நிகர்

அக்க தீபிகை கனிவுடன் இயம்பி"[109]

என்று தமிழில் எழுந்த தத்துவ நூல்களையும் வரிசைப் படுத்தி உரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். வேதாந்தம், சித்தாந்தம், சைவ சித்தாந்தம், பாஞ்சராத்திரி (பஞ்சராத்திரி மதம் என்து கௌதம புத்தரின் சார்புடையது.), வேத தரிசனங்கள், சமரச தீபம் போன்றனவும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இவைதவிர முருகனடியார்கள் இயற்றிய பதிகம், நூல், சிற்றிலக்கியம் போன்றனவற்றை அவ்வப்போது அறிமுகப்படுத்திப் புராணம் படைக்கப்பெற்றுள்ளது.

ஔவையார் படைத்த நூல்களை அறிமுகம் செய்து அவற்றின் சிறப்பினையும் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

"ஒருவரும் நிகரில் லாதங் குலவியும் வினவுவோர்கள்

வெருவுற விடைகள் உய்த்தும் வியன்கலை வாணியோஎன்

றிருநிலம் வியப்ப மேலோர் இனிதினிதென்று போற்ற
முருகவேள் அருள் முன்னிற்க மொழிந்தனர் ஆத்திச்சூடி”[110]

“தமிழினுக் கணியாய் நீதி தனக்குறை விடமாய் மாந்தர்
திமிர்மலம் அகற்றும் ஞானத் திருவிளக்கொளியாய் இந்நூல்
அமிழ்தினும் இனியதாம் என்று அறிஞர்கள் வியந்து போற்றக்
குமரவேள் அருள்முன் னிற்பக் கூறினார் கொன்றை வேந்தன்”[111]

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களை ஔவையார் பாடியமையை இவ்வாறு பதிவு செய்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். குறிப்பாக கொன்றைவேந்தன் நூலின் தன்மையினை நீதிக்கு உறைவிடம் ஆகும் தன்மையது, அறியாமை அறுக்கும் ஞானத்திருவிளக்கு, அமிழ்தினும் இனியது என்று மொழிகிறார். இதன்வழி ஒரு நூலினைக் கற்றறிந்து, அறிமுகம் செய்யும் திறம் தேனூர் வரகவி சொக்கலிங்கனாரிடம் உள்ளது என்பது தெரியவருகிறது. ஔவையாரின் நல்வழி, மூதுரை போன்றனவற்றையும் இவ்வகையில் தன் புராணத்துள் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

சிவப்பிரகாசரின் இலக்கியப் படைப்பாற்றலையும் சிறப்புடன் சேய்த்தொண்டர் புராணத்தில் பதிவு செய்துள்ளார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“பின்னருநந் தமிழணங்கை அலங்ரிப்பான் பிரபு லிங்கலீலை என்னும்
பன்னருசீர் மொழி அலங்கல் ஒன்று புனைந்தருளி நலம் பலவார் காஞ்சி

நன்னகரின் உபசாரம் என்று சில் நாள் வதிந்ததந் நகரின் நீங்கி

மன்னனடி யவர்சூழ நடந்து கலியுகவரதன் மருவும் கோயில்”[112]

என்று பிரிபுலிங்க லீலை பாடிய திறத்தைப் பாடுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். மேலும் திருக்கூவபுராணம், ஏகமத நிராகரணம், லிங்க மாலை, பிச்சாடன மாலை போன்றனவற்றையும் சிவப்பிரகாசர் பாடிய திறத்தைச் சேய்த்தொண்டர் புராணம் காட்டுகிறது.

அருணகிரிநாதர் பாடிய இலக்கியங்களையும் அறிமுகம் செய்து சேய்த்தொணடர் புராணத்திற்கு இலக்கிய அளவில் வலு சேர்க்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“கந்தரந்தாதி நூறு கவிகளும் கவின ஓதிச்

செந்திலம்பதிக்கு மாரன் திருவடி பரவிச் செந்தில்

அந்தணர் விடைகொண்டெந்தை அவணகன் எழுந்தடைந்தார்”[113]

என்ற நிலையில் அருணகிரிநாதரின் படைப்புகளும் சேய்த்தொண்டர் புராணத்துள் சுட்டப்பெற்றுள்ளன. இதுபோன்று இலக்கிய வாணகர்களாக விளங்கும் சேய்த்தொண்டர்களின் இலக்கியப் படைப்புகள் தக்க இடம் , சூழல் கருதி இணைக்கப்பெற்றுள்ளன. இதன் காரணமாக முழுக்க முழுக்க வரலாறும் இலக்கியமும் சார்ந்த படைப்பாக சேய்த் தொண்டர் புராணம் விளங்குகிறது.

<u>பட்டியலிடும் பாங்கு</u>

சேய்த்தொண்டர் இயற்றிய நூல்களைப் பட்டியல் இடுதல்போல பல பொருள்களைப் பட்டியலிடும் சிறப்பு தேனூர் வரகவி சொக்கலிங்கனாரிடம் காணப்படுகிறது. இசைக் கருவிகள், பாண்டி பதினான்கு தலங்கள், மரவகைகள் போன்றனவற்றை அவர் பட்டியலிடும் நிலையில் இப்புராண ஆசிரியர் பெற்றுள்ள பரவலான அறிவு தெரியவருகிறது.

<u>இசைக்கருவிகளின் பட்டியல்</u>

சேய்த்தொண்டர்கள் நகர்வலம், கோயில்வலம் வரும்பொழுது இசைக்கருவிகள் பல முழங்க வருகை புரிந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் வரும் நிலையில் பல்வகை இசைக்கருவிகள் முழங்கின.

"கொம்புகா ளஞ்சங்கு நாதசுரம் வீணை வேய்ங்குழல் முரசு உடுக்கை தாளம்

பம்ப ஏனைய சிறப்போடெழுந்தன்பொடு பரிந்து சென்றெதிரழைப்ப

எம்பிரான் எழிலொடு நடந்துவேல்மயிலறைந் தேழிருகம்பராவும்

தம்பிரான் மேவு திரு ஆலய வலம் போந்து சாமிசந் நிதியடைந்து" [114]

என்று அருணகிரிநாதர் வரும் காலத்தில் இசைக்கருவிகள் வரிசையாக முழங்கப்பெற்றுள்ளன.

அருணகிரிநாதர் செந்திலாண்டவரைத் தரிசிக்க வந்தபொழுதும் இதுபோன்று பல இசைக்கருவிகள் முழங்க அவர் வந்துள்ளார்.

"அதிர்முர சுடுக்கை தக்கை மற்றவை அனைத்தும் ஆர்ப்ப

வெதிர்குழல் கொம்பெக்காளம் வீணை சங்கு இவை முழங்க

முதிர்தமிழ் முழக்கி ஏனைமுகமன் கியம்பிப் போற்றி

எதிர்கொளச் செந்திமூதூர் எம்பிரான் இனிதின் எய்தி”[115]

என்ற நிலையில் இசைக்கருவிகள் முழங்கத் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார் அருணகிரிநாதர்.

குமரகுருபரர் எழுந்தருளிய நிலையிலும் இசைக்கருவிகள் முழங்கியுள்ளன.

“குங்கும மென்கள பந்திமிர்ந்து கொங்கவிழ் பூங்கோதைகள் சூடிச்

சங்கு முழக்கி நன் நாதசுரம் தாரைகள் யாவும் முழங்கமிரு

தங்கம் உடுக்கை கடம் கிடுகு தக்கை முதற்பல முழவார்ப்ப

மங்கள மாநகரெங்கும் விழா மல்க நடாத்தி மகிழ்ந்ததம்மா”[116]

என்று இசைக்கருவிகளின் வரிசை பாடல்களுக்குள் அமைக்கப்படுகிறது.

இவ்வகையில் உடுக்கை, நாதசுரம், காளம், கடம், கிடுகு, தக்கை , தாரை, மிருதங்கம், முரசு, கொம்பு, கொம்பு, சங்கு, வீணை ஆகிய இசைக்கருவிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இவற்றுடன் எக்காளம், தமிழ் ஆகியனவும் முழங்கின என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு தேனூர் வரகவி சொக்கலிங்கனார் காலத்தில் இசைக்கப்பெற்ற இசைக்கருவிகள் பற்றி இவற்றின் வழி அறிந்துகொள்ளமுடிகின்றது.

<u>தல வரிசை</u>

சேய்த்தொண்டர்கள் முருகன் அருள் தலங்கள் பலவற்றைத் தரிசிக்கும் நிலையில் தலங்களின் பட்டியலைத் தருகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். பாண்டிநாட்டில் உள்ள பதினான்கு தலங்களையும் தம் செய்யுளில் தருகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“பழகுத் தமிழ் வளரும் பழம்பதி கூடல் அடைந்து” [117]

“அப்பால்நடை கொண்டுஏடகம் ஆடானை கொடுங்குன்றம்

ஒப்பேதுமில் திருப்பூவணம் உயர்வார் திருச்சுழியல்

இப்பார் தொழு புனவாயில் மற்றெழிலாப்பானூர்.....”[118]

“கருதுங் திருநெல்வேலிதென் கழுகாசல முதலாய்...”[119]

“குற்றாலமும் மற்றேனைய குன்றும் தெரிசித்து

கற்றார்பணி ராமேசுரம் கண்டங்கை குவித்திந்”[120]

என்று திருவேடகம், திருவாடானை, திருக்கொடுங்குன்றம், திருப்பூவணம், திருச்சுழியல், திருப்புனவாயில், திருநெல்வேலி, குற்றாலம், இராமேசுவரம், திருவாப்புடையார் கோயில், ஆலவாய் போன்ற பாண்டி பதினான்கு தலங்களையும் இப்பாடலில் காட்டுகிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

நக்கீரர் தமிழகம் முழுவதும் சுற்றி வந்த நிலையிலும், அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்ற அடியவர்கள் இந்தியா முழுவதும் சுற்றி வந்த நிலையிலும்

அவ்வப்போது அவர்கள் தரிசித்த தலங்களைப் பட்டியலிடுவது என்பது தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் சிறப்பியல்பாக உள்ளது.

“தண்டமிழ் வாணர்பிரான் தவமுயல் மேலோர்வாழ்

கொண்டல்கள் கடந்தேநம் குகனுரை கேதாரம்

கண்டிரு கரங் கூப்பிக் கயிலையில்உற நாடி

மண்டழல் எரிபாலை முதற்பல வனமுற்றார்”[121]

என்ற பாடலின் வழி நக்கீரர் கேதாரம், இமயமலை வரை சென்ற நிலையும் அங்கு அவர் தரிசித்த கோயில்களின் பட்டியலும் தெரியவருகிறது.

குமரகுருபரர் காசிக்குச் சென்று அங்கு மடம் நிறுவினார். அவ்வகையில் அவர் சென்ற தலங்களையும் சேய்த்தொண்டர் புராணத்தில் அறிமுகம் செய்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“தெலுங்கர் உலாவும் திருநாட்டிற் சிம்மாசல மேமுதலாய

தலங்கள் பலவும் கண்டகன்று தக்கோர் போற்ற நடந்தருளிக்

கலிங்கம் கஞ்சம் முதற் பலவும் கடந்து புவனே கரந்தொழுது

நலங்கள் பலவும் திகழ்காசி நகரில் எல்லை அருகணைந்து”[122]

என்ற நிலையில் தெலுங்குதேசம், கலிங்கம், கஞ்சம் தாண்டி குமரகுரபரர் காசி சென்ற நிலையைக் காட்டுகிறார் தேனூர்வரகவி சொக்கலிங்கனார்.

அருணகிரிநாதர் இலங்கை நாட்டிற்கும் சென்று அங்குள்ள முருகப்பெருமான் தலங்களைத் தரிசித்துள்ளார். இதன் காரணமாக இலங்கையில் அருணகிரிநாதர் காலத்திலேயே முருகன் ஆலயம் இருந்தமையை உணரமுடிகின்றது,

"தலைக்குமேல் இருகரங் கூப்பி வேல்மயில் என்று சாற்றி நல்திருகோணமா

மலைக்குமாரக் கடவுள் ஆயலமடந்திறை மலர்ந்தாள்களைப் பராவி

விலைக்கமேனியி லென எடுத்தொரு திருப்புகழ் விளம்பியவ ணின்ற கன்றங்

கலைக்குழாம் ஊடாடும் அடவியில் நடந்துதென்கதிர்காம முற்றருளியே"[123]

என்னும் பாடலில் இலங்கை நாட்டின் புகழ் பெற்ற முருக தலங்களான கதிர்காமம், திருகோணமலை ஆகியன காட்டப்பெறுகின்றன.

இவ்வாறு தலங்களை வரிசைபட மொழிந்து தல யாத்திரைப் புராணமாகவும் சேய்ததொண்டர் புராணம் படைக்கப்பெற்றுள்ளது.

<u>அஃறிணைப் பொருள்களின் வரிசை</u>

இயற்கையில் விளையும் கருப்பொருள்களான விலங்குகள், மரங்கள், செடிகள், பறவைகள் பெயர்களையும் வரிசைபட சேய்த்தொண்டர் புராணத்துள் மொழிந்து சுற்றுச் சூழல் காக்கும் புலவராக தேனூர் வரகவி சொக்கலிங்கனார் விளங்குகிறார்.

"கடகரி முனஏனம் காய்கனல் விழிஉழுவை

அடல்அரி முதல் ஏனை விலங்கினம் அவைவாழும்

படர்கொடி செடி முட்கான் பற்பல கடந்தியமயத்

தடவரை அருகுற்றார் பண்டைய தவத்தம்மா”[124]

என்ற நிலையில் இமயமலையில் வாழும் விலங்குகளின் பட்டியல் சேய்த்தொணடர் புராணத்துள் தரப்பெறுகிறது.

குறிஞ்சி நிலத்தில் வாழும் விலங்குகளின் வரிசையும் மற்றொரு பாடலில் காட்டப்படுகிறது.

“கிம்புரிக் கோட்டுக் கடகரி யனைய கேழல் குடாவடி மரைமான்

கம்புள் குறும்பூழ் முதலொழிந் தனவும் கலங்குறக் கார்முகம் வாங்கி” [125]

என்று விலங்குகளின் வரிசை சேய்த் தொண்டர் புராணத்தில் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளது.

“அவரையும் கிழங்கும் கடலைகொள் எள்ளும் ஆமணக்கும் சிறுபயறும்

துவரைகம்பிறுங்கும் வரகுழுத்தனைத்தும் சோலையிற் கெழுசெழுமுல்லை”[126]

என்று முல்லைநிலத்தில் வளரும் தாவரங்களின் வரிசை தேனூர் வரகவி சொக்கலிங்கனாரால் காட்டப்பெற்றுள்ளது.

குழந்தையின் வளர்ச்சி நிலை

குழந்தைகளின் வளர்ச்சி நிலையையும் ஒவ்வொரு கட்டமாகக் காட்டி இதனையும் வரிசைப் படுத்தி உரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். இவர் நக்கீரர் என்னும் குழந்தை வளர் நிலையைப் பிள்ளைத் தமிழாகவேப் பாடுகிறார்.

காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர் உருட்டுப் பருவம் போன்றவற்றை ஒவ்வொரு பாலில் பாடி பிள்ளைத்தமிழ் வரிசையைக் கைக்கொள்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

“செங்கரந்தாள் நன்கூன்றிச் செந்தமிழ்மேலோங்குகஎன்

றங்கமதை மேல் எழுப்பி ஆறெழுத்தும் அஞ்செழுத்தும்

பொங்கமடுச் செங்கமலம் போன்ற முகம் நன்கசையச்

சிங்கஇளங் கன்றயையார் செங்கீரை ஆடினார்”[127]

என்று செங்கீரைப் பருவத்தைப் பாடுகிறார்.

“பொன்னஞ் சிறுசதங்கை புலம்ப எழிலாய் நடந்து

சின்னங் சிறுமியர்த் சிற்றில்லம் தான் சிதைத்தார்

முன்மதுரை நோற்றதவம் முற்றியநற் பேறனையார்

தென்மதுரை வீதிதொறும் சிறுதேர் உருட்டினார்”[128]

என்று சிறுதேர் உருட்டு பருவம் பாடப்படுகிறது. இவ்வகையில் நக்கீரருக்கு ஒரு பிள்ளைத்தமிழைப் பாடி மகிழ்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

குழந்தை பிறக்கவில்லை என்ற நிலையில் குழந்தைப் பிறப்பிற்காக ஏங்கும் பெற்றோர் இயல்பினை அவர்களின் துயர வரிசையைப் பல பாடல்களில் அடுக்கி உரைக்கிறார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார். நாகனார் என்பவர் வேடர் குலத்தவர். இவர் குழந்தைப் பேறின்றித் தவிக்கிறார். இதன் காரணமாக தன் குல

வழக்கப்படி கந்தனை எண்ணிக் குழந்தை வரம் கேட்கிறார். அவ்வகையில் பல பாடல்கள் குழந்தைவரம் கேட்கும் பாடல்களாக உள்ளன.

"சந்ததிகள் இல்லாச் சழக்கர் இவர்களென்றே
இந்த உலகோர் எமை இகழ்ந்து கூற உளம்
வெந்ததையா எந்தையுனை வேண்டினோம் வேட்கையறக்
கந்தையா நீ உன் கடைக்கண்ணாற் பாராயோ"[129]

"முத்தமிட்டுக் கொஞ்சி முலைப்பால் இனிதூட்டிக்
கைத்தலத்தில் ஏந்தி இரு கண்குளிரப் பார்த்தெமது
சித்தங் குளிர ஒரு சேய் அருளாய் ஞாலம் அருள்
வித்தகியாள் கொஞ்சி விளையாடும் பாலகனே"[130]

என்று குழந்தை வரம் வேண்டும் பெற்றோர் குறைகளை வரிசைப் படுத்தி மொழிகின்றார் தேனூர் வரகவி சொக்கலிங்கனார்.

இவை தவிர சேய்த்தொண்டர் புராணத்தை இன்னும் வளமுள்ளதாக ஆக்கத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். கந்தனடியார் புகைப்படங்களை இணைத்துள்ளார். அவ்வகையில் திருத்தணிகை ஆபத்சகாய விநாயகர், திருத்தணி முருகன், அகத்தியர், அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாச்சாரியார், குமரகுருபரர், சிதம்பர முனிவர், கச்சியப்ப முனிவர், வள்ளலார்(இராமலிங்கர்), வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள்,

அழகுமுத்து நாயனார், இடும்ப நாயனார், திருப்புகழ் சுப்பிரமணிய நாயனார், சச்சிதானந்த சுவாமிகள்,செங்கல்வராயப் பிள்ளை போன்றோரின் புகைப்படங்கள் வரிசையாகத் தரப்பெற்றுள்ளன. இவ்வகையில் இப்புகைப்பட வரிசையும் இப்புராணத்திற்கு அணி செய்வதாக உள்ளது.

தொகுப்புரை

சேய்த்தொண்டர் புராணத்தைப் பல்வேறு இலக்கிய வளமை கொண்ட புராணமாகத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் பாடியுள்ளார். சொல்வளம், ஓசை நயம் மிக்க பாடல்களை அவர் படைத்துள்ளார். எண் அலங்கார நிலையிலும் பாடல்களை அமைத்துள்ளார். இவரின் பாடல்களில் அதிகம் இடம் பெறுவது வருணனைத்திறம் ஆகும். ஏனெனில் பல தொண்டர்களின் வாழ்வைப் பாட வேண்டிய நிலை அமைந்ததால் அத்தொண்டர்கள் வாழ்ந்த இடங்கள்,சென்ற இடங்கள், கண்ட காட்சிகள் போன்றவற்றை இவர் படைக்க வேண்டிய நிலைக்கு ஆளானார். ஒரு நாட்டையோ, ஒரு நகரத்தையோ அவர் மீள மீளப் பாட வேண்டிய நிலையும் எழுந்தது. இதன் காரணமாக இவர் நாட்டு, நகர, காட்சி வருணனைகளால் தம் காப்பியத்தை அழகூட்டியுள்ளார். ஆறுபடைவீடுகள், தமிழக நகரங்கள், தமிழகத்தின் பண்டைய நாடுப் பிரிவுகள் போன்றனவற்றை இவர் வருணிக்கும் நிலையில் அவ்விடத்திற்கே சென்ற நிலையை வாசகர்கள் பெறுகின்றனர். மேலும் நாநில வருணனை இயல்பினையும் இவர் பயன்படுத்தியுள்ளார். முருகப்பெருமான் உருவத்தையும் தொண்டர்கள் உருவத்தையும் இவர் வருணித்துள்ள திறம் அவ்வுருவங்களை நேரில் கண்ட நிலையை அளிக்கின்றது. நீர்நிலைகள், அ.்.றிணைப்பொருள்கள் போன்றனவும் இவரின் வருணனைக்கு இடம் தந்துள்ளன.

இவர் புராணத்தில் பல இடங்களில் பட்டியலிடும் பாங்கினைப் பின்பற்றியுள்ளார். இலக்கணங்கள், இலக்கியங்கள், இசைக்கருவிகள்,

மரங்கள்,விலங்குகள் போன்றனவற்றைப் பட்டியலிடும் இவரின் கவித்திறம் தனித்த கவித்திறமாகக் கொள்ளத்தக்கது.

இவர் தன் புராணத்தில் பெரும்பான்மை தன்மையணியைப் பயன்படுத்தியுள்ளார். உவமை அணி, அதிசயவணி, சொல்பொருள் பின்வருநிலை அணி, தற்குறிப்பேற்ற அணி போன்றனவற்றை இவர் கையாண்டு அணிநலத்துடன் பாடும் கவிஞராக அறியப்பெறுகிறார்.

தன் புராணத்தைச் செழுமையுள்ளதாக ஆக்க தக்க படங்களை இணைத்தல், புராணத்தில் விடுதல் ஆனவற்றை மறுபடி இணைத்தல் போன்ற நடைமுறைகளைக் கையாண்டுள்ளார். இவ்வகையில் முருகனடியார்கள் பற்றிய இப்புராணம் பக்திச் சிறப்பு மிக்கதாகவும், இலக்கிய நலம் கொண்டதாகவும் விளங்குகிறது.

சான்றாதரங்கள்

[1] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர் திருவந்தாதி, பாடல்எண். 33

[2] சு. பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, ப. 68

[3] சு. பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, ப. 71

[4] .சு.பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு.ப. 153

[5] சொக்கலிங்கனார், சேய்த்தொணடர் புராணம், பாடல்எண். 823

[6] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண். 883

[7] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண். 545

[8] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண். 1295

[9] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.572

[10] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.127

[11] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.1242

[12] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.487

[13] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.794

[14] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்கள்.273-276

[15] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண். 328

[16] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.1323

[17] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 487

[18] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.557

[19] விக்சனரி,இணைய கலைக்களஞ்சியம், வர்ணனை தமிழ்.

[20] தண்டியாசிரியர், தண்டியலங்காரம், பொதுவணியியல், நூற்பா எண். 6

[21] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.581

[22] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.2381

[23] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண். 1577

[24] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.2975

[25] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.510

[26] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண். 1297

[27] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.2546

[28] சொக்கலிங்கனார், சேய்த் தொண்டர் புராணம், பாடல்எண்.681

[29] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண். 676

[30] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 172

[31] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 362

[32] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 183

[33] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.754

[34] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.779

[35] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.196

[36] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.210

[37] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.519

[38] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2810

[39] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண். 2814

[40] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1815

[41] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2691

[42] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2695

[43] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 54

[44] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 53

[45] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2209

[46] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2302

[47] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2199

[48] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 287

[49] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 285

[50] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2188-89

[51] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்728

[52] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 729

[53] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 713

[54] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 715

[55] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 694

[56] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்704

[57] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்706

[58] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 707

[59] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 367

[60] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2338

[61] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2435

[62] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2514

[63] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2796

[64] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 131

[65] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 132

[66] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 334

[67] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 53

[68] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்567

[69] ஆ.சிவலிங்கனார், தமிழ் இலக்கண உணர்வுகள், ப. 173

70 தண்டி, தண்டியலங்காரம், நூற்பா, 27

[71] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 920

[72] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2171

[73] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 133

[74] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 325

[75] தண்டி, தண்டியலங்காரம், நூற்பா, 31

[76] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 894

[77] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1119

[78] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1155

[79] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 889

[80] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2244

[81] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2414

[82] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2160

[83] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண். 896

[84] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 983

[85] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 378

[86] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 907

[87] தண்டி, தண்டியலங்காரம், நூற்பா, 36

[88] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்318

[89] தண்டி, தண்டியலங்காரம், நூற்பா. 42

[90] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 337

[91] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2392

[92] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2205

[93] தண்டி, தண்டியலங்காரம், நூற்பா. 56

[94] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 910

[95] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 922

[96] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 54

[97] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 607

[98] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்2582

[99] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 216

[100] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்1544

[101] மு.வரதராசன், இலக்கிய ஆராய்ச்சி, ப.99

[102] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 379

[103] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 320

[104] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்1512

[105] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1778

[106] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்1733

[107] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2196

[108] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2005

[109] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2226

[110] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 419

[111] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 420

[112] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1652

[113] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1127

[114] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1039

[115] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1109

[116] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1395

[117] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2039

[118] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2040

[119] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2042

[120] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 2043

[121] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 306

[122] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1530

[123] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 1132

[124] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 307

[125] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 729

[126] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 717

[127] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 30

[128] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 229

[129] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண் 185

[130] சொக்கலிங்கனார், சேய்த்தொண்டர்புராணம், பாடல்எண்.188

முடிவுகள்

முடிவுகள்

"திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம்" என்ற ஆய்வுப் பொருளில் செய்யப்பெற்ற இவ்வாய்வின் வழியாகப் பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே முருக வழிபாடு என்பது தமிழ் நிலத்தில் நிலைபெற்றிருந்தது. தொல்காப்பியத்தில் முருக வழிபாடு நிகழ்ந்ததற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க இலக்கிய காலத்தில் முருக வழிபாடு குரவைக் கூத்து, வெளியாடல் போன்ற சடங்கு முறைகளை முன்வைத்து நிகழ்த்தப்பெற்றுள்ளது. இதன் காரணமாக தமிழ் நிலத்தின் பண்பாட்டு அடையாளமாக முருக வழிபாடு கொள்ளத்தக்கதாகின்றது.

திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் இடம்பெறும் செவ்வேள் குறித்த பாடல்களும் தமிழ் நிலத்தில் இருந்த முருக வழிபாட்டின் உறுதிநிலையை அறிவிப்பனவாகும்.

சிலப்பதிகாரத்தில் முருகக் கோயில்கள் இருந்த நிலை சுட்டப்பெறுகிறது. குன்றக் குரவை முருகனுக்கு உரிய வழிபாடாக அமைந்தது. காப்பிய காலத்திலும் முருக வழிபாடு நிலைப்பெற்றிருந்ததனைச் சிலப்பதிகாரச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

பக்தி இலக்கிய காலத்தில் முருகவழிபாடு புராணச் சார்பும், ஆரியக் கலப்பும் உடையதாக விளங்கியது. ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்ற தேவார ஆசிரியர்கள் சிவபெருமானின் மகனாக முருகப் பெருமானைக் கண்டனர். இதன் காரணமாக முருகப்பெருமான் சிவபெருமானுக்குள் அடங்கிய தெய்வமாகக் கருதப்பெற்றார்.

கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணம் கந்த வழிபாட்டின் உச்சநிலையைக் காட்டுவதாக உள்ளது. இதனுள் குறிக்கப்பெற்றுள்ள முருக வரலாறு, முருக அருள்திறம் ஆகியன முருக வழிபாட்டின் முதிர்நிலையைக் காட்டுவனவாகும்.

அருணகிரிநாதர், வள்ளலார், தேவராயர், பாம்பன் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்ற தனிப்புலவர்களும் முருகனைப் போற்றிச் சிறப்படைந்துள்ளனர். இக்காலத்திலும் முருகவழிபாடு தலை நின்றுள்ளது.

அதிக அளவு சிற்றிலக்கியங்கள் முருகனைக் குறித்தே இயற்றப்பெற்றுள்ளன. இதன் காரணமாக சிற்றிலக்கிய காலத்திலும் முருக வழிபாடு தமிழர் வழிபாடாகத் தொடர்ந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து முருகவழிபாட்டின் நிறைந்த நிலையைக் காட்டுவது முருகவேள் பன்னிரு முறைத் திரட்டு ஆகும். அருணகிரிநாதரின் திருப்புகழை முன்வைத்து இத்திரட்டு உருவாக்கப்பெற்றது. இருப்பினும் பன்னிரண்டாம் முருகவேள் திருமுறை என்ற நிலையில் முருகத் தொண்டர் புராணம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இவ்வெண்ணத்தின் மூலமாக விளங்கியவர் திருப்புகழைக் கந்தவேள் பன்னிருதிருமுறையாக வகுத்தளித்த வ.சு. செங்கல்வராயப் பிள்ளை ஆவார்.

இந்த முருகவேள் பன்னிரு திருமுறை வெற்றிடத்தை நிரப்பும் நிலையில் புராணம் எழுத முன்வந்தவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் ஆவார். இவர் எழுதிய சுந்தரர் உலா என்ற நூல் இவரின் கவிப்பெருமையை உலகிற்குக் காட்டியது. இதன் காரணமாக இவரைச் சேய்த்தொண்டர் புராணம் எழுதச் செங்கல்வராயர் தூண்டினார். இத்தூண்டல் வழித் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் செயல்பட்டார்.

மேலும் பெரியபுராணம் எனப்படும் சேய்த்தொண்டர் புராணத்தின் படைப்புநிலைப் படி முன்னதாகச் சேய்த்தொண்டர் புராணம், சேய்த்தொண்டர் திருவந்தாதி ஆகியன செய்து கொள்ளப்பெற்றன. பின்னரே இவற்றின் அடிப்படையில் சேய்த்தொண்டர் புராணம் இயற்றப்பெற்றது.

சேய்த்தொண்டர் புராணம் நிலம் எனத் தொடங்கி நிலம் என முடியும் நிலைப்பாட்டைப் பெற்றுள்ளது. இதனுள் அமைந்த செய்யுட்கள் மூவாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று என்ற அளவினதாகும். இவற்றுள் நான்கில் ஒரு பங்குப் பாடல்கள் அருணகிரிநாதர் புராணம் பாட எடுத்துக்கொள்ளப்பெற்றது. இப்புராணம் முதற்காண்டம்,இரண்டாம் காண்டம் என்று இரு பகுப்புகளை உடையது. இதனுள் அறுபத்தாறு தனியடியார்களும், பன்னிரண்டு தொகை அடியார்களும் பாடப்பெற்றுள்ளனர்.

தனியடியார்கள் என்ற நிலையில் அரக்கர், தேவர், புராணப் பாத்திரங்கள், அரசர், வேளாளர், புலவர், தேசிகர், பிள்ளை இனத்தவர், அந்தணர் போன்ற பல சாதிப்பிரிவு கொண்டோரும் அமைகின்றனர். இத்தனியடியார்கள் அகத்தியர் காலந்தொட்டு பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் தாயார் மீனாட்சி அம்மையார் காலம் வரை வாழ்ந்தவர்கள் ஆவர். வாழ்வில் இன்னல்கள் வரும்போது முருகனை எண்ணித் தம் இன்னல் தீர்ந்தவர்கள் என்ற நிலையில் தனியடியார்கள் வாழ்க்கை அமைந்துள்ளது.

தொகையடியார்கள் தொகுப்பு நிலையில் அமைபவர்கள். இருப்பினும் இவர்கள் கந்தன் பேர் அன்றி வேறுபெயர் அறியா நல்ல தன்மை வாய்ந்த பெருமையர் ஆவர்.

சேய்த் தொண்டர் புராணம் பல்வேறு இலக்கிய வளங்களைக் கொண்டு விளங்குகின்றது. சொல்திறம் மிக்கதாக இப்புராணம் படைக்கப்பெற்றுள்ளது. மேலும்

எண்ணலங்காரம், வருணனை, அணிநலம் போன்ற மரபுசார் இலக்கிய உத்திகள் கொண்டதாகவும் படைக்கப்பெற்றுள்ளது.

வருணனைத் திறம் பெருத்த அளவில் இப்புராணத்தில் காணப்படுகிறது. மேலும் தன்மையணி இப்புராணத்துள் பெரிதும் பயன்படுத்தப்பெற்றுள்ளது. யாப்பு நிலையில் விருத்தப்பா வகையானது அதிக அளவில் இப்புராணத்தில் இடம்பெற்றுள்ளது.

இப்புராணக் கட்டமைப்பில் புகைப்படங்கள் இணைத்தல், பட்டியலிடுதல், பயன் சொல்லல், முருகபக்தியின் வலிமை போற்றல் போன்ற சிறப்புக் கூறுகளும் காணப்படுகின்றன.

மொத்தத்தில் முருகனடியார்களின் முகவரியாகச் சேய்த்தொண்டர் புராணம் விளங்குகின்றது.

இவ்வாய்வு நிகழ்த்தப்பெற்ற காலத்தில் இவ்வாய்வின் தொடர்வாகச் சில ஆய்வுகள் வெளிவரலாம் என்ற அடிப்படையில் சில பரிந்துரைகள் இங்கு வைக்கப்படுகின்றன.

<u>பரிந்துரைகள்</u>

சேய்த்தொண்டர் புராணத்திற்கு நல்ல உரை எழுதப்பட வேண்டும். இதுவரை உரையில்லாமலேயே சேய்த்தொண்டர் புராணம் விளங்கிவருகிறது.

சேய்த்தொண்டர் புராணத்தில் காணப்படும் புரணாச் செய்திகள் பற்றி ஆய்வு நிகழ்த்தலாம்.

முருகனடியார் இயல்புகளை மற்ற அடியார் இயல்புகளுடன் ஒப்பிடலாம். திருத்தொண்டர் புராணத்திற்கும், சேய்த்தொண்டர் புராணத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் குறித்து ஆராயலாம்.

சேய்த்தொண்டர்புராணத்தின் வழியாகப் பெறப்படும் இலக்கிய ஆக்கங்களைத் தொகுத்துப் பட்டியலாக, புத்தகமாக, தொகுதிகளாக வெளியிடலாம்.

இப்புராணத்திற்குப் பின்பு கந்தனுக்குத் தொண்டாற்றிய முருக தொண்டர்கள் குறித்து ஆய்வுசெய்யலாம்.

துணைநூற்பட்டியல்

<u>துணைநூற்பட்டியல்</u>

அருணாசலம், மு., இராஜாவரதராஜா, தமிழ் இலக்கியவரலாறு, அருண் பதிப்பகம், திருச்சி, 2012

அறிவராஜ்.ந., ஆ.குமார், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், பாவைபப்ளிகேசன்ஸ். சென்னை, மூன்றாம் பதிப்பு 2014

இராதா செல்லப்பன், சமயமும் தத்துவமும், தமிழியல் துறை. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி. 2008

இராஜா.கி, தமிழ் இலக்கிய வரலாறு, நியுசெஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை, முதல் பதிப்பு ஆகஸ்டு 2016

இளம்பூரணர், (உரையாசிரியர்) தொல்காப்பியம் பொருளதிகாரம் சாரதா பதிப்பகம் சென்னை, பதிமூன்றாம்பதிப்பு 2014

கார்த்திகேயன்.வேல் மற்றும் பலர் (பதிப்பாசிரியர்) தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் முருகன் ஆய்வுக்கோவை தொகுதி 1,2 குறிஞ்சி பதிப்பகம், ஆம்பூர்2014

கார்த்திகேயன்.வேல்., மற்றும் பலர், செம்மொழி இலக்கியங்கள் ஆய்வுக் கோவை,)நுலாய்வு)காமாட்சிபதிப்பகம், மயிலம், 2010

கார்த்திகேயன்.வேல்., மற்றும் பலர், செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் ஆய்வுக் கோவை, நான்காம் தொகுதிகாமாட்சிபதிப்பகம், மயிலம், 2010

சந்திரன். ஜெ.ஸ்ரீ சந்திரன், (உரையாசிரியர்) மணிமேகலை ,தமிழ்நிலையம் சென்னை, 2007

சிதம்பரனார்.சாமி, சங்கப் புலவர் சன்மார்க்கம், தமிழ் நிலையம், சென்னை 2008

சிவத்தம்பி கார்த்திகேசு, தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும், நியசெஞ்சரி புக் அவுஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு 1994

சிவலிங்கனார். ஆ (உரையாசிரியர்) சிவப்பிரகாச சுவாமிகளின் திருக்கூவப் புராணம், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1999

சுப்பிரமணியன். க. , சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து, மருதம் பதிப்பகம், ஒரத்தாநாடு 2000

சுப்பிரமணியன். ச.வே. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி1 , மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010

சுப்பிரமணியன். ச.வே. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி3 , மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010

சுப்பிரமணியன். ச.வே. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010

சுப்பிரமணியன்.ச.வே. சங்கஇலக்கியம் மூலம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006

சுப்பிரமணியன்.ச.வே. தமிழ் இலக்கண நூல்கள், மூலம், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007

சுப்பிரமணியன்.பெ. மற்றும்பலர், பரிபாடல், நியுசெஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை, மூன்றாம் பதிப்பு 2007

செங்கல்வராயப் பிள்ளை, திருப்புகழ் பகுதி 1முதல் 10 வரை, திருநெல்வேல் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புகழகம், சென்னை 1999

சேதுப்பிள்ளை, ரா.பி. வேலின் வெற்றி, நல்லறப்பதிப்பகம் சென்னை, 2009

சொக்கலிங்கனார்,வே.செ. தேனூர் வரகவி, சேய்த்தொண்டர் புராணம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, நவம் 2011

நடராசன்.தி.சு. திறனாய்வுக்கலை, நியுசெஞ்சுரி புக்அவுஸ், சென்னை, ஏழாம் பதிப்பு, 2009

நாகராசசன் வி. (உரையாசிரியர்), குறுந்தொகை, நியுசெஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை, 2004

பழனியப்பன் இராமநாதன், திருச்செந்தூரின் கடலோரத்தில், ஸ்ரீ புவனேஸ்வரி, சென்னை, 2011

பாலச்சந்திரன்.சு. டாக்டர், இலக்கியத்திறனாய்வு, நியு செஞ்சுரி புக்அவுஸ் சென்னை, 12 ஆம் பதிப்பு 2011

பாலசுப்பிரமணியன், சிற்பி, சேதுபதி.சொ, தமிழ்இலக்கியவரலாறு, கவிதா பப்ளிகேசன்ஸ், சென்னை, முதற்பதிப்பு டிசம்பர் 2010

பூவண்ணன்.முனைவர், (உ□ரையாசிரியர்) கந்தபுராணம்,வர்த்தமானன் பதிப்பகம் சென்னை

மகிழேந்தி.முனைவர், சுற்றுச் சூழல் இயல்நோக்கில் சங்கத் தமிழகம், தி பார்க்கர், சென்னை, 2003

மலர்க்குழு, குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமாள் திருக்கேயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர், குன்றக்குடி ஆதீனம், குன்றக்குடி 2014

மாணிக்கம். அ. குமரகுருபரர் அருளிய பிரபந்தங்கள் தொகுதி (1,2) வர்த்தமானன் பதிப்பகம், சென்னை 2014

மாணிக்கவாசகன்,ஞா., மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது, உமாபதிப்பகம், சென்னை, அக்டோபர் 2009

மாணிக்கனார். அ. (உரையாசிரியர்) பரிபாடல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1999

முத்தப்பன்.பழ. முனைவர் (உரையாசிரியர்)கல்லாடம் உமா பதிப்பகம், சென்னை. 2015

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு -1

சேய்த்தொண்டர்களின் கால வரிசை

சேய்த்தொண்டர்	காலம் (நூற்றாண்டு) (கி.பி.)
பகீரதனார்	--
முசுகுந்தர்	--
நாரதர்	--
போகர்	--
இடும்பனார்	--
அகத்தியர்	1
நக்கீரர்	3
நல்லியக் கோடனார்	3
ஔவையார்	3
கல்லாடர்	3
கடுவன் இளஎயினனார்	3
நல்லந்துவனார்	3
பூதனார்	3
அழிசியார்	3
கேசவனார்	3
நப்பண்ணனார்	3
அச்சுதனார்	3
நாகனார்	5
சேந்தனார்	10
கச்சியப்ப சிவாச்சாரியர்	11
குகனேரியப்பர்	11
வைத்தியநாத தேசிகர்	14

சோமநாதர்	14
பிரபுடதேவர்	14
முருகம்மையார்	15
பொய்யா மொழிப்புலவர்	15
அருணகிரிநாதர்	15
ஞானவரோதயர்	15
சேறைக் கவிராஜர்	16
தேவராயர்	16
நிரம்ப அழகியர்	16
குமரகுருபர சுவாமிகள்	17
சிவப்பிரகாச சுவாமிகள்	17
திருஞானசம்பந்த தேசிகர்	17
சம்பந்த சரணாலயர்	17
சிதம்பர தேவர்	17
பாலசுப்பிரமணிய கவிராயர்	17
சாமிநாத தேசிகர்	17
சிவஞான தேசிகர்	17
கவிவீரராகவர்	17
மார்க்க சகாய தேவர்	18
குணசீலர்	18
வென்றிமாலைக் கவிராயர்	18
பகழிக் கூத்தர்	18
செங்கோட்டைக் கவிராஜர்	18
கச்சியப்ப முனிவர்	18
மாதவ சுப்பிரமணிய முனிவர்	18

சிதம்பர முனிவர்	18
கந்தப்ப தேசிகர்	18
சின்னப்பர்	18
சிற்றம்பல நாடிகள்	18
கலிசைச் சேவகனார்	18
மேலகரம் பண்டாரத்தார்	18
அண்ணாமலையார்	18
வேதாந்த சுப்பிரமணியனார்	18
அழகு முத்துப்புலவர்	18
இராமலிங்க அடிகள்	19
கவி குங்சரனார்	19
மாம்பழக் கவிச்சிங்கனார்.	19
தண்டபாணி சுவாமிகள்	19
குமரகுருதாசர்	19
பாடுவார் முத்தப்பர்	19
திருப்புகழ் சுப்பிரமணியனார்	19
சச்சிதாநந்த சுவாமிகள்	19
செல்லப்பர்	19
மீனாட்சி அம்மையார்	19

பின்னிணைப்பு 2

சேய்த்தொண்டர்களின் முருகன் குறித்த படைப்புகள்

சேய்த்தொண்டர்	முருக படைப்புப் பட்டியல்
1. அகத்தியர்	அகத்தியம்
2. பகீரதனார்	---
3. முசுகுந்தர்	--
4. நாகனார்	--
5. நக்கீரர்	திருமுருகாற்றுப்படை
6. நல்லியக் கோடனார்	--
7. ஔவையார்	நன்னெறி, மூதுரை, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, அசதிக்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ்மாலை. தரிசனப் பத்து, பந்தன் அந்தாதி, ஞானக்குறள், தனிப்பாடல்கள்.
8. சேந்தனார்	திருப்பல்லாண்டு
9. கச்சியப்ப சிவாச்சாரியர்	கந்தபுராணம்
10. முருகம்மையார்	--
11. பொய்யா மொழிப்புலவர்	--
12. அருணகிரிநாதர்	திருப்புகழ், கந்தர் அலங்காரம்,கந்தர் அனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், வேல்வகுப்பு
13. குமரகுருபர சுவாமிகள்	கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலாகலாவல்லிமாலை, மதுரைக் கலம்பகம், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் , மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை காசிக்கலம்பகம்

14. சிவப்பிரகாச சுவாமிகள்	நன்னெறி, சோன சைல மாலை, திருக்கூவ புராணம், நெஞ்சுவிடுதூது, பிரபு லிங்கலீலை, சிவநாம மகிமை, சேத்திர வெண்பா, வேதாந்த சூடாமணி, சிந்தாந்த சிகாமணி, அதிசய பத்து, நிரஞ்சன மாலை
15. திருஞானசம்பந்த தேசிகர்	தனிப்பாடல்கள்
16. சம்பந்த சரணாலயர்	கந்த புராணச் சுருக்கம்
17. மார்க்க சகாய தேவர்	விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்
18. குணசீலர்	தனிப்பாடல்கள்
19. சிதம்பர தேவர்	போரூர் சந்நிதி முறைத் திரட்டு
20. வென்றிமாலைக் கவிராயர்	செந்தூர் புராணம்
21. பகழிக் கூத்தர்	செந்தூர் பிள்ளைத்தமிழ்
22. செங்கோட்டைக் கவிராஜர்	திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்
23. கச்சியப்ப முனிவர்	தணிகை புராணம்
24. மாதவ சுப்பிரமணிய முனிவர்	தணிகை விருத்தம்
25. சிதம்பர முனிவர்	சேத்திரக் கோவை
26. கந்தப்ப தேசிகர்	தனிப்பாடல்கள்
27. பாலசுப்பிரமணிய கவிராயர்	பழனி புராணம்
28. சின்னப்பர்	பழனி பிள்ளைத்தமிழ்
29. சாமிநாத தேசிகர்	செந்தூர்க் கலம்பகம்
30. குகனேரியப்பர்	உபதேச காண்டம் -உரை
31. ஞானவரோதயர்	உபதேச காண்டம்
32. இராமலிங்க அடிகள்	திருவருட்பா
33. கவி குஞ்சரனார்	கந்தபுராணக் கீர்த்தனை
34. மாம்பழக் கவிச்சிங்கனார்.	தனிப்பாடல்கள்

35. தண்டபாணி சுவாமிகள்	புலவர் புராணம், அறுவகை இலக்கணம்
36. குமரகுருதாசர்	திருவாலங்காத் திரட்டு, மற்றும் தனிப்பாடல்கள்
37. கல்லாடர்	துதிப்பாடல் எழுதியவர்
38. கடுவன் இளஎயினனார்	பரிபாடல் பாடல் 5
39. நல்லந்துவனார்	பரிபாடல் பாடல் 8
40. பூதனார்	பரிபாடல் பாடல் 18
41. அழிசியார்	பரிபாடல் பாடல் 17
42. கேசவனார்	பரிபாடல் பாடல் 14
43. நப்பண்ணனார்	பரிபாடல் பாடல் 19
44. அச்சுதனார்	பரிபாடல் பாடல் 21
45. சேறைக் கவிராஜர்	சேயூர் திருமுருகன் திருவுலா
46. சிற்றம்பல நாடிகள்	செந்தூர் அகவல்
47. கலிசைச் சேவகனார்	தனிப்பாடல்கள்
48. சிவஞான தேசிகர்	அருட்பா
49. வைத்தியநாத தேசிகர்	மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்
50. சோமநாதர்	தனிப்பாடல்கள்
51. மேலகரம் பண்டாரத்தார்	இலஞ்சி பிள்ளைத்தமிழ்
52. அண்ணாமலையார்	காவடிச் சிந்து
53. கவிவீரராகவர்	சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்
54. தேவராயர்	கந்தர் சஷ்டிக் கவசம்
55. நிரம்ப அழகியர்	பரங்கிரிப் புராணம்
56. வேதாந்த சுப்பிரமணியனார்	குன்றக்குடி புராணம்
57. அழகு முத்துப்புலவர்	தனிப்பாடல்கள்
58. நாரதர்	----

59. போகர்	சித்தர் பாடல்கள்
60. இடும்பனார்	----
61. பிரபுடதேவர்	----
62. பாடுவார் முத்தப்பர்	திருமுக விலாசம், செயங்கொண்ட சதகம்
63. திருப்புகழ் சுப்பிரமணியனார்	திருப்புகழைத் தொகுத்தவர்
64. சச்சிதாநந்த சுவாமிகள்	திருப்புகழ் உரையாற்றியவர்
65. செல்லப்பர்	--
66. மீனாட்சி அம்மையார்	

ஆய்வுப் பரப்பில் எழுதப்பெற்ற கட்டுரைகள்

ISBN 978-93-81006-06-1

தமிழர் வாழ்வியல்

மரபும் மாற்றமும்

பதிப்பாசிரியர்

செம்மூதாய் சதாசிவம்
பேரா. செ.நாகராஜன்
முனைவர் க.பூபதி
முனைவர் வெ.ஹரிதாஸ்

மருதம் தொகுதி 3

தமிழர் வாழ்வியல் மரபும் மாற்றமும்

மருதம் தொகுதி 3

தமிழர் வாழ்வியல்

மரபும் மாற்றமும்

செம்மூதாய் பதிப்பகம்
A3, அபிராமி நிவாஸ்
நெ. 43. வால்மீகி தெரு
கிழக்குத் தாம்பரம்
சென்னை 600 059
கைபேசி : 9444 200 369
semmoodhai@gmail.com

ISBN 978-93-81006-06-1
9 789381 006061

உரு .400/-

பொருளடக்கம்

பக்கம்

1. **சு. சுதா** — 1
அம்பிகாபதி கோவை இலக்கியம் காட்டும் அகத்திணை மரபியலில் பெண்

2. **அ. வீரமணி** — 5
அவ்வுலகம் புதினத்தில் வாழ்வியல் கூறுகள்

3. **செ. மாலதி** — 10
வடமலை நிகண்டின் அமைப்பும் சொல்லாக்க உத்திகளும்

4. **பொ. சக்திமயில்** — 15
ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்மையின் நிலை

5. **க. ரஜினி** — 18
பாரதியின் பார்வையில் பெண்ணியச் சிந்தனைகள்

6. **ப. யுவராஜ்** — 21
பாரதிதாசன் பார்வையில் பெண்ணியம்

7. **த. சுகந்தி** — 26
பெண் விடுதலையும் தி இந்து நாளிதழும்

8. **முனைவர் மு. க. அனிதா** — 31
வஞ்சிநெடும்பாட்டில் வாணிகம்

9. **தி. அன்பு** — 36
சங்க இலக்கியத்தில் விருந்தோம்பலும் உணவு முறைகளும்

10. **சீ. தீபா** — 40
பழமொழி நானூறு உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

11. **அ. நஸ்ரின்** — 44
திருவாசகத்தில் இறைமை நிலை

12. **ச. சந்தினி** — 48
மரிமானி குப்பம் சிறுதெய்வ வழிபாடும் சடங்குகளும்

13. **பி. அனிதா** — 52
இலக்கிய வினாத்தாள்களில் சமூக மதிப்பு

14. **சு. கணேசன்** — 57
திருவண்ணாமலை மாவட்ட நாட்டுப்புறமக்களின் நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள்

15. **கோ. கவிதா** — 61
புறநானூற்றில் நட்பு

16. **க. சசிகலா** — 65
அம்மூர் பாப்பாத்தியம்மன் வழிபாடும் சடங்குகளும்

17. **சு. செந்தமிழ்செழியன்** — 69
திரெளபதி துயில்

18. **அ. பொன்னுசாமி** — 74
நாட்டுப்புற மக்களின் குடும்ப உறவுமுறைகள்

19. **முனைவர் மு. பழனியப்பன்** — 78
இரா.தமிழரசி கவிதைகளில் மரபழுத்தங்களும் படைப்புச் சிறுவெளியும்

20. **ஆ. பழனியாயி** — 82
தமிழச்சி தங்கபாண்டியனின் வனப்பேச்சி கவிதைத் தொகுப்பில் மரபும் மாற்றமும்

21. **சி. உஷா** — 87
சேய்த்தொண்டர் புராணத்தில் மரபும் மாற்றமும்

22. **பொ. இரவீந்தரன்** — 92
தனஞ்செயன் படைப்பில் மீனவர் வழக்காறுகள்

23. **சு. கணேசன்** — 96
புதுமைப்பித்தன் படைப்புகள்

24. **அ. பொன்னுசாமி** — 101
கா. அப்பாத்துரையாரின் தமிழ்ப் பணி

25. **சு. செந்தமிழ்ச் செழியன்** — 105
தோல் புதினத்தில் பெண் பாத்திரப் படைப்பு

26. **தா. வனிதா** — 109
தமிழுலகில் சே. சுந்தரராசனாரின் தமிழ்ப்பணி

27. **க. முரளிதரன்** — 114
சு. சமுத்திரம் நாவல்களில் பெண்கள்

28. **கு. சிவசங்கரி** — 119
சங்ககாலப் போரியல் வாழ்க்கை

29. **ஜெ. தேவிதா** — 124
சங்ககால மக்களின் வாழ்க்கை முறைகள்

30. **ஆ. சசிகலா** — 129
பண்டையத் தமிழரின் சகுனங்களும் நம்பிக்கைகளும்

21. சேய்த்தொண்டர் புராணத்தில் மரபும் மாற்றமும்

சி. உஷா

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி
சிவகங்கை

சேய்த்தொண்டர் புராணம் என்பது முருகவேள் திருமுறை என்ற தொகுப்பில் பன்னிரண்டாம் பகுதியாக அமையும் புராணம் ஆகும். சைவத் திருமுறைகள்போல முருகவேளுக்கும் திருமுறைகள் வகுத்து, பன்னிரண்டாம் திருமுறையாக முருக அடியார் வரலாற்றைப் பாடும் நிலையில் பாடப்பெற்றது சேய்த்தொண்டர் புராணமாகும். இதனை இயற்றியவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் ஆவார். இவர் சேய்த்தொண்டர் தொகை, சேய்த்தொண்டர் திருவந்தாதி, சேய்த்தொண்டர் புராணம் என்ற மூன்றையும் பாடியுள்ளார். சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார்நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் பாடிய பெரியபுராணம் என்ற நிலையில் அமைந்த சைவத் திருமுறை வளர்ச்சிபோல முருகப்பெருமான் தொண்டர்களுக்குத் தொகை, அந்தாதி, புராணம் பாடியவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் ஆகின்றார். இதன்வழி பெரியபுராண மரபினைப் பின்பற்றி இப்புராணம் செய்யப் பெற்றுள்ளது என்பது கருதத்தக்கது. மேலும் பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று அடியார் வரலாறுகள் பாடப்பெறுகின்றன. இந்நூலுள் எழுபத்தெட்டு என்ற எண்ணிக்கையில் முருக அடியார்கள் வரிசைப் படுத்தப் பெற்றுள்ளனர். மேலும் இதிலும் பெரிய புராணத்தைப்போல மூன்று பெண் அடியார்கள் மட்டுமே எடுத்துரைக்கப்பெற்றுள்ளனர். இம்மூன்று பெண் முருக அடியார்களில் ஒருவர் முருகம்மையார். முருகம்மையார் புராணத்தில் சுட்டப்பெறும் மரபுகளையும் ,அவற்றின் மீறல்களையும், மாற்றங்களையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

முருகம்மையார்- புராணம்

ஔவையார், முரும்மையார், மீனாட்சியம்மையார் ஆகிய மூவரே சேய்த்தொண்டர் புராணம் காட்டும் முருகத் தொண்டர்கள் ஆவர். இவர்களுள் ஔவையார் பற்றிய புராணம் மிக விரிவானது. இப்புராணம் பல செய்திகளை, வரலாறுகளை உள்ளடக்கி உள்ளது. மீனாட்சி அம்மையார் புராணம் மிகச் சுருங்கியது. மீனாட்சி அம்மையார் முருகன் தாள் அடைந்தவர் என்ற குறிப்பினை மட்டும் தருவது. முருகம்மையார் புராணம் இடைப்பட்ட நிலைப்பட்டது.

முரும்மையார் பிறப்பு

சோழநாடு சோறுடைய நாடு எனப்படும் அளவிற்கு வளமை

வாய்ந்தது, அதில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் நூற்றுத் தொன்னூற்றாறு என்ற அளவில் விளங்குகின்றன. அந்நாட்டின் பழைய ஊர் ஒன்றில் பிறந்தவர் முருகம்மையார்.

பலநாட்கள் குழந்தையில்லாமல் இருந்த தம்பதியருக்கு முருகன் அருளால் பிறந்த குழந்தை முருகம்மையார் ஆவார். சோதிடர் கணித்துத் தந்தபடி கிருத்திகை மதிக்குப் பின்னான நாளில் பஞ்சமிக்கு அடுத்த தினத்தில் முருகனடியார்களுக்கு உணவு, உடை கொடுத்து அதன்வழியாகப் பிறந்த குழந்தை முருகம்மையார் ஆவார்.

இக்குழந்தையைப் பெற்றோர் முருகன் சன்னதி முன்னால் வைத்து சடாச்சர மந்திரத்தை அதன் காதுகளில் ஓதினர். இதனைக் காதுகுளிர அக்குழந்தை கேட்கிறது. முருக சிந்தனையில் தோன்றியதால் அதற்கு முருகம்மை என்ற பெயரையே வைத்தனர். பெயருக்கு ஏற்ப இந்தக் குழந்தை ஒரு நிமிடம்கூட இடைவிடாது முருகநாமத்தையே சொல்லி வளர்ந்தது. வாழ்ந்தது. முருகம்மை முருகப் பெருமான் அருளையே தினமும் நினைத்து வளர்ந்தார்.

"எத்தேவன் திருவருளால் இருநிலத்தோர்
இறைஞ்ச திருஅவதாரம் புரிந்திட்டாரோ
அத்தேவன் திருநாமம் அனைத்தினும்
தெள்ளமுதமயமா முருகா முருகா என்றம்
மெய்த்தேவன் திருவருளைச்சிந்திப்பாராய்
விளையாடல்மறந்ததனை அறைந்தத்த நாமப்
பித்தேகொண்டிளம் பேதைப்பருவம் நீங்கிப் பெதும்பை
என்னும் பருமுற்றார் எம்பிராட்டி"
(சேய்த் தொண்டர் புராணம், 599)

என்று முருகம்மையார் மற்ற குழந்தைகள்போல் விளையாட்டில் நாட்டம் செலுத்தாமல், முருகன் நாமத்தைச் சிந்திப்பதையே தன் செயலாகக் கொண்டு விளங்கினார். முருகன் நாமத்தின் மீது பித்து கொண்டார்.

திருமணம் செய்வித்தல்

பிறந்த பெண்பிள்ளைகளை நல்ல இடத்தில் திருமணம் செய்து தருவது என்பது, பெற்றோரின் கடமையாகின்றது. இது மரபு சார்ந்த வழக்கமும் ஆகும். முருகம்மையார் முருக நினைவில் இருப்பதால் அவர் திருமணத்தை விரும்பவில்லை. இருந்தாலும் அவருக்குப் பெற்றோர்கள் மனம் செய்விக்க முயலுகின்றனர். இதுவே இப்புராணத்தில் இடம்பெறும் மரபுச் சூழல் ஆகும். திருமண மரபை மறுக்காமல் ஏற்கிறார் முருகம்மையார்.

"தங்கள்தவக் கொழுந்தழகை நோக்கி நோக்கி
சாற்றருபே ருவகையுடன் பயந்த மேலோர்
மங்களநன் மணமுடிப்பான் நாடித்தங்கள்
மரபினிலோர் வரன் வருகையதை நோக்குங்கால்

எங்களம்மைஇல்லறநல்வாழ்க்கைதன்னில்
எள்ளளவும்விருப்பிலாராய் இருந்தும் ஈன்றபுங்கவர்தம்
உளக்கருத்தை மறுத்தற் கொண்ணார் போலும்
ஒருவாறதனுக்கு உடன்பட்டாரால்"
(சேய்த்தொணடர்புராணம்,600)

என்ற பாடலில் திருமணம் மரபு சார்ந்தது என்பதாலும் பெற்றோர் மனம் புண்படக்கூடாது என்பதற்காகவும் திருமணத்தை ஏற்க முன்வருகிறார் முருகம்மை என்பதை இப்புராண ஆசிரியர் காட்டுகின்றார். ஆனால் இல்லற இன்பத்தில் எள்ளளவும் நாட்டமுடையவராக முருகம்மையார் விளங்கவில்லை என்பதையும் மேற்பாடல் காட்டுகின்றது.

வளர்ந்த பெண் பிள்ளை திருமண நாட்டம் இன்றி இருப்பது என்பது மரபின் விலகலே ஆகும். இருப்பினும் அவ்விலகலையும் மரபுக்குள் கொண்டுவர சமுதாயம் தலைப்படுகிறது. முருகம்மையார் திருமணம் புரிந்து கொள்ள உடன் படுகிறார். தனஞ்செயன் என்ற வரனை இவருக்கு மணமுடித்து வைக்கின்றனர். வண்டிகளில் பொருள்களை ஏற்றி மணமக்களை மணமகன் ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துப் பெண் வீட்டு உறவினர்கள் திரும்பினர். அவர்கள் திரும்பியதற்கு அடுத்தநாள் முதல் முருகம்மையார், தனஞ்செயன் ஆகியோரின் இல்லற வாழ்வு இனிதே தொடங்கியது.

இளம்தம்பதிகள் வாழ்வில் மாற்றம்

இனிமையாக வாழும் இவ்விளம்தம்பதிகள் வாழ்வில் ஒரு இடையீடு ஏற்படுத்தப்பெற்றது.

"இல்லறநல் வாழ்க்கைதனிற் கொழுநன் உள்ள
இதமுறுமா றினியனஎல் லாமியற்றி
நல்லமுருகா முருகா என்றெப்போழ்தும் நவிலல்மற
வாதியம்பி நிகழும் நாளிற்
புல்லர்சிலர் இவர் முருகா முருகா என்னும்
புநிதமொழி கேட்டமுக்காறுடைய ராயஅச்
செல்வ இளம் தம்பதிகள் வாழ்வின் மாற்றஞ்
சிறிதுசிறிதாய் வளரத் தீங்கு சூழ்ந்தனர்"
(சேய்த்தொண்டர் புராணம், 604)

என்ற பாடலில் முரும்மையாருக்கு ஏற்பட்ட இன்னல் காட்டப்பெறுகிறது. இல்லற நெறியை, மரபினை உருக்குலைக்கும் இன்னலாக அது விளங்குகிறது. முருகம்மையார் முருகா, முருகா என்று எப்போதும் அழைக்கிறார். அடியாரின் வாழ்வென்பது, ஆண்டவனை மறவாது நினைந்து கொண்டே இருப்பதுதான். இது பக்தி நெறிமுறை. ஆனால் இந்நெறிமுறை இல்லற நெறிமுறையோடு முரண்படுவதாக இவரின் வரலாற்றில் அமைந்துவிடுகிறது. முருகா, முருகா என்பது வேறு ஆடவன் பெயராக சந்தேகப்படுத்தப்படுகிறது. 'தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுதெழுவாள்' என்பதே திருக்குறள் காட்டும் மரபு. தெய்வத்தை

மறந்து கணவனையே எப்போதும் நினைப்பதே மனைவியின் நற்பேறு என்று கருதுவது மரபுசார்ந்த நெறியாகும்.

ஆனால் இங்கு கணவனைவிட கடவுள் பெயர் அதிக அளவில் ஈடுபாடுடையதாக முருகம்மையாருக்கு விளங்குவது முரணாகின்றது. ஷபக்ககத்து முருகனையே உனது தேவி பரிந்தழைத்து தன்னவனோடும் உறவு பூண்டாள்' (சேய்த்தொண்டர் புராணம், 605) என்று சிலர் பல நாட்களாக பக்க அகத்து ஆடவன் முருகன் பெயர்கொண்டு முரண்பாட்டைத் தோற்றுவித்து அதனை உறுதிப்படுத்தப் பலபட பேசியும் வந்தனர். இதன் காரணமாக முருகம்மையார் கணவனான தனஞ்சயனுக்குக் கோபம் அதிகமானது.

"இனிமுருகா என்பதனை விடுத்திடென்ன இல்லை
முருகா முருகா எனப் பிராட்டி
முனிவிதனுக்கேன் முருகா என்னவே நீமொழி முருகன்
இனி உனைக்காப்பான் என்று
கனிவறுசீற்றத் தொடுகை வாளால் அம்மை
கரமதனை அரிந்திடலும் கலக்கம் இன்றிப்
புனிதமுருகா முருகா இது நின்னாடல்
போலுமுருகா முருகாமுருகா என்றார்"
(சேய்த்தொண்டர் புராணம்:606)

என்று கோபம் கொண்ட தனஞ்செயன் முருகம்மையாரின் கையை அறுத்துவிடுகிறான். இருப்பினும் அத்துயரத்திலும் முருகன் நாமம் சொல்வதை இவ்வம்மையார் நிறுத்தவில்லை. சமுதாயக் கட்டுப்பாடு களுக்கு, மரபுகளுக்கு உடன்படாதபோது தண்டனை வழங்கப்படுகிறது. அதுவும் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் தண்டனை பற்றிய யாருக்கும் கவலையே இல்லை.

கையறுப்பு தண்டனை பெற்றபின் ஒருமுறைக்கு மும்முறையாக முருகன் நாமத்தை அவர் சொல்கின்றார். ஒருமுறை சொன்னாலே ஓடோடி வரும் இயல்புடைய முருகப்பெருமான், தன்பெயரை நாளும் சொல்லும் ஒரு முறைக்கு மும்முறை சொல்லும் முருகம்மையார் குரலுக்கும் உடனே வருகிறான்.

"ஒருகால்முருகா எனும் உத்தமர்முன்
ஓடோடி வருக் கருணாகரவேள்
முருகாமுருகாமுருகா எனமும்முறை கூவிய
அம்மையின் முன்மயில்மேல்
இருபாலுறுதேவியர் மூழ்ந்தருள இனஞாயிறுகோடி எழுந்ததெனக்
கிருபாகர மூர்த்தி எழுந்தருளக் கேடுற்ற வலக்கரம் ஓட்டியதால்"
(சேய்த்தொண்டர் புராணம், 607)

என்று கருணாகரமூர்த்தி, கிருபாகர மூர்த்தி வந்தருளியதை இப்புராண ஆசிரியர் பாடுகின்றார். கரம் வெட்டப்பட்டதை ஒட்டச்செய்ய பன்னிருகரக்கடவுள் வருகிறார் என்பதால் கிருபாகர மூர்த்தி, என்றும்

கருணாகர மூர்த்தி என்றும் முருகப்பெருமானை இப்புராண ஆசிரியர் கரங்களின் மூர்த்தியாகக் காட்டியுள்ள திறம் இலக்கியச் சுவை பயப்பதாகும். முருக அடியார்களுக்கு நம்பிக்கை விளைவிப்பதாகும்.

இல்லற மரபுகள் முருகம்மையாரால் மீறப்படுவதாக சமுதாயம் கருதுகின்றது. முருகம்மையாரின் செயல் மீறலாகக் கொள்ளப்படாமல் மாற்றமாக பின்பு முருகனால் மாற்றப்பெறுகிறது. இவ்வகையில் ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் மரபும், மரபிடையீடும், மரபுமாற்றமும் நிகழ வாய்ப்புள்ளது என்பதை இப்புராணக்கதை சுட்டுகின்றது. கடவளை விட கணவன் முக்கியம் என்ற மரபுசார் கருத்து இங்கு ஆன்மிகத்தளத்தில் மாற்றம் பெற்றுள்ளது. கணவனைவிடவும் கடவுள் சிறந்தவர் என்பதை முருகம்மையாரின் கை ஒட்டிய வரலாறு காட்டிவிடுகின்றது. இதன்பின் தன் கணவரையும் தன்னோடு முருகம்மையார் முக்தி நிலைக்குஅழைத்துச் செல்வதாக புராணம் முடிகின்றது.


மரபு என்பது வழக்கத்தில் இருந்துப் பெறப்படும் தெளிவான முடிவு. இத்தெளிவான முடிவு ஒரு காலத்திற்குப் பொருந்தலாம். எல்லா காலத்திற்கும் அது பொருந்துமா என்றால் அது பொருந்தாது. அவ்வவ் காலத்திற்கேற்ப மரபுகள் மாற்றம் பெறவேண்டும். இம்மாற்றத்தின் அடிநாதம் மரபினைக் குலைப்பதன்று. மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கு மரபு தடையாக இருக்கக் கூடாது என்பதே ஆகும். இதனடிப்படையிலேயே இலக்கிய மரபுகளையும் மரபு மீறல்களையும், மரபு இடையீடுகளையும் நோக்கவேண்டும்.

தொடரும்...

நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

இதழ் : 39-43 ■ ஜூலை 2016 - டிசம்பர் 2017 ■ விலை ரூ.120/-

நவபாரதி
என்றொரு
ஞானநதி





சேய்த்தொண்டர்புராணம் உணர்த்தும் நக்கீரர் வரலாறு

எஸ்.உஷா
முனைவர் பட்ட ஆய்வாளர்
(பகுதிநேரம்)

நக்கீரர் கடைச்சங்க புலவர் ஆவா இவர் இறையனார் பாடலி குற்றம் கண்டுபிடித்தவர். இவர் திருமு காற்றுப்படை, கைலை பாதி காளாத் பாதி காளத்தி அந்தாதி, இறையனா அகப்பொருள் உரை, திருவீங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவ பாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றிக் கலிவெண்பா, திருக் கண்ணப்பத்தேவர் திருமறம் போன்ற வற்றை இயற்றியவர். மேலும் இவர் பாடியனவாக நற்றிணையில் ஏழு பாடல்களும், குறுந்தொகையில் எட்டுப் பாடல்களும், அகநானூற்றில் பதினேழு பாடல்களும், திருவள்ளுவமாலையில் ஒன்றும் அமைந்துள்ளன. இவரைப் பற்றி சேய்த்தொண்டர்புராணத்தில் ஒரு புராணம் பாடப்பெற்றுள்ளது. இப்புராணம் இவரின் வரலாற்றையும் இவரின் படைப்புகளையும் இணைத்துப் பாடப்பெற்றுள்ளது. அப் புராணம் தரும் செய்திகளை ஆய்வு நோக் கில் தருவதாக இக்கட்டுரை அமைகிறது.

சேய்த்தொண்டார் புராணம் என்பது முருகத்தொண்டர்களின் வரலாறுகளைத் தொகுத்துப் பாடும் புராணம் ஆகும். முருகவேள் பன்னிரு திருமுறை என்ற தொகுப்பினடிப்படையில் பன்னிரண் டாவது திருமுறையாக இது அமைகிறது. இதனை இயற்றியவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் ஆவார். இப்புராணத்தில் அறுபத்தாறு தனியடியார்களின் வரலாறும், பன்னிரு தொகை அடியார்களின் வரலாறும் இணைத்துப் பாடப்பெற்றுள்ளன. இது நிலம் என்ற சொல்லில் ஆரம்பித்து நிலம் என்ற சொல்லில் முடிக்கப்பெற்றுள்ளது. இதனுள் நக்கீரர் வரலாறு ஆறாவது புராண மாகக் காட்டப்பெற்றுள்ளது.

நக்கீரரின் பெற்றோர்

நக்கீரர் மதுரைக் கணக்காணர் மகனார் என்ற அடைச்சொல்லோடு குறிக்கப்பெறுகிறார். எனவே இவரின் தந்தையார் கணக்காயராக மதுரையில் பணியாற்றியிருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. இதனை

“அன்னவர் பெயர்கணக் காயராம்அவர்
சொன்னநூற் றுறையெலாம் தோய்ந்து ணர்ந்துநல்
இன்னிசைப் புலமையுறு றவர்மேற் றேனையோர்
தன்னிகர் இலாரனும் தகைமை சான்றவர்” (17)

என்று சேய்த்தொண்டர் புராணம் குறிக் கிறது. இவர்களுக்கு உலகம் உய்ய ஒரு குழந்தை பிறக்கிறது. உலகம் உய்ய எனத் திருமுருகாற்றுப்படை தொடங்குவதன் வழி யாக நக்கீரரின் பிறப்பினை உலகம் உய்யப் பிறந்த குழந்தை என்று இப்புராணம் குறிக் கிறது.

பிள்ளைத்தமிழாய் வளர்ந்த வளர்ச்சி

நக்கீரக் குழந்தை வளர்ந்த வளர்ச்சியை சேய்த்தொண்டர் புராணம் இயற்றிய சொக்கலிங்கனார் பிள்ளைத் தமிழாகப் பாடியுள்ளார். பிள்ளைத் தமிழின் பருவ வரிசையின்படி ஒவ்வொரு பால் எழுதி இக்குழந்தையைப் பிள்ளைத்தமிழால் வளர்க்கிறார்.

செங்கரங்களை முன்வைத்து அந்தக் குழந்தை செங்கீரை ஆடியது. அவ்வாறு ஆடும்போது ஆறெழுத்து, ஐந்தெழுத்து மந்திரங்களை உச்சரித்தது. தாமரை போன்ற முகம் மலர்ந்ததது. இவ்வாறு செங்கீரை ஆடலைக் குறிக்கிறார் சொக் கலிங்கனார்.

புலவர்திலகமாகிய நக்கீரக் குழந்தை பூக்களால் செய்யப்பெற்ற தொட்டிலில் அமர்ந்து, கால்கள் மண்டியிட்டு, பூப் போன்ற கரங்களால் சப்பாணி கொட்டி அருளினார்.

அழகான மார்பமைந்த பெண்கள் கொண்டாட அக்குழந்தை முத்தமிட்டு மகிழ்ந்தது.

தமிழ் ஓங்க வந்த குழந்தைக்கு நிலா வைக் காட்டி அதனை இவருடன் ஆட வருக என்று பெண்கள் அழைத்தனர்.

இக்குழந்தை மூடர்க்கும் அறிவு பெறும் நிலையில் பறை கொட்டியது.

சதங்கை அணிந்த கால்களால் நடந்து சிறுமியர் கட்டிய சிற்றில்களை அழித்தது.

மதுரை செய்தவத்தால் அக்குழந்தை மதுரைநகர் வீதிகளில் சிறுதேர் ஓட்டியது.

இவ்வாறு இக்குழந்தை பிறைச் சந்திரன் முழுமை பெறுவதைப்போல முழுமை யாய் வளர்ந்து நின்றது. இதனைப் பிள்ளைத்தமிழ் வரிசையில் பாடியுள்ளார் இப்புராண ஆசிரியர்.

இப்பிள்ளை மேலும் வளர்ந்து, தன் பதினாறு வயதில் பல்வகைக் கவிகள் புனை வது, தமிழ் ஆய்வது போன்ற சிறப்பு களைப் பெற்றது. இதனை,

பெற்றோ ரிடத்தும் பிறரிடத்தும் பேசுதமிழ்
கற்றோரிடத்தும் கலையெல்லாம் கற்றுணர்ந்து
மற்றோரிடத்தடைந்து வாதாடத் தக்க நலம்
உற்றோதநீர் ஞாலத்துயர் கலைஞர் ஆயினார் (36)

என்ற பாடல் உணர்த்துகிறது.

தமிழ்ச்சங்கப் புலவர்

நக்கீரர் வாழும் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் உக்கிரப்பெரு வழுதி ஆவான். இவர் தன் நாட்டை நன்கு ஆளும வல்லமை மிக்கவர்; தமிழ்க் கவிதைகளைப் புலவர்கள்வழி செவி குளிரக் கேட்பவர். கந்த வேள் அடியார்க்கு வேண்டுவன செய்யும் பண்பாளர். இவர் தலையாலங்கானத்துப் போரில் பகைவரை வென்றவர். இவர், தமிழ்ச் சங்கத்தில் தமிழ் வளர ஆவன செய்தார். இச்சங்கத்தின் தலைமைப்புலவராக புலவர் திலகமான நக்கீரரை இவர் தமிழவையின் தலைமைப் புலவராக்கினார். பல விருதுகள், பல வரிசைகள் தந்து பாண்டியர் இப்பதவியை நக்கீரருக்கு அளித்தார்.

தமிழறி பெருமாள் வெற்றி

தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராக இவர் அமர்ந்த நாள் முதல் தமிழுக்கு இழுக்கு நேரும்போதெல்லாம் அதனைத் தடுத்துத் தமிழை இவர் தலைநிமிர வைத் தார். இந் நேரத்தில் விறகு வெட்டும் தொழில் செய்யும் ஒருவர் மதுரைத் தமிழ்ச்சங்கம் நாடி வந்தார். அவர் சோழ நாட்டைச் சார்ந்தவர். கையில் கோடரி வைத்திருந்தார். அவர் "என்னை ஆள்பவர் யாருமில்லையா" என்று கூவியபடி தமிழ்ச்சங்கம் வந்தார்.

அவரை ஆற்றுப்படுத்தி நக்கீரர் நடந்து என்ன என்று கேட்டார். அதற்கு வந்தவர் "தமிழறிபெருமாள்" என்ற பெண்மணி தமிழை இகழ்கிறாள். அதுமட்டும் இல் லாமல் தமிழன்றி வேறு மொழி அறியாத என்னைப் பார்த்து 'உன்னை எல்லாம் மணக்க ஒரு பெண் தேவையா?' என்றும் கேட்கிறாள்"" என்று முறையிட்டார்.

இதனைக் கேட்ட நக்கீரர் முருகனருள் கொண்டு தேர் ஏறினார். மதுரை கடந்தார். உறையூரை அடைந்தார். விறகு வெட்டும் தொழிலில் வல்லவரான அவர் காட்டிய தமிழறிபெருமாள் இல்லத்திற்குச் சென்றார். அங்கு தமிழறிபெருமாள் என்ற பெண்ணுடன் வாதம் புரிந்தார். வெற்றி பெற்றார். பின்பு அவ்வளை விறகு வெட்டும் தொழில் செய்யும் தலைவனுக்கு மணம் முடித்து வைக்கிறார்.

சோழமண்டல சதகத்தில் நக்கீரரை வென்றவள் தமிழறிபெருமாள் என்ற பெண்





என்று குறிக்கப்பெறுகிறது. சோழ மண்டல சதகம் சோழச் சார்புடையது என்பதால் இவ்வாறு புனையப்பெற்றிருக்கலாம்.

ஈங்கோய்மலைப் பயணம்

உறையூருக்கு வந்த நக்கீரர் அப்படியே திருஈங்கோய்மலைக்குச் செல்கிறார். அம் மலையில் அருகே ஓடும் காவிரியில் இவர் மூழ்கி அதன்பின் அம்மலைமீதுள்ள கோயிலுக்குச் செல்கிறார். கோயிலில் ஈங்கோய்மலை எழுபது என்ற நூலைப் பாடித்தொழுகிறார். இதன் பின்பு அவர் மதுரை மாநகருக்குத் திரும்புகிறார்.

திருவள்ளுவர் நூலுக்கு மதிப்பு

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றித் தமிழ்ச்சங்கத்திற்குக் கொண்டுவந்தார். அவரின் குறளுக்கு ஒரு பாடல் செய்கிறார் நக்கீரர்.

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண் குறளால்
ஆனா அறம்முதலா அந்நான்கும் - ஏனோர்க்கு
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉலகு என்ஆற்றும் மற்று

என்பது அப்பாடலாகும். இதனைத் தம் நூலில் சொக்கலிங்கனார் குறிக்கிறார்.

"மற்று என்றோர் சொல்லாரஞ் சூட்டித் தொழுதேத் தினார் எந்தை அம்மா" (260)

என்ற நிலையில் திருவள்ளுவமாலைப் பாடல் குறிப்பிடப்பெற்றுள்ளது. இதன் காரணமாக திருவள்ளுவமாலை பாடித் திருக் குறளுக்கு மதிப்பு நல்கியவர் நக்கீரர் என்பது தெரியவருகிறது.

கொங்குதேர் வாழ்க்கை பாடலும் பரிசும்

தருமி என்ற புலவன் "கொங்குதேர் வாழ்க்கை" என்ற தொடக்கமுடைய ஒரு பாடலை எழுதிக்கொண்டு சங்க மண்டபத்திற்கு வந்தார். வந்தவர் தன் பாடலுக்குப் 'பொற்கிழி தாருங்கள்' என்றார். இப்பாடலை ஆராய்ந்த சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதுபேர், இதனில் பொருள் குற்றம் உள்ளது என்றனர். இதன் காரணமாக வருத்தமுற்ற தருமி மதுரை யில் உள்ள சொக்கநாதர் கோயிலில் கிடந்தார். இவரின் வருத்தநிலை கண்டு, சிவபெருமான் வலவராய்த் தோன்றிச் சங்கத்திற்கு எழுந்தருளினார்.

வந்தவர் கோபம் தீராமல், 'யார் எம் பாடலில் குறைகண்டது?' என்று வின வினார். 'நாய்போன்ற யானே பாட்டில் பொருள் குற்றம் உள்ளது என்றேன்' என் றார் நக்கீரர். 'பெண்கள் தலைமுடிக்கு இயற்கையில் மணம் உள்ளதாக இப்பாடல் குறிப்பது தவறு' என்று உரைத்தார் நக்கீரர். இதனைக் கேட்ட வலவர் 'வானவப் பெண்களின் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லையா?' என்றார். அதற்கும் 'இயற்கையில் மணம் வராது' என்றார் நக்கீரர். மேலும் 'உலகாளும் நாயகி யாம் உமையவள் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லையா?' என்றார். நக்கீரர் 'இல்லை' என்றார். இதன் காரணமாக வலவர் சிவபெருமான் தன் நெற்றிக்கண்ணைத் திறந்தார். 'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்றார் நக்கீரர்.

நெற்றிக்கண்ணின் சூடு தாங்காமல் அவர் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்தார். மயக் கம் தெளிந்து எழுந்தவர் வலவராக வந்த இறைவனைத் துதித்தார். 'கோபப்பிரசாதம்' என்ற நூலைப் பாடினார். இது கேட்டுக் கோபம் தணிந்தார் சிவபெருமான். மேலும் அவர் "முன்பு ஒருமுறை இறைவி யைப் பழித் தமையால் நான் இந்த விளையாட்டினை நிகழ்த்தினேன். இனி முருகனைத் துதித்து நல் அருள் பெறுவாய்" என்றார்.

முருகனடியாராகிப் பல பாடல்களைப் பாடுதல்

இறைவனின் இச்சொல் கேட்டது முதல் முருகனின் அடியவராகி அப்பெருமான் மீது பல அலங்கல்களை நக்கீரர் பாடத் தொடங்கினார். திருவலஞ்சுழியில் மும்மணிக்கோவையைப் பாடினார். திருவேரகம், நடுநாடு, காஞ்சி புரம் திருத்தணிகை, வடவேங்கடம், கங்கை, காசி, கேதாரம் போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள குமரக்கடவுளைக் கண்டு வணங் கினார். கயிலைக்குச் செல்ல வேண்டும் என்பது அவரின் விருப்பம்.

அதற்காக ஒரு பொய்கைக் கரையில் நக்கீரர் முருகனை எண்ணியபடி அமர்ந் திருந்தார். அப்போது அப்பொய்கையின் கரையில் இருந்த மரமொன்றில் இருந்து ஒரு பழுத்த இலை அப்பொய்கையில் விழுந்தது. விழுந்த இலையின் பாதிப் பகுதி நீரிலும், பாதிப்பகுதி நிலத்திலும் இருந்தது. இந்நிலையில் நீரில்



விழுந்த இலையின் பகுதி மீனாக மாறியது. நிலத்தில் விழுந்த இலையின் பகுதி பறவையாகிச் சிறகடித்தது. பறவை ஒரு புறம் பறக்க முற்பட, மறுபுறம் மீன் அதனைத் தண்ணீருக்குள் இழுக்க என்ற நிலையில் போராட்டம் துவங்கியது. இதனை நக்கீரர் கண்டார். அவரின் முருகனை அடையவேண்டும் என்ற எண்ணம் சிதறியது. இதன் காரணமாக ஒரு பூதம் அவரைப் பிடித்தது. பிடித்துச் சிறை யில் அடைத்தது. குளித்துவிட்டு வந்த பிறகு இவரை உண்ணலாம் என்று கருதி அப்பூதம் இவரைச் சிறைப்படுத்தியது.

அச்சிறையில் 999 தமிழ்ப்புலவர்கள் சிறை வைக்கப்பெற்றிருந்தனர். நக்கீரர் சேர ஆயிரம் ஆனது அவ்வெண்ணிக்கை. ஓராயிரம் வந்த பின் உண்ணலாம் என்பது பூதத்தின் திட்டம். நக்கீரர் இணைந்ததால் ஓராயிரம் என்ற எண்ணிக்கையும் வந்துவிட்டது. இதன் காரணமாக சிறை பட்டவர்கள் வருந்தினர். பூதத்தின் வயிற்றுக்கு உணவாகாமல் தப்பிப்பது எவ்வாறு என்று அவர்கள் எண்ணினர். அந்நேரத்தில் திருமுருகாற்றுப்படை என்ற பாடலைப் பாடினார் நக்கீரர். இப் பாடலால் திருமுருகன் எழுந்து வந்தார். தன் கதை ஆயுதத்தினால் அப்பூதத்தினைக் கொன்றார் முருகப்பெருமான். அப் பெருமானைத் தன் சொற்களால் போற்றியதாகச் சேய்த்தொண்டர் புராணம் பின்வரும் பாடலை அமைக்கிறது.

ஐய சரணம் சரணம் அமல சரணம் சரணம்
அறுமுக விநோத சரணம்,
பையரவணிந்த சிவ சங்கரன் இடங்குலவு
பரைமகிழும் இளைஞ சரணம்
மையனைய சூழலிகுற வள்ளிகுஞ் சரிதமுவி
மகிழுமணவாள சரணம்
வெய்யபூதத்தின் இருந்த எளியோங்கள் எமை
விடுவித்த விமல சரணம்

என்ற பாடல் நக்கீரர் முருகனைப் போற்றிய நிலையைக் காட்டுகிறது. நல்லார் ஒருவர் உளரேல் பல்லோருக்கும் மழை பெய்து பயன் தருவதைப்போல, நக்கீரரால் மற்ற புலவர்களின் உயிர்களும் காப் பாற்றப் பெற்றது.

இதன் பிறகு காளத்தி என்ற இடத் திற்குச் சென்று அங்குள்ள பொன்முகரி ஆற்றில் நக்கீரர் நீராடினார். நீராடி அவர் கங்கையின் மேற்கில் உள்ள மலை யான கைலாயமலையில் எழுந்தார். அவரின் கைலாய எண்ணம் இதன்வழி நிறை வேறியது. இதன் தொடர்வாக கயிலை பாதி காளாத்தி பாதி, அந்தாதி, காரெட்டு, கண்ணப்பர் தம்மறம், எழுக் கூற்றிருக்கை, தேவநற்பாணி போன்ற நூல்களை அவர் படைத்தளித்தார்.

நக்கீரர் சோதியில் கலத்தல்

இவ்வாறு இறைத்தொண்டு, தமிழ்த் தொண்டாற்றிய நக்கீரர் தன் வாழ்நாளின் நிறைவில் சோதியுள் கலந்தார். இவ்வாறு நக்கீரர் வரலாறு சேய்தொண்டர் புராணத்தில் வரையப்பெற்றுள்ளது.

5

'சும்மா இருந்தால் சுகம்'
என்கிறார்கள்,
சும்மாயிருக்க முடியாதவர்கள்.

'சுகமாயிருங்கள் என்பதுதான்
சும்மாவாயிற்று'
என்று ஒரு
பட்டிமன்றப்பேச்சாளர் பொருள்
சொன்னார்.

'சும்மா இரு சொல்லற' என்று
அருணகிரிநாதர்க்குச் சொன்ன
இறைவன் என்ன அர்த்தத்தில்
சொன்னான் என்று தெரியாமல்
சும்மா சும்மா எதையெதையோ
சொல்லுகிறார்கள்'
என்று சும்மா கேட்டுக்கொண்டிருக்க
முடியாது' என்றேன்.

எல்லாமும்
சும்மா என்று சொல்கிறார்கள்.

சும்மா என்றால்
என்னவென்று நான் ஒன்றும்
சும்மா கேட்கவில்லை.

தேசநேசன்

திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம்

(அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் **(PH.D)** பட்டத்திற்காகப் பகுதி நிறைவாக அளிக்கப் பெறும் ஆய்வேடு)

ஆய்வாளர்

சி. உஷா

பதிவு எண்: 0858 (13-14)

நெறியாளர்

முனைவர் மு.பழனியப்பன்

மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை

அழகப்பா பல்கலைக்கழகம்

தேசிய தரநிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத்தரமதிப்பீட்டில்**A+(CGPA3.64)** தகுதிபெற்றது.

காரைக்குடி

ஜனவரி 2018

முடிவுகள்

முடிவுகள்

"திறனாய்வு நோக்கில் சேய்த்தொண்டர் புராணம்" என்ற ஆய்வுப் பொருளில் செய்யப்பெற்ற இவ்வாய்வின் வழியாகப் பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே முருக வழிபாடு என்பது தமிழ் நிலத்தில் நிலைபெற்றிருந்தது. தொல்காப்பியத்தில் முருக வழிபாடு நிகழ்ந்ததற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க இலக்கிய காலத்தில் முருக வழிபாடு குரவைக் கூத்து, வெளியாடல் போன்ற சடங்கு முறைகளை முன்வைத்து நிகழ்த்தப்பெற்றுள்ளது. இதன் காரணமாக தமிழ் நிலத்தின் பண்பாட்டு அடையாளமாக முருக வழிபாடு கொள்ளத்தக்கதாகின்றது.

திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் இடம்பெறும் செவ்வேள் குறித்த பாடல்களும் தமிழ் நிலத்தில் இருந்த முருக வழிபாட்டின் உறுதிநிலையை அறிவிப்பனவாகும்.

சிலப்பதிகாரத்தில் முருகக் கோயில்கள் இருந்த நிலை சுட்டப்பெறுகிறது. குன்றக் குரவை முருகனுக்கு உரிய வழிபாடாக அமைந்தது. காப்பிய காலத்திலும் முருக வழிபாடு நிலைப்பெற்றிருந்ததனைச் சிலப்பதிகாரச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

பக்தி இலக்கிய காலத்தில் முருகவழிபாடு புராணச் சார்பும், ஆரியக் கலப்பும் உடையதாக விளங்கியது. ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்ற தேவார ஆசிரியர்கள் சிவபெருமானின் மகனாக முருகப் பெருமானைக் கண்டனர். இதன் காரணமாக முருகப்பெருமான் சிவபெருமானுக்குள் அடங்கிய தெய்வமாகக் கருதப்பெற்றார்.

கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணம் கந்த வழிபாட்டின் உச்சநிலையைக் காட்டுவதாக உள்ளது. இதனுள் குறிக்கப்பெற்றுள்ள முருக வரலாறு, முருக அருள்திறம் ஆகியன முருக வழிபாட்டின் முதிர்நிலையைக் காட்டுவனவாகும்.

அருணகிரிநாதர், வள்ளலார், தேவராயர், பாம்பன் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்ற தனிப்புலவர்களும் முருகனைப் போற்றிச் சிறப்படைந்துள்ளனர். இக்காலத்திலும் முருகவழிபாடு தலை நின்றுள்ளது.

அதிக அளவு சிற்றிலக்கியங்கள் முருகனைக் குறித்தே இயற்றப்பெற்றுள்ளன. இதன் காரணமாக சிற்றிலக்கிய காலத்திலும் முருக வழிபாடு தமிழர் வழிபாடாகத் தொடர்ந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து முருகவழிபாட்டின் நிறைந்த நிலையைக் காட்டுவது முருகவேள் பன்னிரு முறைத் திரட்டு ஆகும். அருணகிரிநாதரின் திருப்புகழை முன்வைத்து இத்திரட்டு உருவாக்கப்பெற்றது. இருப்பினும் பன்னிரண்டாம் முருகவேள் திருமுறை என்ற நிலையில் முருகத் தொண்டர் புராணம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இவ்வெண்ணத்தின் மூலமாக விளங்கியவர் திருப்புகழைக் கந்தவேள் பன்னிருதிருமுறையாக வகுத்தளித்த வ.சு. செங்கல்வராயப் பிள்ளை ஆவார்.

இந்த முருகவேள் பன்னிரு திருமுறை வெற்றிடத்தை நிரப்பும் நிலையில் புராணம் எழுத முன்வந்தவர் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் ஆவார். இவர் எழுதிய சுந்தரர் உலா என்ற நூல் இவரின் கவிப்பெருமையை உலகிற்குக் காட்டியது. இதன் காரணமாக இவரைச் சேய்த்தொண்டர் புராணம் எழுதச் செங்கல்வராயர் தூண்டினார். இத்தூண்டல் வழித் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் செயல்பட்டார்.

மேலும் பெரியபுராணம் எனப்படும் சேய்த்தொண்டர் புராணத்தின் படைப்புநிலைப் படி முன்னதாகச் சேய்த்தொண்டர் புராணம், சேய்த்தொண்டர் திருவந்தாதி ஆகியன செய்து கொள்ளப்பெற்றன. பின்னரே இவற்றின் அடிப்படையில் சேய்த்தொண்டர் புராணம் இயற்றப்பெற்றது.

சேய்த்தொண்டர் புராணம் நிலம் எனத் தொடங்கி நிலம் என முடியும் நிலைப்பாட்டைப் பெற்றுள்ளது. இதனுள் அமைந்த செய்யுட்கள் மூவாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று என்ற அளவினாதாகும். இவற்றுள் நான்கில் ஒரு பங்குப் பாடல்கள் அருணகிரிநாதர் புராணம் பாட எடுத்துக்கொள்ளப்பெற்றது. இப்புராணம் முதற்காண்டம்,இரண்டாம் காண்டம் என்று இரு பகுப்புகளை உடையது. இதனுள் அறுபத்தாறு தனியடியார்களும், பன்னிரண்டு தொகை அடியார்களும் பாடப்பெற்றுள்ளனர்.

தனியடியார்கள் என்ற நிலையில் அரக்கர், தேவர், புராணப் பாத்திரங்கள், அரசர், வேளாளர், புலவர், தேசிகர், பிள்ளை இனத்தவர், அந்தணர் போன்ற பல சாதிப்பிரிவு கொண்டோரும் அமைகின்றனர். இத்தனியடியார்கள் அகத்தியர் காலந்தொட்டு பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தேனூர் வரகவி சொக்கலிங்கனாரின் தாயார் மீனாட்சி அம்மையார் காலம் வரை வாழ்ந்தவர்கள் ஆவர். வாழ்வில் இன்னல்கள் வரும்போது முருகனை எண்ணித் தம் இன்னல் தீர்ந்தவர்கள் என்ற நிலையில் தனியடியார்கள் வாழ்க்கை அமைந்துள்ளது.

தொகையடியார்கள் தொகுப்பு நிலையில் அமைபவர்கள். இருப்பினும் இவர்கள் கந்தன் பேர் அன்றி வேறுபெயர் அறியா நல்ல தன்மை வாய்ந்த பெருமையர் ஆவர்.

சேய்த் தொண்டர் புராணம் பல்வேறு இலக்கிய வளங்களைக் கொண்டு விளங்குகின்றது. சொல்திறம் மிக்கதாக இப்புராணம் படைக்கப்பெற்றுள்ளது. மேலும்

எண்ணலங்காரம், வருணனை, அணிநலம் போன்ற மரபுசார் இலக்கிய உத்திகள் கொண்டதாகவும் படைக்கப்பெற்றுள்ளது.

வருணனைத் திறம் பெருத்த அளவில் இப்புராணத்தில் காணப்படுகிறது. மேலும் தன்மையணி இப்புராணத்துள் பெரிதும் பயன்படுத்தப்பெற்றுள்ளது. யாப்பு நிலையில் விருத்தப்பா வகையானது அதிக அளவில் இப்புராணத்தில் இடம்பெற்றுள்ளது.

இப்புராணக் கட்டமைப்பில் புகைப்படங்கள் இணைத்தல், பட்டியலிடுதல், பயன் சொல்லல், முருகபக்தியின் வலிமை போற்றல் போன்ற சிறப்புக் கூறுகளும் காணப்படுகின்றன.

மொத்தத்தில் முருகனடியார்களின் முகவரியாகச் சேய்த்தொண்டர் புராணம் விளங்குகின்றது.

இவ்வாய்வு நிகழ்த்தப்பெற்ற காலத்தில் இவ்வாய்வின் தொடர்வாகச் சில ஆய்வுகள் வெளிவரலாம் என்ற அடிப்படையில் சில பரிந்துரைகள் இங்கு வைக்கப்படுகின்றன.

<u>பரிந்துரைகள்</u>

சேய்த்தொண்டர் புராணத்திற்கு நல்ல உரை எழுதப்பட வேண்டும். இதுவரை உரையில்லாமலேயே சேய்த்தொண்டர் புராணம் விளங்கிவருகிறது.

சேய்த்தொண்டர் புராணத்தில் காணப்படும் புரணாச் செய்திகள் பற்றி ஆய்வு நிகழ்த்தலாம்.

முருகனடியார் இயல்புகளை மற்ற அடியார் இயல்புகளுடன் ஒப்பிடலாம். திருத்தொண்டர் புராணத்திற்கும், சேய்த்தொண்டர் புராணத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் குறித்து ஆராயலாம்.

சேய்த்தொண்டர்புராணத்தின் வழியாகப் பெறப்படும் இலக்கிய ஆக்கங்களைத் தொகுத்துப் பட்டியலாக, புத்தகமாக, தொகுதிகளாக வெளியிடலாம்.

இப்புராணத்திற்குப் பின்பு கந்தனுக்குத் தொண்டாற்றிய முருக தொண்டர்கள் குறித்து ஆய்வுசெய்யலாம்.